# புஷ்பகவிமானம்



## பாலகுமாரன்

# புஷ்பக விமானம்

## 1

ஓங்கியடித்து அந்தத் தீவில் மழை பெய்தது. மழை மண்ணுக்குள் இறங்கி,வெகு ஆழம்வரை பூமிக்கு அடியில் போயிற்று. இறங்கிய மழை நீர் மண்ணுக்குள் புதைக்கப்பட்ட ஒரு பிரேதத்தின் உயிர்ச்சாரத்தைக் கரைத்தது. கரைக்கப்பட்ட உயிர்ச்சாரம் வேர்களால் உறிஞ்சப்பட்டது. மெல்ல மெல்ல முன்னேறி அந்த மரத்தின் நடுத் தண்டில் போய் ஒரு சுழியாய் தங்கிக் கொண்டது.

நூறு ஆண்டுகளுக்கு முன்பு மண்ணில் புதைக்கப்பட்டவருடைய வலிமையான உடல் சத்து, அவர் உச்சந் தலையில் குடி கொண்டிருந்த வலிவுள்ள ஒரு தன்மை மரமாயிற்று. மரம் பகங்கிளைகளோடு பரவசமாய் ஆடியது. இன்னும் உயரமாய் உறுதியாய் வளர்ந்தது. நிறைய பறவைகள் அங்கு வந்து உட்கார்ந்தன. அங்கு உட்கார்ந்தால் எந்த பறவைக்கும் கோபமே வருவதில்லை அதிகம் கூவுவதேயில்லை.

ஒரு மயக்க நிலையில் மௌனமாயிருந்தன. சிலமணி நேரங்கள் தங்கி விட்டு உற்சாகமாகப் பறந்தன.

அந்தத் தீவின் வடபகுதியில் வேட்டையாட வந்தவர்கள், அந்த மரம் பார்த்து அதிசயித்தார்கள். எவ்வளவு அழகான, உறுதியான தேக்கு மரம் என்று தட்டிப் பார்த்தார்கள். சீறிப் பார்த்து விட்டு இன்னும் கன்றாகத்தான் இருக்கிறது. மூன்று வருடங்களுக்குப் பிறகு முற்றும் என்று கணித்துவிட்டுப் போனார்கள்.

மரத்தை மரத்தால் அடித்தால் உலோகச் சத்தம் வர வேண்டும். அடித்த மரம் எகிற வேண்டும். கிளைகளின் நுனியில் மட்டும் இலைகள் இருப்பது மரம் முற்றிவிட்டது என்பதைக் காட்டும். இலைகளும் தடித்து அகலமாய் சொர சொரப்பு கூடுதலாக இருந்தால் மரம் எந்த இழைப்புக்கும் வாட்டப்படும் என்று சொல்லும்.

இந்தத் தேதிக்கு மரத்தைக் குறித்து வைத்துக் கொள்ள வேண்டும். அவர்கள் சிறிய புத்தகத்தில் எழுதிக் கொண்டார்கள்.

இன்னொருவன் மனம் நாலாபக்கமும் சுற்றிப் பார்த்து அந்த இடத்தை ஆழ்ப்பதித்துக் கொண்டது. அவர்களைப் பார்த்து ஒரு நீளவால் குருவி வினோதமாகக் கத்தியது. எல்லாம் தெரிந்தது போல, 'சர்த்தான் போங்கடா...சர்த்தான் போங்கடா' என்று கத்தியது.

மரத்தின் உச்சிக்கிளையில் உட்கார்ந்திருந்த அந்த ரெட்டைவால் குருவிக்கு, மரத்தை...அந்த மரத்தை மனிதர்களால் வீழ்த்த முடியாது என்பது தெரியும். அந்த மரம் சரியான பருவத்தில் தானே உயிர்த்தியாகம் செய்யும்.

அந்த இரட்டை வால் குருவி மரத்தை பல்வேறு கோணங்களிலிருந்து பார்த்தது.

'உனக்கு நான் என்ன செய்ய' என்று கேட்டது.

'ஏதாவது பாடு' என்று மரம் சொல்லியது.



மரம் என்பது மௌனம். மௌனம் சப்தத்தை விரும்பியது.

பறவை என்பது சத்தம். அது மௌனத்தை நேசித்தது

மரம் ஆழ்ந்து தவம் செய்ய குருவியின் சப்தம் உதவியது.

க்ளிம்...க்ளிம்...க்ளிம்...க்ளிம்...க்ளிம் க்ளிம் க்ளிம் க்ளிம் என்கிற சப்தமாய் பறவையின் பாட்டு அமைந்தது.

விடியலில், உச்சிப்பொழுதில், மாலையில் இந்த சப்தம் மரத்தைத் தாக்க மரம் நெடிதுயர்ந்து வளர்ந்தது. அதன் நெட்டுயிர்ப்பு அதை உறுதிப்படுத்தியது. சில சமயம் நூற்றுக்கணக்கான குருவிகள் சேர்ந்து இந்த சப்தம் எழுப்ப மரம் அந்த சப்தத்தை வாங்கி அகன்றும் வளர்ந்தது.

மறுபடி வெய்யில். மறுபடி மழை மறுபடி குளிர். குளிர் போக வெய்யில். வெய்யில் முடிய மழை. குருவியின் சிறகுகள் வலுவிழந்து உதிரத் துவங்கின. அதுவும் மரத்தைப் போல் மௌனமாக உட்கார்ந்திருக்க பழகிக் கொண்டது.

ஒருநாள், மழை தாங்காமல் ஒடுங்கிக் கொண்டு உட்கார ரத்த ஓட்டம் போதாமல் சுருண்டு விட்டது. கட்டிதட்டின ரத்தம் இருதயத்துக்குள் போய் அடைத்துக் கொண்டது.

குருவி கண் சொருகியது. உச்சியிலிருந்து நழுவி கீழ விழத் துவங்கியது. பாதி வரும்போதே பிராணன் போயிற்று. தரையில் தலை மோதி உடல் கிழிந்தது. மழை நீரில் கரைந்தது. அந்தக் கரைசலை, நீர் மண்ணுக்குள் இழுத்துப் போனது. மண்ணுக்குள் உள்ளே போன

அந்த ரசத்தை வேர்கள் உறிஞ்சிக் குடித்தன. மரம் துரித மாக நீர் குடித்து உச்சி வரை அனுப்பியது.

அந்த முறை மழை அதிகமிருந்தது.மரம் வேர்களுக்கு போதும் என்று கட்டளையிட்டது. மரத்தின் வேர்கள் நீர் உறிஞ்சலை நிறுத்தின.

மரத்தை சுற்றி அதிகம் தண்ணீர் தேங்கியது. அத னால் மண் நெகிழ்ச்சியாக இருந்தது. காற்று பலமாக வீச, மரம் வேகமாக அசைந்தது. உச்சி அசைய பலவேர் கள் மண்ணிலிருந்து வெளியே வந்தன. வேர்கள் வெளியே வர அந்த இடைவெளிக்கு மண் நெகிழ்ந்து இறங்க மரம் கோணலாயிற்று.

புயலோடு மழை வலுக்க மரம் தடேலென்று பூமியில் விழுந்தது. புயலால் கடல் நீர் ஆற்றில் புகுந்து ஆறு அகலமாகி மரத்தை உருட்டிக் கொண்டு போயிற்று.

மரம் நீரால் அடித்துச் செல்லப்பட்டு கடலை அடைந்தது. அலையால் உருட்டப்பட்டு நடுக்கடலுக்கு போயிற்று.

கடலின் நீரோட்டம் அதை மேலும் வடக்கு நோக்கி இழுத்துப் போயிற்று.

அந்த மரத்தின் கீழ் சமாதியானவருக்கு மரணத்தரு வாயில் தமிழ்நாட்டுக்கு போக வேண்டும் என்று ஆசை யிருந்தது.

இப்போது அவர் உயிர்ச்சக்தி மரமாகிக் கடலில் மிதந்து தமிழகக் கரை நோக்கி போய்க் கொண்டிருந்தது.

அது பத்து நாள் பயணம். எல்லா இலைகளும், சிறு கிளைகளும் உப்புநீரில் விடுபட்டு விட அறுபதடி நீளப் பட்டுபோல் ஆறேழு கிளைகளோடு அந்த மரம் கடலின் அடி நீரால் இழுக்கப்பட்டு புரண்டு புரண்டு வடமேற்காய் பயணப்பட்டுக் கொண்டிருந்தது.

க் க் க்



# 2

அவருக்குத் தெரிந்து ஆறு தலைமுறையாய் விவசாயி கள். தாத்தாவை, தாத்தாவின் தாத்தாவை, தாத்தாவின் பாட்டனின் பெயரை அவருக்குத் தெரியும். கையால் செய்யப்பட்ட காகிதத்தில், மயிலிறகுப் பேனாவால் அந்தப் பெயர்கள் எழுதப்பட்ட புத்தகம் அவரிடம் இருக் கிறது. ஆனால் ஏழாவது தலைமுறையான அவர் டாக்ட ராகி விட்டார்.

தஞ்சையின் அந்தக் கடற்கரைப் பகுதியில் பட்டம் பெற்ற முதல் வைத்தியர் அவர்தான். அவரை டாக்டரு குப் படிக்க வைக்கக் கூடாது என்றுஉறவுகள் வந்து அப்பாவை மிரட்டிவிட்டுப் போனார்கள்.

''அப்ப நிலத்தை எவன் பார்த்துக்கறது...மூத்தவன் சேத்துல இறங்கி அல்லாடணும். ரெண்டாமவன் காலாட் டிக்கிட்டு படிக்கணுமா. என்ன நியாயம் இது. ஒருத் தன் கஷ்டப்படணும். இன்னொருத்தன் சும்மா உட் கார்ந்து சோறுதிங்கணுமா.''

''சரி...சரி போங்க. அவங்கவங்க வேலையைக் கவ னிங்க. அவன் படிப்புல சேர்ந்துட்டான். அஞ்சு வருஷம்படிப்பு மெட்ராஸ்ல. அவன் படிப்பு உசத்தி இப்ப தெரியாது. அப்பால தெரியும். போங்க போங்க'

அப்பா விரட்டினார்.

''நான் கேக்கறதுக்கு பதில் சொல். பெரியவன் சேத்துல இறங்கி பாடுபடணும். சின்னவன் பட்டணத் துல ஜல்சா பண்ணிட்டிருக்கணுமா. இது என்ன ஓர வஞ்சனை.''

கூடவந்த படிப்பறிவில்லாத பெண்கள் இன்னும் உரக்கக் கத்தினார்கள்.

"அடி கருமம் புடிச்சதுங்களே, எல்லாந்தாண்டி முக்கியம். மயிர் வெட்டறவன், தச்சுவேலை செய்யறவன், இரும்பு அடிக்கிறவன், பாட்டுப் பாடறவன் ஆட்டம் ஆடறவன், பிணம் எரிக்கிறவன் எல்லாரும் முக்கியம்' உழறவன் மட்டுமே முக்கியம்னா அது பைத்தியக்காரத்தனம்...என் பிள்ளை அருமை இன்னிக்குத் தெரியாது. இந்த காவிப் பசலைக் காட்டிக்கினு, எப்புள்ளையும் படிக்கலுங்கறான்னு வருவீங்க. அன்னிக்கு என் செருப்பைத் தூக்கினு ஊரைச்சுத்தி வரச் சொல்றோம் பார்."

'ஆஸ்பத்திரி தீட்டுவேலை. அங்க வேலை செய்யறவங்களை நம்மளூட்ல சேத்துக்கறதில்லை. நம்ம நோன்புடையல்லாம் அலங்க கலந்துக்க முடியாது. பொண்ணு கிடைக்கறது கூட சந்தேகம்தான். தம்முனுதல கிடைக்காத வேற ஜாதி பொண்ணை இட்டாருவான். அது இன்னும் அசிங்கமாயிடும்."

"அது அந்தக் காலம்."

கஞ்சி போட்ட வெள்ளைப் பேண்ட்டும், வெள்ளை முழுச்சட்டையும், ஒட்டவெட்டின மிலிட்டரி கிராப்பும் மீசைமழித்த முகமுமாய் அவர் சென்னை அரசாங்க மருத்துவக் கல்லூரியில் சேர்ந்தார். அதற்கு மதராஸ் மெடிக்கல் காலேஜ் என்று பெயர்.

இப்போது போல் டாக்டர் ரெங்காச்சாரி சிலை அனாதையாக இல்லை. வாராவாரம் முறைப் போட்டு பையன்கள் துடைத்து மாலைபோடுவார்கள். வட்டமான ரீத் வைப்பார்கள். படிப்பில் மிக அக்கறையாக இருந்தார்கள். லீவு நாட்களில்கூட ஆஸ்பத்திரிக்கு ஓடி வந்து விடுவார்கள். இன்று சிவராத்திரி, இன்று



வைகுண்ட ஏகாதசி என்றுகண் முழிக்க பெரிய ஆஸ்பத்திரிக்குள் புகுந்து விடுவார்கள்.

தலைமை டாக்டர் வரும்முன்னே ஒரு ரவுண்ட் நோயாளிகளைப் பார்த்து விடுவார்கள். தலைமை டாக்டர் என்ன சொல்வார் என்று தங்களுக்குள் விவாதிப்பார்கள்.

இருதயத்தில் கொரகொர சத்தம் கேட்பதற்காக பெரிய போட்டி நடக்கும். படிக்கின்ற இருநூறு மாணவர்களும் கொர கொரப்பு சத்தம் கேட்க ஆசைப்படுவார்கள்.

ஆனால் இருதயத்தில் மர்மரிங்சத்தம் உள்ளநோயாளிகள் மிகக் குறைவாகவே இருப்பார்கள். நல்ல இருதய சத்தம் கேட்கக் கேட்கத்தான் மர்மரிங் சத்தம் பிடிபடும். அவருக்கு பிடிபடவேயில்லை.

"சேனாபதி, ஹார்ட் சத்தமே உனக்கு புரியலேன்னா நீ எப்படி டாக்டராகப் போற..." பெரிய டாக்டர் கேலி செய்ய, சுற்றியுள்ள ஐயர் பெண்கள் 'களுக்' என்று சிரித்தார்கள்.

சேனாபதி, பத்து நோயாளிகளில் யார் யாருக்கு கொர கொர சத்தம் இருதயத்தில் இருக்கிறது என்று கண்டு பிடிப்பதில் ஒவ்வொரு முறையும் தவறு செய்ய கடுமையாக அவமானப்படுத்தப் பட்டார்.

காது பிரச்சனையா என்று சோதிக்கப்பட்டார். பிரச்சனை காதில் இல்லை. புத்தியில் என்று விளம்பரப் படுத்தப்பட்டார்.

"அவன் பாட்டுக்கு ஏர் உழுதுண்டு மாடு ஓட்டிண்டிருக்கலாம். டாக்டருக்குப் படிக்க வந்து அவஸ்தைப் படறான்" ஒரு பார்ப்பன இளைஞன் பேச கொதித்துப் போனார்.

கேலி செய்த அக்கப்பையன் சில சமயங்களில் பெரிய டாக்டரையே மருத்துவத் தகவல்களால் திணறடிக்கிறான் பெண்களுக்கு நடுவே உட்கார்ந்து சிகரெட் பிடிக்கிறான்.

''ஒரு டாக்டர் சிகரெட் பிடிக்கலாமா'' சேனாபதி அந்த பார்ப்பன இளைஞனைப் பார்த்து கேட்டார்.

''எண்ணங்களை ஒரு முகப்படுத்துவதற்கு சிகரெட் பிடிப்பது உதவும். எண்ணங்கள் புத்தி இருக்கறவர்களுக்கு அதிகம் வரும். புத்தியிருக்கிறவன் என்னவேண்டுமானாலும் செய்யலாம். புத்தியில்லாதவன் மாடுமேய்க்கத்தான் முடியும். உன் வேலையை நீ பார். என் வேலையை நான் பார்க்கிறேன்.'' எகத்தாளமாய் பதில் சொன்னான்.

சேனாபதி தாண்டிப் போகும்போது 'ம்மே...' என்று ஆடுமாதிரி கத்தினான்.

இது நடந்து ஐம்பது வருடங்களாகி விட்டன.

அந்த இளைஞனை ஆசிரியர்கள் வகுப்பு பார்த்துக் கொள்ளச் சொல்லி போய் விடுவார்கள். அவன் வகுப்பு எடுக்கிறேன் என்று அதிகப்பிரசங்கித்தனம் செய்வான். அமெரிக்கனைப் போல் கொழகொழ வென்று ஆங்கிலம் பேசுவான்.

பெண்ணின் கர்ப்பப்பையைப் படம் வரைந்து மிக அழகாகப் பாடம் எடுப்பான். நடுநடுவே சேனாபதியை, அவன் விவசாயத் தொழிலைக் கேலி செய்வான்.

வைத்தியம் செய்வது பார்ப்பனர்களின் தொழில் என்று மறைமுகமாக உணர்த்தினான். வைத்தியம் படிக்க புத்திசாலித்தனம் தேவை. பார்ப்பனர்கள் மட்டுமே புத்திசாலிகள் என்று பலமுறை சொன்னான்.

அவருக்குப் பிடிக்காது என்று தெரிந்தும் அவரது அறைக்கு வந்து ஆறு சிகரெட்டுகள் பிடித்து விட்டு



போவான். அப்பா ஒருமுறை ஹாஸ்டல் அறைக்கு வந்து சிகரெட் பிடிக்கிறாயா என்று கேட்க, அப்படித்தான் தெரிகிறன் என்று குறுக்கே புகுந்து பதில் சொன்னான்.

அவர் அப்பாவிடம் அழுது புலம்பி காலில் விழுந்து கெஞ்சி மண்ணிலும் புத்தகத்திலும் பலமுறை சத்தியம் செய்து அவரை நம்ப வைத்தார்.

அவர் அழுததையும், மண்டியிட்டதையும் அந்தப் பையன் எல்லோருக்கும் நடித்துக் காண்பித்தான். ஹருடாத்திர நாடகத்தில் ஒருவர் நடிக்கும் நாடகமாக அதை செய்து காட்டினான், மொத்த கல்லூரியும் வழித்துக் கொண்டு சிரித்தது

இவர் படிப்பை நிறுத்தி விடலாமா என்று யோசித்தார்.

கோடை விடுமுறை முடிந்து ஊருக்குக் கிளம்ப வேண்டுமேயென்று வேதனைபோடிருந்தார். பல உறவுகளை எதிர்த்து அப்பா டாக்டருக்குப் படிக்க வைக்க, கல்லூரியில் திமிர் பிடித்த பார்ப்பன இளைஞர்கள் அவர் தற்கொலை செய்து கொள்ளும் எண்ணம் வளரும் அளவுக்கு கேலி செய்தார்கள்.

அது பார்ப்பனர்கள் காலம்.

அண்ணி அவர் கவலைப்படுவதைப் புரிந்து கொண்டார். காரணம் கேட்டார்.

தயங்கித் தயங்கி சேனாபதி சொன்னதும், இதுக்குப் போய் என்ன வேதனை...எதிரிங்க தொல்லை...அவ்வளவு தானே. எங்க ஊர் வீராயிக்கிட்ட வா, அவக்கிட்ட உன் குறையைச் சொல்லு. அஞ்சே நாள்ல தீர்த்துவைப்பா.

''யார் வீராயி...''

''எங்க ஊர் அம்மன். காவல் தேவதை. எல்லைக் காளி.''

''வேணாம் அன்னி...''

''நம்பிக்கையில்லை இல்ல... இதுக்கு தண்டனை தனி. ஆனா, நம்பாதவங்க ஒரு தடவை அவ சன்னிதானத்துக்கு வந்தா நம்ப வச்சிருவா. நீ நம்பாதயே வா, உன்னால உதவி செய்ய முடியுமா கேளு. சந்தேகத்தோடயே கும்பிடு. அவ எழுந்து உன் எதிரிகளை அடிப்பா பாரு. அந்நினி கோபமா அடிப்பா.

ஆனா ஒண்ணு சேனாபதி, உன் பக்கம் நியாயம் இருக்கணும். உன் படிப்பைக் கெடுக்கறான்னு சொன்னியே அது சத்தியமா இருக்கணும். ஜாதி சொல்லி குத்தி காட்டறான்னு சொல்றியே, அது நிஜமா இருக்கணும், அவ உக்கிரமாயிடுவா.

அவளைப் பூஜை பண்ணின குங்குமப் பொட்டலத்தை எதிரிங்க இருக்கற இடத்துல போட்டுட்டு வந்துடு. மேஜைலஒரு வேப்பிலை வச்சிட்டு வந்துடு சம்பந்தப் பட்டவன்உன் காலில வந்து விழுந்து கதறுவான் பாரு. இது நிச்சயம் நடக்கும்.

வேறெனன விதமா தொந்தரவு பண்றான். சொல்லு சேனாபதி.''

சேனாபதி மொத்தமாய் அடிக்குரலில் விவரிக்க அன்னி ஆத்திரமானாள்.

''நீ வந்தா வா. வராட்டி போ. நான் போறேன். உங்க ஊருக்கு போக இது ஒரு சாக்கான்னு உன் அண்ணன் கத்துவாரு. கத்திட்டு போட்டும். அது பத்தி கவலையில்லை. நாம கார்காத்த வேளாளர் உழுது பயிர் பண்ணி, ஊருக்கே சோறு போடற குலம். உலகத்துல பெரிய பிணி பசிப்பிணி. தலைமுறை தலை முறையா பசிப்பிணி தீர்க்கற வம்சம். தின்னுட்டு போற பார்ப்பான் நம்மளைப் பத்தி தப்பா சொல்றான்னா, நீயும் கேட்டுட்டு வர்றதா... கன்னுன்னு கோச்சுக்க வேண்டாமா. தலைடைலயே ஒன்று போட வேண்டாமா. வேளானப் பிள்ளை பார்ப்பானுக்கா பயப்படறது. நீ கோயிலுக்கு வந்தா வா. வராத போனா போ.''



அன்னியின் வீடு பன்னிரெண்டு மைல் தொலைவு இருந்தது. ஊதக்காற்று வீசும் சவுக்குத் தோப்புகளுக்கு ஊடாக அன்னி நடந்து போனாள். மாட்டு வண்டி யெல்லாம் அதிக செலவு என்று கருதப்பட்ட நாட்கள் அவை

அன்னி கிளம்பிய இரண்டு மணி நேரத்தில அவரும் பின்தொடர்ந்தார்.

ஒரு வேப்பஞ்சோலைக்கு நடுவே ஒரு மேடு ஏறினால் கடல் தெரியும். தொலைவில் மணற்பரப்புக்கு நடுவே இருக்கும் பசுந்திட்டில் ஒரு ஊருணியோடு சிறிய கோயில் இருந்தது, ஊருணியில் சுத்தமான நீர் கிடைத்துக் கொண்டிருந்தது.

அருகே உள்ள ஊர்கள் அந்த நீரைக் குடிக்க பயன் படுத்துவதால் குளிக்கவோ, துவைக்கவோ கூடாது என்கிற கட்டளையிருந்தது.

பறவைகளும், மிருகங்களும் கூட அந்த ஊருணியில் நீர் குடித்தன.

அன்னி குடத்தில் நீர் மொண்டு தரைக்கு வந்து தலையில் ஊற்றிக் கொண்டு, வரட்டி அடுக்கி அடுப்பு மூட்டினாள். பாத்திரம் வைத்து பொங்கலிட்டாள். தீ எரியும்போது அதையே பார்த்து, 'வீராயி' வீராயி காப் பாத்து...காப்பாத்து' என்று மந்திரம் சொல்வது போல் சொன்னாள். வெண்கலப் பாத்திரம் மேல் மூடி தடதடத் தது. பொங்கல் தட்டைத் தள்ளிக்கொண்டு கொண்டு வழிந்தது.

''அடேய்...''சீறலோடு அண்ணி எழுந்திருந்தாள். கையில் அடுப்பு விறகு எடுத்து உரக்கக் கத்தினாள்.

கேலிக்கு வெட்கப்படும் அண்ணி, அண்ணன் குரலுக்கு பயந்து நடுங்கும் அண்ணி, அப்பாவிடம் பணிவாகப் பேசும் அண்ணி. பெற்ற குழந்தைகள் நன்கு படிக்கவில்லையே என்று நொந்து கொள்ளும் அண்ணி வீட்டுக் கொல்லைப்புறம் புதர் மண்டிக் கிடக்கிறது. பசுமாடு கழிகிறது. சமையல் அடுப்பு வெடித்துவிட்டது. பின் கட்டு ஒழுகுகிறது. ஆளுவதற்கு பாத்திரம் போதவில்லை என்றெல்லாம் புலம்பிக் கொண்டிருக்கும் பெண்மணியாயிருந்த அண்ணி உரக்கக் கூவுவது ஆச்சரியமாய் இருந்தது.

''அடேய்...'' அண்ணி மறுபடி கூவினாள். ''என் புள்ளையத் தொட்டா வெட்டிப் போடுவேன் என வாசல்ல தவமிருந்து பெத்த புள்ளைய எவன் தொட்டாலும் குத்திக் கொல்லுவேன். அவன் என் குழந்தைடா. நாசம் பண்ணிடுவேன்'' அண்ணி தழலோடு ஆடினாள்.

மார்பில் சட்டையில்லாமல் மாடு மேய்க்கிற ஒரு சிறுபெண், சேனாதிபதியின் அண்ணி சுற்றி பதினைந்து வேப்ப மரங்கள் இவர்களைத்தவிர வேறு எவருமில்லை.

அண்ணி பொய்யாய் நடிப்பவர் இல்லை நடிப்பதற்கு இங்கு பெரிய அரங்கமும் இல்லை, இந்த மாடு மேய்க்கும் பெண்ணைத் தவிர வேறு சபையும் இல்லை.

அண்ணி ஒவ்வொரு வேப்பமரமாக ஓடிச் சுற்றினாள் கருவறை நோக்கி ஓடி கால் தவறி விழுந்தவள். நெடுஞ்சாண்கிடையாக கருங்கல் தளத்தில் மோதினாள்.

அண்ணி பொங்கல் கிளறி எடுத்து அம்மன் எதிரே வைத்து நீர் சுற்றி நைவேத்தியம் செய்து ஒரு வாழை சருகு நிறைய பொங்கலெடுத்து அந்த மாடு மேய்க்கும் சிறுமிக்கு முதலில் கொடுத்தாள்.



இது கடந்து ஐம்பது ஆண்டுகளாகி விட்டன. ஒரு மரடப்பா நிறைய குங்குமம் கொடுத்து ஒரு துணிப்பை நிறைய வேப்பிலை கொடுத்து சேனாபதியை சென்னைக்கு அனுப்பி வைத்தாள். ஒரு பொட்டலம் குங்குமமும் இரண்டு வேப்ப இலைகளையும் கேலி செய்யும் பையனின் மேஜையில் வைத்து விட்டு, சேனாபதி தன்னறைக்கு திரும்பினார்.

அன்று மாலை வரை அந்த பார்ப்பன இளைஞன் அவர் அறைக்கு வரவேயில்லை,

ஆனால் நண்பர்களிடம் அவரைப் பற்றி கேலிசெய்து சிரித்திருக்கிறான். சட்டென்று கேலியை நிறுத்தி வயிற்றை வலிக்கிறது என்று பின்பக்கம் போயிருக்கிறான். கேண்டீன் உணவு தப்பு என்று பேசியிருக்கிறான். கோபத்தோடு சட்டை மாட்டிக் கொண்டு படியிறங்குகையில் கால் தடுக்கி பதினைந்து படிகள் விழுந்திருக்கிறான், வலது தொடை எலும்பில் ஃப்ராக்சர். தூக்கிக் கொண்டு பெரியஆஸ்பத்திரிக்கு ஓடினவர்களில் சேனாபதியும் ஒருவர்.

இரவே அந்த இளைஞனுக்கு கடும் ஜுரம் வந்து விட்டது, ஒருவர் மாற்றி ஒருவர் கவனித்துக் கொள்ள வேண்டுமென்று மாணவரிடையே பேசப்பட்டது.

ஆனால் பலர் முன் வரவில்லை, பொய்யாய் சாக்கு சொன்னார்கள். பெரிய பட்டானத்தைப் பின்னே வைத்துக் கொண்டிருப்பவனுக்கு மூன்று பேர் மட்டுமே உதவத் தயாரானார்கள். அதில் சேனாபதிதான் வேறு ஜாதி. வேளாளர். கார் காத்த வேளாளர்.

பலமான மருந்துகளால் ஜுரம் நின்றது. ஆனால் அவர் உடம்பில் சோர்வு தங்கியது.

''உன்னை ரொம்ப கேலி பண்ணியிருக்கேன் சேனாபதி. அதையெல்லாம் மனசுல வைக்காத நீ உதவி செய்

துருக்க. நான் இனிமே யாரையும் கேலி செய்ய மாட்டேன் சேனாபதி. ஜாதி பேசமாட்டேன். என்னை மன்னிச்சிடுப்பா.''

ஆனாலும் தொண்டுதல் நிரந்தரமாகியது. ''இன்னிக்கு அவுட் பேஷண்ட்லேர்ந்து ஒரு மர்மரிங் சவுண்ட் கண்டு பிடிச்சு எங்கிட்ட சொல்லு. அப்படி கண்டு பிடிக்கல... இந்த வருஷம் உன்னை எக்ஸாம் எழுத விடமாட்டேன்.''

சேனாபதி தவிர எல்லோரும் கண்டுபிடித்துக் கொண்டு போய் நிறுத்தினார்கள். 'வெரிகுட், வெரிகுட்,' என்று பாராட்டு வாங்கினார்கள்.

''அம்மா, எனக்குச் சொல்லிக் கொடு. இந்தத் தொழிலில் வல்லவனா இருக்க வலிமை கொடு. பொய் சொல்லி அவமானப்படுவதை விட, எல்லாம் தெரியும் என்று காட்டிக் கொள்வதைவிட, புரியவில்லை என்று சொல்லி கற்றுக் கொள்வதையே விரும்புகிறேன். அம்மா, என்னைப் பக்குவப்படுத்து. நல்ல வைத்தியனாக்கு' அவரையும் அறியாமல் அந்தக் கடற்கரைக் காளியை வேண்டினார்.

நெற்றியில் தேங்காய் எண்ணை வைத்து, அதன் மீது விராயியின் குங்குமத்தை வைத்தார். ஸ்டெதாஸ்கோப்பை அந்த வேப்ப மரங்களை மனதில் நினைத்து, காதில் மாட்டினார். முதன் முதலாய் ஒரு இருதய கொரகொரப்பு சத்தத்தைக் கண்டு பிடித்தார்.

''வெரிகுட். சேனாபதி நீ பொழச்சிட்ட. இந்த ஆளை தொடர்ந்து கவனிச்சு சரி பண்ணு.''

இதெல்லாம் ஐம்பது வருடங்களுக்கு முன்பு அப்போது படிப்புக்கு என்ன அர்த்தம் இருந்தது.

உண்மையாக உழைத்தால் உயரமுடிந்தது.



''சேனாபதி, வைத்தியம் பெரிய கம்ப சூத்திரமா, கொஞ்சம் டெடிகேஷன் வேணும். கொஞ்சம் அதிர்ஷ்டம் வேணும்.''

''அதிர்ஷ்டமா' இறையருளா, டாக்டர்.''

''ரெண்டும் ஒண்ணுதான்.''

''நீங்க கடவுளை நம்புறீங்களா டாக்டர்.''

''நம்பித்தான் ஆகணும். சேனாபதி, நமக்கு நம்பிக்கை இருக்கோ இல்லியோ, நோயாளிக்கு நம்பிக்கை இருந்தா நல்லது. அது அவனை சீக்கிரம் குணப்படுத்தும் அந்த நம்பிக்கையே ஆரோக்யம்தான். கடவுள் இருக்கார். கவலைப்படாதீங்கோன்னுதான், நான் என் டிஸ்பென்சரியில் வைத்தியம் பார்க்கறேன். ஆள் உயரத்துக்கு வெங்கடாஜலபதி படம் வச்சிருக்கேன். எனக்கு ஃபீஸ் வேண்டாம். அவருக்கு ஒரு முழம் பூ போடு அப்படின்னு சொல்லுவேன். அவருக்கும் பூ கிடைக்கும். எனக்கும் ஃபீஸ் கிடைக்கும். அப்ப ஏன், இங்க அப்பிடி பேசறதில்லைன்னு கேட்கறியா. இது அரசாங்க ஆஸ்பத்திரி. இலவச வைத்தியம். இங்க கொஞ்சம் கட்டுப்பாடாத்தான் பேசணும். நீ சாயந்தரம் என் டிஸ்பென்சரிக்கு வா. அங்க நான் பேசற விதமே வேற.

இங்க கடவுள்னா எந்தக் கடவுள்னு கேட்பான். ராமனைக் கும்பிடுன்னா, இவரு அவர் மேல நம்பிக்கை இல்லாத, கடவுள வச்சு வியாபாரம் பண்ணுறாரும்பான்.

நம்மகிட்ட ஒண்ணுமில்ல சேனாபதி. உலகத்துல எல்லாம் டிரையல் அண்டு எர்ரர்தான் இங்க ஆயிரம் ரூபா சம்பளம் வாங்கறோம். அதுக்காக அரசாங்கம் சொல்றபடி வைத்தியமா. என் டிஸ்பென்சரியில் நாந்தான் ராஜா.''

மாலை நான்கு மணிக்கு வகுப்புகள் முடியும். சேனாபதி ஐந்து மணிக்கு சைக்கிளில் ஏறி, ஆறு மணிக்கு ஆழ்

வார் பேட்டை போய் சேருவார். இரவு ஒன்பது வரை பெரிய டாக்டர் டிஸ்பென்சரியில் அவருக்கு உதவியாக இருந்து விட்டு திரும்புவார். டாக்டர் தொழிலில் சம்பாதிப்பது என்றால் என்ன என்பது அன்றுதான் புரிந்தது. சிறிய ஜலதோஷத்திற்கெல்லாம் பணக்காரர்கள் அதிகம் அலட்டிக் கொண்டார்கள். ராத்திரிக்கு தாங்குமா என்று கேட்டார்கள்.

''நாகதி நாலு ஜுரமாம்...''

''நாத்தி நாளா...' என்று கூவினார்கள்.

பத்து நிமிடத்திற்கு மேல் யாரையும் உட்கார விடுவதில்லை. அந்த மூன்று மணி நேரமும் அற்புதமாகப் பெரிய டாக்டர் சம்பாதித்தார்.

சேனாபதியை பல வீடுகளுக்கு அழைத்துப் போனார். ''பிரஷர் செக் பண்ணு. ஜுரம் இருக்கா பார். பல்ஸ் ரேட் என்ன.'' என்று ஆரம்ப கட்ட வேலைகளை அவரை செய்ய சொல்லி மருந்து கொடுத்தலை அவர் முடிவு செய்தார்.

கிட்டத்தட்ட ஒரு வருடம் சேனாபதியின் வாழ்க்கை அங்கு செம்மையாக்கப்பட்டது. சிறிய கட்டிகளை அறுக்கவும், தையல் போடவும், அடிபட்ட காயங்களுக்கு முதல் உதவி செய்யவும், ஓரளவு குழந்தை வைத்தியமும் அங்கு கற்றார்.

''சேனாபதி மெட்ராஸ்ல டிஸ்பென்சரி போடாத. உங்க ஊர்ப்பக்கம் போடு. அங்க இருக்கற ஆஸ்பத்திரில சேர்ந்துடு. கார்த்தால ஏழைகளுக்கு உதவி பண்ணலாம். சாயந்தரம் சுத்து வட்டார பணக்காரங்களைக் கவனிச்சுக்கலாம்.

டாக்டர் தொழில் உண்மையா இருக்கவேண்டிய தொழில். அதே சமயம் ஒரு டாக்டர் காசும் சம்பாதிக்



கணும். சம்பாதிச்சதை நிலத்துல போடு. பத்து வருஷத்துல கட்டிடம் எழுப்பி நீயா ஒரு ஆஸ்பத்திரி ஆரம்பி.

என் டிஸ்பென்சரிக்கு வான்னு இருபது முப்பது பேரைக் கூப்பிட்டிருக்கேன். நீ ஒருத்தன் தான் வந்தே. நீ வந்ததிலிருந்து நானும் என் டிஸ்பென்சரில சும்மா உட்காரலை. தொழில் தபதபன்னு நடந்துண்டிருக்கு.

நீ ரொம்ப டல்லா இருந்தே. சட்டுன்னு தெளிவா விட்ட. முகமெல்லாம் மாறிப்போச்சு. அந்தப் பையன் குடிக்க ஆரம்பிச்சுட்டான் தெரியுமோ. எல்லாரையும் கேலி பண்ணிண்டேயிருப்பானே. டாக்டர் குடிக்கலாமா குடிச்சுட்டு நாடி பார்த்தா நாடி பிடிபடுமா...பேஷண்ட் வருவானா.

உன்கிட்ட ஒரு தெய்வ பலம் இருக்கு. இதப்பத்தில்லாம் பெரியாஸ்பத்திரில கேள்வி கேட்டா, நான் நேரா பதில் சொல்லலே மாட்டேன். நான் அஞ்சு மணிக்கு எழுந்துக்கறேன், ஒரு மணி நேரம் மேதா தட்சிணா மூர்த்தி மந்திரம் சொல்றேன். அதுதான் என்னுடைய பலம்.

அப்ப ஏற்படற நிதானம்தான் அந்த நாள் முழுக்க கூட இருக்கும். அந்த நிதானம்தான் நோயைக் கண்டு பிடிக்க உதவும். அந்த நிதானந்தான் என்ன மருந்துன்னு சொல்ல வைக்கும்.

அந்த மாதிரி ஒரு விஷயத்த நீயும் பிடிச்சுக்கணும். டாக்டர் தொழில்ல, ஒரு தெய்வ உருவத்தைக் கெட்டியாப் பிடிச்சிண்டு அந்த துணையோட வைத்தியம் பண்ணணும்.

டாக்டர் தொழில்ல டென்ஷன் ஆகாம இருக்கணும்னா தெய்வ நம்பிக்கை ரொம்ப முக்கியம். காலைல

நாலு மணிக்கு எழுந்துக்கறதுக்கும், தெய்வ நம்பிக்கைக் கும் சம்பந்தம் இருக்கு, அந்த நேரத்து விழிப்பு, தெய்வம் பத்தி ஒரு தெளிவைத் தர்றது. சேனாபதி, டாக்டர் தொழில் ஜாலியான தொழில் இல்லை. ஒவ்வொரு நோயாளியும் டாக்டருக்கு ஒவ்வொரு சோதனை. ஒன் னோட ஒண்ணு போட்டு குழப்பிக்கப்படாது. தெய்வம் உண்டு சேனாபதி. யார் தெய்வத்த நம்புறாளோ இல் லியோ டாக்டர் நம்பித்தான் ஆகணும். என்னா நாம உயிரோட விளையாடறோம். மரணத்துக்குப் பக்கத்துல உக்காந்து பாத்துண்டிருக்கோம். உன்கிட்ட ஒரு தெய்வ சக்தி இருக்கு. மத்தவங்களைப் பத்திக் கவலைப்படாதே. ஒத்தையா ரெட்டையா பிடிக்காதே. உன் வேலையக் கவனி.''

அந்த பெரிய டாக்டர் பல்வேறு சமயங்களில் உதவி யாக இருந்தார். தேர்வுகளில் கூட நின்று துணை புரிந் தார்.

பரீட்சை முடிந்ததும் சேனாபதி வீட்டிற்கு போவ தற்கு முன், வீராயி கோவிலுக்குப் போய் இறங்கினார். அவரை அந்தப் பக்கத்து மனிதர்கள் அதிகம் பார்த்த தில்லை. எனவே, ஆவலோடு அவர் சாமி கும்பிடுவதைப் பார்த்தார்கள்.

''எங்க. இந்த கோவில் நிலம் எது?'' பூசாரியை ஆவ லோடு கேட்டார்கள்.

''மொத்த கிராமமும் அவளுதுதான். இந்த சோழ தேசமே அவளுதுதான். எதுக்குக் கேக்கறீங்க.''

''நேர்ந்துக்கறதுக்கு.''

''என்னா நேந்துக்கப் போறீங்க?''

''ஆத்தா கோவில் சுத்தி சுவர் எழுப்பறேன்னு.''

''நேந்துக்கறதுக்கு முன்னாடி வீராயிகிட்ட அனுமதி



கேட்டுக்க. அவ பொல்லாத பொம்பள. எனக்கு ஒரு மயிரும் வேணாம் போடான்னு சொன்னாலும் சொல் லிடுவா.''

''அம்மா, நான் உனக்கு ஏதுனா செய்யணும். என்னா செய்யறது'' அவளிடமே கேட்டார். அவள் மௌன மாக இருந்தாள். வீட்டிற்கு வந்து அப்பாவையும் அண் ணனையும் வணங்கி விட்டு அண்ணியைத் தேடினார். அண்ணி கொல்லைப் புறத்தில் இருப்பதாகச் சொன்னார் கள். வீட்டு விலக்கு என்றார்கள்.

வாசல்புறம் இருப்பது போல் ஒரு நீண்ட வராண்டா கொல்லைப்புறமும் இருந்தது. அண்ணி வராண்டாவின் மூலையில் உட்கார்ந்திருந்தாள்.

''அண்ணி நான் சேனாபதி வந்திருக்கேன்'' என்று சொன்னபோது பதிலே சொல்லவில்லை. முடி முகத்தை மறைத்திருந்தது.

''அண்ணி நான் கும்பிட்டுக்கறேன்'' விழுந்து நமஸ் கரித்தபோது அண்ணி ''அடேய்'' என்று எழுந்திருந் தாள்.

''உங்க அம்மாவைக் கூப்புடுறா. உங்க அம்மாவக் கூப்பிடு'' உரக்கக் கத்தினாள்.

வீடு அமளிப்பட்டது. அம்மா ஓடி வந்தாள்.

''என்னடி திமிரா, புள்ள பொறந்தா உருட்டுறேன்னு வேண்டிக்கிட்டியே. அந்தாண்ட போன உடனே ஆத் தாள மறந்துட்டியா. நான் மறக்க மாட்டேன்டி. நான் மறக்க மாட்டேன்டி. நான் மறக்கமாட்டேன். இந்த இருபத்தி நாலு வருஷத்துக்கும் சேர்த்து இவன் உருள ணும். வட்டியும் முதலுமா சேர்த்து இவன் உருளணும், என் மண்ணு பூரா உருளணும்.

வீடு அண்ணியின் கோலம் கண்டு பயந்து நின்றது.

அண்ணி, தான் தலைக்கு வைத்திருக்கும் மணைப் பலகையை எட்டி உதைத்தாள். அது அவர் காலடியில் வந்து நின்றது. "நான் எல்லா இடத்துலயும் இருக்கறல, இந்தக் கட்டைல உட்கார்ந்து உன்னைப் பாத்துகிட்டே இருப்பேன். எடுத்துக்கிட்டு போ. எனக்கு என்ன பண்ணணும்னு நேரம் வர்றப்போ சொல்றேன்."

அம்மாவுக்கு இந்தக் கூச்சல் பிடிக்கவில்லை.

"இன்னாடி இது. இன்னா ஆச்சு உனக்கு." அண்ணியை நோக்கிக் கூவினான்.

"என்னை நம்பல இல்ல. உன்ன நம்ப வைக்கிறேன் பாருடி." அண்ணி தலையை விரித்து சீறினாள்.

சேனாபதிக்கு வடமொழி தெரியாது.

"வீராயி வாழ்க வீராயி வாழ்க" என்று இடைவிடாது மனதுக்குள் சொன்னார். அண்ணி அமைதியானாள்.

அன்று இரவு அம்மாவுக்கு கறுப்பு நிறப் பெண்மணி அம்மாவின் கூந்தலைப் பிடித்து ஆகாயத்தில் பறப்பது போல ஒரு கனவு வந்தது.

அம்மா கனவில் அலற, வீடு எழுந்து அவளை சமாதானப்படுத்தியது

"அண்ணி கூட்டிகினு போனாங்கம்மா. பொங்கல் வச்சாங்க. அவங்க சொன்னபடியே எனக்குத்தொந்தரவு கொடுத்துக்கிட்டிருந்த பல விஷயம் சரியாச்சு. என்னை மனுஷனாவே மதிக்காதவங்க இப்ப நல்ல டாக்டரா மதிக்கறாங்க."

"எல்லாம் சரிதான் சேனாபதி. நீ டாக்டர் ஆவறதுக்கு நம்மட்டுருக்கற எல்லா நஞ்சையையும் அப்பா அடமானம் வச்சிட்டாரு. இந்த வருஷம் வட்டியும்



மொதலுமா கட்டலேன்னா, நிலம் அடமானத்துல மூழ்கிப்போகும். இதுக்கு எதுனா வழி செய்யமுடியுமா."

"இனி எதுக்கு நஞ்சையும் புஞ்சையும். வித்து உன் பொண்ணுக்கு கல்யாணம் செய். மாயவரம் போற வழில மெயின் ரோடு பக்கமா வெறும் கரம்பு நெலம் வாங்கிப் போடு. நான் இங்கதான் ஆஸ்பத்திரி கட்டப் போறேன். இங்கதான் காசு சம்பாதிக்கப் போறேன். நம்ம குடும்பத்துல யாராவது ஒருத்தர் எனக்கு உதவியா படிச்சா போதும். ரொம்ப சீக்கிரம் பெரியாளாயிடலாம். விவசாயம் போதும். கடைமடை பகுதி ஒரு போகம் பண்றதுக்கு பேர் விவசாயமா. ஆறு மாசம் சும்மா உட்கார்றதுக்கு பேரு தொழிலா. நம்ப வீடு மாறணும். நம்ம வாழ்க்கைக்குப் போக்கு மாறணும்."

"நீ மாறிக்க. நான் எதுக்கு மாறணும்."

"நீங்க மாற வேணாம். மாறவும் முடியாது. உங்க பசங்களுக்கு விவசாயம் வேணான்னு சொல்ல வரேன். அவங்க தொழில் படிப்பு படிக்கட்டும். எல்லாரும் படிச்சு பெரியாளாகிற காலமிது. படிப்புக்கு நல்ல மரியாத இருக்கற காலமிது. பொட்டைப் புள்ளைங்க கூட படிக்கணும். டாக்டருக்கோ, இன்ஜினியருக்கோ படிக்கணும்."

"பொம்பளைப் புள்ளைங்க இன்ஜினியரா" வீடு வியந்தது.

"நல்லா படிக்கறாங்க. ஏசி ரூம்ல உக்காந்து இன்ஜினியர் வேலை செய்றாங்க." அவர் பல்வேறு மேற்கோள் காட்டிப் பேச வீடு நம்பிக்கையாயிற்று.

போகும் வழி தெரிந்துவிட்டால் இலக்கு எது என்று புரிந்துவிட்டால் பயணத்தில் பயமே இல்லை.

"அப்போ நெலத்த வித்துடலாம்ன்றியா."

''ஆமா, ஆனா இப்ப விக்க வேண்டாம். பல இடம் பயிர் செய்யாத விட்டுருக்கோம். கடன்வாங்கி ஆள் வச்சு எல்லா இடத்துலயும் பயிர் செய்யலாம். எதாவது பச்சுனு போடலாம். மார்கழி, தைல பயிரு வௌஞ்சு நிக்கறப்ப, 'விக்கப்போறோம், விக்க போறாம்னு' கூவலாம். பச்சுனு இருக்கிற நிலம் நல்லா விக்கும். பட்டணத்துல ருந்து யாரும் வாங்க வந்தா இன்னும் நல்லாருக்கும். கடன் சொல்லாம காசாகும்.''

சேனாபதியின் யோசனை அப்பாவுக்குப் புரிந்தது. வட்டிக்குக் காசு வாங்காமல், மனைவியின் நகைகளை அடமானம் வைத்து காசு கொண்டுவந்தார். பசேலென்று எது இருக்கும் என்று யோசித்து பயிரிட்டார்.

முன்னோர்கள் காலத்து நிலம்,சுற்றியுள்ள புறம்போக்கு நிலமும் சேர்த்துபோன தலைமுறையிலேயே வளைத்துப் போட்டிருந்தார்கள். அது இப்போது காசாயிற்று.

கைகட்டி ஒதுங்கியிருந்த நாடார்கள் மஞ்சள், வரமிளகாய், தனியா, வெடிமருந்து என பல வியாபாரம் செய்து வெள்ளைச் சட்டையும் வெள்ளை வேட்டியுமாய் வலம் வரத் துவங்கிய காலமது. அவர்கள் வந்து விலை பேசினார்கள்.

''நெல்லுப் பயிர்ல நிலம்வாங்கணும்னு ரொம்ப நாளா ஆசை. தென்னந்தோப்புக்கு நடுவுல குடியிருக் கணும்னு வெகுநாள் கனா. ஆதி காலத்துல நிலம் இடை யாதுன்னு துரத்தப்பட்டோம். எங்க பிரிவுலதேரி காட் டுல உழைச்சு, தெத்திகிழிய பனைமரம் ஏறி, இப்பத்தான் கொஞ்சம் கொஞ்சமா முன்னேறிகிட்டு இருக்கோம். ஆறு பக்கத்துல ஊருன்னதே எங்களுக்கு அதிசயமாயிருக்கு வீட்டுப் பக்கத்துல ஆறு ஓடறதுன்றது பலதலைமுறை கனவு. தஞ்சாவூர் ஜமயத்துல எங்களுக்கு நிலம்விக்க மாட்டேங்கறாங்க. இதுக்கு பேரு கடைமடை பகுதி



யாமே. இங்க நிலம் விக்கறதா சொன்னாங்க. அத னால வந்தோம்.''

காசு கொடுத்து வாங்காத புறம்போக்கு நிலத்தை பாத்தியதை நிரூபித்து அப்பா காப்பாற்றினார்.

காவிரி கரைபுரண்டு வரும்நாளில், நாடார் குடும்பங் கள் மூங்கில் நீராடி துணிப்பையில் காசு கட்டிக் கொண்டு வந்து கொடுத்தார்கள்.

''ஆத்துல எல்லாநாளும் தண்ணி வரணும்னு அவசி யம் இல்ல ரெண்டு மூணு இடத்துல குளம்வெட்டி தண்ணி வர்றபோது திருப்பி விட்டுறணும். பூமிக்கு தண்ணிபோனா மோட்டார் போட்டு தண்ணி எடுத்துக்க லாம், அப்படி மூணுபோகம் பண்ணலாம்.''

''அப்படியா. அப்படியா'' வேளாளர்கள் வியந்தார் கள். நாடார்கள் செய்து காட்டினார்கள். வீடு கட்ட நிலம்வாங்கிய இடத்தில் கையால் சுழற்றி சுழற்றி துளை யிட்டு இரும்பு பைப்பை இடித்தனுப்பி மோட்டார் போட்டு தண்ணீர் எடுத்தார்கள். கன்னிநிலம், ஆறடி ஆழத்தில் தண்ணீர் பீய்ச்சியடித்தது. நான்கு நாடார் கள் உள்ளே வந்ததும், மெல்ல மற்றவர்களும் வாங்கி னார்கள்.

மாயவரத்திலிருந்து பூம்புகார் போகும் அந்தப்பாதை யில் மிகக் குறைந்த விலைக்கு நிலம் வாங்கி, சேனாபதி கல் கட்டிடம் எழுப்பினார். அவர் அப்பா நந்தவனம் அமைத்தார்.

சேனாபதி, வீராயி கோயிலுக்குப் போய் கும்பிட்டு வந்ததும் அவன் கொடுத்த மனைப் பலகையை தனக்கு எதிரே வைத்துக் கொண்டு டிஸ்பென்சரி துவங்கினார். காசுக்கு பதிலாக ஒரு நாடாரிடம் கார் வாங்கினார். மாயவரத்திலுள்ள பெரிய ஆஸ்பத்திரியில் வேலை ஒப்புக் கொண்டார்.

ஐம்பது வருடங்களுக்கு முன்பு படித்தவர்களுக்கு எங்கு போனாலும் வேலை கிடைத்தது. அவர் படித்தது பார்த்து அவர் குடும்பத்தில் பல இளைஞர்கள் படிக்க ஆசைப்பட்டார்கள். பேன்ட்டும், ஷூவும் போட விரும்பினார்கள்.

''படிக்கணும். அவ்வளவுதானே. அந்த ஆசை வந்திருச்கல்ல. ஆத்தா நான்என்ன படிக்கணும்னு கேளு.''

''அஞ்சு அவரை விதையை எடுத்துக்கோ. ஒரு மண்ணு தொட்டி கொண்ணாந்துவை கிழக்க டாக்டர் ஒருவிதை போடு தெற்கே இன்ஜினியர். இன்னொரு விதை போடு. மேற்கே வக்கில் இன்னொன்னு நடு. வடக்கே வரவுசெலவு கணக்கு. அங்கேயும் நடு. நடுவுல ஒரு விதைக்குழி செய்து அங்கே வியாபாரம்னு விதை போடு ஞாயிறோட ஞாயிறுஎட்டு நாள். எது எல்லாததை விட பெரிசா வளருதோ. அதான் உன் படிப்பு. வீராயி தீர்ப்பு.''

''அப்பிடியே தோண்டி எடு. அது வீராயி கட்டளை இல்லியா. உன் வீட்ல எங்கியாவது நல்ல இடமாபாத்து நட்டு, உரம் புண்ணாக்கு போட்டு வளர்த்துக்கினு வா''

''கொடி படர்ந்து வர பந்தல் போடு. அவரைப் பந்தல் தகதகன்னு வரும். பத்துகாய் விதைக்கு விடு. அதுகளை எடுத்துவேற பக்கமா நடு. நீ படிச்சு முடிக்கற வரைக்கும் அவரைக் கொடி இருக்கணும். படிப்பு முடிச்சதும் நிறைய அவரைக்காய் போட்டு குழம்பு வைச்சு, சோறுதனியா வடிச்சு வீராயி முன்னாடி வச்சுடு. அந்தம்மா நிசம். அந்தம்மா ரொம்ப சக்தியான அம்சம். நம்ம மாதிரி உயிருள்ள பொம்பள அவ.''

''ரொம்ப பயமாயிருந்தது. வந்து வேப்பஞ்சோலைல உட்கார்ந்துரு. தடுக்குனு எதாவது சரியாதோணும்.



நல்லவழி புரியும். ஒன்னே ஒன்னு. என்ன சொன்னியோ அதை செய்துரு. நான் சும்மாவந்து விழுவேன். காலைல குளிச்சிட்டு, கோயில் மண்ணுபட சுத்துவேன். உருண்டதே தெரியாது. எங்கேயோ தூக்கிட்டு போற மாதிரி எழுந்து அப்பிடியே நடந்து வந்து, காவேரில முங்கி குளிச்சிட்டு, வீட்டுக்குபோய் சாப்பிட்டுட்டு தூங்கிருவேன்.''

''இவனாடா கண்ணு இன்னா வேணும். உடனே கனாவுல குரல் கேட்கும். அண்ணியா, அம்மாவா, வேற யாரோ பொம்பளையா, வந்து பேசுவாங்க.''

''அண்ணே, என் கூடயும் பேசுனாங்கண்ணே''

''எப்படா.''

''தூக்கத்துல இல்ல. விழிப்புல.''

''எங்கடா.''

''நான் கோயிலுக்குப் போயிட்டிருந்தேண்ணே. ஆத்தான நெனச்சுக்கிட்டே போய்ட்டிருந்தேன். எல்லாரும் படிக்கிறாங்க. எனக்கு படிப்பு நல்லா வரலையேன்னு கவலைப் பட்டேன். கூடவே ஒரு ஆடு நடந்து வந்துக்கிட்டிருந்தது. ரொம்பப் பெரியமடி. தரை இடி இடிக்கிற மாதிரி மடி. ஒத்த ஆடா வந்துருந்தது. யார் வீட்டுதுன்னு தெரியலயேன்னு அடையாளம் பாத்து வச்சுகிட்டேன். கயிரு போட்டு இழுத்துக்கிட்டு போனா திருடிட்டுப் போனதா சொல்லுவாங்க. சைடு கால்வாய்ல முழங்கால் தண்ணி. இந்தே பெரிய பாம்பு போச்சு. எங்க போகுதுன்னு பாக்க நானும் பின்னாலயே போனேன். பாதைக்கு குறுக்கால பூமிக்கு அடியில பைப்பு போட்டு வச்சிருந்தாங்க.

பாம்பும் மறுபக்கம் வரவே இல்லை. எனக்கு இறங்கிப் பாக்க பயம். சே, என்னா இப்பிடி புத்தி மாறிக்

கிட்டே இருக்கேன்னு மேலே நடந்தேன். ஒரு அம்மா மரத்தடில உட்கார்ந்துட்டிருந்தது. நான் அந்த அம்மாவைப் பார்த்ததே இல்லை.

நம்ம ஊர்ப்பக்கம் எங்கியும் இதுக்கு முன்னால நான் சந்திச்சதில்ல.

மொட்ட அடிச்சி கொஞ்சம் வளர்ந்த தலை. நல்ல உயரம். பச்சைப் புடவை. சிகப்பு ஜாக்கெட். வெத்தல பாக்கு போட்டு சிவந்த வாய். புகையிலைக் காம்பை கிள்ளி வாயில் போட்டுக்கறாங்க.''

''பாம்பு தேடறியா. உன்னதான் இருக்குது. ஆடு பாத்தா ஆடு பின்னாடி, பாம்பு பாத்தா பாம்பு பின்னாடி. எப்பத்தான் ஒன்னைப் பாக்கப் போற.''

''நீங்க யாரும்மான்னு'' கேட்டேன்.

''எல்லாம் உங்களுக்குத் தெரிஞ்சவதான்டா. எங்க இவ்வளவு தூரம்'' அப்பிடினு கேட்டாங்க.

''வீராயி கோயிலுக்குப் போறேன்னு சொன்னேன்.''

''அட, நம்ம இடத்துக்கா'' அப்படின்னாங்க.

''எனக்கு எல்லாமுமே சாதாரணமாதான் பட்டது. நானும் அந்த அம்மாவும் கோயிலுக்குள்ள போனோம். 'சரவணா, இந்த தடவைமழை ஜாஸ்தி. கொஞ்சம் நம்ம கோயிலுக்கு வர்ற பாதைல கல்லு பாவணும். தொலவுல குந்து கருங்கல் கொண்டாந்து ஒரு பாதை மாதிரி போடணும் உனக்குதான் படிப்பு வரலியே. இந்த வேலையெல்லாம் செய்யேன்' அப்பிடின்னு சொல்லி சிரிச்சது.''

''அந்த சிரிப்பு எனக்கு பிடிக்கலை. ஒரு மாதிரி அவமானமா இருந்தது. கோயில் மண்டபத்துல போய் தலை குனிஞ்சு உட்கார்ந்துட்டேன். உட்கார்ந்தே தூங்கிட்டேன். அது கனவா நனவான்னு தெரியலை. கொட்



டற மழைல ஜனங்க கோயில்லேர்ந்து தள்ளி நிக்கறாங்க. கோயிலைச் சுத்தி ஒரே தண்ணி. அங்கங்கே புதை குழி. ஒரு எருமைமாடு கழுத்து தெரியற மாதிரி நிக்குது. என் காலுக்கு கல்லுப் பாதை தென்படுது. நான் கோயிலைப் பார்க்கப் போறேன். ஜனங்க 'சரவணன் போறானே, சரவணன் போறானே'ன்னு என்பின்னாடியே வர்றாங்க.

''உள்ள அந்த அம்மா, மொட்டைத்தலை அம்மா உட்கார்ந்துருக்காங்க. அவங்க ரெண்டு நாளா சாப்பிடலைன்னு எனக்கு தெரியுது. கனவு கலைஞ்சு எழுந்து வரேன். ரோடெல்லாம் தண்ணி இருக்கற மாதிரி ஒரு தோற்றம். கடும் வெய்யிலில் வேட்டியை வழிச்சிக்கிட்டு தண்ணீரில் நடக்கற மாதிரி போறேன்.''

''என்னப்பா, விரைக் கொட்டைல அடிபட்டுருச்சா என்ன' எதிர்ல சைக்கிளில் வந்தவன் கேட்டான். நான் இன்னும் கோயிலுக்கே போகலைங்கறது அப்பதான் தெரிஞ்சது.''

''அது செம்மணிடா. அவளுக்கு ரொம்ப வயசு. ஆனா அறுபது வயசுக் காரியா இருப்பா. சின்ன சின்னதா வேடிக்கை காட்டுவா. தஞ்சாவூர் பக்கம் நிறைய அம்மன் கோவில்ல அவளைப் பார்க்கலாம். உரக்கப் பாட்டு பாடுவா. ஓரணா இருந்தா கொடுன்னு கேப்பா. முன்னெல்லாம் ஒரு தம்பிடி கேட்டவ இப்ப ஓரணா கேட்கறா. அவ வயசு பத்தி ஒன்னும் சொல்ல முடியலை ஆனா அவ வாழ்க்கையைப் பத்தி பலபேர் சொல்லுவாங்க.''

அவளுக்கு ராமநாதபுரம். நல்லா பாடுவா. அவ புருஷனுக்கு பாடினா பிடிக்காது. வீட்ல பாடும்போது கோவம் வந்து அடிச்சுட்டான். அப்புறம் வீட்ல பாடற தில்லை. வீராயி கோயிலுக்கு வந்து பாடணும்னு தோணிச்சு. சந்தோஷமா சத்தம் போட்டு பாடிருக்கா. செம்மணி மாமியார் காட்டிக் கொடுக்க செம்மணி

புருஷன் வந்து கோயில்லயே பின்தலைல பின் தலையில அடிச்சிருக்கான். அப்படியே பொத்துன்னு விழுந்தா. மூச்சு பேச்சு இல்லை.

'கொலை கொலை'ன்னு ஜனங்கள் சத்தம் போட்டிருக்கு. செம்மணி புருஷன் பயந்து ஓடிட்டான். ஆஸ்பத்திரிக்கு கொண்டு போய் சேர்த்து போலீஸ்ல சொல்லிட்டாங்க. இங்கித்து ஆஸ்பத்திரிக்கு சேர்க்க முடியாது மாயவரத்துக்கு போனுட்டாங்க. அப்ப காரு வசதியெல்லாம் ஏது. குதிரை வண்டி வச்சு மாயவரம் கூட்டிட்டு போனாங்க

இங்க போலீஸு செம்மணி புருஷனைத் தேடுது. செம்மணி மாமியாரை போலீஸ் மிரட்டுது. ஆத்தாக்காரி புள்ளை இருக்கற இடத்தைப் போட்டுக் கொடுத்துட்டா. இங்கிங்க தேடிப்பாரு, இருப்பான் அப்படீன்னு காட்டிக் கொடுத்துட்டா.

புள்ளையை போலீஸ் புடிச்சுட்டாங்க. 'இவன் தானே உம்புள்ளை. இவன் தானே உம்மருமகளை அடிச்சது' அப்படீன்னு ஆத்தாக்காரியைக் கேட்டாங்க.

'ஆமாமா. நான் தடுக்க தடுக்க அடிச்சான்' அப்படீன்னு அந்த அம்மா கட்சி மாறினா.

''என்னையும் தாண்டிவிட்டு என்னை எதிர்க்கவும் பேசறியா' அப்படின்னு புள்ளை வெறுப்பா விட்டான். விலங்கு போட்ட கையோட பாறாங்கல்லு எடுத்து ஆத்தா மூஞ்சில அடிச்சான். ஆத்தா அந்த இடத்தலயே காலி.

போலீஸ், புள்ளைய அடிச்சு நொறுக்கிட்டான். மாயவரத்து ஆஸ்பத்திரிக்குப் போன செம்மணி டக்குன்னு எழுந்து உட்கார்ந்துட்டா.

டாக்டர் பின் தலையைப் பார்த்துட்டு, லேசான அடி



வேற ஒன்னும் இல்லேனுட்டார். பின் தலைல கொஞ்சமா புடைச்சிருந்தது. அவ்வளவுதான்.

என்னாடின்னு செம்மணியக் கேட்டா தூங்கிட்டேன்றா. ஆஸ்பத்திரிலேர்ந்து இங்க வந்த பிறகுதான் நடந்த மத்த விஷயங்கள் அவளுக்கு தெரியும்.

அல அலட்டிக்கவே இல்லை. இது இப்படித்தான் நடக்கும்னு கனவு வந்தது. இப்படியே நடந்திருக்கு.

செம்மணிக்கு ஒரே ஒரு பொண்ணு. அவள் அண்ணங்காரன் தன் புள்ளைக்காச்சுன்னு கூட்டிட்டு போயிட்டான்.

செம்மணி மொட்டையடிச்சுக்கிட்டு தாஷ்ணாபொடியால பல்லை கருப்பா மாத்திக்கிட்டு ஒவ்வொரு மாரியம்மன் கோயிலா சுத்திட்டிருப்பா. என்னான்னவோ தமிழ் பாட்டெல்லாம் பாடுவா. பிறந்து கழிக்க வேண்டிய கர்மாவைக் கல்யாணம் பண்ணி கழிச்சிட்டேன். இனி ஆத்தா காரியம்தான் ...அப்படீன்னு சொல்லுவா.

ஆத்தா மூலமாவே சித்து வேலையெல்லாம் கத்துக்கிட்டாளாம். ஆனா ஒரு சொல்லு கூட தப்பா இருக்காது. அது ஆத்தா இல்லை. ஆத்தா அம்சம் செம்மணி

எனக்கு கல்யாணமாகற போது மூத பந்தில உக்காந்து சாப்பிட்டா. எங்கப்பாவுக்கு செம்மணிமேல ரொம்ப மரியாதை. சாப்பிடு ஆத்தா, சாப்பிடு ஆத்தான்னு உபசரிச்சாங்க.''

அன்னி கண்கள் விரித்து கைகள் ஆட்டி விவரித்தார்கள்.

''கல்யாணமாகி போறேல்ல உன் ஊருக்கு, உன் பின்னாடி நானும் வரேன். அப்படீன்னு சொன்னா அதான் வந்துட்டாப்பல.

டேய் சரவணா, செம்மணிக்கிட்ட போய் உக்காந்து கோயில் வேலை கத்துக்கடா.''

சித்தப்பா, பெரியப்பாவின் மைத்துனர் என்று உள்ள அந்த கூட்டுக் குடும்பத்தில் பதினாறு பிள்ளைகள் பத்து ஆண்கள் ஆறு பெண்கள். எனவே சரவணனை வீடு தைரியமாய் கோவிலுக்கு தாரை வார்த்தது.

''இளைச்ச வேலையா இதை நினைக்காதடா. செம்மணிக்கிட்ட போய் உக்காந்துக்க. அவ உன்னைப் பல்வேறு விஷயங்களுக்கு தயார் பண்ணிடுவா. ஒன்னே ஒன்னு. இது ஆத்தா விஷயம். அதனால ரொம்ப ஒழுக்கமா இருக்கணும். சினிமா டிராமல்லாம் போவாத இருக்கணும். பொண்ணுங்களை தாயா நினைக்கணும்.''

இது நடந்து நாற்பத்தியொன்பது வருடங்களாகி விட்டன. சேனாபதியை அடுத்து சரவணனை அடுத்து ஒவ்வொருவராய் வீராயியைக் கெட்டியாய் பிடித்துக் கொண்டார்கள்.

ஒரே ஒரு ஆள் நடந்துபோகும் அளவுக்கு கோவிலுக்கு நேராகவும், கோயிலைச் சுற்றியும் சரவணன் கருங்கல் தளம் போட்டான்.

எதுவும் தெரியாத பையன், படிப்பு போதாது என்று ஒதுக்கப்பட்ட பையன், யார் துணையுமில்லாமல் ஆள் வைத்து, கூலிபேசி, பாரவண்டி ஏற்பாடு செய்து புதுக் கோட்டைக்கு அருகே கிணறு வெட்டிப்போட்ட கல்லை விலைபேசி வாங்கிவந்து அவனும் ஆளோடு ஆள்நின்று தளம் போட்டான்.

''இது என்ன வேலை. முன்னையுமில்லாம பின்னையு மில்லாம.''

ஊர்பெரியதனம் ஒருவர் கேலி செய்தார்.



''ஆத்தா இப்படித்தான் சொல்லுச்சு'' சரவணன் பதில் கொடுத்தான்.

''எந்த ஆத்தா''

''செம்மணி ஆத்தா''

''அவ பைத்தியக்காரிச்சி. அவ பேச்சைக் கேட்டுக் கிட்டா கோயில்வேலை செய்வாக. நாளைக்கு கோயில் பத்தி பேசறோம்-ஊர் கூட்டுங்கய்யா.''

மறுநாள் ஊர்கூடி சபை ஆரம்பிக்க பச்சைமரக்கிளை முறிந்து நடு சபையில் விழுந்தது.

பலபேர் பயந்து எழுந்துபோய் விட்டார்கள். கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது. அந்தப் பெரியதனக் காரர் எங்கு போனாலும் எதாவது ஒன்று உடைந்து தொலைந்தது. குறிப்பாய் அவர் சலூனுக்குப் போக மூன்று கண்ணாடிகளும் ஒரு பெஞ்சும் உடைந்து விழுந் தன. அந்த சவரத் தொழிலாளி அவரைப்பாதி சவரத் தில் வெளியே அனுப்பி தெருவில் வைத்து முழுக்கமுடித்து இனி வரவேண்டாம் என்று சொல்லி விட்டான்.

அதற்குப் பிறகு அந்தப் பெரிய தனக்காரர் சென் னைக்கு போய்விட்டார்.

மெல்ல மெல்ல வீராயி புகழ் அந்தக் கடைமடை தஞ்சை கிராமங்களில் பரவியது.

''என் பொண்டாட்டி குளிக்கறதச்ச நீ எட்டிப் பார்க்கலைன்னு சத்தியம் பண்ணு வீராயி மேல சத்தியம் பண்ணு நான் பேசற எல்லா வார்த்தைக்கும் மன்னிப்பு கேட்டுக்கறேன்.''

ஆனால் அவன் சத்தியம் செய்யவில்லை. பார்த்தது உண்மை என்று ஒத்துக்கொண்டான்.

"சரி. உனக்கு தண்டனை தர நான் யாரு. வீராயியே தரட்டும். நீ போ."

பாதிக்கப்பட்டவன் துரத்திவிட்டான். தவறு செய்தவன் கோயிலுக்கு போய் தண்டனைக்கு உட்கார்ந்து கொண்டான்.

நாலுநாட்கள் நீர் மட்டுமே அருந்திக் கிடந்தான். "ஒரு வருஷம் இந்தக் கோயில் எல்லை தாண்டாதே' சரவணன் கூட கோயில் வேலை செய்துட்டிரு.". செம்மணி வழி காட்டினாள்.

கலையாத கல்வியும் என்று அவன் தலையில் கை வைத்துப் பாடினான்.

அந்த மனிதர் வருகைக்குப் பிறகு கோவிலைச் சுற்றி நந்தவனம் உருவாகிற்று.

வீராயி விதம் விதமான பூக்களால் தன்னை அலங்கரித்துக் கொண்டாள். இது நடந்து நாற்பத்தெட்டு வருடங்கள் ஆகிவிட்டன.

இந்த மாதிரி பலநூறு கதைகள் வீராயி பற்றிப்பேசபட்டன.

'வீராயி யார்...' சரவணன் ஒருநாள் செம்மணியைக் கேட்டான்.

"தெரியலைடா தம்பி. எனக்கும் தெரிஞ்சுக்கணும்னு ஆசை. அதை அவதான் வந்து சொல்லணும். அவ இஷ்டப்பட்டாதான் தெரிஞ்சுக்க முடியும்"

செம்மணி சரவணனுக்கு பதில் சொன்னாள்.

ஆனால் அதற்கும் விடை கிடைத்தது திருவெண்காட்டு பக்கம் ஒரு கோயிலின் மதிற்சுவற்றை அரசாங்கம் இடித்துக் கொண்டிருந்தபோது. அந்த மதிற்



சுவருக்கு நடுவே சிறிய சிறிய சந்துகள் விடப்பட்டு அந்த சந்துகளில் பஞ்சலோக சிலைகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. அந்த சிலைகளைப் பார்க்கத் தஞ்சாவூர் கிராமங்களிலிருந்து பலபேர் ஓடினார்கள். இவர்கள் கிராமமும் ஓடிற்று.

செம்மணியும் ஓடினாள்.

முழங்கை உயர வெண்கலச்சிலை, தலையெல்லாம் தீக்கழல்போல் பறக்க உட்கார்ந்த நிலையில் இரண்டு கைகளும் வாயில் கோரைப் பற்களுமாய் ஒரு பெண் சிலையை செம்மணி உற்றுப்பார்த்தாள் கையில் அந்தப் பெண் செண்டு வைத்திருந்தது. இடக்கையில் ஒற்றை விரல் பாதத்தைக் காட்டிக்கொண்டிருந்தது. தழலாய் மேலே தூக்கிய சடையைத் தவிர முதுகொட்டியும் சடை வளையப்பட்டிருந்தது.

மார்பில் ஹாரங்கள். கச்சு இல்லை. இடையில் மடிப்பு மடிப்பாய் ஆடை. ஆடைக்குமேல் பாம்பை இறுக்கிக்கட்டியிருந்தது.

கங்கணம், வளையல்கள், செவிப்பூ. சந்திரப்பிரபை, சூரியப் பிரபை என்று அலங்காரங்கள் இருந்தன.

கோயில் பத்திரமான இடம் இல்லை என்பதால் அந்தச் சிலைகளை மாயவரத்துக்கு எடுத்துப் போக ஆசைப்பட்டார்கள்.

அதிகாரிகள் வந்து சோதனை செய்து சென்னைக்கு தகவல் அனுப்பி எல்லாம் ஆயிரம் வருஷத்து சிலைகள், துருக்கருக்கு பயந்து இவைகள் மதிலுக்குள் புதைக்கப்பட்டு பூசப்பட்டன என்று விவரம் சொன்னார்கள்.

திருவெண்காடு கோயில் மட்டுமல்லாமல் அருகே

உள்ள பல கோயில்களின் சிலைகள் அங்கு புதைக்கப் பட்டிருக்கக் கூடும் என்று ஒரு அதிகாரி சொன்னார்.

மேலும் சில தோண்டுதல்கள் நடத்தி சில சிலைகளைக் கவனமாய் எடுத்தார்கள். கை கூப்பிய நிலையில் உள்ள தலையில் ருத்ராட்சம் அணிந்த குண்டான ஒரு அந்தணர் சிலையைப் பார்த்து இவன் கிருஷ்ணன் ராமனான அநிருத்த பிரம்மராயன் என்று அடையாளம் காட்டினார்.

திருவெண்காட்டில் வார்ப்புப்பட்டறைக்கான இடம் ஒன்று இருந்தது. அங்கே தேர்ந்த ஸ்தபதிகளைக் குடி வைத்து கிருஷ்ணன் ராமனான மும்முடிச் சோழ பிரும்ம ராயர் ஏற்பாடுகள் செய்திருப்பதை ஒரு கல்வெட்டு கூறுகிறது என்பதைப் படித்துக் காண்பித்தார்.

'இந்தச் சிலை காவல் தேவதை' ஆனால் சூலம் இல்லாமல் செண்டோடு ஒரு காவல் தேவதையை இப்போது தான் பார்க்கிறேன். தாமரைப் பூ மொக்கோடு காவல் தேவதை பார்த்ததேயில்லை என்று அந்த அதிகாரி வியந்தார்.

''சரவணா இது தாமரைப்பூ மொக்கு இல்லேடா, செண்டு.'' செம்மணி அடிக்குரலில் பேசினான்.

''அப்படின்னா பவழங்கள் சேர்ந்த கொத்தா.''

காவல் தெய்வத்துக்கு பூ என்னாத்துக்கு. செண்டுங்கறது ஒரு ஆயுதம். கூழாங்கல்லு மேல வலை மாதிரி கயிறுலதைச்சு அந்தக் கயிறை அப்படியே கீழே கொண்டாந்து கைப்பிடி மாதிரி மடிச்சு மடிச்சுப் பின்னி கீழேருந்து சுத்தி கட்டையாக்கி வச்சிருப்பாங்க.

இது சின்ன கதைமாதிரி இருக்கும். அப்படி பிடிச்சா தாமரைப் பூ மொக்கு மாதிரி நாலாபக்கமும் ஆடும். ஒரு



அடி மண்டைலபட்டா ஆள் காலி. செண்டால ஆனையக்கூட அடிச்சுக் கொன்னுடலாம்.'

அதும் தவிர ஒரு சுருக்கு அவுத்துட்டம்னா முறுங்கின நீளக்கயிறு கிடைக்கும். தண்ணி சேந்தவோ மதில்சுவரு ஏறவோ அந்தக் கயிறு பயன்படும். அப்புறம் அதை செண்டா பின்னிக்கவும் முடியும். இது தாமரைப்பூ இல்லை. செண்டு. செண்டுங்கறது ஒரு ஆயுதம்.''

செம்மணி சொல்ல பலரும் வியந்தார்கள்.

''சரவணா, இந்த சிலையைப் படமா எழுதிக்கடா.''

''எதுக்கு படம். சிலையையே நம்ம ஊருக்கு எடுத்துட்டு போலாம். சிலை நம்மூர்லேர்ந்து எடுத்துட்டு போனாதான் இருக்கும்.''

''தரமட்டாங்கடா''

''வேற ஊர்க்காரங்களும் கேக்கறாங்க, செம்மணி. அவங்களும் இது எங்க ஊர்கோவிலுதுன்னு சொல்றாங்க.''

''கிடைக்காதுடா, எடுத்துக்கிட்டு பட்டணம் போயி வாங்க. அங்க கண்ணாடிப் பெட்டில கொஞ்சநாள் கிடக்கும். அப்புறம் எவனாவது குடிகாரன் திருடி வித்துருவான். இத்தா கண்டம் விட்டு கண்டம் போயிருவா. அப்புறம் வரவே மாட்டா.

''போட்டோ எடுக்கப் போறாங்களாமே.''

வேறொருவன் ஆவலாய் சொன்னான்.

''எடுக்கற போது எடுக்கட்டும். நம்ம குறிப்புக்கு ஒரு படம் வரைஞ்சுக்க, சரவணா.''

''செம்மணி திருவெண்காட்டுலயே ஒரு ஐயர் பொண்ணு படம் வரையுமாம். அதுவும் சாமிபடம் தான் நல்லா வரையுமாம்.''

''வாங்க. எல்லாரும் போய் கூட்டியாருவோம்.''

ஐந்து ரூபாய் தர ஒத்துக்கொண்டதும் அந்தப் பெண் வந்து படம் வரைய சம்மதித்தாள். கட்டைப் பேனா, கடுக்காய் இங்க், வெள்ளை அட்டை, சட்டம் என்று கொண்டு வந்தாள்.

எல்லாவற்றையும் எடுத்து வைத்து விட்டு விழுந்து வணங்கினாள்.

என்ன அழகு... என்ன அழகு ஒன்று கொஞ்சினாள். கால்ல வீரக்கழல் இருக்கு. கழுத்துல காரைங்கற அட்டிகை இருக்கு. வகிட்டுக்கிட்டயும் திலகம் இருக்கு.

''வீரக்கழல் இருக்கறதால இவன் மறவர் பரம்பரை. காரையும் உச்சித்திலகமும இருக்கறதால கல்யாணம் ஆனவ. தலைய விரிச்சுப் போட்டிருக்கிறதால கோவமா இருக்கறவ. கோரைப் பற்கள் இருக்கறதால தெய்வமா விட்டவா. மார்க்கச்சு இல்லாததால பிள்ளை பெத்தவ. பீடத்துல உட்கார்ந்து கால் தரையில படாததால சூட்சும ரூபத்தில் இருக்கறவ. தலைமுடி எரிதழல் போல இருக்கறதால தீ பாய்ஞ்சவ. தீ பாய்ஞ்சதால இவ தெய்வமாயிட்டவ.''

அன்று மாலையே அந்த விக்ரகங்கள் அனி வருத்து பொதுமக்கள் பார்க்க மாயவரம் தாசில்தார் ஆபீஸுக்கு போகும் என்று சொல்லப்பட்டது.

அந்தப் பெண் அங்க லட்சணங்களை அவசரம் அவசரமாக வரைந்தாள்.

டாக்டர் சேனாபதி அந்தக் காகிதச் சுருளை வாங்கிக் கொண்டு போய் சட்டமிடக் கொடுத்தார்.

செம்மணி அந்த விக்ரகத்தை தலையில் சும்மாடு வைத்து அதன்மீது வைத்துக் கொண்டான்.



''மாயவரம் வரைக்கும் நான் தூக்கிட்டு வரேன்யா'' என்று தொல்பொருள் அதிகாரியை வேண்டினான்.

இரவெல்லாம் நடந்து விடியலில் ஒரு கோவில் மண்டபத்தில் அமர்ந்து மறுநாள் பகல் பொழுது உச்சி வேளைக்கு தாசில்தார் ஆபீஸ் போய் சேர்ந்தார்கள்.

வழிமுழுக்க செம்மணி யாரோடும் பேசவில்லை. ஒரு சொம்பு தண்ணீர் தவிர வேறு எதுவும் எடுத்துக் கொள்ளவில்லை.

''அவ நம்ம ஊர்தான். நம்ம கிராமம் தான். அவ கதை ஆயிரம் வருஷத்துக்கதை.''

''உனக்குத் தெரியுமா.'' சரவணன் கேட்டான்.

''தெரியும்.''

''எப்படி தெரிஞ்சுது.''

''அவளே சொன்னா. உன்னை எப்ப பார்ப்பேன்னு தெரியாது. உன் கதையை சொல்லிட்டு போடின்னு கெஞ்சினேன்.''

செம்மணி சொன்ன கதையை சேனாபதியின் தங்கை மங்கையற்செல்வி எழுதிக்கொண்டாள். அது அவர்கள் கோயில் என்று ஆகி விட்ட பிறகு அதற்கு ஒரு வரலாறு வேண்டுமல்லவா. அந்த வரலாறு எழுத்தாய் வடிவம் பெற வேண்டுமல்லவா.

அந்தக் கோயில் மீதும் வீராயி மீதும் எல்லோருமே நம்பிக்கையும் காதலும் வைத்திருந்தார்கள்.

அந்தத் தலைமுறை எதையும் எளிதில் நம்புகிற தலைமுறை.

# 3

அவனுக்கு பரமி என்று பெயர். பரமனுக்குத் துணையாக இருப்பவள் பரமி. அவன் குலம் சைவ வேளாளக் குலம். ஆனால் அவன் பிறந்த கால கட்டத்தில் வேளாளர்கள் உழுது பயிர் செய்ய நேரமில்லாமல் போருக்கு போய் நாலாபுறமும் அலைந்து கொண்டு இருந்தார்கள். சோழர்களுக்கும், சிங்களர்களுக்கும் ஜென்மப் பகையாக இருந்தது. இடைவிடாத சண்டை நடந்தது.

காவிரியின் கடைமுகத்துக்கு வந்து அங்கிருந்து கடற்கரை ஓரமாய் ராமேஸ்வரம்போய் சிறிய கட்டுமரங்களில் பயணப்பட்டு ஈழத்தை அடைந்தார்கள். தரையில் போர் செய்து பழக்கப்பட்டவர்களுக்கு, கட்டு மரம் ஏறி போர் செய்வது, கட்டுமரம் ஏறி வேறு தேசம் போவது சற்று மிரட்சியாக இருந்தது.

கட்டுமரங்களில் பெரிய படைக்கலன்களை எடுத்துக் கொண்டு போக முடியவில்லை. ஒரு கட்டுமரத்தில் பத்து பேருக்கு மேல் பயணப்பட முடியவில்லை.

தஞ்சை கடற்கரைக்கு தச்சர்கள் வந்தார்கள். பெரிய மரக்கட்டைகளை இழுத்துக் கொண்டு யானைகள் வந்தன. உயரமான மரக்கலன்கள் கரையில் கட்டப்பட்டன. சிங்களத்தை அடக்கும் முயற்சியில் முழுவதுமாக ஈடுபட்டு ஆயிரக் கணக்கானவர்கள் கடற்கரை கிராமங்களில் உட்கார்ந்து வேலை செய்தார்கள்.

கருமார்கள் மிகப்பெரிய உலைக்கலன்களை அமைத்தார்கள். கப்பலுக்கு வேண்டிய இணைப்புப் பட்டைகளை செய்தார்கள். நங்கூரங்களை வார்த்தார்கள். மரக்கலத்திலிருந்து மரக்கலத்தை தாக்க புதுவிதமான



கருவிகள் வடித்தார்கள். வேலும், வாளும், குத்தீட்டிகளும் கடற்கரை கிராமங்களிலேயே செய்யப்பட்டன. நெருப்பெரிய பெரிய மரங்கள் வெட்டப்பட்டன.

பத்துக் குடிசைகளும், நாற்பதைம்பது மனிதர்களும் நிற்கும் இந்த கடற்கரை கிராமங்கள், இந்த ஆள் நடமாட்டத்தால் திணறின. தச்சர்களின் குடும்பங்கள் முக்கியமாய் பெண்டுகள் கடல் பார்க்க கும்பல் கும்பலாய் வந்தார்கள் வரும்போது அரிசியும் பருப்பும் கொண்டு வந்தார்கள். ஆற்றில் இறங்கி நிறைய மீன் பிடித்தார்கள்.

முதல் மரக்கலம் தயாரான போது பரமியின் புருஷனை அதில் ஏற்றி அனுப்பினார்கள்.

பரமி எத்தனை மன்றாடியும் கேட்காமல் அவன் புருஷன் சேனையில் சேர்ந்தான்.

''சிங்களவனைப் பழி வாங்காமல் விடேன்'' என்று கத்தினான்.

'எதற்கு' என்று கேட்டபோது 'அப்படித்தான்' என்று சொன்னான்.

''நீ மறவனல்ல. வேளாளன். வேளாளரில் வெகு சிலரே போர்ப் படையில் சேருவார்கள். நீ படையில் சேர்ந்தது போகட்டும். ஏன் கடல் கடந்து போக விரும்புகிறாய்''. பரமி அவன் கைகளைப் பிடித்துக் கொண்டு அழுதாள்.

''அடிப்போடி. பத்து மாதமாக எப்பேர்ப்பட்ட கறி சோறு தெரியுமா. மரக்கலங்கள் இங்கு கட்டாமல் இருந்தால் இப்படி கறிசோறும் புதிய துணியும் கிடைத்திருக்குமா. என்னை ஒற்றர் படையில் சேர்த்திருக்கிறார்கள். யாருக்கும் சொல்லாதே. சிங்களத்தின் கிழக்குப் பக்கம் என்னை இறக்கி விட்டு விடுவார்கள் நான் அனுராதபுரம் வரை உள்ளே போய் நாட்டின் நிலை

மையை அறிந்து, மக்களின் மனோவலிமையை புரிந்து சோழப் படைகளுக்குத் தகவல் சொல்ல வேண்டும். படைகள் நகர்வதையும் முன்கூட்டியே தெரிவிக்க வேண்டும்.''

''ஐயா, உன்னால் இது முடியாது. இந்த கெட்டிக்காரத்தனமெல்லாம் சின்ன வயசுலருந்தே வரணும். நீ காசுக்கு ஆசைப்பட்டு தலையை கொடுக்காதே.''

''காசு ஆசையில்லையடி. அதிகாரம். அரசாங்க அதிகாரந்தானடி. உலகத்திலேயே பெரிய விஷயம். சிங்களத்துலேர்ந்து திரும்பி வந்தா நம்ம கிராமத்துக்கு நாந்தான் தலைமை. இன்னொரு தடவை போய் வந்தா உப சேனாபதி. உப சேனாபதின்னா எவ்வளவு பெரிய விஷயம் தெரியுமா.''

அவன் கைகளை ஆட்டிக் கொண்டு ஆரவாரமாகப் பேசினான். போர் இப்படித்தான் கிராமத்தை நகரமாக்குகிறது. நகரத்தை கிராமமாக்குகிறது. குடந்தையும் பழையாறையும் வெறிச்சோடிக் கிடக்கிறது என்று சொல்கிறார்கள். இங்கே கிராமங்கள் சாய வேட்டி கட்டிக் கொண்டு கையில் வேல் பிடித்துக் கொண்டு அலையத் துவங்கி விட்டன.

இவன் தளபதிகளைப் போல், நின்று, நடந்து, பேசி, நடித்துக் காட்டினான். தளபதியாக வேண்டும் என்று ஆசைப்படுகிறான். தளபதியாகி விட்டதாகவே நினைத்துக் கொள்வான். ஒரு அவசரத்திற்கு இவனை யாரோ பெரியாளாக்கியிருக்கிறார்கள். முதல் நரபலி என்று அழைத்துப் போகிறார்கள்.

''நீ எவ்வளவு கெட்டிக்காரன். எத்தனை வலிமை. எவ்வளவு சூட்சுமம்''. என்று இவனை புகழ்ந்து பேசி கப்பலுக்கு இழுத்துப் போயிருக்கிறார்கள்.

பழையாறை பட்டாளத்து ஆட்கள் பேச்சுக்கு முன்



னால் இந்த நாட்டுப் புறத்தான் மயங்கி இளித்துக் கொண்டு நிற்கிறான்.

பத்து மாதமாய் படைவீரர்கள் நடமாட்டம், இந்த அப்பாவி கிராம மக்களை மாற்றியிருக்கிறது.

பரமி படைத் தலைவர்களிடம் போய் கெஞ்சினாள்.

''என் புருஷனை விட்டு விடுங்கள். அவன் கடல் கடந்து போவதில் எனக்கு விருப்பமில்லை'' என்றாள்.

''யாருக்கு விருப்பமிருக்கிறது தாயே. எனக்கும்தான் விருப்பமில்லை. கொங்கு நாட்டிலிருந்து யானைமீது மாங்கன்றுகள் கொண்டு வந்து குடந்தையில் என் தோட்டம் முழுவதும் நட்டிருக்கிறேன். விட்டுப் பிரியவே மனசில்லை. மாங்கன்றுகள் தலைக்கு மேல் வளர்ந்து விட்டன. இந்தக் கோடையில் பூக்கள் துளிர்க்கும் என நம்புகிறேன். முதல் பழத்தை நான் சாப்பிட வேண்டும் என திட்டமிட்டிருந்தேன். யுத்தம் வந்துவிட்டது. என்ன செய்ய. அரசர் சொல்படி கிளம்பித்தான் ஆகவேண்டும்.

திரும்பி வந்து பழம் சாப்பிடப் போகிறேனோ அல்லது சிங்களத்தின் புதை குழியில் மாட்டிக்கொண்டு சாகப் போகிறேனோ தெரியவில்லை. நாமெல்லோரும் விதி வசம். தாயே நகர்ந்துபோ. அவன் நல்லபடியாய் திரும்ப பிரார்த்தனை செய்.''

''பொன்காரி உன் புருஷனா. அவனை யாரும் படையில் சேர்க்கவில்லை. ஓட்டிக் கொண்டான். அவனுக்கு உப தளபதியாக வேண்டும் என்று ஆசை வந்துவிட்டது. மும்முடிச் சோழர் பிரும்மராயரிடம் போய் தனக்கு பதவி வேண்டும் என்று கேட்டிருக்கிறான். படையில் சேர வேண்டும் என்று கேட்கவில்லை. பதவி கொடுத்தால் படையில் சேருவேன் என்று பேசியிருக்கிறான். பிரும்மராயர் தன் மகனிடம் ஏதோ சொல்ல அவர்மகன் இவனைப் படையில் சேர்த்து விட்டார். இனி விடுபட முடி

யாது. யாரிடமும் கெஞ்சாதே. நாளைக் காலை மரக்கலம் கிளம்ப இருக்கிறது. வந்து நுழைந்துவிடு.''

ஆனால், காலையில் மரக்கலம் அங்கில்லை. நடுநிசியில் புறப்பட்டு விட்டார்களாம்.

''அதுதான் பிரும்மராயர் தந்திரம். எப்போது என்ன செய்வார் என்று யாராலும் சொல்ல முடியாது. படையெடுப்பை பத்து பேரிடம் சொல்லி விட்டா நடத்த முடியும்.

ஆனால் பரமி உன் புருஷன் பலியாடுதான். ஈழத்தின் கிழக்குப் பக்கம் ஒருசோழப் படை இருக்கிறது. அங்கிருந்து நடு மையத்துக்கு ஊடுருவுகிறது. இந்தப் படையில் உள்ள அத்தனை பேரும் மிகச்சிறந்த வீரர்கள், உன் புருஷன் உள்பட ஆறுபேர் ஒன்றும் தெரியாதவர்கள். சிங்களன் தன் கவனத்தை கிழக்குப் பக்கம் திரும்பும் போது வடக்கேயிருந்து அலையலையாக படை இறங்கும். அதே நேரம் கிழக்கே இறங்கினவர்கள் வெகு வேகமாய் இரண்டு பகல் ஒரு இரவு நிற்காமல் நகர்ந்து மரக்கலம் ஏறி நகர்ந்து விடுவார்கள்.

உன் புருஷனால் அது முடியாது. மாட்டிக் கொள்வான். அடி உதைபடுவான். அவன் வேளப்படை என்று சொல்லும் முத்திரைகள் அவனிடம் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அவனுக்கு கொடுக்கப்பட்ட தகவல்கள் அனைத்தும் தவறானவை.

அவன் சிங்களரிடம் சிக்குவான், வதைபடுவான். தெற்கிலிருந்து தாக்கப்போகிறோம் என்று சொல்லப் பட்டிருக்கிறது. சிங்களன் தெற்கே திரும்புவான். உன் புருஷன் திரும்புவானா என்பது சந்தேகம்.''

அவள் உறைந்து போனாள்.



அலட்டாதே...அலட்டாதே என்று எத்தனை முறை. எத்தனை பேர் சொல்லியிருக்கிறார்கள். எதற்கு அலட்டி மாட்டவேண்டும். உழுது பயிர் செய்ய எத்தனை நிலம். மேய்த்து பால் கறக்க எத்தனை பசு. விதைத்து பறிக்க எத்தனை விதமான செடிகள். காவிரியில் கையால் மீன் பிடிக்கலாம். மரத்தை உலுக்கி பழம் தின்னலாம். கடவுளே...இவன் ஏன் போய் மாட்ட வேண்டும்.

நாம் கார்காத்த வேளாளர். உழுவதும் உணவு படைப்பதுமே நம் தொழில். உனக்கெதற்கு உபதளபதி ஆசை.

இரண்டு வருடங்கள் கழிந்தன. சோழப்படை உள்ளே புகுந்து ஈழத்தின் பல பகுதிகளை கைபபற்றி விட்டது. உள்ளே போன படைவீரர்கள் பலபேர் பத்திரமாய் திரும்பிவிட்டார்கள். ஆனால் அவன வரவேயில்லை.

''நான் சொன்னபடியே நடந்ததம்மா. அவன் சிங்களப்படையிடம் மாட்டிக் கொண்டுவிட்டான். உயிரோடு இருக்கிறானா என்று தெரியவில்லை.''

அவள் புலம்பினாள். அல்லாடினாள். ஒவ்வொரு மரக்கலம் வரும்போதும் ஓடிப்போய் பார்த்தாள்.

ஏழு வருடங்கள் தினம் கடற்பரப்பை பார்த்து அவன் வருகைக்கு தவம் செய்தாள்.

சிங்களம் முழுவதும் சோழப்படையால் கைப்பற்ற முடியவில்லை. ஆனால் சிங்களர்கள் சோழ தேசத்தின் மீது படையெடுக்காமல் கரையோரம் காவல் வைத்து விட்டார்கள். மிக உறுதியாய் பாடிகள் அமைத்து விட்டார்கள்.

மரக்கலங்களில் வணிகர்களும், தனிச்சேரி பெண்டுகளும் போய் வந்தார்கள். மாடு கன்றுகளைப் போய் இறக்கினார்கள். சில மரக்கலங்களில் ஆடுகளும் போய் இறங்கின. அவனைப்பற்றி எந்த செய்தியும் இல்லை.

ஈழத்தில் வாழ்க்கை சகஜமாக இருக்கிறது. சிங்களர்கள் வந்து வியாபாரம் செய்துவிட்டு போகிறார்கள் என்று சொல்லப்பட்டது. ஆனாலும் அவனைப் பற்றி எந்த செய்தியுமில்லை. அவள் ஒருமுறை ஈழம் போய் விட்டு அவனைக் கிராமம், கிராமமாகத் தேடினாள்.

''அவன் இருப்பதாகத் தெரியவில்லை. அப்படியென்றால் இறந்து போனதாகத்தானே அர்த்தம். ஆனால் அவன் இறந்து போனதை யாரும் பார்க்கவில்லை. ஒரு வேளை வந்தாலும் வரலாம்.'' இரட்டையாய் பதில் சொன்னார்கள்

திரும்பி வந்தவளை ஊர் விதவைக்கோலம் ஏற்கும்படி கட்டாயப்படுத்தியது. இல்லையெனில், 'சூளை இலச்சினை இட்டுக்கொண்டு தேவரடியாராகப் போய்விடு' என்று யோசனை சொல்லிற்று.

அவள் இரண்டையும் நிராகரித்தாள். திருவெண்காடு குளத்தில் முழுகி இறைவனிடம் பூ போட்டு அவன் வருகையைக் கேட்டாள்.

அவன் வருவான் என்று இறை பூ மூலம் பதில் சொல்லிற்று. அவள் ஊராரின் பல்வேறு ஏச்சுகளைத் தாண்டி கட்டுக்கழுத்தியாகவே வாழ்ந்து வந்தாள். ஊர் அவளை, ஊருக்குள் வராதே என்று விரட்டியது.

அவள் காடு மேடுகளைச் சுற்றினாள். தானியங்களைப் பொறுக்கித் தின்று உயிர் வாழ்ந்தாள். இலை தழைகளை உண்டாள். தலைக்கு எண்ணெய் இல்லாமல் அலைந்தாள். கிழிந்த உடைகளோடு தூங்கினாள்.

படைவீரர்கள் அவளைப் பார்த்து இரக்கப்பட்டார்கள். அவன் உயிரோடு வருவான் என்ற நம்பிக்கையைப் பார்த்து வியந்தார்கள். அவளுக்கு அவ்வப்போது மாற்றுத் துணியும் உணவும் கொடுத்தார்கள். அவளுக்கு தலைமுடி சடை போட்டது.



திடீரென்று ஒருநாள் அவள் பரபரப்பானாள். அருகே உள்ள கடற்கரை கிராமங்களில் ஓடி ஓடி தேடினாள்.

ஒரு கிராமத்தில் பத்து சோழ வீரர்கள் அன்றுதான் வந்து இறங்கியிருந்தார்கள்.

''பொன்காரி உயிரோடுதான் அம்மா இருக்கிறான். நேற்று முன்தினம் நாங்கள் அவனைப் பார்த்தோம்'' என்று அவர்கள் சொல்ல அவள் வாய்விட்டு அழுதாள்.

கிழக்கே ஒரு யுத்த விவகாரத்தில் அவனைக் கைதியாக்கி வைத்திருந்தார்களாம். சமீபத்தில் தான் விடுவித்தார்களாம். ஆள் உறுதியாகத்தான் இருக்கிறானாம்.

அவள் அன்றே மரக்கலம் ஏறினாள். அவர்கள் சொல்லும் பாடிக்கு போய் தேடினாள். அவன் பரத்தைகளுக்கு நடுவே படுத்திருந்தான். குடிபோதையிலிருந்தான்.

அவள் திகைத்துப் போய் அவன் எழும் வரை காத்திருந்தாள். அவனைப் பார்த்ததும் கைகூப்பி அழுதாள்

''நீ எதற்கு இங்கே...யார் உன்னை அழைத்து வந்தார்கள்'' அவன் சீறி சினந்தான். அவளைத் தனியே அழைத்துக் கொண்டு போனான்.

கடற்கரை கிராமங்கள் பற்றியும் அரசாங்கம் பற்றியும் நிறைய கேள்விகள் கேட்டாள்.

''என்னைக் கேலி செய்தாயே. நான் இப்போது உபதளபதி தெரியுமா. சோழப்படையில் அல்ல. சிங்களப்படையில் கார் காத்த வேளாளன் என்று சொன்னாயே...புத்த பிட்சுகள் எனக்கு கத்திச் சண்டை பயிற்சிகள் தந்தனர் தெரியுமா. நான் சைவனல்ல, பௌத்தன். என் பெயர் பொன்காரியல்ல, பிலவேந்திரன். சிங்களப்

படையில் வேலை பார்க்கும் உபதளபதி. இன்னொரு விஷயம். நான் ஒரு சிங்களப் பெண்ணை திருமணம் செய்து கொண்டு விட்டேன். அது அரச சம்பந்தம். வெகு விரைவில் நான் தளபதியாகி விடுவேன். எனக்கொரு மகன் இருக்கிறான். ஒரு மகளும் இருக்கிறாள். நீ எப்படி ஈழத்துக்கு வந்தாய்''

அவன் துண்டு துண்டாய் பேசினான். அவனை விசாரித்தான்.

''ஆனால், எனக்கு சிங்கள வாழ்க்கை அலுப்பு தட்டி விட்டது. சோழ தேசத்துக்கு வந்து விடுவேன். சிங்கள அரசியல் பற்றி எல்லா விபரமும் எனக்குத் தெரியும். சோழ மன்னரை சந்தித்து பல விபரங்கள் தெரிவிக்க வேண்டும். அந்த குண்டன் பிரும்மராயன் எப்படி இருக்கிறான். இப்பொழுது அரசனுக்கு விசிறி விடுவது யார். அப்பனா...மகனா.''

அவன் திணறினான். அவன் புத்தியைப் புரிந்து கொள்ள முடியாமல் வேதனைப்பட்டான்.

''நான் தருகிற ஒரு பொருளை இடுப்பில் மறைத்து சோழ தேசம் எடுத்துப் போக வேண்டும். சோழ தேசம் போனதும் என்னிடம் கொடுத்து விட வேண்டும்.''

அவன் தலைப்பாகையிலிருந்து பெரிய ஹாரம் எடுத்தான். பல முத்திரை மோதிரங்களை எடுத்தான். அவனிடம் கொடுத்து அவனை மரக்கலத்திற்கு அனுப்பினான்.

அவன் செய்கைகள் எதுவும் அவனுக்கு பிடிக்கவில்லை. அவனை யாரோ கவனித்து வருவது போன்ற ஒரு எண்ணம், ஒரு விநோத உணர்வு அவனுக்கு ஏற்பட்டது.

மரக்கலம் சோழ தேசக் கரையை தொட்டு நின்றது. அவன் கீழிறங்கினான். அவனை வீட்டுக்கு அழைத்துப்



போனாள். ஊர் அவனை சூழ்ந்து கொண்டது. அவளின் காத்திருப்பு பற்றி நீட்டி முழக்கி அவனிடம் சொன்னது அவன் அதை அலட்சியம் செய்தான்.

அன்று இரவு அவள் சோறு பொங்கி பரிமாற அள்ளி அள்ளி உண்டான்.

''மாமிசம் சமைக்கவில்லையா'' என்று கேட்டான்.

''நாம் கார்காத்தார்கள் மாமிசம் சாப்பிடுவதில்லை மறந்து போயிற்றா.'' என்று அவள்கேட்க,

''எனக்குப் பழக்கமாகிவிட்டது. நான் வேறு எங்கேயும் சாப்பிட்டு கொள்கிறேன்.''

கை கழுவினான்

அவனை தேடிக்கொண்டு, சப்பை மூக்கும், பூனை மீசையும், மஞ்சள் முகமுமான ஆட்கள் வந்தார்கள். அவர்களோடு வேகமாய் பூனை பாஷையில் பேசினான்.

அந்தப் பூனை பாஷைக்காரர்களின் மரக்கலம் தொலைவில் நின்று கொண்டிருந்தது அவர்கள் மூட்டையை அவிழ்த்து ஒருதங்க கிரீடத்தையும், ரத்தின ஹாரத்தையும் அவனுக்கு காட்டினார்கள்.

அவன் மதுரைக்குப் பயணமாவதாக சொல்லிவிட்டு, அவர்கள் கொண்டுவந்த குதிரையில் ஏறினான்.

அவனுக்கு அந்த புருஷனைப் பிடிக்கவில்லை. அவர்கள் போனதும் அவள் ஊர் சபையைக் கூட்டினாள். சோழ மன்னன் தேடிவந்த பாண்டியனின் கிரீடத்தையும், ஹாரத்தையும்தான் பார்த்ததாகச் சொன்னாள். கிராமம் அவள் புருஷனைப் பின் தொடர்ந்தது. மூன்று நாட்களுக்குப் பிறகு அவனை மட்டக் குதிரையில் உட்கார வைத்து குடந்தைக்கு அழைத்துப் போயிற்று. பழையாறை கோட்டை முற்றத்தில் அவனை உட்கார வைத்

தது. சோழ மன்னர் அவனுக்கு அருகே வந்து கைகூப்பி னார்.

மும்முடிச்சோழ பிரும்மராயர் அவளை விசாரித்தார்.

அவள் புருஷனை விலங்கிட்டு சபைக்குக் கொண்டு வந்தார்கள். உடம்பெல்லாம் வரிவரியாக சவுக்கால் அடித்திருந்தார்கள்.

''புருஷனையே காட்டிக் கொடுத்துட்டியேடி. சண்டாளி'' அவன் அருகே வந்து எட்டி உதைத்தான். முடியை கொத்தாக பற்றிக் கொண்டான்.

சோழ மன்னர் 'ஹூம்' என் காலை தரையில் உதைத்தார். அவனை சரமாரியாக பிரம்பில் அடித்து விலக்கினார்கள். நடந்ததை சொல்லும்படி அவளிடம் கேட்டார்கள்.

அவள் விளக்கினாள்.

தான் காத்திருந்தது, அவனைத் தேடிப் போனது, அவன் ஒற்றனானது எல்லாம் சொன்னாள்.

மணிமுடியை, ஹாரத்தைதான் ஒளிந்திருந்து பார்த்ததைச் சொன்னாள்.

உடனே குரல் கொடுத்திருந்தால் தன்னைத் தன் புருஷன் கொன்று போட்டிருப்பான், பிறகு, இந்தத் தகவல் தெரியாமலேயே போயிருக்கும் என்பதால் உடனே ஊர் கூட்டவில்லை என்றாள்.

அவன் போனதும் ஊர் சபைக்குத் தகவல் தெரிவித்ததாகச் சொன்னாள்.

அரசர் எழுந்திருந்து அவளுக்குக் கை கூப்பினார்.

''அது பாண்டியர்களின் கிரீடமாம். அவர்கள் பரம்பரை ஹாரமாம்.''



''அவைகளைக் கண்டுபிடிக்க முடியவில்லை. அவைகளை சேரதேசத்தின் அடர்ந்த காடுகளுக்குள் எடுத்துப் போய் விட்டார்கள். ஆனால், பூனை பாஷை பேசும் அந்த ஒற்றர்படையை பிடிக்க முடிந்துவிட்டது.''

''சேர தேசத்து வழியாக மதுரையைத் தாக்கி சோழ மன்னர்களிடமிருந்து மதுரையை அபகரிக்கும் எண்ணம் அவர்களுக்கு இருந்தது. மதுரையில் ஓர் ரகசியப்படை பாண்டிய மன்னருக்கு உதவி செய்யக் காத்திருந்தது. மதுரையைத் தாக்கும் பொழுதே சோழக் கடற்கரையில் பதினேழு மரக்கலங்களில் கிழக்கு சிங்களத்திலிருந்து ஆட்கள் வந்து தாக்குவார்கள் என்று எழுதப்பட்ட சிங்கள மொழி ஓலை கிடைத்து விட்டது. போர் ஓயவில்லை. சிங்களவர்கள் அடங்க வில்லை. பாண்டியர்களும் வாலாட்டுகிறார்கள்.

எனவே, இருவருக்கும் மறுபடியும் பாடம் புகட்ட வேண்டும்'' சோழமன்னர் எழுந்திருந்து வீராவேசமாய்ப் பேசினார்.

''உன் புருஷனுக்கு என்ன தண்டனை தருவது. பத்து விரல்களையும் வெட்டி விட்டு அவனை விடுதலை செய்து விடவா'' என்று அவளிடம் கேட்டார்.

அவள் 'வேண்டாம்'' என்று சொன்னாள்.

''நீயே தண்டனையைச் சொல்'' என்று உற்சாகப் படுத்தினார்.

''தேசத் துரோகிக்கு மரண தண்டனை கொடுங்கள்'' அவள் உரக்கக் கூவினாள்.

சபை ஆரவாரித்தது. பலர் வாட்கள் உருவி அவள் எதிரே வைத்து வீர மரியாதை செய்தார்கள்.

அரசர் மறுபடி எழுந்து கைகூப்பினார், தன் கழுத்து ஒட்டியிருந்த பதக்கத்தை நீக்கி ஒரு சேடியின் மூலமாக அவளிடம் கொடுக்கச் சொன்னார்.

அவள் புருஷனான பொன்-காரியை அன்று மாலையே சிரச்சேதம் செய்தார்கள்.

அவள் கிராமம் முழுவதும் அவளுக்கே சொந்தம் என்று அரசர் ஓலை எழுதிக் கொடுத்தார்.

அவள் ஓலையோடு ஊருக்குத் திரும்பினாள் ஓலையை ஊராரிடம் சமர்ப்பித்தாள். ஊருணிக்கு அருகே சிதை வளர்த்து அதில் பாய்ந்து இறந்தாள்.

அவள் இறந்தபிறகுதான் சோழ தேசம் மிகப் பெரிய வெற்றிகளைப் பார்த்தது என்று சொல்கிறார்கள்.

ஊர் சபை அவளுக்கு கோவில் கட்டியது. புருஷனுக்கு பயப்படாத வீரமுள்ள பெண் என்பதால் 'வீராயி' என்று பெயர் வைத்தது. அவள் நடு கல்லில் 'பரமி' என்று பெயர் பொறித்தது.

இருபது வருடங்களுக்குப் பிறகு, சோழ தேசம் பலமான பிறகு, அடுத்த சோழ மன்னர் அவளுக்கு கட்டிடம் எழுப்பினார். கருங்கல்லாலான கோவில் எழுப்பினார். பக்கத்திலிருந்து ஊருணியை பெரிதாக்கி, கருங்கல் படிகள் அமைத்து அதற்கும் 'பரமிக்குளம்' என்று பெயரிட்டார்.

பரமிக்கு ஊர் முக்கியம் தன்னுடைய ஊருக்கும், தன்னைச்சுற்றியுள்ள ஊருக்கும் யார் உதவி செய்தாலும் அவர்களுக்கு பரமி உதவி செய்வாள்.

பரமி சோழ தேசத்தின் எல்லைக்காரி. கடற்கரை தெய்வம்.

மக்கள் ஒன்று சேர்ந்து காசு கொடுத்து திருவெண் காட்டுப் பட்டறையில் வெண்கலச்சிலை வார்க்கச்



சொன்னார்கள். முதல் வார்ப்பிலேயே எந்தக் குறையும் இல்லாமல் பரமி வந்து விட்டாள்.

அறுநூறு வருடங்களுக்குப் பிறகு துலுக்கர் வருகையில் தெய்வங்கள் இடம் மாறின.

வீராயி அம்மனும் திருவெண்காடு மதில் சுவரில் ஒளிந்து கொண்டாள்.

செம்மணி கதை சொல்லி முடித்தார். அந்த கடைமடை கிராமத்தைச் சேர்ந்த பலபேர் விம்மி விம்மி அழுதார்கள்.

சரவணன் மறுநாள் கோவிலுக்குப் போகும்போது, அந்த நடுக்கல்லைக் கட்டிக்கொண்டு 'அம்மா, அம்மா,'' என்று அழுதான்.

''உன் வேலைதாம்மா என் வேலை'' என்று தரையில் அடித்து சத்தியம் செய்தான்.

''உன் வேலையைத்தவிர, நான் சாகற மட்டும் வேற வேலை செய்யமாட்டேன்'' என்று உறுதி அளித்தான்.

''சேனாபதி, இந்த வீராயி ஆத்தா இல்லாடி, எப்பப்போ தலை தூக்கணுமோ, அப்பப்போ தலைதூக்கி, எப்பப்போ அடங்கியிருக்கணுமோ, அப்பப்போ அடங்கியிருந்து தன் வேலையை நடத்திக்குவா தன் வேலைக்கு யார் யாரை கூப்பிட்டுக்கணும்னு அவளுக்கு தெரியும்.''

இது நடந்து நாற்பத்தெட்டு வருடங்கள் ஆகிவிட்டன. சரவணன் தான் இந்தக் கோவிலைக் கட்டினான்.

சோழர்காலத்து கோபுரத்தை இடிக்காமல், சுற்றி பெரிய மண்டபம் கட்டி கீழே வழவழப்பாய் தரை போட்டான்.

அந்த கோவிலுக்கு ''தங்கத்தில் தேர் செய்'' என்று வீராயி அவனுக்கு கனவில் கட்டளையிட்டாள்.

தன்னுடைய கனவை அவன் சபைக்குத் தெரிவித்து, டாக்டர் சேனாபதி அதை எல்லோரிடமும் சொல்ல ஊர் சபை உடனடியாக அதற்கு ஒப்புதல் அளித்தது.

ஊர் சபை ஒப்புதல் அளித்த மூன்றாம் நாள், அந்த நெடிய தேக்கு மரம் கடலில் கலந்தது. ஒருவார பயணத் தில் கடல் நீரோட்டத்தால் அடித்துச் செல்லப்பட்டு தஞ்சை கடற்கரையின் எல்லையை மூட்டியது.

விராயி கோவிலிலிருந்து பதினாறு கிலோ மீட்டர் தொலைவில் மாரியப்பா அதை கண்டு பிடித்தார்.

ஃ ஃ ஃ

# 4

மாரியப்ப செட்டியாருக்கு சென்ற சித்திரை மாதத் துடன் ஐம்பது வயது முடிந்து விட்டது. கண்ணாடியில் பார்க்கும் போது தலை மொத்தமும் நரைத்து விட்டது.

ஆனால், வாழ்க்கை இப்பொழுதுதான் சரியான வழிக்குத் திரும்பியிருக்கிறதாய் தோன்றுகிறது.

மாரியப்ப செட்டியாருக்கு இருபது வயதில் திருமணம் நடந்தது. அப்போது அவர் மனைவிக்கு இருபத்தோரு வயது. அவள் மாரியப்ப செட்டியாரின் முறைப் பெண். ஆனால், இந்தத் திருமணம் மாரியப்ப செட்டியாருக்கு பிடிக்கவில்லை.

மாரியப்ப செட்டியாரின் மனைவி பணக்காரி. நிறைய சீர் கொண்டு வந்தவள் சொத்துக்கள் புரண்டுவிடக் கூடாதென்று வயது அதிகமானாலும் அவளைத் திருமணம் செய்து வைத்து விட்டார்கள்.



அவள் மிகக் கெட்டிக்காரியென்று பயமுறுத்தினார் கள்.

'எந்த விஷயத்துக்கும் ஒரு வார்த்தை அவளைக் கேட்டுக்கோ' என்று அறிவுறுத்தினார்கள்.

வீட்டில் அவள் வைத்ததுதான் சட்டமாக இருந்தது.

''வெறும் வண்டி வியாபாரம் பண்ணிக்கிட்டிருந்தா போதாது. நாடார்கள் உள்ள நுழையறாங்க. அவங் களும் நம்ம மாதிரி பஞ்சப் பிரதேசத்துலருந்து வந்தவங்க தான் அவங்க நிலம்வாங்கிப் போடறாங்க பார். அதுவும் ஆத்துப் பக்கமா புஞ்சை வாங்கிப் போடறாங்க பார். அவங்க சேத்துல இறங்கி உழைக்கற ஜாதி. நம்மால அது முடியாது. நாம காடு வாங்கிப் போட்டா என்ன. அந்த நிறைய மரம் இருக்கிற காடு வாங்கினால் என்ன, வெள் காட்டுல இன்னும் மரக்கன்னுங்க நட்டால் என்ன, தேக்கு,கோங்கு,வாகை,நாகமரம், பலாமரம் அப்பிடின்னு மரம் வளர்த்து தடி வியாபாரம் பண்ணினா என்ன. தடின்னா என்னன்னு தெரியும்ல. பெரிய அடி மரத்துக்கு தடின்னு பேரு. மத்ததெல்லாம் கட்டை, இங்கே விளை யுற கட்டைக்கு வெளி நாட்டில் நல்ல மதிப்பு. இப்போ நாற்பது தேக்கு நட்டோம்னா, இருபது வருஷம் கழிச்ச நம்ம புள்ளை கல்யாணத்துக்கு நாப்பது தடி பரிசா தர லாம். வட்டிக்கு விட்ட பணத்தை விட தேக்குல போட்ட பணம் அதிகமாக கிடைக்கும்.

அவள்தான் காடு பார்த்தாள். அவள்தான் தாசில் தார் அலுவலகத்திற்கு நடந்து, தாசில்தார் மனைவிக்குப் பட்டுப்புடவையும், மகளுக்கு நாலு தங்க வளையல்களும் போட்டு பத்திரம் பதிவு செய்து கொண்டாள்.

பதினாறு ஏக்கர் காடு என்பது பெரிய பரப்பு. அதற் குள் ஒரு குட்டையும், இரண்டு கிணறுகளும் இருந்தன.

ஒரு கிணற்றைச் சுற்றி கைப்பிடி சுவர் இருந்தது. அந்தக் கிணற்றை மூடி விடலாம், பாம்புகள் வருவதும் போவதுமாய் இருக்கின்றன என்று நினைத்து சுவரை மாரியப்ப செட்டியார் இடித்த போது, ஒரு சிறிய சொம்பு நிறைய தங்கக்காசு கிடைத்தது.

ஆட்கள் சற்று தொலைவிலே உட்கார்ந்து பகல் கஞ்சி குடித்துக் கொண்டிருந்தார்கள்.

சொம்பை எடுத்து இடுப்பில் சொருகி, மேல் வேட்டி போர்த்தி மூடி, தேள் கொட்டி விட்டது என்று கையை பிடித்துக் கொண்டு வேகவேகமாக வீட்டுக்கு வந்தார். பின்னால் ஆட்கள் ஓடிவர 'உங்க வேலையைப் பாருங்கடா' என்று கத்தினார்.

ஆட்கள் திகைத்து நின்று விட்டார்கள். அவர் மனைவியிடம் போய் சொம்பு காட்டினார். அவள் அடுப்பு சாம்பலில் அதை ஒளித்து விட்டு, கடிக்காத கடி இடத்திற்கு சுண்ணாம்பு தடவினார்.

ஒரு மாதம் கழித்து அது செப்பு கலக்காத தங்கம் என்று தெரிந்து விட்டது.

'ஐயா. அது நம்மதில்லை'' அவன் அவருக்கு இடரென்று ஒருநாள் சொன்னான்.

''வித்து இன்னிக்கி காசா மாத்தத்தான் நமக்கு வந்திருக்கு.''

''காசா மாத்தி'' அவர் ஆவலுடன் கேட்டார்.

''வீராயி கோயிலாமே ''

''ஆமா. வடக்கேயிருக்கு.'

''அதுக்கு செலவு பண்ணணுமாம். செத்துப் போன எங்கம்மா கனவுல வந்து என் காதைத் திருகி சொன்னாங்க''



''நீ என்ன பண்ணப் போற'' அவர் வியப்போடு கேட்டார்.

''அந்த வீராயி கோயிலுக்குப் போகலாம் வாங்க.''

அவர்கள் கோயிலுக்குப் போனார்கள். அவர்கள் உள்ளே நுழைய, 'அது என்னுது. அது என்னுது' ஒரு பெண் குழந்தை இன்னொரு பெண் குழந்தையை தூக்கிக் கொண்டு ஓடிடது.

''சரிம்மா அது உன்னுதுதான்'' மாரியப்ப செட்டியாரின் மனைவி நடு கல்லைக் கும்பிட்டாள்.

''நான் அதைத் தொடவே மாட்டேன். இது சத்தியம்'' என்றாள்.

''வாங்க. வாங்க. எந்த ஊரு.'' சரவணன் அவர்களை வரவேற்றான்

அவர்கள் ஊர் பெயரைச் சொன்னார்கள்.

''அம்மா பேரு கனவுல வந்தது. நாங்க கோயிலுக்கு ஏதாவது செய்யணும்'' என்று செட்டியாரின் மனைவி சொன்னாள்.

''என்னென்னமோ செய்யலாம். குளம் சரி பண்ணலாம் கிணறு தோண்டலாம். தினப்படி பொங்கலுக்கு மாசாந்தர அரிசி கொடுக்கலாம். குதிர் வைக்க இங்கேயே ஒரு ரூம் கட்டிக்கொடுக்கலாம்.''

நீங்க என்ன சொல்றீங்களோ அதைச் செய்யறோம்'' அவள் சரவணனைப் பார்த்து கை கூப்பினாள்,

''நாலு சீட்டுல எழுதிப் போட்டு பார்ப்போம். குழந்தைய விட்டு எடுக்கச் சொல்வோம். எது வருதோ அதை முதல்ல செய்யுங்க.''

'என்னுது, என்னுது' என்று சட்டையில்லாமல் ஓடின
குழந்தை வந்து காகிதம் எடுத்தது.

'குதிர் வைக்கும் கட்டிடம் என்ற சீட்டு வந்தது.
அவர்கள் ஊர் திரும்பினார்கள்.

முத்திரையே இல்லாத அந்தத் தங்க வில்லைகளை
'எங்கள் பரம்பரைச் சொத்து' என்று சொல்லி உருக்கி
னார்கள். மாரியப்ப செட்டியார் மனைவிக்கு தெரியாமல்
ஒரு காசை எடுத்து வஜ்ஜிரம் தடவி உத்திரத்தின் மீது
ஒட்ட வைத்தார்.

அந்த ஒரு தங்க வில்லையை தனியே உருக்கி நூறு
ரூபாய்க்கு விற்கலாம் நூறு ரூபாயை மாயவரம் எடுத்
துப்போனால் நிறைய ஆட்டம் போடலாம்.

அவருடைய காட்டைப் பார்த்துக் கொள்ள மூன்று
குடும்பங்கள் இருந்தன. அவர்கள் குடிசை போட்டுக்
கொள்ள அவர் உரிமை கொடுத்திருந்தார். அங்கே
பதினைந்து வயது பெண் ஒருத்தி அவருக்கு ஆசை காட்
டிக்கொண்டு இருந்தாள்.

பத்து ரூபாய்க்கு இரண்டு ஆடுகள் வாங்கிக் கொடுத்
தால் அவளை என்ன வேண்டுமானாலும் செய்யலாம்.
பெண்ணோடும், ஆடுகளு-னும் காட்டிற்கு போய்
விட்டால் யாரும் பின்தொடரமாட்டார்கள் மாறாக
காவல் இருப்பார்கள்.

அவள் அப்பனுக்கு பத்துரூபாய் கொடுத்தால் கட்டில்
கொண்டு வந்து போடுவான். அம்மை மதியம் கறிசோறு
எடுத்து வருவாள்.

ஆனால், எப்படி உருக்குவது என்றுதான் தெரிய
வில்லை. ஆசாரி மனைவியிடம் சொல்ல வாய்ப்பிருக்
கிறது.



'சொல்லிவிடுவேன்' என்று பயமுறுத்தவும் வாய்ப்
பிருக்கிறது.

வெகுநாள் யோசித்தார்.

சட்டென்று ஒரு தந்திரம் மனதில் உதித்தது. லுங்கி
கட்டிக் கொண்டார். மீசையில்லாது துலுக்கரைப் போல்
பொய்தாடி ஒட்டிக் கொண்டார். தொப்பி அணிந்து,
தூத்துக்குடிக்கு ரயில் ஏறிப்போய் அந்த ஒரு காசை நூற்றி
இருபது ரூபாய்க்கு விற்று விட்டு வந்தார்.

தன்னுடைய காட்டுக்குப் போய், அந்தப் பெண்ணின்
தகப்பனிடம் பத்து ரூபாய் கொடுத்து 'கட்டிலோடு உன்
பெண்ணை காட்டுக்கு அனுப்பு' என்று சொன்னார்.

அவளுக்கு அந்தக்காடு மேல் மிகுந்த ஆசை இருந்தது.

ஆனால், வாங்கக் காசில்லை. வயதுக்கு வந்த மகள்
மட்டுமே இருந்தாள். கன்னிகளில் நிறைய வருமானம்
இருந்தது. பாம்புத்தோலில் காசு கிடைத்தது. உடும்பு,
கீரி இலைகளைப் பதப்படுத்தியும் அவன் விற்றான்.

அவன் பிரம்புக் கழிகளுக்கு நடுவே உள்ள மணல்
திட்டில் கட்டில் போட்டான். பானையில் நீர் கொண்டு
வந்து கொடுத்தாள்.

மனைவியிடம் கெஞ்சிக் கொஞ்சி அனுபவித்த
காமத்தை இங்கே மிரட்டி மிரட்டி அனுபவித்தார் மாரி
யப்ப செட்டியார்.

அந்த மூன்று குடும்பங்களுக்கும் ஒரு தலைவன் இருந்
தான். அவன் பெயர் சின்னான். அவன் தாயை அவ
னுக்கு ஞாபகமில்லை. அவளை யாரோ தூக்கிக் கொண்டு
போய்விட்டார்கள். தகப்பனை சற்று ஞாபகம் இருந்தது.

ஆனால், அவனுக்கு வீடு என்று எதுவுமில்லை.
பல்வேறு கிராமங்களில் தங்கி, பல்வேறு தொழில்கள்
செய்து பிழைத்து வந்தார்கள்.

சின்னானின் தகப்பனுக்கு இரவானால் குடிக்க வேண்டும். குடித்து விட்டால் பாடவேண்டும்.

பல கிராமங்களில் இந்தப் பாட்டால்தான் சண்டை வந்தது. எத்தனை எச்சரித்தாலும் நடுநிசியில் உரக்கப் பாடுவது, கிராம மக்களுக்குப் பிடிக்கவில்லை.

அந்தப் பாட்டு அவர்களுக்கு கலவரத்தைக் கொடுத்தது. 'ஏன் பாட தான்' என்ற கோபத்தைக் கொடுத்தது. 'வாய் மேலேயே போடு' என்ற திமிரைக் கொடுத்தது.

அவர்கள் சின்னானின் தகப்பனை அடித்தார்கள், சின்னானின் தகப்பன் வேறு இடம் போய் விடுவான்.

பொட்டல் வெளியில், இடுகாட்டில், நீரில்லா ஆற்று மணலில், அறுப்புமுடிந்த களத்து மேட்டில் சின்னானின் தகப்பன் உட்கார்ந்து பாடுவான்.

ஆனால், எல்லா இடங்களிலும் துரத்தப் பட்டான். ஆனால், இங்கே வந்த பிறகு யாரும் துரத்தவில்லை.

இதைக் காடு என்றும் சொல்ல முடியாது. தோப்பு என்றும் அழைக்க இயலாது.

இங்கே கவலையோடு கும்பலாய் உட்கார்ந்திருக்கையில் அவர்கள் கூட்டத்திற்குள்ளேயே சண்டை வந்து விட்டது. 'இவன் பாடுவதால் தானே எங்கும் தங்க முடியவில்லை.'

'இவனை பாட விடாமல் செய்வது எது' கூட்டத்திற்குள் முடிவெடுக்கப் பட்டது.

'கடைசி முறையாய் எச்சரிக்கை கொடுக்கலாம்' என்றும் சொல்லப்பட்டது.

ஆனால், 'குடிப்பேன், பாடுவேன்' என்று சின்னானின் தகப்பன் சொல்ல, அவன் குடிக்கிற கள்ளில் விஷ விதையை அரைத்து, கலந்து விட்டார்கள்.



சின்னானின் தகப்பன் தொண்டையைப் பிடித்துக் கொண்டு அலறினான். வாழ்க்கையின் குறைந்த பட்ச சந்தோஷமான பாட்டுக்கூட கிடையாதா என அழுதான். அந்தக் காட்டிற்கு நடுவேஉள்ள கிணற்றுக்குப் போய் தற்கொலை செய்துகொள்ள குதித்தான். கிணற்றில் என்ன நடந்தது என்று தெரியவில்லை. கிணற்றிலிருந்து மறுநாள் காலை மேலே வந்தான்.

இது நம்ம இடம். இது நம்ம பூமி. இந்த இடத்த விட்டு யாரும் நம்மைத் துரத்த மாட்டாங்க. இங்க நமக்கு எல்லாமும் கிடைக்கும். நம்ம வம்சம் விருத்தியாகும். நம்ம பேரப்புள்ளைங்க படிக்கப் போகும். செருப்பு, குல்லாய் எல்லாம் போடலாம். தயவு செய்து என்னைப் பாட விட்டுடுங்க.

சின்னானுக்கு மட்டும் அவன் தகப்பன் ரகசியமாகச் சொன்னான்.

"இது தேவதை நடமாடுகிற காடு. அந்த தேவதை என்னைக் கிணற்றில் தாங்கிக் கொண்டது. இதுக்குப் போய் சாவணுமா பாடு என்றது. நான் பாட முடியாமல் அழுதேன். அந்த தேவதை என்வாயில் மண்ணைப் போட்டு அடைத்து பிறகு துப்பச் சொன்னது. நான் மெதுவாக 'நல்லதங்காள்' கதை பாடினேன். அந்த தேவதை அழுதது"

"என்னுடைய பொன்னை விற்று உன்னிடம் வருவான், உன்னிடம் இருக்கும் பொன்னை விற்றுஉயிரெழுப்பு என்றது. உன்னை யாரும் துரத்த மாட்டார்கள் என்று சொன்னது. இங்குள்ள பல மரங்கள் தஞ்சாவூரில் பல கோவில்களுக்கு கதவாய், நிலைப்படியாய் இருக்கப் போவதாய் தெரிவித்தது. அதற்காகவே, அவைகளை தான் வளர்ப்பதாய் சொல்லியது. அவைகளை என் மூலமாய் அங்கே வருபவர்களுக்கு அடையாளம் காட்டுவேன் என்று சொன்னது. சில மரங்களை தேனீக்கள் கூடுகட்

டாமல் இருக்கும்படி பார்த்துக் கொள்ளச் சொன்னது. சில கன்றுகளை இடம்மாறி நட சொல்லித் தருவேன் என்றது. நீர் தேங்கும் வண்ணமாகவும், சில இடங்களில் தேங்காத வண்ணமாகவும் வைத்துக் கொள்ளச் சொன்னது. அதை நான் உனக்கு பின்னால் சொல்லித் தருவேன். உன் பிள்ளைகளுக்கு மரங்களை அடையாளம் காட்டு என்று சொல்லிற்று.''

மாரியப்பச் செட்டியாருக்கு முதல்பிள்ளை பிறந்த போது அந்தக்காடு வாங்கப்பட்டது. அந்தக்காடு வாங்கப் பட்ட மறு வருடமே சின்னானும், அவன் தகப்பனும் அதை அறிந்து கொண்டார்கள். சின்னானின் தகப்பன் அந்தக் காட்டில் பதினைந்து வருஷங்கள் சந்தோஷமாய்ப் பாடி இறந்து போனான்.

அவனை ஒரு குறிப்பிட்ட மரத்தின் கீழ் புதைக்கச் சொன்னான். சோகைபிடித்த ஒரு வேப்பமரம் அவனை புதைத்த பிறகு வலுவாயிற்று.

''அடேய், இந்த நிலத்து சொந்தக்காரனுக்கு நாம் எதுவும் கொடுக்கலடா கொடுக்க நம்மகிட்ட எதுவும் இல்லை. அவன் எதுனா கேட்டா தட்டாம சரின்னு கொடுத்துடு. அப்பத்தான் நிலம் நம்மளுதாகும்.''

அந்தக் காட்டிலிருந்து பல மரங்கள் வெட்டப்பட்டு பல்வேறு நல்ல காரியங்களுக்கு, மாரியப்ப செட்டியாரால் மலிவான விலைக்குத் தரப்பட்டன. அதே சமயம், மாளிகைகளுக்கு நல்ல விலைக்கு விற்கப்பட்டன.

''மாயவரத்துப் பக்கம் ஒரு செட்டியார் இருக்காரு. கோவிலுக்குன்னா மரம் சீப்பாக் கொடுப்பாரு.'' மாரியப்ப செட்டியாரின் புகழ் சென்னை வரை பரவியது.

சின்னான் தகப்பன் நட்ட பல மரங்கள், அகன்று விரிந்து உயரமாய் வளர்ந்து விட்டிருந்தன.



மாரியப்ப செட்டியார் அவன் பெண்ணைச் சுட்டிக் காட்ட மறுக்கவே இல்லை.

''இவங்களுக்கு கொஞ்சம் நெல் அனுப்பறது'' என்று சின்னானின் மனைவி கேட்க, அந்த ஏழைக் குடும்பத்தின் உணவுப் பழக்கம் மாறியது.

மாரியப்ப செட்டியாரின் மனைவி கோவில் கட்டுவதில் குறி கண்டு விட்டார். வீராயி கோவில் அவளை இழுத்து கொண்டு விட்டது.

''கட்டிடம் கட்டினா போதுமா. ஒரு கோயிலுக்கு விழா கொண்டாட வேண்டாமா. வந்த ஜனம் கட்டிடம் கட்டும். ஜனம் வரவழைக்கறதுக்கு நாம் உற்சவம் கொண்டாடணும். முதல்ல ஊருக்கு வர்றதுக்கு ரோடு போடணும். ஆடி மாசம் பெருசா உற்சவம் கொண்டாடணும் ரோடு போட ஊரைக் கூப்பிடு. ஆடி மாச உற்சவத்தை நான் பாக்கறேன்.''

குபீரென்று கோயிலுக்கு கூட்டம் வந்தது. கார்காத்த வேளாளர்கள் மூன்று நாளும் வந்தவர்களுக்கெல்லாம் சோறு போட்டார்கள். அன்போடு கூப்பிட்டுப் பரிமாறினார்கள். அந்தக் கோயில் விரிவடைய மாரியப்பச் செட்டியாரின் மனைவி காரணம்.

''உன் புருஷன் உங்க காட்டுக்குள்ள ஒரு சின்னப் பொண்ணோட சிரிச்சுப் பேசிக்கிட்டு இருக்கானே.''

''ஆமாம். நானும் கேள்விப்பட்டேன். நரி இடம் போனா என்ன. வலம் போனா என்ன. மேலே விழுந்து பிடுங்காத இருந்தா சரி.''

''பின்னால ரொம்ப வருத்தப்படுவே தாயே.''

''வருத்தப்படறதுக்கு ஒண்ணுமில்லே. வியாபாரி பொண்டாட்டியா வாக்கப்பட்டு அப்பிடியே செத்துருவேனோன்னு நெனச்சேன். நல்ல வேளை. வீராயி

தடுத்து காப்பாத்திட்டா. என் பசங்க மூணும் ரொம்ப நல்லா இருக்கு. புருஷனுக்கு பிடிக்கலைன்னா என்ன.''

ஒரு வெள்ளிக் கிழமை வீராயி கோவிலைச் சுற்றி விட்டு, பஸ் பிடித்து ஊருக்கு வந்து, கூடத்துக் கட்டிலில் உட்கார்ந்தபடி எல்லோரையும் அழைத்தாள்.

''நெஞ்சு வலிக்குது. மத்தியானத்துக்கு மேல தாங்க மாட்டேன். எரிச்சு, வீராயி குளத்துல அஸ்தியைக் கரைச்சுடுங்க. அத்தோட போதும்.''

மாரியப்பச் செட்டியாரை வலைவீசி தேடினார்கள். அவர் காட்டிற்கு போயிருப்பதாகத் தகவல் கிடைத்தது. அவன் தேட வேண்டாம் என்று சொல்லி விட்டாள். மரணமடைந்தாள்.

மாரியப்பச் செட்டியார் அந்த கயிற்றுக் கட்டிலில் சந்தோஷத்தின் உச்சியில் இருந்தபோது, யாரோ 'தூ' என்று துப்பும் சப்தம் கேட்டது. அந்தப் பெண்ணை அனுப்பிவிட்டு படுத்துக்கிடந்த போதும், பலமுறை அந்த சப்தம் கேட்டது. அந்தப் பெண் மறுபடியும் காட்டுக்கு ஓடிவந்து விஷயம் சொன்னதும் வீட்டுக்குக் கிளம்பிப் போனார். அவருடைய இரண்டு மகன்களும், மகளும், அவரை வாய்க்கு வந்தபடி ஏசினார்கள்

''எங்க வீட்டுக்கு வராதே'' என்று கத்தினார்கள். மாரியப்ப செட்டியார் சின்னானின் குடும்பத்தோடு ஒட்டிக் கொண்டார். அவருடைய குழந்தைகள் தஞ்சையைத் தாண்டி வெளி மாநிலங்களில் போய் வெவ்வேறு வியாபாரம் செய்து உயர்ந்தார்கள்.

தாயின் பெயரால் கோயிலைச் சுற்றி தங்குமிடங்கள் கட்டினார்கள்.

ஒருநாள் ஆடிமாத உற்சவம், ஒருநாள் தை வெள்ளிப் பொங்கல், அம்மாவின் திதியன்று, ஒருநாள் அன்ன தானம் என்று சரவணனுக்கு காசனுப்பினார்கள்.



மாரியப்பச் செட்டியாருக்கு கடும் இருமல் வந்தது. அவருடைய மூத்த பிள்ளையே அவருக்கு காசு கொடுத்து வீடு வாங்கிக் கொண்டான். சின்னானின் மகனுக்கும், அவருக்கும் பிறந்த குழந்தைகள் பள்ளிக்கூடம் போயின.

''நீங்க செட்டியார் பிள்ளைங்கதானேடா.''

''இல்லை. எங்க தாத்தா பேரு சின்னான்.'' அவர்கள் பதில் சொன்னார்கள். அவர்களுக்கும் செட்டியார் மீது கோபம் இருந்தது. அவர்கள் பள்ளி இறுதி படிக்கும் போது அம்மானைக் கண்டமேனிக்கு கோபித்துக் கொண்டார்கள்.

''அவனை எதுனா செய்யச் சொல்லு'' என்று மிரட்டினார்கள்.

அந்தக் காடு சின்னானுக்கும், அவன் மகனுக்கும் சண்டை போட்ட இரண்டு பையன்களுக்கும் எழுதித் தரப்பட்டது.

மாரியப்பச் செட்டியார் சரியான உணவும், உறைவிடமும் இன்றி திண்டாடினார். பல நேரம் வீராயி கோவில் கெஸ்ட் ஹவுஸ் வராண்டாவில் தூங்கினார். அவருக்குத் திடீரென்று ஒரு இரவு சங்கம் இருட்டியது ஞாபகம் வந்தது. ஞாபகம் வந்த பத்தாம் நிமிடம் வலக்கை பலமாக வலித்தது.

வலக்கை விளங்காமல் நாற்பது நாள் மாரியப்பச் செட்டியார் அரசாங்க ஆஸ்பத்திரியில் அனாதையாக இருந்தார். வலக்கைக்கு மெல்ல மெல்ல சுரணை வந்தது. வலிவு வரவில்லை. வலிவில்லாத கையோடு மாரியப்பச் செட்டியார் அந்த மரத்தைப் பிடித்துக் கொண்டு கடற்கரையைப் பார்த்து கத்தினார்.

கோவிலுக்கு வந்திருந்த கும்பல் ஒன்றுகூடி அலையின் உதவியால் மரத்தை கரைக்கு சேர்த்தது.

''எம்மாம் பெரிய தேக்குத்தடி. செட்டியாருக்கு அதிர்ஷ்டம்தான். லட்ச ரூபாய்க்கு மேலேபோகும்'' என்று பேசிக் கொண்டார்கள்.

கடலில் யாருக்கு மரம் கிடைக்கிறதோ, அந்த மரம் அவர்களுக்குச் சொந்தம். செட்டியார் தன்னிடமிருந்து எல்லா காசையும் செலவழித்து அந்த அறுபதடி நீளத் தடியை வீராயி கோவிலுக்கு கொண்டு வந்தார்.

''தேர் வேணும்னு கேட்டே. மறுநாளே தேக்கு கொண்டாந்துட்டியே தாயே.'' சரவணன் கை கூப்பினான்.

டாக்டர் சேனாபதிக்கு தகவலனுப்பினான்.

''தேரா, தங்கத் தேரா, என்னடா சொல்றே?''

அந்தத் தேக்குத் தடியை தழுவியபடி டாக்டர் சேனாபதி கேட்டார். அவரால் அதிக நேரம் நிற்க முடியவில்லை.

ஃ ஃ ஃ

# 5

மரணம் ஒரு முடிவு. நோய் ஒருவழி. மரணம் ஒரு செயல். நோய் ஒரு காரணம். மரண மென்பது நிஜம். நோய் அதன் நிழல். மரணம் நெருப்பு. நோய் புகை.

மனிதனுக்கு நோயோடு உண்டான போராட்டம், உண்மையில் மரணத்தோடு உண்டான போராட்டம். ஆனால், இந்தப் போரில் மனிதனுக்கு நிரந்தரத் தோல்வி. இடையறாத அபஜெயம்.



மரணம் பற்றி மரணத்தின் பாதையான நோய்பற்றி டாக்டர்களுக்கு தெரிந்த அளவு, சன்யாசிகளுக்குக் கூடத் தெரியாது. ஆனால், மரணத்தை அடிக்கடி பார்த்தால் மட்டும் போதாது. அதை உள்வாங்கி, யோசித்துப் புரிந்து கொள்ளவும் வேண்டும். இந்தப் புரிந்து கொள்ளலில்தான் டாக்டர்கள் தோல்வி அடைகிறார்கள்.

நோயாளி இறந்து விட்டானா. சில நிமிடங்கள் துக்கம் கொண்டாடி, பிறகு சாவை மறந்துவிட்டு அடுத்த நோயோடு போராடப் போய்விடுகிறார்கள்.

''டாக்டர் சேனாபதி இங்கு வித்தியாசப்பட்டார்.

''பொழைச்சிருவான்னு நினைச்சேன். போய்ட்டானேப்பா.''

''நான் நினைச்சது தப்பா. அவன் போனதுக்கு என் கர்மம் காரணமா. ராத்திரி நடுவுல ஒரு தடவை வந்து பார்த்திருக்கணுமோ.''

''பூச்சி மருந்து குடிச்சிட்டான். உடனே கொண்டாந்துட்டாங்க. எனிமா கொடுத்து, வயித்தைக் கழுவி அலர்ஜி ஊசி போட்டு எழுந்து உட்கார்ந்துட்டான். காலைல செத்துட்டான்னா என்ன அர்த்தம்.''

''நான் என்ன பண்ண விட்டுட்டேன். இந்த உடம்புல இருக்கிற உயிர் என் போச்சி.''

''டேய் குப்பா, குப்புசாமி, என்னடா ஆச்சு. எனக்குக் காரணம் சொல்லக்கூடாதா. தப்பு இருந்தா திருத்திக்க வேன் இல்ல.''

ஒரு குறுக்கு வராண்டாவும், ஒரு நெடுக்கு வராண்டாவும், எதிரும் புதிருமாய் இரண்டு அறைகளும், கட்டடத்தைச் சுற்றி நிறைய வேப்ப மரங்களும் உள்ள

ஆஸ்பத்திரியில் உட்கார்ந்துதான். டாக்டர் சேனாபதி கவலைப்படுவார்.

"சிங்கப்பூர்ல போய் ஒரு எக்ஸாம் எழுதிட்டு அதுல பாஸ் பண்ணிட்டான்னா லண்டன் போய்ரலாம். லண்டன் போய்ட்டா ஜெர்மன் போய்ரலாம். ஜெர்மன் போய்ட்டா அமெரிக்கா போய்ரலாம். அமெரிக்கா போய்ட்டேன்னு வச்சுக்க. அந்தக் கதையே தனி. இங்கே அஞ்சு ரூபா சம்பாதிக்கிறியா. அதே வேலைக்கு அங்கே இநூறு ரூபா சம்பளம். டாக்டர்களுக்கு ரொம்ப மரியாதை." அவருக்கு ஆசை காட்டினார்கள்.

"அங்கேயே இருக்க வேண்டாம். அஞ்சு பத்து வருஷம் இருந்துட்டு மெட்ராஸுக்கு வந்துடலாம். மெட்ராஸ்ல தொட்டுப் பார்க்கறதுக்கு அம்பது ரூபா வாங்கலாம். நீ மாயவரத்தை விட்டுக் கிளம்பு."

"முடியாது. இந்த ஜனங்களோடு இருப்பதையே நான் விரும்புகிறேன். இந்த ஜனங்களைத் தொட்டுத் தொட்டு என்னால் நிபுணன் ஆகமுடியும்.

அமெரிக்காவின் பற்பசை சென்னைக்கு வர பத்து நாளாகிறது. மாயவரத்தின் எல்லைக்கு வர பதிமூன்று நாட்களாகும்.

வெறும் மருந்துகளில் நோய் தீராது. உணவு சீரமைப்பு மிக முக்கியம். இங்குள்ள மனிதரை அவர் உணவை நான் அறிவேன். என வைத்தியம் ஹிருதயப் பூர்வமானது. இதைக் கற்றுக் கொள்ள எங்கேயும்போக வேண்டியதில்லை."

"என்னம்மா உடம்புக்கு?"

"அய்யோ நான் என்னாத்தை சொல்வேன் டாக்டர்"

"மொதல்ல கத்தாதே. அமைதியாப் பேசு."

"முடியலியே."



"எழுந்துரு. அந்த சுவத்து மூலைல சுவர் பார்த்து உட்காரு. ரெண்டுமணி நேரம் இரு. அப்புறம் வந்து பேசு."

அந்த நோயாளியை அழுத்தி உட்கார வைத்து விடுவார்.

"என்னம்மா உடம்புக்கு?"

"ஏதோ மனசு வேதனைங்க. கத்தறேன், கத்தினா தலைநோவுது. நெஞ்சு வலிக்குது."

"அப்படிச் சொல்லு. கத்தாத இருந்துட்டா...?"

"ஒன்னும் வராதுன்னு நெனைக்கிறேன்."

"ஆமா ஆனா உன் வீட்டுக்கு நான்வந்து பாக்கறேன். உன் மனசு வேதனையை தெரிஞ்சுக்க வேணாமா நான் வந்து உன் பிள்ளைகிட்டே பேசறேன்."

நோயாளியின் வீட்டுக்குள்ளும், மனசுக்குள்ளும் புகுந்து புறப்பட்டு ஐம்பது வருடங்கள் ஆகிவிட்டன.

"அந்த டாக்டரப் பார்த்தாலே வியாதி போய்டும்பா."

"அப்பர், சுந்தரர், மாணிக்க வாசகர்னு சொல்றாங்களே. அவங்கள்ளாம் இப்படித்தான் இருந்திருப்பாங்களோ. பட்டையா விபூதி, குங்குமப் பொட்டு, மழமழன்னு ஒருமுகம், அவங்களை மாதிரியே. டாக்டரை பார்த்தா கடவுளைப் பார்த்தாப்பல இருக்கு."

"நல்லா கவனிச்சிருக்கிபா. மூணு நாளைக்குமேலே வர விடமாட்டாரு. அதுக்குள்ளேயே ரிப்பேர் பண்ணிடுவாரு."

ஊர் அவரை வாயாரப் பாராட்டியது.

தென்னை உயர, பனை உயர, அவர் மருத்துவமனையும் உயர்ந்தது.

''மாசத்துல பத்து பேருக்கு இலவசமா வைத்தியம் செய்யறார். ஏனோதானோ வைத்தியமில்லை. இல வசமா ஹார்லிக்ஸ் வாங்கித் தரார், டானிக், மருந்து எல்லாம் கொடுக்கறார். அட அதுக்கப்புறம் வீட்டுக்கு வந்து சௌக்யமான்னு கேட்கிறார்யா. குழந்தைகளுக்கு மிட்டாய் வாங்கி வாரார்யா.''

''ஒருதபா ஒருதட்டுக் கெட்ட பண்ணையார் டாக்டர் சட்டையைப் பிடிச்சிட்டான். ஆஸ்பத்திரில இருக்கற மொத்த ஜனமும் எழுந்திரிச்சிருச்சுல்ல...''

''பண்ணையார் என்னைக் கொலை பண்ண வந் தான். என்னை அடிக்க வந்தான்னு இருவத்தி நாலுபேர் எழுதிக் கொடுத்தாங்க. சட்டசபை வரைக்கும் மேட்டர் போய் அந்தப் பண்ணையார். மன்னிப்பு கேட்டு எழுதிக் கொடுத்து ஆஸ்பத்திரியை பெருக்கிட்டுப் போனான். அவன் பெருக்கறதை ரெண்டாயிரம் பேர் பார்த்தாங்க. பண்ணையார் பெருக்கறபோது ஒரே கைதட்டல், விசில். பாதி பெருக்கும்போது, டாக்டர் துடப்பத்தை வாங்கி கீழே போட்டுட்டு போயிட்டு வாங்கன்னுட்டார்.''

''அப்புறம் யாருமே வாலாட்டலை.''

''டாக்டருக்கு உண்டான மரியாதையப் பாத்துட்டு தேர்தல்ல நிக்க சொன்னாங்க.''

டாக்டர் சேனாபதி சிரிச்சிட்டுப் 'போடா போ'னுட் டார்.

தேர்தல்ல நின்னா நண்பன் எதிரின்னு வந்துரும். பிடிச்சவன் பிடிக்காதவன்னு ஆயிடும். ஒரு டாக்டருக்கு அந்த நிலைமை வரக்கூடாது.

''நான் சட்டசபைக்குப் போய என்ன பண்ணப் போறேன். மனுஷாளுக்கு சேவை. அதானே. அதைப் போகாதயே பண்ணலாமே.''



ஐம்பது வருடங்கள் ஒருநாள் கூட ஓய்வில்லாமல் சந்தோஷமாய் டாக்டர் சேனாபதி வைத்தியம் செய்தார்.

பெற்றோர் கைகாட்டின பெண்ணையே திருமணம் செய்து கொண்டார். காதல் மருத்துவத்தின் மீதிருக்க எந்தப் பெண்ணோடும் குடித்தனம் செய்யமுடியும்என்ற இயல்பு தானாக வந்துவிட்டது. வந்த பெண்ணும் மிருதுவாக இருந்ததால் குடும்பம் இனிதாக இருந்தது.

இரண்டு மகன்கள், ஒரு மகள்,என்று பிறந்து பழுத்து திமிர்ந்தார்கள்.

மகன்கள் இரண்டு பேருமே டாக்டர்களானார்கள். மாப்பிள்ளை பல் வைத்தியத்தில் வெளி தேசப் படிப்பு முடித்துவிட்டு மாயவரத்தில் உட்கார்ந்து கொண்டார். அண்ணன், தம்பி, அக்காளுக்கு எல்லோருக்கும் வீராயி யின் அருளில் நல்ல குழந்தைகள் பிறந்தன.

ஒழுக்கக்கேடு இல்லாத வாழ்க்கை. உன்மத்தம் எதிலும் கொள்ளாத வாழ்க்கை. குழந்தைகள் கலவரமின்றி வளர்ந்தன.

அப்பா, பேரன், பேத்திகளை கூட்டி வைத்துப் பேசு வார்.

''எம்புள்ள டாக்டர் சேனாபதி ராப்பகலாப் படிச் சாரு. வீராயிகிட்ட பயபக்தியா இருந்தாரு. இன்னிக்கி தமிழ்நாடு முழுக்கக் கொண்டாடற டாக்டரா இருக்கார். கடுமையா உழைக்கணும். கடவுள் பக்தி இருக்கணும். இது ரெண்டு மட்டும் போதும். உழைச்சு, ஜெயிச்சு. ஜெயிச்சது திமிராயிட்டா ஜெயிப்பு ஊத்திக்கும். ஜெயிச்சது நாமல்ல. கடவுள், அப்படின்னு நினைச்சு உட்கார்ந்துரு. ஒரு விஷயத்தை ஓடிக்கிட்டே யோசனை பண்றதுக்கும், நடந்துகிட்டே யோசனை பண்றதுக்கும், நின்னுகிட்டே யோசனை பண்றதுக்கும், உட்கார்ந்துகிட்டே யோசனை

பண்றதுக்கும் வித்தியாசமிருக்கு கடவுள் பக்தின்றது அலட்டாத உட்கார்ந்துடறது.

அந்தக் கிழவர் பலதும் சொல்லித்தர, வழிகாட்ட அவரின் பேரப்பிள்ளைகள் சிறுவயதிலேயே பக்குவமாகி விட்டார்கள்.

''நீ டாக்டராவனும், இன்ஜினியராவனும்னு இல்லை. என்ன தொழில் வேணா செய். ஆனா நல்லா செய். நம்ம சரவணன் பார். கோயில் வேலையா உட்கார்ந்துட்டான். ஆனா எவ்வளவு நல்லா செய்யறான். வீடே மறந்து போச்சு அவனுக்கு. நீங்களும் கோயிலுக்கு செய்யணும். அது நம்ம கோயில்.''

முற்றிய பேரப்பிள்ளைகள் உற்சாகமானார்கள். தொடர்ந்து மூன்று திருவிழாக்கள் அதிவிமர்சையாய் கொண்டாடினார்கள்.

ஆயிரக்கணக்காய் ஜனங்கள் அங்குகூட, வியாபாரம் பெருகிற்று. வியாபாரம் பெருக சிறிய சலசலப்புகள் தோன்றின. ஆய், ஊய் என்று கூச்சல்கள் எழுந்தன. சிறிய சண்டை வழக்குகள் பதிவாயின. அரசாங்கம் விழித்துக் கொண்டது. அறநிலையத்துறை உள்ளே வந்து உட்கார்ந்து கொண்டது.

''கோயில் சடங்குல நான் தலையிட மாட்டேன். உன் தட்டுல விழற காசு என்ன. அது எங்கே போகுது. ஏன் உண்டி வைக்கலை.''

உண்டி வைச்சா தட்டுல விழற காசு குறைஞ்சுடும். தனி நபர் சாப்பிட முடியாது. அரசாங்கம் சாப்பிடும்.

அம்மனுக்கு சாத்தின பட்டுப்புடவை எங்கே. ஆடு எங்கே. கோழி எங்கே. மாடு எங்கே. அளந்து போட்ட நெல் எவ்வளவு எல்லாம் எங்ககிட்ட கொடுக்கணும். நாங்க கோவிலுக்கு குறைவில்லாத தருவோம்.



''உங்க பிள்ளைங்களுக்கு முத வரிசைல நெய் சோறு போட்டுட்டு, அடுத்த பந்தியில நல்லெண்ணை ஊத்த றீங்களா. கோயில்ல சோறு இனாமா தரக்கூடாது. ஹோட்டல்ல சாப்பிடறதுக்கு இங்கே சாப்பிடப் போறான். ஹோட்டல்ல கொடுக்கறதுல பாதி கொடுக்கட்டும். ஒரு இலை சாம்பார் சோறு ஒரு ரூபா. தயிர் சோறு ஒரு ரூபா. பாயசம் ரெண்டு ரூபா. வடை எட்டணா. சக்கரைப் பொங்கல் ரெண்டு ரூபா. பட்டுத் துணியை, முழுநீள ஜாக்கெட் பீஸா இருந்தாலும், ஏலம் போடணும். ஆடு ஏலம் போடணும். மாடு ஏலம் போடணும். ஆடு கொண்டாந்து விடறதுக்கு அஞ்சு ரூபா மாடு விட்டா பத்து ரூபா. விசேஷ நாள்ல ஸ்பெஷல் தரிசனம், ஒரு ரூபா. வி.ஐ.பி. தரிசனம் ரெண்டு ரூபா. உருளுதண்டம் ஒரு ரூபா, வேப்பிலை ஆடைக்கு ரெண்டு ரூபா.''

''இது அநியாயம். ஆத்தா ஒத்துக்க மாட்டா.''

''அரசாங்கம் ஆத்தாள விடப் பெருசு. ஒத்துக்கிட்டே ஆகணும்.''

''ஊர் கூடி எதிர்ப்போம்.''

''முடியாதுங்க. அரசாங்க அதிகாரியை வேலை செய்ய விடாத தடுத்தா கைது பண்ணிடலாம்.''

''இத்தினி நாளு அனுபவிச்சீங்க. நீங்களா பெருசு பண்ணி மாட்டிக்கிட்டீங்க. இனிமே அரசாங்கந்தான் அனுபவிக்கும். உண்டி வைக்கறதுதான் முறை. வைக்க வியா. அப்பப்போ தட்டுல வந்து விழற காசை எடுத்துப்போம்.''

''தயவு செய்து அப்படியெல்லாம் மிரட்டாதீங்க.'' சரவணன் தளர்ந்து பேசினான்.

''இந்தக் கோவிலுடைய எல்லா விஷயமும் இனிமே அரசாங்கத்தோடது. இந்தக் குளம், நிலம் எல்லாம் அரசாங்கத்துது. நீங்க இதுக்காக உழைச்சு ஓடாப் போயிருக்கலாம். அதைப்பத்தி எங்களுக்கு அக்கறை இல்லை. பரம்பரை தர்மகர்த்தான்னு ஒரு மரியாதை தருவோம். சடங்கு செய்ய விடுவோம். உங்களை கேட்டுக்கிட்டு திரு விழால்லாம் செய்வோம். நீங்க கேக்கற செலவைக் கொடுப்போம். கணக்கு கேப்போம். என்ன பண்றது. அரசாங்கம் அப்படித்தான். வருமானம்னு தெரிஞ்சிருச் சுன்னா தலைக்கு மேலே வந்து உட்காந்துரும். நாலஞ்சு வருஷமா எத்தினி வியாபாரி எவ்வளவு சாப்பிட்டான், கேட்டோமா.''

''பத்து ஆடு வைச்சுக்கிட்டு அம்பது ரூபாய்க்கு ஒரு ஆடுன்னு ஜனங்ககிட்ட விட்டு, ஆத்தாகிட்ட விடச் சொல்லி அதே ஆட்டை மறுபடி கொண்டாந்து விட்டாங்களே. ஒரு ஆட்டை நாப்பது தடவை வித்துட்டு ஆத்தா அள்ளி அள்ளி கொடுக்கறான்னீங்களே. நியாயமா இது. ஆடு மேட்டர்ல மட்டும் அரசாங்கத்துக்கு நாப்பது பெட்டிஷன் வந்துருக்கு. சரவணன் நல்லவர்தான். டாக்டர் சேனாபதி குடும்பம் தப்புப் பண்ணலை. ஆனால், கோயிலுக்குள்ளே வியாபாரியை விட்டுட்டீங்களே. அங்கே தான் தப்பு நடந்து போச்சு.

ஆனால், எங்கே கூட்டம் நடந்தாலும் வியாபாரி வந்துருவான். ஏதாவது குப்பை, புண்ணாக்கு விப்பான். இணைத்துத் தண்ணீல சாக்ரீன் கலந்து பன்னீர் சோடான்னு வித்தானேய்யா. ஒரு பைசா போட்டு இருவத்தி அஞ்சு பைசா சம்பாதிச்சான். அடுக்குமா. இலவசமா சோறு போட்டீங்க சரி. ஏன் ஏழைங்களுக்குப் போடலை. அரிஜனங்களுக்கு ஆறாவது பத்தியா. எத்தினி பெட்டிஷன் தெரியுமா அதுக்கு.



ஒரே ஆளு பத்து பன்னிரண்டு பேர்ல டெல்லி வரைக்கும் எழுதிப் போட்டான்யா. ரொம்ப பெரிய கம்ப்ளைண்ட் என்ன தெரியுமா. கரகாட்டம் என்கிற பெயரில் ரெக்கார்டு டான்ஸ் நடக்கிறது. ரெக்கார்டு டான்ஸ் என்கிற பெயரில் விபச்சாரம் செய்கிறார்கள். இப்படி தான் மாட்டினீங்க. இல்லேன்னா, இந்த ஊரை யாருக்கும் தெரிஞ்சிருக்காது. அரசாங்க விதிகளுக்குக் கட்டுப்படு வேன்னு கையெழுத்துப் போடுங்க. அப்பத்தான் நீங்க பரம்பரை தாமகர்த்தாவா இருக்கலாம். இல்லேன்னா அதுவும் போயிடும்.''

அரசாங்கம் அதிகாரிகளை அனுப்பி பயமுறுத்தியது. கார்காத்த வேளாளர்கள் திண்டாடினார்கள். என்ன செய்வது என்று தெரியாமல் தவித்தார்கள். எங்கோ மாந்தோப்பிலிருந்த செம்மணியிடம் போய் கேட்டார்கள்.

''அவ காசு நமக்கெதுக்குடா. அவளைத் தொட்டுத் தடவி பூஜை பண்றதுதானே முக்கியம். அவ நிறைய காசு பாத்துட்டவ. வெள்ளைக்காரன் வரும்போதும், துலுக்கன் வரும்போதும் அவளுக்கு காசு வராமயா இருந்தது. பூஜை நிக்கக் கூடாது.''

''காசெல்லாம் கவர்மெண்டே எடுத்துக்கட்டும். ஒரு வேளை தண்ணீர் அபிஷேகம். ஒருவேளை பொங்கல் நிவேதனம். இது போறும். இதப் பண்ணிட்டு தள்ளி நின்று வேடிக்கை பாரு.''

''கெடுவான் கேடு நினைப்பான்.''

''இங்க வந்து கொள்ளை அடிக்கறவன் எவனும் நல்லா இருக்க மாட்டான். ஒரே ஆட்டை நாப்பது தடவை வித்தவனும், இணைத்துத் தண்ணிய பன்னீர் சோடான்னு வித்தவனும் என்ன ஆனான்னு கவர்மெண்டால கண்டுபிடிக்க முடியுமா? அல்லது ஆத்தா கண்ணுல

ருந்து தப்பு பண்ணினவன் தப்பிச்சுர முடியுமா, கவர்மெண்ட் குப்பை, சால்ஜாப்பு. ராஜா இருந்த போது உண்டானதுதான் ராஜாங்கம். அரசன் இருந்தாதான் அரசாங்கம். அதாவது, ஒருத்தன் கட்டளைக்கு பயந்து நடக்கறது. இப்போ இருக்கற அரசாங்கமெல்லாம் தலைக்குத்தலை பெருந்தனம் சரி. வியாபாரி கொள்ளை யடிக்கறான். உள்ளுக்குள்ளே அதிகாரின்னு வரப் போறானே. அவனை என்ன பண்ணப் போறான். அதே தான் நடக்கும். நீ உன் வேலையைச் செய். வேடிக்கை பார்.''

''இல்லை செம்மணி. அது எங்கே அது எங்கேன்னு கேள்வி கேக்கறானே, நான் என்ன பதில் சொல்றது, பதில் சொல்றதா, கூடாதா. எனக்கு ஒன்னுமே புரிய லையே'' சரவணன் பதறினான்.

''ஆத்தா வழிகாட்டுவா.''

அவன் ஏதாவது திருடிட்டு என்மேலே பழி போட்டுட்டா.''

''இத்தனை நாள் பூஜை பண்ணிட்டு அவளைப் புரிஞ்ச லட்சணம் இதுதானா. உன் தலை மயிரைக்கூட எவனும் அசைக்க முடியாது தைரியமாப் போ.''

அரசாங்கத்தால் பெரிய உண்டிகள் வைக்கப்பட்டு 'இதோ உண்டி' என எழுதப்பட்டது.

எல்லா நேர்ந்து கொள்ளலுக்கும் சீட்டு தரப்பட்டது.

ஆறுமாதம் ஒழுங்காக நடந்த விஷயம் உற்சவம் வந்ததும் சிதறிப் போயிற்று. வியாபாரிகள் அதிகாரி களை விலைக்கு வாங்கினார்கள். விலைக்கு வாங்கியதா லேயே அதிகம் விளையாடினார்கள்.

''சின்னக்கடை அம்பதுரூபா. பெரிய கடை நூறு ரூபா. எல்லா வியாபாரிட்டயும் நன்கொடை வாங்கு. ஆத்தா படம்போட்டு போஸ்டர் அடி. பிரும்மாண்ட



மான பூச்சொரியல்னு சொல்லு. கீழே 'இரவு பஸ்வசதி உண்டு'னு போடு. போக்குவரத்துக் கழக டைரக்டர் நம்ம சிநேகிதன். நம்ம செக்ரட்டரி மூலமா அவங்க செக்ரட்டரிக்கு ஒரு லெட்டர்போட்டு பத்து பஸ் எக்ஸ்ட்ரா விடுன்னு கேப்போம். மூணு விடுவான். அந்த டிரைவர், கண்டக்டரைக் கூப்பிட்டு மாலை மரி யாதை பண்ணுவோம். ஜனத்தை அள்ளிப் போட்டுனு வந்துருவான். இந்தத் தடவை ரெண்டு பார்ட்டிய ரெக் கார்டு டான்ஸ் ஆடவிடு போட்டி போட்டுகினு ஆடுவா ளுங்க. ஜனம் அங்க மாட்டிக்கும்.''

''இதான சார் சிக்கறது. கவர்மெண்ட் கேக்காதா?''

''கேக்கும். நான் மூணு நாளா இருவது லட்ச ரூபா வருமானம் சார்னு காமிப்பேன். ஒரு வருஷத்துக்கு அறு வது லட்சரூபா கறக்கற கோயில்னு சொல்லுவேன். கவர்மெண்ட் வாயை மூடிக்கும்.''

''யாராவது புகார் எழுதிப் போட்டா?''

''பரம்பரை தர்மகர்த்தா சரவணன்னு ஒருத்தன் இரு க்கான் சார். அவன் தான் சாப்டுட்டு இருந்தான். அரசாங் கம் உரிய நடவடிக்கை எடுத்தபிறகு அவனால சாப்பிட முடியலை. அதுனால மொட்டை பெட்டிஷன் எழுதிப் போடுறான்னு சொல்லிடுவேன்.''

''இந்த தடவை கோயிலுக்கு கூட்டம் வருமா?''

''வர வைக்கணும்.''

அந்தமுறை பெருங்கூட்டம் வந்தது. எல்லாம் ஏற் பாடு செய்தவர்கள் கழிப்பிடங்களுக்கு ஏற்பாடு செய்ய வில்லை. காலரா பரவியது. வாந்திபேதி வந்தது. நால்வர் பலியானார்கள். பலியான நால்வரில் இரண்டு பேர் வியாபாரிகள். ஒருவர் ரெக்கார்டு டான்ஸ் ஏஜெண்ட். இன்னொருவன் கூட்டத்தில் பெண்களைக் கண்டபடி தொட்டவன்.

பாதிக்கப்பட்டவர்கள் நானூறு பேர்களுக்கும் மேல். ஆனால், டாக்டர் சேனாபதி விராயிமுன் கைகூப்பி அழுதார்.

"என்னை இங்கு டாக்டராக வைத்துவிட்டு ஊரில் காலராவா. அப்போ நான் சரியில்லை என்றுதானே அர்த்தம். எனக்கு உதவிசெய், ஊரை குணப்படுத்து."

வெளியூரிலிருந்து டாக்டர்களைக் கெஞ்சி வரவழைத்து, அவர்கள் உதவியோடு தனியொரு மனிதனாய் தொற்று நோயோடு போராடி ஜெயித்தார். மறுவருடம் கூட்டம் குறைந்து விட்டது. பல வியாபாரிகள் பலமாய் நஷ்டமடைந்தார்கள். ஊர் கூடி காசு வசூலித்து கோவில் மண்டபத்தில் ஹோமங்கள் செய்தார்கள். அறநிலையத் துறை அதற்கு வாடகை வாங்கிக் கொண்டது.

மாயவரத்தில் பூம்புகார் போகும் சாலையும், சென்னையிலிருந்து வரும் கடற்கரைச் சாலையும் விஸ்தரிப்பாக ஜனங்களுக்கு ஊர் ஊராய்ப் போகும் ஆசையும் ஏற்பட கோயில் விஸ்தரிப்பாயிற்று. பிராபல்யமாயிற்று.

ஆனால், தர்மகர்த்தாவுக்கும் அறநிலையத் துறைக்கும் உண்டானபோர் நிற்கவே இல்லை.

"வருமானத்தைப் பெருக்க வேண்டியது தர்மகர்த்தாவான உங்ககடமை. அந்த வருமானத்தை எடுத்துக்க வேண்டியது அரசாங்கமான எங்ககடமை."

"கேட்கக் கொஞ்சம் அநியாயமாத்தான் இருக்கும். ஆனா இதான் நல்லது, வருமானத்தை நீங்க எடுத்துக்கிட்டா உங்களுக்கு நல்லதா, வருமானமே இல்லாத கோயில்னாலும் உங்களுக்கு மரியாதையா."

"அரசாங்கம் முட்டாளில்லை. முட்டாள் மாதிரி நடிக்கும்." ஒரு நல்ல அதிகாரி தெரிவித்தார்.



கோயிலை வச்சு ஊருக்குநிறைய நல்லது பண்ணலாம் ரோடு, பள்ளிக்கூடம், பசங்களுக்கு பகல் சாப்பாடு,மூணு பேஸ் மின்சாரம், மேனிலைத் தொட்டி, புதுக்ககுளம், குளியல்ரூம், பிரைமரி ஹெல்த் சென்டர், மாட்டாஸ்பத்ரி பயணியர் விடுதி என்னென்னவோ செய்யலாம்."

"அதிகாரின்னா காசு சாப்பிடுறவனும் இருப்பான். தான் ஏழையா இருந்து பணக்காரனானேன். காதலுன்ன பொண்டாட்டி கிடைச்சா, கவர்மெண்ட் ஏதாவது முறைச்சா போடான்னுட்டு லீவு போட்டுட்டு போய்டுவேன். என்னை ஊர் ஊரா மாத்தி கடைசில இங்கே கொண்டாந்து போட்ருக்காளுங்க. நான் செய்து காட்டறேன் பார்."

ஒரு மூணு உற்சவங்கள் அமோகமாய் நடந்தன. உற்சவ வாகனங்கள் சொந்தமாய் செய்யப்பட்டன. கல்லாலான பெரிய துவஜஸ்தம்பம் கட்டப்பட்டது.

"கம்பத்துல மந்திரி பேர் போட்டுக்கனுன்றான்."

"போட்டுக்கட்டும். சாமி இல்லேன்னுவாங்க. கோயில்ல பேரும் போட்டுக்குவாங்க. இரட்டை நாக்கு பசங்க."

"என் இவ்வளவு கோபப்படறீங்க."

"ஆமா, தெய்வத்தை நம்பறவங்களுக்குத்தான் கோயில்ல வேலை. நம்பாதவங்களுக்கோ நம்பற மாதிரி நடிக்கிறவனுக்கோ வேலையில்லை. நாத்திகமா இருக்கற கம்பீரமும் இல்லை. ஆத்திகமா இருக்கற அமைதியும் இல்லை. எங்க பார்த்தாலும் இந்த ரெண்டுங்கெட்டான் கும்பல்தான்."

"புரியலியே."

"காதல் பண்ணணும்னு ஆசை இருக்குப்பா, ஆனா கல்யாணம் கட்டமாட்டானாம். காதல் வேண்டாம்கற

கம்பீரமும் இல்லை. கல்யாணம் பண்ணிக்கணும்கற உன் மையும் இல்லை. வெத்து அலட்டலுக்கு வாழ்க்கை நடத்தறாங்க. கொத்து கொத்தா பொய் சொல்றாங்க. பொய் சொல்றது சாமர்த்தியங்கற மாதிரி மாறிடுச்சு. லஞ்சம் வாங்கறது சம்பாதிக்கறதுங்கற மாதிரிமாறிடுச்சு. இந்த சம்பாத்தியம் எப்படி ஒட்டும். புள்ளை சாவும், பொம்பளையால் அவமானமும் நோயும் நொடியும்தான் இது கொண்டாந்து கொடுக்கும். கோயிலை விட்டுரலா மான்னு தோணுது. கோயிலே இல்லாத ஒரு வழிபாடு கண்டுபிடிக்கணும்னு ஆசையக இருக்கு.

வீட்டுக்குள்ள உட்கார்ந்துக்க. வேலை செய்யற இடத்துல உக்காந்துக்க. ஒரு மனைப் பலகைல சம்மணம் கட்டி உட்காந்து தலைல மெலிசு துணி போட்டு உடம்பு முழுக்க மூடி மந்திரம் சொல்ல கத்துக்க. ஆயிரம் வருஷத் துக்கு முன்னாடி நிறைய ஐயருங்க அப்படித்தான் இருந் திருக்காங்க. மந்திரம் சொல்றதுக்கு முன்னாடி அரை மணி நேரம் இந்த இடத்தை விட்டு எழுந்திருக்க மாட் டேன்னு உட்கார்ந்திருக்காங்க. உடம்பு சும்மா உட் கார்ந்தா மனசு எகிறும். ஒரு மணி நேரம் மனசு எகிறி எகிறி தானா அடங்கும். அப்ப தியானம் பண்ண ஆரம் பிச்சுடலாம். இதில் ஜெயிச்சுட்டம்னா கோயிலும் வேண் டாம், குளமும்வேண்டாம்.

ஐயருங்கள்ளாம் கோயிலை சாப்பாட்டுக்கடை மாதிரி வச்சிருந்தாங்க. மனசுக்குள்ள நடக்கற பூஜைய வீட்டுத் திண்ணைல வச்சுட்டாங்க. அதைத்தான் நாம மாறுபட ஆரம்பிக்கணும். என்னா...கோயில் வெறும் கூத்தாடி கூடாரமா போயிடுச்சு. கெக்கெக்கேன்னு சிரிக்கறதுக்கு கோயில் இடமா போயிடுச்சு. நான் கோயிலை விட்டுரலாமான்னு பாக்கறேன்.''

சரவணன் தலையைக் குனிந்து கொண்டான்.



அன்று இரவு கோயிலை சாத்தும்போது செம்மணி வந்தாள். உரத்த குரலில் மண்டபத்தில் நின்று பாடினாள். சரவணன் கையைப் பிடித்துக் கொண்டு கோயிலை வலமாக சுற்றினாள்.

கோயிலின் பக்கக் கதவு வழியே குளத்துக்கு அழைத் துப் போனாள்.

அந்தக் குளத்தின் பரப்பு முழுவதும் ஏகப்பட்ட உருவங்கள் நின்றிருந்தன. சபை போல ஒரு அமைப்பு இருந்தது. நடுவே ஒரு பெண் ஒரு காலை கீழே வைத்து இன்னொரு காலைதான் அமர்ந்த சிம்மாசனத்தில் வைத்து மிக அலட்சியமாய் பேசிக் கொண்டிருந்தாள்.

பேச்சு சட்டென்று நின்றது. எல்லோரும் சரவண னைப் பார்த்தார்கள்.

'உன் வேலையைச் செய். அலட்டாதே' நடுவே சிம்மாசனத்தில் இருந்தவள் கட்டளையிட்டாள்.

சரவணன் உடம்பு பயத்தில் நடுங்கியது. செம்மணி அவனைத் தாங்கிப் பிடித்து வேறு பக்கம் அழைத்துப் போனாள்.

''என்ன......என்னா...என்னா இது......''சரவணன் குழறினான்.

''இது ஒருவிதமான கடவுள் தரிசனம். உனக்குப் புரியும்படியா நடந்த விஷயம். இங்க ஒன்னும் ஒன்னால தீர்மானம் பண்ண முடியாது. உனக்குக் கொடுத்த வேலையைச் செய், சாப்பிடறவன் சாப்பிடட்டும். போர் போடறவன் போட்டுக்கட்டும். ஆடறவன் ஆடட்டும். அவனவனுடைய வினை அவனவனுக்குப் படியளக்கும் இங்கு விளைவு இல்லாமல் எந்த வினையுமில்லை. அவன் வினை அவன் விளைவு. நீ என்ன நாட்டாமை.''

''உனக்கு எப்படி தெரிஞ்சுது செம்மணி நான் பேசினது?''

''அவ கூப்பிட்டு சொல்றா. இதப் பாரு அவன் குழப்பிக்கிறான். போய் கேளுன்னு உத்தரவு போடறா. நான் போட்டது போட்டபடி விட்டுட்டு உன்னைத் தேடிக்கிட்டு வந்தேன். நீ குழப்பிக்கக் கூடாதுங்கறதுக்குத்தான் இந்த தரிசனம். நீ எப்பவும் வீராயியோட யே இருக்கணுங்கறதுக்குத்தான் இந்தக் காட்சி.''

''நான் பார்த்தது நிசமா.''

''நிசம்தான். உலகத்துல ஏகப்பட்ட நிசம் இருக்கு. அதுல இது ஒரு நிசம்.''

''சரியா சொல்லு.''

''கனவு காண்றியே அது நிசமா?'' செம்மணி கேட்டான். ''கனவுல பொங்கல் சாப்பிடறியே. அந்தப் பொங்கல் நிசமா.''

''இல்லை. பொய்.''

''இல்லை. அதான் நிசம்னு நான் சொல்றேன். இப்ப என்கூட பேசறதுதான் கனவுன்றேன்.''

''குழப்பறியே.''

''உனக்கு நிசம் தெரியப் போவுது. அதனால குழம்பற. இப்போதைய கட்டளை. நீ கோயிலை விட்டு நகரக் கூடாது. வேற எவனாவது உள்ள பூந்துட்டா பூஜைல தப்பு வந்துரும். தெய்வக்குத்தம் ஏற்பட்டுதுன்னா இந்த ஊர் மொத்தமும் நாஸ்தி. வேடிக்கை பார் வேடிக்கை பார், வெறும் வேடிக்கை பார்.''

குளத்தில் பார்த்த அதே பெண்மணிதான் கனவில் வந்தாள்.



''தேர் பண்ணணும்டா. தங்கத் தேர் பண்ணணும். அது கோயிலுக்குள்ள சுத்தி சுத்தி வரணும். நான் உட்கார்ந்துக்கிட்டும் இருக்கணும். சுத்தியும் வரணும்.''

அவன் கனவை வெளியே சொன்னால் யார் என்ன கேலி செய்வார்களோ என்கிற பயத்தில் சொன்னான். அவன் கனவில் அவனுக்கே நம்பிக்கையில்லாமல் சொன்னான்

''அப்படியா. தேர் பண்ணணுமா. பண்ணிடுவோம்'' அந்த நல்ல அதிகாரி உற்சாக மூட்டினார்.

''தங்கரத உண்டி ஒன்னு வச்சிருவோம்.''

''குளத்துக்கு தெற்குப் பக்கம் கோயில் நிலம் அறுபத்தி மூணு கிரவுண்ட் இருக்கு. நடுவுல பாதை விட்டு விட்டு அம்பத்தி மூணு ப்ளாட் பண்ணலாம். சர்வே எடுத்து கல்லு நட்டு பட்டாபோட்டு உரக்க கூவி வித்தா அம்பத்தி மூணு லட்சம் போவும். தண்ணி கஷ்டம் கிடையாது. ரெண்டு கிலோ மீட்டர்ல கடல். இந்தப் பக்கம் மாயவரம். அந்தப் பக்கம் புதுக்கோட்டை. அட்டகாசமா விக்கும். நான் விளக்கமா எழுதி அதிகாரிகளைக் கேட்டு உனக்கு சொல்றேன்.''

அவருக்கு ஏதோ ஒரு உற்சாகம் பற்றிக் கொண்டது. இருபத்தியேழு பக்க கடிதம் ஒன்று எழுதி ஒரு பக்கத்தில் அந்தக் கடித சுருக்கம் ஒன்று எழுதி வீராயி பாதத்தில் வைத்து விட்டு நூல் சுற்றி அரக்கு ஒட்டி சென்னைக்கு அனுப்பினார்.

அறநிலையத் துறை கைவினைக் கழகத்துக்கு தேர் செய்ய முடியுமா என்று கேட்டு அனுப்பியது.

முடியும் என்று கைவினைக் கழகம் பதில் எழுத ஒரு மாதமாகியது. அன்றைய நிலவரப்படி உத்தேச மதிப்பீடும் சொல்லியது.

அறுபதடி நீளம் கொண்ட தேக்கு மரம் மூன்று தடிகள் வேண்டுமென்று சொல்லியது

''இது நான் கண்டுபிடிச்ச மரங்க. இதை நான் தர மாட்டேன்.'' மாரிமுத்துச் செட்டியார் சரவணன் கேட்டதும் கன்னென்று எரிந்து விழுந்தார்.

''ஐயா நான் இனாமா கேட்கலை.''

''அப்படி சொல்லுங்க. கோயிலுக்கு கொடுத்துடறியான்னா என்ன அர்த்தம்.''

''சரவணா, செட்டியாருக்கு நான் காசு கொடுத்துடறேன்டா.'' டாக்டர் சேனாபதி கோயிலுக்கு வெளியே படுக்க வைத்திருந்த மரத்தைத் தடவிப் பேசினார்.

''மரத்தைப் பார்த்தியா...மழமழன்னு பளிங்குக் கல்லு மாதிரி இருக்கு. இந்த மாதிரி இன்னும் ரெண்டு தடி வேணுமாமே. இதுக்கு எவ்வளவு கேட்பார் செட்டியார்.''

''லட்ச ரூபா கொடுங்க டாக்டர். லாரி ஏத்தி பட்டணத்துக்கு அனுப்பினா அதுக்கு மேலேயே போகும் கோயிலுக்குன்னு கேட்டதால மீற முடியாம கொடுக்கறேன். கடைசி காலத்துல எனக்குன்னு நாலு காசு வேண்டாமா.''

''உங்களுக்குன்னு இல்லாத சொத்துங்களா.''

''அதெல்லாம் தெரியாது டாக்டர். ஒரு லட்ச ரூபாய். அஞ்சு நாள் காத்துட்டிருக்கேன். ஆறாவது நாள் மெட்ராஸுக்கு லாரில போயிடும்.''

''நம்மூர்ல வந்து ஒதுங்கின மரம், அது ஆத்தாவுக்குத்தான் தனி மனுஷன் சொந்தம் கொண்டாட முடியாது' ஊர் சொல்லியது.

''இதுவரை எத்தனையோ மரம் ஒதுங்கியிருக்கு. எவன்டா ஆத்தாளுக்கு கொடுத்திருக்கான்.''



மரத்துக்கு இழுபறி நடந்த வேளையில் சென்னையிலிருந்து ஒரு பட்டாளமே வந்து விட்டது.

''ஒற்றைக் காசு அரசு செலவு செய்யாது. போன முறை அரசுக்கு வந்த லாபத்திலிருந்து ஒரு துளிகூட குறையக் கூடாது. அதற்கு மிஞ்சி ஊர் கூடி தேர் செய்தால் செய்து கொள்ளட்டும். தேர் தனியாரிடமும் செய்யக்கூடாது. அரசு கை காட்டும் துறையில்தான் செய்ய வேண்டும். அதே நேரம் அந்தத் துறை கேட்கும் காசைக் கொடுத்து விட வேண்டும். அரசின் மேற்பார்வையில் அரசாங்கத்திடம் காசு கொடுத்து அரசாங்க ஆட்களை வைத்து கோயில் தேர் செய்து கொள்ளலாம். ஆனால் அரசாங்கத்தின் வருமானம் குறைந்தால் அரசாங்கம் சும்மா இருக்காது. தேர் வேலையை நிறுத்தி விடும்.''

''சரின்னு சொல்லுங்க சரவணன்'' அந்த அதிகாரி உற்சாகப்படுத்தினார்.

''எப்படிங்க இதுக்கு சரின்றது. ஒரு வேலை ஆரம்பிச்சா நிறுத்தக் கூடாது. நான் நிறுத்துவேன்னு கவர்மெண்ட் சொல்லுது.''

''போங்க சரவணன், நீ என்ன சுத்த சூனா மானாவா இருக்க. தேர் செய்யச் சொன்னது ஆத்தாய்யா. கவர்மெண்ட்டா சொல்லுச்சு. கவர்மெண்ட்டுக்கு முகம் கிடையாதுய்யா. இப்போதைக்கு நான்தான் முகம் நான் திக்க விட மாட்டேன். எல்லாரும் ஒன்னா கூடி நின்னு முடிக்கணும்யா. மறுபடி சொல்றேன் தேர் நீயும் பண்ணலை, நானும் பண்ணலை ஆத்தா செய்துக்கறா. உனக்கும் எனக்கும் பொறுத்த போக வேணாமா. ஏதாவது லட்சியம் வேணாமா. ஆத்தாவோட சேர்ந்துக்குவோம். எல்லாம் நல்லா நடக்கும்கா.''

''ஒரு அரசாங்க அதிகாரி கோயில்ல இவ்வளவு உற்சாகமாக இருக்கறது சந்தோஷமா இருக்குங்க.'' டாக்டர் சேனாபதி கைகூப்பினார்.

"நான் நிறைய டிபார்ட்மெண்ட்ல இருந்துட்டேங்க. உணவு... போலீஸ்... போக்குவரத்துக் கழகம்...மக்கள் தொகை கணக்கெடுப்பு, ஒரே இடத்துல இருந்தா இந்நேரம் கோட்டைல செக்ரட்டரி ஆயிருக்கனும். என் வாய் சும்மா இருக்காது. ஏண்டா அநியாயம் பண்றீங்கன்னு சத்தம் போட்டு கேட்பேன். தூக்கிருவானுங்க."

"உன்னை நாறடிக்கிறேன் பாருன்னு இந்த ஒரு குக்கிராமத்துல இந்தக் கோவிலுக்கு ஸ்பெஷல் ஆபீஸரா போட்டிருக்கான். கொஞ்சம் வருத்தமாதான் வந்தேன். என் நமக்கு புத்தியில்லை. மத்தவங்க மாதிரி நம்மால இருக்க முடியலைன்னு உள்ள அழுதேன். இங்க வந்து ஆத்தாளைப் பார்த்தவுடன், அடடே இது நம்ம இடம்னு தோணிப் போச்சு. சந்நிதில வாய் விட்டு சிரிச்சேன்யா. அன்னிக்கு உள்ள மலர்ந்து போச்சு."

"நான் இங்க இருக்கற வரைக்கும் ஆத்தா காசு ஒத்த பைசா இந்தண்ட அந்தண்ட போவாது கவர்மெண்ட்டுன்னா அப்பிடித்தேன். கோச்சுக்கப்படாது. கோயில் ரொம்பப் பெரிசு. கவர்மெண்ட் அதை சாப்பிடவே முடியாது. அப்புறம் இன்னொன்னு சொல்றேன். சிவன் சொத்து குல நாசம்னுவாங்க. அப்ப பெருமாள் கோயில்ல திருடலாமா. கோயில் சொத்து குலநாசம். தெருமுனைல புள்ளையார் கோயில் உண்டியலை உடைச்சிப் பார். நானூறு ரூபா திருடினதா வச்சுக்குவோம். நல்லா சாப்பிடு. குடி. அதுல கடைசி ஒரு ரூபாய்க்கு வேர்க்கடலை வாங்குவ பார், அதுல நாலு சொத்தைக் கடலை மாட்டிக்கும். வயித்துல போய் குடல் மடிப்புல மாட்டி பூச்சி கூடு கட்ட ஆரம்பிக்கும். மகனே, சாகற வரைக்கும் பேதி தான். அதனால எதைப் பத்தியும் கவலைப்படாத. கவர்மெண்ட் சொன்னதுக்கெல்லாம் தலையாட்டிட்டு தடி வாங்குவோம்."



"வந்து ஒதுங்கின மரத்தை மாரியப்பச் செட்டியார் தரமாட்டேங்கறாரே."

"நீயும் டாக்டரும் மரத்தைக்கட்டிகிட்டு கேட்டாக்கா எவன் தருவான். நான் ஒரு போர்டு எழுதி வைக்கிறேன் தங்கரதம் திருப்பணிக்கு தேக்குமரம் கொடுங்கள் அப்ப, டின்னு எழுதி வைப்போம். தஞ்சாவூர் மாயவரம்லாம் போஸ்டர் ஒட்டுவோம். மாரியப்பச் செட்டியாரைக் கேட்கவே கேட்காதீங்க. தங்கரதம் முடிப்போம்யா."

"நம்ம வீடு இடிக்கிறோங்க. இது நூறு வருஷத்து வாசக்கால். இப்ப இது தோதுப்படாதனுட்டாங்க. நல்ல தேக்குமரங்க. இது ரதத்துக்கு சரியா வருங்களா."

பஸ்ஸிலிருந்து கஷ்டப்பட்டு இறக்கி இரண்டு மகன்கள் தலையில் ஏற்றி ஒரு கிழவர் கோயிலுக்கு உள்ளே வந்து இறக்கினார்.

"அடடே... வந்து கேட்டு கொண்டாந்திருக்கலாமில்ல...பழசு போடப்படாதுன்னுவாங்க பெரிசு. புது மரத்துலதான் செய்வாங்க, பாருங்க அன்னப்பட்சி, யானை, லட்சுமி, தேவதை எல்லாம் இருக்கு பாருங்க. தேவதைங்க தொங்குது பாருங்க. கொண்டாந்த க்கு சந்தோஷம். இதுபெரிய மனசு, நாளைக்கு ஸ்தபதிவராராம். அவருக்குன்னு வீடு ஒழிச்சு வச்சிருக்கோம். அவரைக்கேட்டு சொல்றோம்."

மறுநாள் ஸ்தபதி வந்து இறங்கினார். அவருடன் நாலைந்து பேர்கள் வந்தார்கள். சிறிய கண்களும் பெரிய உருவமுமாய் ஒரு ஸ்தபதி யானையை ஞாபகப்படுத்தினார்.

"மரம் வாங்கிட்டீங்களா. என்னைக் கேட்காத வாங்காதீங்க. குளிச்சிட்டு வரேன் கோயிலுக்கு போவோம்."

அவருக்கு ஒதுக்கப்பட்ட வீட்டில் தங்கினார்.

வேட்டியும் மேல் துண்டும் அணிந்து கோயில் எதிரே நெடுஞ்சாண்கிடையாய் விழுந்து கும்பிட்டார்.

''அடேயப்பா...மரம் வாங்கிட்டீங்களா. எங்கேர்ந்து வந்தது, நல்ல தேக்கா இருக்கே. டேய் இழைப்புளியெடுத்தாடா''

''உள்ளே வந்து சாமி கும்பிட்டுட்டு பாருங்களேன்''

''ஐயா, தெய்வம் உக்கிரமா இருக்கு. கருவறை சேர்ந்து அலை அடிக்குது. என் காதுக்குள்ள ஓங்காரம் கேட்குது. ரொம்ப மரியாதையா செய்ய வேண்டிய இடம்யா இது, நான் கோவில் கதவு, கண்ணாடி மண்டபம், பொன்னூஞ்சல், சித்திரப்பள்ளியறைன்னு பண்ணியிருக்கேனே தவிர தேர் பண்ணதில்லை. தேர் பெரிய வேலைய்யா. பகுதிப் பகுதியா ஒரு தேர் செய்துட்டு அடுக்கணும். அறுத்துட்டு மாட்டணும், கொஞ்சம் கஷ்டமானவேலை. மனுஷாளகிட்ட மட்டும் இல்லை. தெய்வத்தோட அனுக்ரஹமும் வேணும், கொஞ்சம் ஜாக்கிரதையாக பண்ணவேண்டிய விஷயம். வாசல்ல இருக்கிற மரம் நம்மளுது இல்லீங்களா''

'நம்முளுது இல்லை. விக்க மாட்டேங்கறான்''

''மரம் நல்லா இருக்கு. பக்குவமா அறுத்தா பாதி தேர் பண்ணிடலாம். வெண்கல சத்தம் கேட்குது. இழைச்சு பார்த்தா வாட்டம் தெரிஞ்சிடும் நீளவாட்ட மரமா இருந்தா கோபுரம், தூண் செய்திடுவேன். குறுக்கு வாட்டரேகையா இருந்தா அடிக்கட்டைக்கு வச்சுக்குவேன். அறுத்து பாலீஷ் பண்ணப்னா நூறு வருஷத்துக்கு வரும்''

''கடவுளே. இது அவன் காதுபட சொல்லிடாதீங்க. கூடகாக கேட்பான்.''



''இந்த மரம் நமக்குதாங்க, இது காசில்லாம கிடைக்க போவுது'' ஸ்தபதி உரக்கக் கூவினார்.

''அத்தான்கிட்ட மறுபடியும் போய் கேட்போம் வாங்க''

'வேணாங்க'' சரவணன் மறுத்தான் ''ஜனங்கதானா வந்து நன்கொடை கொடுக்கனும். நம்ம விரட்டி விரட்டி கேட்க வேண்டிய அவசியமில்லை. அது நமக்கும் நல்லது இல்லை. ஆத்தானுக்கும் நல்லதில்லை'' சரவணன் அடிக்குரலில் கையைக் கட்டிக் கொண்டு பேசினான்.

''ஐயா, எனக்கு வேற வேலை வந்துருச்சுன்னு வச்சுக்கங்க. இதுல ஈடுபாடு கம்மியாவும். கோயில் நல்லா இருக்கு. அதிகாரி ஆர்வமா இருக்காரு. எதுனா பண்ணி மரம் கொண்டாங்கய்யா. கோயில்ல ஒத்துமை இல்லை. காசுக்கு தடுமார்றாங்க. தடங்கல் வந்துட்டே இருக்குன்னாக்கா எங்களுக்கு உற்சாகமாக இருக்குமா சொல்லுங்க. இந்த வாரத்துக்குள்ள தடி வந்துட்டா மாயவரத்துக்கு கொண்டுபோய் அறுத்து அல்லது இங்கயே வான்பட்டறைல வச்சு கரெட்டா பங்கு போட்டு வேலை ஆரம்பிச்சிடுவோம். இவ்வளவு பெரிய தடியை மாயவரம் எடுத்துட்டு போய் எப்படி அறுக்கறது. அறுபதடி நீளத்துக்கு நமக்கு கட்டை வேண்டாம். அதிக பட்சம் பதினைஞ்சடி நீளம் பதினைஞ்சடி அகலம் போதும். இங்கேயே தடியை துண்டு போட்டு வாரில எத்திடுவேன். பெரிய வாள் வச்சு பதினைஞ்சு அடி பதினைஞ்சு அடியா வைவை அறுத்துடலாம். இந்த ரெண்டடி விட்டுருங்க. மீறு ஒரு அடி விட்டுருங்க. இப்ப பதினைஞ்சு பதினைஞ்சா அறுக்கலாம்.''

அவர் பையிலிருந்து சாக்பீஸ் எடுத்து அளந்து தடியில் குறிப்பிட்டார்.

'ஸ்தபதி ஐயா வம்பு பண்றீங்களே. எவன் என் மரத்தில எழுதினதுன்னு அவன் வம்பு பண்ணுவான்.''

''அட...என்னங்க பூச்சி காட்டறீங்க. நாங்க என்ன பொண்டாட்டி புள்ளைங்களையா அறுத்தோம். அல்லது எங்க மாளிகைக்கு எடுத்தமா...ஊர் தெரியாத ஊரா இருக்கேன்னு பாக்கேன். இல்லைன்னா அறுக்க ஆரம்பிச்சிருவேன். தெரியாத அறுத்துட்டேன்னு சொல்லிடுவேன். இந்த மரத்தை விடறதுக்கு எனக்கு மனசே இல்லீங்க. இது எவனுதா இருந்தா எனக்கென்னா...இந்த மரம்தான் தேரு.''

''இவரு எனக்கு உதவி சிற்பி. மரத்துல பொம்மை செய்யறவரு. விலை கொடுத்து மரத்தை நீங்க வாங்கிக்கங்கண்ணேன்னு அரிக்கிறாரு, அடிக்கட்டையும் தூணும் சக்கரகாலும் எதுல வேணா செய்துக்கலாம். பொம்மைக்கு இல மரம்தான். சரியாவரும். ஆத்தாளுக்கு பெண் சாரதி செய்யணும். ரெண்டு குதிரைங்க செய்யணும். கந்தர்வர்கள், கின்னரர்கள் செய்யணும். ஒவ்வொரு தூணிலயும் மாலையோட சேடிப்பெண்கள் செய்யணும். நுகத்தடியில யாளி தலை செய்யணும். மரம் சக்கையாகாம களிமண்ணு மாதிரி குழைஞ்சு குழைஞ்சு வரணும். மரம் படியலேன்னா சொல்லுங்க. இது கெட்ட மரம். வீட்டுக்கு ஆவாதுன்னு எதாவது சொல்லிடறேன்.''

''விட்டா ஸ்தபதி எடுத்துட்டு போயிடுவார் போல இருக்கே...''

''எனக்கெதுக்குங்க மரம். நான் என்ன தேரா பண்ணப்போறேன், இல்ல...வீடு கட்ட போறனா...இருக்கற வீட்டை பராமரிச்சா போதும்னு இருக்கு. உளியைத் தூக்கிட்டு ஊர் ஊரா போறேன். இதுல எங்க வீட்டைப் பாக்கறது.''

மாரியப்பச்செட்டியார் சின்னானிடம் போய் ஆட்கள் வேண்டுமென்று கேட்டார். மரத்தைக் கொண்டு வந்து



அவர் காட்டுக்கு நடுவே போட வேண்டும் என்று ஆசைப்பட்டார் மரத்தைக் கடத்திக் கொண்டு போய்விடுவார்கள் என்று பயந்தார்.

சின்னான் பேரப்பிள்ளைகளிடம் பேசினான். சின்னானின் மகளின் மூலமாக மாரியப்பச் செட்டியாருக்குப் பிறந்த பையன்கள் மாரியப்பச் செட்டியாரிடம் நேரடியாகப் பேசுவதில்லை. அவர்கள் வாலிபமான பையன்கள். மாயவரம் காலேஜில் படித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய அம்மாளை, அவர்கள் கூட்டத்தை மிகவும் நேசித்தார்கள். மாரியப்பச் செட்டியார் மீது மெல்லிய விரோதம் வைத்திருந்தார்கள்

''சும்மா இருங்கடா. அந்தாளுக்கு வேற உறவு கிடையாது. இந்த மொத்தக் காட்டையும் நமக்கு எழுதி வைக்கணும். பத்திரம் அவர் பேர்ல இருக்கு. கத்தி தொலைச்சு காரியத்தைக் கெடுத்துராதிங்கடா.''

இந்த காடு என்னாத்துக்கு உதவும். இதுக்கு பதிலா மாயவரத்துல குடிசை இருந்தாகூட பெரிய மதிப்பு.''

''உனக்கு தெரியலைடா. உனக்கு உதவாட்டியும் உன் பசங்களுக்கு உதவும். இன்னும் ரெண்டு வருஷத்துல நிலம் விலை உயரப் போவுதுன்றாங்க. அங்கங்க வீடு கட்டறாங்க. நம்ம காட்டுக்கு வந்து மரம் கேட்கறாங்க. வாரத்துக்கு ஒரு மர வியாபாரி வரான். எடுத்துக்கட்டுமா...எடுத்துக்கட்டுமான்னு கேட்கறான். நான் பிரம்பு மட்டும் எடுத்துட்டிருக்கேன். மரத்துல கை வைக்கலை. அவர்கிட்ட பக்குவமா பேசுடா. சண்டை புண்ணுங்காத.''

''என்ன பேசறது...''

''பரீட்சை பாசாயிட்டேன். எதுனா வேலை வாங்கிக் கொடுன்னு கேளு.''

"எப்படிம்மா கேட்கறது அந்தாளை. வழியில
பாத்தா மூஞ்சி தூக்கிக்கிறான்."

"அதெல்லாம் பரவால்லை. காடு முக்கியம்." சின்
னான் பேரன்களைப் பார்த்து உரத்த குரலில் பேசினான்.

'நீ ஒரு மானங்கெட்டவன்யா'' பேரன்கள் கை
உயர்த்திப் பேசினார்கள்.

"ஆமாம்டா. இதைவிட மானங்கெட்ட விஷயமெல்
லாம் நடந்துருக்கு. எனக்கு அஞ்சு வயசா இருக்கும்
போது எங்கம்மாவ தோளில் தூக்கிப் போட்டுட்டு
ஆளுங்க போறதெல்லாம் பாத்திருக்கேன். நான் பின்னா
லியே ஓடுவேன். காட்டுக்கோழி புடிச்சாந்திருக்கேன்...
விருந்து சோறுயா...ஒருத்தன் மத்தவனைக் கேட்பான்.
ஊர்ல இருக்கற பெரிய மனுஷங்க மூணு நாலு பேர்
சேர்ந்து சாப்பிடுவாளுங்க. அம்மா அம்மணமா இருக்
கறதை புள்ளை பாக்கக் கூடாதாம். நான் பல தடவை
பாத்திருக்கேன்டா. பிரப்பங்காட்டுக்கு நடுவுல, கோயில்
மண்டபத்துல எங்கம்மா அம்மணமா உக்காந்து அழுவு
றதப் பாத்திருக்கேன். கையாலாகாத எங்கப்பன் அவ
ளைப் பாஞ்சு பாஞ்சு அடிப்பான். தன்னையும் அடிச்சுக்கு
வான்.

கூட்டத்துலே இருக்கற பதினாறு பதினைஞ்சு பேரும்
அழுவோம்டா. நான் முழுக்க அழுவோம். ஒவ்வொருத்
தரும் ஒவ்வொரு அவமானம் சொல்லி அழுவோம். எங்
கப்பன் ராத்திரி பாடலைடா. அது ஒருவிதமான ஒப்
பாரி.

எங்கப்பன் பாடின ஒப்பாரியெல்லாம் இப்ப பாடி
னம்னா உங்களுக்கு கொலை வெறி வந்துரும். கொன்
னுட்டு ஜெயிலுக்கு போகக் கூடாதுடா. அது சுலபம்.
படிச்சுட்டு வேலைக்கு போகணும்டா. அது கஷ்டம்.



இப்ப நாற்பத்தாறு பேர் இருக்கோம். அத்தினி
பேரையும் மேலே கொண்டார்ற பொறுப்பு உன்னுதுடா
உன் காலைப் பிடிச்சி கேட்கறேன்டா."

காலேஜ் படிக்கும் அந்த இரண்டு பையன்களும்
முகத்தைப் பொத்திக் கொண்டு அழுதார்கள். அந்தக்
கூட்டத்தில் பள்ளிக்கூடம் போகும் பையன்களும்
பெண்களும் அந்த அழுகையோடு சேர்ந்து கொண்டார்
கள்.

மெல்ல மெல்ல அந்தக் கூட்டம் முழுவதும் வட்ட
மாய் உட்கார்ந்தது. விதவிதமாய் விக்கி விக்கி ஒரு
சடங்கு போலும் அழத்துவங்கினார்கள். அந்த அழுகை
யில் ஒரு கோபம் இருந்தது. ஒரு கொலைவெறி இருந்
தது.

தாழ்த்தப்பட்ட சமூகம் என்பது அடிபட்ட பாம்பு
அவர்கள் அழுகை மிகப் பெரிய கோபம். அவர்கள் மௌ
னம் பழிக்குப் பழி வாங்கும் போர் வெறி

ஏன் இத்தனை நாள் இவ்வளவு இழிவுகளைத்தாங்கிக்
கொண்டிருந்தோம். எதற்காக இப்படி இழிவுபடுத்தப்
பட்டோம். மனிதனுக்கு மனிதன் இவ்வளவு ஓர வஞ்சனை
செய்ய வேண்டுமா. செல்வத்தில் உயர்வு, தாழ்வு புரி
கிறது. கௌரவத்தில் உயர்வு தாழ்வு உண்டா.

அம்மா என்கிற பெண்ணுக்கு ஈடாக இந்தக் காடா.
பிரம்பும், கள்ளிச் செடியும் காரைப்புதர்களும் மண்டிய
நிலமா. கத்திரி வெண்டைகூட போட முடியாத
கட்டாந்தரையா.

நீண்ட நெடிதுயர்ந்த மரங்கள் இருக்கின்றன. இலை
களை வெட்டி அறுத்து எங்கே விற்பது. யாரை நம்பி
இந்தத் தொழிலில் இறங்குவது. இந்தக் கிணற்றுப் பகுதி
மிகவும் சக்தி வாய்ந்த இடமென்று தாத்தா சொல்கிறார்.
அவர் அப்பா உட்கார்ந்து பாடிய இடம் என்று சொல்
கிறார்.

கல்லூரியில் பொருளாதாரம் படிக்கும் அண்ணனும் சினிமா டிராஃப்ட்ஸ்மேன் படிக்கும் தம்பியும் அங்கு போய் உட்கார்ந்து கொள்வார்கள். அவர்களைச் சுற்றி அந்தக் குடும்பத்தின் மற்ற குழந்தைகள் உட்கார்ந்து கொள்ளும்.

''நாம அழுவப் போறமா'' ஏழு வயசுக் குழந்தை கேட்டான்.

''இல்லை. நாம அழுவ மாட்டோம்.'' எல்லோருக்கும் பெரியவன் சொன்னான்.

''நாம பாடப் போறம்.'' இரண்டாவது பையன் திடுமென்று சொன்னான்.

''என்னா பாட்டு.''

''நான் பாடறேன்'' இரண்டாமவன் ஆரம்பித்தான்

**''அவன் செந்தமிழ் தேன் மொழியாள்**
**நிலாவென சிரிக்கும் மலர்க்கொடியாள்''**

அவன் பாடி முடித்ததும் எல்லோரும் கைதட்டினார்கள்.

எப்போதும் கையில் அலுமினியத் தட்டோடு ஒரு பையன் அலைந்து கொண்டிருப்பான். அந்தத் தட்டைப் பிடுங்கி பெரியவன் அடுத்தவனிடம் தர.

**''எங்கள் திராவிடப் பொன்னாடு**
**கலை வாழும் தென்னாடு''**

என்று இன்னொரு பாட்டும் பாடப்பட்டது.

''அண்ணா...அண்ணா அவர் பாட்டு பாடுங் கண்ணா.''

தேவர் விருப்பம் ஆரம்பமாகியது.



**மதுரை நகரில் பரிசு பெற்றார்**
**தங்க வீரவாள்**
**மாநிலம் புகழுகின்ற அந்த மனிதர் யார்**
**மக்கள் மனம் கவர்ந்து விட்ட**
**நடிகர் எம் ஜி ஆர்**
**வாழ்கவே...எம் ஜி ஆர் வாழ்கவே''**

அந்தக் குடும்பக் கூட்டம் குதித்து எழுந்து ஆடியது.

பாடுபவனுக்கு உற்சாகம் கரைபுரண்டோடியது. புதிது புதியாய் பாட்டுகள் பாடினான். நிறைய அரசியல் பாடல்கள் பாடினான்.

**''வ உ சிதம்பரத்தின் கப்பலுங்கப்பா**
**அவர் பேரைச் சொல்லி ஓட்டுவாங்க வெட்கமில்லையா''**

அவர்களுக்கு எந்த அர்த்தமும் புரியவில்லை. ஆனால் பாட்டு பிடித்திருந்தது.

**''நல்லாத்தான் சொன்னாரு**
**பாரதியார், கவி சாரதியார்''**

அவன் குரல் அந்தக் காட்டுக்குள் பாடப்பாட புதிய வெண்கல ஸ்ருதிக்கு வந்தது.

அன்றிலிருந்து அவர்கள் அழுகைக்காக வட்டமாக உட்காராமல் பாட்டுக்காக உட்கார்ந்தார்கள். நாற்பது பேர் கொண்ட அந்த உறவுக் கூட்டத்தில் ஏழெட்டு பேர் மிக அற்புதமாகப் பாடினார்கள்.

பள்ளி முடித்து இரவு ப்ரைவேட் டியூஷனுக்கு மன்றம் போகும்போது செங்கொடி போட்ட அந்த மன்றத்தின் வாசலில் எங்கள் தோழர் லெனின் என்று பாடினார்கள். ஆனால் லெனின் யார் என்று அவர்களுக்குத் தெரியாது. கேட்கவும் இல்லை.

**எங்கள் தோழர் லெனின்—அவர்**
**எத்தனை எத்தனை கனவுகள் கண்டார்**

மாயவரத்தைச் சுற்றி பலபேருக்கு அவர்கள் பெயரும் முகங்களும் தெரிந்து விட்டன.

"டேய்... மாரியப்பச் செட்டியார் மரம் தூக்கக் கூப்பிடறாருடா" சின்னான் அவர்களைக் கைதட்டி கூப்பிட்டான்.

"செருப்பால அடிப்பேன்னு சொல்லு."

"அப்படி பேசக் கூடாதுடா தம்பி தடி ரொம்ப நல்ல தடிடா. லட்ச ரூபாய் போகும். வேற எங்கியாவது இருந்தா அவரை ஏமாத்தி தூக்கிட்டு போயிடுவாங்க. கொண்ணாந்து இங்க போட்டாக்க நாம கொஞ்சம் அறுத்துக்கலாம்."

"அப்ப கிளம்பலாம்." பெரியவன் உத்தரவிட்டான்.

"துரோகி" நான்காவது பையன் கூச்சலிட்டான். "காகன்னா மாரியப்பச் செட்டியார்கிட்ட போவியாடா, துரோகி" நான்காமவன் உரக்கக் கூச்சலிட்டான். "உங்களாலதாண்டா எல்லாம் கெட்டுப் போவுது. நீங்க எப்ப எகிறினாலும் காக கொடுத்து உங்களை சாவடிச்சிடறாங்கடா. நான் வரமாட்டேன். மாரியப்பச் செட்டியாருக்காக எதுவும் செய்ய மாட்டேன்."

அந்தக் கூட்டம் திகைத்தது.

எல்லோரும் சின்னான் முகத்தைப் பார்த்தார்கள்.

"மாரியப்பச் செட்டியார் வயசான ஆள். இந்த மரத்தை விக்கறத்துக்கு முன்னாடியே கூட செத்துருவார். அப்படி செத்துட்டா மரம் நமக்கு. இது மட்டுமில்லை..." இரண்டாமவன் யோசனையோடு பேசினான்.

"மரத்தை விக்காத எதையாவது சொல்லி இடைஞ்சல் பண்ணலாம். எடுத்தாறதுதான் நல்லது. தம்பி



கோச்சுக்காத வாடா." பாட்டுப் பாடியவன் நான்காமவனை இழுத்தான்.

ஏழு பெண்கள் தவிர அந்த இருபது பேர் கூட்டம் மரம் இழுக்க போயிற்று. வயதில் சிறிய பெண்களும் கூட மரத்தைத் தள்ள முன் வந்தார்கள் மணலிலிருந்து தார்ரோடு இழுத்து. தார் ரோடிலிருந்து காட்டு விளிம்புக்கு இழுத்துக் கொண்டு வந்து போட்டார்கள்.

"மரம் மண்ணுல படுக்கக் கூடாது பூச்சி பட்டிடும் கருங்கல் வைக்கணும்" மாரியப்பச் செட்டியார் கூவினார்.

நாலாமவன் அவரை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

இரண்டு பக்கமும் கல் வைத்து மரத்தை உயரத் தூக்கினார்கள். மூன்றடி உயர கருங்கல் மீது மரம் படுத்துக் கிடக்கிறது. தலைப்பக்கம் ஒரு கருங்கல்லும், கால்பக்கம் ஒரு கருங்கல்லுமாய் இருந்தது. நடுவேயும் கருங்கல் வைக்க மாரியப்பச் செட்டியார் முயன்றார்.

நிறைய கருங்கற்கள் பொறுக்கிக் கொண்டு வந்து மூன்றடி உயரத்துக்கு அடுக்கி வைத்தார்கள். மரத்துக்குக் கீழே உட்கார்ந்து கருங்கல் அடுக்கிக் கொண்டிருக்கும் போது நாலாவது பையன் கால்பக்கம் தாங்கிக் கொண்டிருந்த கருங்கல் அடுக்கை ஒரு கட்டையக் கொடுத்து முழுபலம் கொண்டு தள்ளினான். தலைப்பக்கம் இருந்த கருங்கல் அடுக்கும் சரிந்தது. மாரியப்பா வேகமாய் நகர்ந்தார். மரம் தடேரென்று விழுந்தது.

"ஏண்டா...ஏண்டா..." அந்தப் பையனை ஆச்சரியத்துடன் கேட்டார்.

மரம் உருண்டது.

வேட்டி மரத்தினடியில் சிக்கிக் கொண்டது. அவர் எழும்போது முழுங்காலைத் தாக்கியது. தரையில் தள்ளியது. இன்னும் ஒருமுறை உருண்டு அவர் மீது ஏறி நசுக்கியது. அவர் மார்புக் கூடுகள் படபடவென்று உடைந்தன. அவர் கைகள் தன்னையும் அறியாமல் மரத்தைத் தழுவிக் கொண்டது. அவர் மரத்தோடு உருண்டு மேலே வந்து மறுபடி நசுங்கினார்

பூமிக்கும் மரத்துக்கும் இடையே மாட்டிக் கொண்ட முகம் வானம் பார்த்தது. உயிர் கண்கள் வழியே வெளியேறியது.

“என்னைத் தள்ளிட்டானே... என்னை தள்ளிட்டானே...” அவர் மனம் புலம்பிக் கொண்டேயிருந்தது. மாரியப்ப செட்டியார் அந்தக் காட்டுக்கு நடுவே முன்னும் பின்னும் நகர்ந்து அழத் துவங்கினார்.

“என்னாச்சு...என்னாச்சு...” எல்லோரும் ஓடி வந்தார்கள்.

சின்னான் அந்த நாலாவது பையனை உற்றுப் பார்த்தான்.

“கொன்னுட்டியா” என்று கேட்டான். “எனக்குத் தெரியும் நீ கொல்லுவேன்னு. உங்கம்மாவுக்கு முடியலை. அப்ப மாரிடப்ப செட்டியார் அடிச்சு இழுத்துகிட்டு போனார். அப்ப எம் பொண்டாட்டி சொன்னா இவனாலேயே இவன் சாவப்போறான். இன்னிக்கு இவன் உடம்பிலிருந்து வந்ததே இவனைக் கொல்லும்... அப்படீன்னு சொன்னா. அதான் நடந்திருக்கு. நீ வேற எங்கியாவது போயிரு. ஒரு வருஷம் கழிச்சுவா.” அவன் நகர மறுபடி கத்தினார். “டேய் மரம் அறுக்க கத்துக்கடா.”

போலீஸ் வந்து விபத்து என்று எழுதிக் கொண்டு போயிற்று.



மாரியப்ப செட்டியாரின் பிள்ளைகள் வந்து தகனம் செய்தார்கள்.

“அவர் ஒரு பெரிய மரம் வச்சிருந்தாரு. அது உங்களுக்கு வேணுமா...”

“அவரே வேணாங்கற போது அவர் மரம் என்னாத்துக்கு.” அவருடைய நேரடி வாரிசுகள் துண்டை உதறி போனார்கள்.

“லட்ச ரூபா பெறுங்க.”

“அதுல நசுங்கி செத்திருக்காரு. எதுக்காவது உதவுமா அறுத்து வச்சா வீட்டுக்கு ஆவுமா. நாங்க அவரை.இந்த ஊரை மட்டும் மறந்துட்டோம். திருவிழா நோட்டீஸை மட்டும் மறக்காம அனுப்பி வைங்க. காசு மணியார்டர் பண்றோம்.”

“சின்னான், கோயிலுக்கு இந்த மரம் வேணும்யா” சரவணன் கேட்டான்.

“அது என்னுது இல்லீங்க. என் பேரப்புள்ளைங்கக்கிட்ட கேட்டுச் சொல்றேன்.”

“தம்பி, இங்க வா. இந்த மரம் எடுத்துக்கட்டுமா. கோயிலுக்கு தேர் பண்ணப் போறம்.”

“என் தம்பிங்கக்கிட்ட கேட்டு கார்த்தால சொல்றேன். சார்.”

அவர்கள் மறுபடியும் வட்டமாக உட்கார்ந்தார்கள்

“இந்தக் காடு இப்ப நம்மளது ஆயிடுச்சு. இந்த மரம் நமக்கு வேணுமா. வீராயி கோயிலுக்கு கொடுத்துருவம். என்னா சொல்றீங்க.”

''கொடுத்துரலாம். நாமே தூக்கிக் கொண்டுபோய் கோயிலுக்குள்ள வச்சிரலாம். நம்ம கூட்டத்துலேர்ந்து வெளியே போனவரு நல்லபடியா திரும்பி வரணும்னு தேர் தருக்கிட்டு கொடுக்கலாம்.''

இந்த முறை மொத்த ஜனங்களும் மரத்தைக் கோயி லுக்குள் கொண்டு போவதில் அக்கறை காட்டியது.

''எங்க கூட்டத்துப்பேர் போட்டு ரசீது கொடுங்க. தேர்ல எல்லாருக்கும் தெரியும்படியா எங்க கூட்டத்தின் பேர் எழுதுங்கோ.''

''அப்ப தேரே உங்களுதுங்கற மாதிரி ஆயிடுமே''

''என்ன சொல்றீங்க.''

''இன்னொரு தடி...இதே அளவு கொடுத்துருங்க தேரே உங்கதானம்னு எழுதிடலாம்.''

''சரி...நாளை கேட்டு சொல்றேன்.''

வாள் கொண்டு ஆறேழு துண்டுகளாக குறுக்கே அனந்து ஸ்தபதி மாயவரம் போய் செல்லகக் கட்டை களாக வெட்டிக் கொண்டு வந்தார், அடிப்பட்டறைக் கான வேலைகளை நான் பார்த்து துவங்கினார். தங்கத் தேருக்கான மாதிரிப்படம் சென்னையிலிருந்து வந்தது. அதைக் கோயிலில் சட்டமிட்டு வைத்து கீழே பெரிய உண்டியல் வைத்தார்கள். தங்கம் தேவைப்படுகிறது என்று தனியே அறிவிப்பு பலகை வைத்தார்கள்.

''எத்தினி சவரன் தங்கம் வேணும்'' அதிகாரி கேட் டார்.

''இருபத்தியேழு கிலோ தங்கம் வேண்டியிருக்கும்.''

''யம்மா...அத்தினிக்கு எங்கே போறது.''

''வரும். தானா வரும்''.



''அப்படி வரலேன்னா'' அதிகாரி மறுபடி கேட்டார்.

''வேற கோயில்லேர்ந்து தங்கம் எடுத்து கொடுப் பாங்க. அது பின்னாடி காரியம். இப்ப ஆசாரிகளுக்குக் கூலி கோயில்தான் கொடுக்கணும். அஞ்சு நாள் வேலை. ரெண்டு நாள் லீவு.''

அவர் சம்பள விவரம் சொன்னார்.

''நம்மூர் தச்சருக்கு கொடுக்கறதைவிட அதிகமா இருக்குய்யா.''

''இது தேர் வேலை. முக்காலி, அலமாரி செய்யற மாதிரியில்லை...'' ரொம்ப இழைக்கணும். ரொம்ப கணக்கு பார்க்கணும். தோராயமா ஒரு தட்டு கூட தட்ட முடியாது ஒரு நூல் இழை வித்தியாசம்தான் வரலாம். இரண்டு நூல் இழை வந்தா வேறதான் செய்யணும் கொஞ்சம் ரேட் ஜாஸ்திதான்.''

ஆசாரிகள் வேலை செய்து கொண்டிருக்கும்போதே சிற்பிகள் பஸ்ஸில் வந்து இறங்கினார்கள்.

''யாரு சொர்ணவேலு ஸ்தபதியா... வினங்கின மாதிரிதான்..போ. சாண்கட்டை எடுக்கவிடமாட்டானே.. எதிர்லயே உட்கார்ந்து வேலை வாங்குவான். நச்சுப்புடிச்ச ஆளுய்யா.''

''எனக்கு வயிறு நோவுது. மறுபஸ் எப்பன்னு சொல்லுங்க. நான் வீட்ட பாக்கப் போறேன்.''

அந்த மூன்று சிற்பிகளின் கோபத்தை ஸ்தபதி 'சொர்ணவேலுவிடம் வேலை பார்க்க மாட்டோம்' என்று சொன்னதை ஆசாரிகள் சரவணனிடம் சொன்னார்கள்.

''அம்மா, ஸ்தபதி ஊர்ல இல்லம்மா. எனக்கு என்ன செய்யறதுன்னு தெரியலை தாயே...'' சரவணன் கை கூப்பினான்.

அவர்கள் கோயிலில் சாப்பிட்டார்கள். கோயிலுக்கு வெளியே உள்ள தங்குமிடத்தில் துணி விரித்துப் படுத்தார்கள். கொஞ்சம் கொசு கடித்தது. நாய் குரைத்தது. கதவு திறந்து உள்ளே போய் மின்விசிறியை முழு வேகத்தில் போட்டு தரையில் படுத்தார்கள். பஸ் வந்ததும் தெரியவில்லை. போனதும் தெரியவில்லை இவர்கள் எங்கிருக்கிறார்கள் என்று யாருக்கும் தெரியவில்லை.

"மூணு பேர் இப்படி நடந்து போனாங்க" ஒரு கிழவி சொன்னதை வைத்து அவர்கள் ஊர்போய் விட்டதாய் நினைத்துக் கொண்டார்கள்.

இரவு கோயில் பூட்டப்பட்டது. கட்டிடத்துக் கதவும் பூட்டப்பட்டது. நடுநிசியில் எழுந்து அவர்கள் தட்ட அங்கு அவர்கள் கூச்சல் கேட்க ஆளேயில்லை. அது அலுவலக அறை. பசிக்கு உண்ணவோ புறத்தள்ளவோ வாய்ப்பே இல்லை.

விடியல் நேரம் சரவணன் கூச்சலைக் கேட்டு ஊருக்குள் ஆள் அனுப்பி சாவி கொண்டு வரச்சொல்லி கதவு திறந்தான். அவர்கள் மூவரும் புதர் நோக்கி ஓடினார்கள். வேதனை நீக்கினார்கள்.

"இல்லீங்க. நாங்க உடகார்ந்து வேலை செய்யறோம் இது தூக்கமில்லீங்க. ஏதோ ஒரு மயக்கம். மந்திரத்துல கட்டின மாதிரி ஆயிப்போச்சு."

அடிப்பட்டறைக்கு மேல் பொம்மைகள் வைக்க அளவுகள் குறித்துக் கொண்டார்கள்-ஒரு பெண் சாரதி, சாமரம் வீசும் பெண், இரண்டு குதிரைகள், கையில் மாலைகளோடு சேடிப் பெண்கள் என்று படம் வரைந்து கொண்டார்கள். படம் வரைய தேர் ஓவியரின் உதவியை நாடினார்கள். இடைவிடாது எந்நேரமும் மரச்சத்தம் கேட்டுக்கொண்டேயிருந்தது.



"இன்னொரு மரம் எங்கக்கிட்ட இல்லைய்யா. நீங்க இதுல எங்க பேர் போடவேண்டாம், விட்டுருங்க."

பிரப்பங்காட்டிலிருந்து அந்தக் குழு வந்து சொல்லியது.

"உங்க காடு பத்தி சொல்லியிருக்காங்க" ஸ்தபதி சொர்ணவேலு அவர்கள் காட்டுக்குப் பயணமானார்.

"எங்களுக்கு மத்த மரங்களைப் பத்தியும் சொல்லித் தரணும். எது எப்ப வெட்டலாம். எது எப்ப வெட்டக் கூடாதுன்னு விவரம் சொல்லணும். நிறைய வியாபாரிங் கலந்து இதுகாஞ்ச மரம், இது டொக்குமரம், இது பால் மரம்னு பேசறாங்க."

"வா. ஒரு நோட்டு புஸ்தகம் வாங்கிக்க பேனா எடுத்துக்க. ஒவ்வொரு மரமா நான் பார்த்த மரத்துக்கு நம்பர்கொடு. ஒவ்வொரு மரம் பத்தியும் சொல்றேன் எழுதிக்க."

அவர்போக ஒருகும்பல் அவரைத் தொடர்ந்தது.

"அடேங்கப்பா... அழுத்தமான காடா இருக்கே. மரத் முதல்ல செடிகளை வெட்டி சீர் பண்ணிக்கங்கப்பா. வெய் யைச் சுத்தி கரை கட்டுங்க. தண்ணி தேங்கட்டும். தண்ணி ஊத்துங்க. யில் நாள்ல நாளைக்கு பக்கெட் தண்ணி 3 தரம் மரம் இன்னும் செழிப்பாகும். மழை நாள்ல தண்ணி காம பாத்துக்கங்க. இந்த வேம்பு அறுத்துடலாம். இது ஆண் பலா. இன்னும் அஞ்சு வருஷம் பொறுத்து கையை இது சரக்கொன்றை. நாற்காலி, சேர் பண்ணலாம். இது அரசு, வேற ஒரு அரசு நட்டுட்டு இதை வெட்டு. இது கல்யாண முருங்கை. ஒன்னுத்துக்கும் ஆவாது, இந்தப் புளியமரமெல்லாம் விறகுக்குத்தான். இதை இப்ப வெட்டு. அடுத்தமரம் இன்னும் இருபது வருஷம் வரும். புளியமரம் பக்கம் வேற ஒன்னும் முளைக்காது."

ஒருபெண் குழந்தை எழுதிக் கொண்டே வந்தாள்.

''தேக்கு இல்லாட்டி என்னய்யா. ரெண்டு கோங்கு மரம் இருக்கு. ஒரு வாகை இருக்கு. கோங்குல தேர் அச்சு பண்ணலாம். வாகைல சக்கரம் பண்ணலாம். அஞ்சடி விட்டத்துக்கு நாலு சக்கரம் பண்ணணும். இந்த வாகையை வெட்டிக் கொண்ணாந்து போட்டுரு. கோங்கு முழுசாகூட வெட்ட வேணாம். ரெண்டு பக்கக்கிளை கொடு போதும்.''

''எங்க குலம் பேர் வரணும்யா தேர்ல எழுதணும்.''

''இந்த வில்வமும் வேப்பும் நிக்கற இடத்துல நான் சத்தியம் பண்ணித்தரேன். சிற்பியை விட்டு அடிப்பட்டைல உங்க ஊர் பேரும், குலப்பேரும் போட்டு உபயம்னு எழுதறேன். மரத்தை அனுப்பிச்சிடுறியா'' ஸ்தபதிமுகம் துடைத்துக் கொண்டு வந்த விதமாக வெளியேறினார்.

''ஐயா, நீங்க பாட்டுக்கு பேர் எழுதறேன்னு சொல்லிட்டீங்க. அது செய்ய வேண்டியது கோயில் அல்லவா. கோயில் அதிகாரி மாட்டேனுட்டா என்ன செய்வீங்க''

''அப்ப பாத்துக்கலாம். நான் செய்யறதை செய்துடறேன். வேணாம்னா மூடிட்டு போட்டும்.''

''எப்படி மூடறது?''

''இதுக்குமேல தகடு வேலை இருக்குல்ல. தகடு போட்டு மூடிடலாம்.''

''பாவம் அந்த ஜனங்க...'' சரவணன் பரிதாபப்பட்டான்.

''எனக்கும் போடணும்னுதான் இருக்கு சரவணா. யாராவது கூடாதுன்னா தகடு போட்டு மூடிக்கொடுத்துருவேன். அந்த ஜனம் கேட்டுதுன்னா அதிகாரியைக் கைகாட்டிடுவேன்.''

சிற்பிகள் பொம்மை செய்ய ஆரம்பித்தார்கள். மூன்று ஆசாமிகளில் வயதான முருகேச ஆசாரி தேக்குக்



கட்டையை முகர்ந்து பார்த்தார். உளியால் கீறிப் பார்த்தார். வழிக்க வழிக்க தேக்கு, மாவாய் வழிந்தது. ஒரு இடம்கூட சக்கையாகாது களிமண்ணில் பொம்மை செய்வதுபோல அழகாக செய்யலாம்.

கோங்கு வரப்போகிறதாம். கோங்கு அறுக்கும் போதுகூடப் போய் ஒரு ஜான் அகலத்துக்கு நாலைந்து முழுங்கைத் துண்டுகளை ஒதுக்கிக் கொள்ள வேண்டும். தேக்கு கட்டை இடத்தில் கோங்கு கட்டை வைத்துவிட்டு தேக்கு மரத்தை வெட்டிக் கொண்டு போய்விட வேண்டும் மாயவரத்தில் எங்கேனும் சனி, ஞாயிறு உட்கார்ந்து யானை பொம்மை, குதிரை பொம்மை, மர அன்னம், காளையோடு மோதும்புலி, கௌதம புத்தர் என்று செய்து பாலிஷ் போட்டு விற்று விடலாம்.

அந்தக் காசில் எவளாவது கிடைத்தால் உற்சாகமாய் அனுபவிக்கலாம்.

ஒரு மனிதனுக்கு மனைவி மட்டும் போதாது. நாலு ஜாதிப் பெண்களும் வேண்டும். இந்தக் கோயிலுக்கு கறுப்பாய் ஒரு காட்டு ஜாதிப் பெண் வருகிறது. ஆனால் பள்ளிக்கூடம் போகிறது.

உனக்கு தாவணி வாங்கித் தரட்டுமா என்று பேச ஆரம்பிக்க வேண்டும். போய் வாங்கிக்க என்று ஐம்பது ரூபாய் தர வேண்டும். ஒரு யானை பொம்மை ஐம்பது ரூபாய். ஒரு சாண் கனத்தில், ஒரு முழ நீளத்தில் ரெண்டு யானை பொம்மை செய்யலாம். மூன்று கௌதம புத்தர் செய்யலாம், அவர் திருடுவதற்குத் திட்டங்கள் வகுத்தார்.

''நாம மொத்தம் நாப்பத்தியேழு பேர் இருக்கோம். நாப்பத்தேழு பேருக்கு அம்பது க்ரவுண்டு இருக்கு. மூணு க்ரவுண்டு கோயிலுக்கு வச்சிருவோம். மத்தது நாம கோடு போட்டு எடுத்துக்குவம்.'' அந்த மூத்தப் பையன் பேசினான்.

''ஊருக்கு போன எங்கண்ணனுக்கும் பங்கு தரணும்'' தாவணிபோட்ட அந்தப் பெண் குரல் கொடுத்தாள்.

''தருவோம்மா. நிச்சயம் தருவேன் உனக்கும் உண்டு. உங்க அண்ணனுக்கும் உண்டு. அந்த மூனு கிரவுண்ட் இப்ப பொது சொத்து. அங்க கோயில் கட்டலாமா? நம்ம சபைக்கு கட்டிடம் கட்டலாமா?''

''கோயில் கட்டலாம்'' இரண்டாவது பையன் சொன்னான்.

''நீ பாட்டு பாடறதால கோயில் கட்டலாம்னு சொல்றியா. சபைக்கு கட்டிடம் கட்டலாம்.'' தாவணிப் பெண் உரத்துச் சொன்னாள். அவள் குரல் பலக்க இருந்தது. அவள் முகத்தில் ஒரு கோபம் இருந்தது உடம்பில் ஒரு முரட்டுத்தனம் இருந்தது.

''சபைக்குக் கட்டிடம் கட்டினால் அதைப் பள்ளிக் கூடமா மாத்திக்கலாம். இல்ல...கல்யாண கூடமாவும் வச்சுக்கலாம். விராலி கோயில் இருக்கும்போது மத்த கோயில் எடுபடாது.''

''அது சொல்றது கரெக்ட். எதுக்கும் தாத்தாவை ஒரு வார்த்தை கேட்டுக்கங்க.''

''தாத்தாவுக்கு புத்தி போயிருச்சு. அதுக்கிட்ட ஒன்னும் கேட்க வேண்டாம்.'' அந்தப் பெண் மறுபடி குரல் கொடுத்தாள்.

''எனக்கு எதுவும் போகலை'' கிழவன் அவளை திரும்பிப் பார்த்தான். ''நீங்க எங்கயும் போகாத இருந்தா சரி.''

அவள் எழுந்து கிழவனுக்கு அருகே வந்து தூ என்று என்று துப்பினாள். இன்னொரு பையன் எழுந்து வந்து



அவனை அடிக்கப் போனான். மூத்தவனும் இளைய வனும் ஒருவரையொருவர் கவலையோடு பார்த்துக் கொண்டார்கள்.

க்ஷ க்ஷ க்ஷ

நீங்கரத உண்டியலில் முதன் முதலாய் ஒரு தாளிக் கொடி விழுந்தது.

''ஹார்ட் பிரச்சினைதான். ஆனா என்னை நம்பி மருந்து சாப்பிடுங்க. ஒரு பத்து நாள் ரொம்ப அமை தியா கோபப்படாத ஆத்திரப்படாத உலகத்துல எது நடந்தாலும் கவலைப்படாது இருங்க. என் மருந்து உடம் புல பிடிக்க பத்து நாள் ஆவும். ஒரு மாசத்துல நல்லா குணம் தெரியும். நாப்பத்தஞ்சு நாள்ல நல்லா நடக்க லாம். ஒரிதழ் தாமரைன்னு ஒரு பூ. இந்த விராலி பிரப் பங்காட்டுல இருக்கு. சில சமயம் அது உள்ற போனா அங்க இருக்கற ஜனங்க கல்லெடுத்து அடிக்கிறாங்க. கிட்ட வந்து வேட்டியைப் பிடுங்கிக்கிறாங்க. நான் கெஞ்சி மருந்தெடுக்கிறேன்னு சொல்லி தோப்புக்கரணம் போட்டு அங்க இருக்கற ஒரு திக்குவாய் பையனுக்கு சரி யான கூழாங்கல் பொறுக்கிக் கொடுத்து வாய்க்குள் போட்டு பேசக் கத்துக் கொடுக்கிறேன். நீங்க யாராவது வந்து அங்க இருக்கற பசங்கக்கிட்ட பேசணும். கொஞ் சம் திருக்கு பசங்களா இருக்கறாங்க. சில பசங்க காசு கொடுத்தா விட்டுர்றான், சில பசங்க என்ன பண்ணா லும் விடமாட்டேங்கறாங்க.

அந்த தாவணி போட்ட பொண்ணு எனக்கு வைத் தியம் சொல்லிக் கொடுன்னுச்சு.

அது கரிக்கட்டை. சிலப்பாக முடியுமான்னு கேட் டுச்சு. முடியாதும்மான்னேன். அப்ப நீ ஏன் வைத்தியம் பண்றேன்னு தொரத்தி விட்டுச்சு.

நாப்பத்தைந்து நாளில் அவரால் நடக்க முடிந்தது. அவர் மனைவி வீராயியிடம் தாலியை தாரை வார்த்தான். புருஷனை உயிரோடு பெற்றாள்.

ஃ ஃ ஃ

"இப்போ மரம் விக்கிற மாதிரி இல்லை, எங்க தாத்தாவுக்கு உடம்பு சரியில்லை. ஆஸ்பத்திரியில சேர்க்கணும். அஞ்சாயிரம் ரூபா ஆவும். ஏதோ ஒரு மரத்துக்குன்னு அஞ்சாயிரம் ரூபா கொடுத்துட்டு போங்க. கணக்கு வச்சுக்கறோம். பின்னால பைசல் பண்ணிக்கலாம்."

"மரம் பாக்க விடுங்களேன்."

"டேய் இவரைக் காட்டுக்குள்ள கூட்டிட்டு போங்கடா."

அந்த வியாபாரி உள்ளே போய் மரம் பார்த்து வியந்தார். மொத்தமும் கிடைச்சுடுச்சுன்னா இந்த நாப்பது வயசுல கால் ஊனி பெரிசா வந்துடலாம். திருவான்மியூர்ல ஜனங்க வீடு கட்ட ஆரம்பிக்கறாங்க. அங்க தொட்டி திறந்து மிஷின் போட்டு மரம் அறுத்து வித்தா நிறைய சம்பாதிக்கலாம். பவுனு பவுனா எத்தனி மரம்.

"ஆத்தா ஒரு மரத்துக்கு ரெண்டு பவுன் தரேன். இங்க இருக்கற மரத்தையெல்லாம் எனக்கு கொடு. என் பேச்சுக்கு அச்சாரமா ரெண்டு மோதிரம் கொடுத்துர்றேன்."

ஃ ஃ ஃ

"காடு எங்க சொத்தே இல்லை. மாரியப்பச்செட்டியாருதுமில்லை. வீராயி கோயிலுது."

யார் நட்ட மரம்...யார் வளர்த்த மரம். இப்ப அத்தினியும் காசு. நாமளா அந்தக் காசு எடுத்தா நல்ல



தில்லை. பத்துக்கு ஒன்னு வீராயிக்கு. பத்துக்கு ஒன்னு பொதுக் கட்டிடத்துக்கு. பத்துக்கு ஒன்னு சேமிப்பு. மீதியை எல்லாருமா பிரிச்சுக்கலாம்." அவன் கூட்டம் அவன் பேச்சுக்கு ஒத்துக் கொண்டது.

ஃ ஃ ஃ

கடல் வழியாக சிறிய விசைப்படகில் அவர்கள் கோடிக்கரை நோக்கி வந்து கொண்டிருந்தார்கள். வெப்பும் நேரம் பெரிய புயல் இருந்தது. கரை சேருவோமா என்கிற பயம் இருந்தது அலைகள் படகை உயரத் தூக்கி தடேரென்று விட்டன. படகின் அடிப்பகுதி பலமாய் அடிவாங்கியது.

எங்க இறங்கறமோ எந்த கோயில் பாக்கறமோ அந்த கோயிலுக்கு கொண்டு வந்த சரக்குல கால்பகுதி கொடுத்துடலாம் என்று சத்தியம் செய்தார்கள்.

ஒரு தோல் பெல்ட்டில் பதினாறு பிஸ்கெட்டுகள் வீதம் ஆயிரம் பெல்ட்டுகள் வைத்திருந்தார்கள். அது தாய்லாந்து பிஸ்கெட். ஒரு பிஸ்கெட் பத்து சவரன் இருந்தது. அந்தத் தங்கத்தில் தாமிரக் கலப்பு குறைவாக இருந்தது.

கோடிக்கரையை நெருங்கும் வரை ஒரு சிறிய ஆட்டம் இல்லை. பிரார்த்தனை செய்தவுடன் கடல் அடங்கிவிட்டது. புயல் வேறெங்கோ போய்விட்டது.

கடற்கரைக் காவலுக்கு புயலில் நாற்பது படகுகள் காணாமல் போயின என்று சென்னையிலிருந்து தகவல் வந்தது. அந்த பதின்மூன்று விசைப் படகுகள் என்று ஒயர்லெஸ் சொல்லிற்று. சுக்கானைக் காம்பஸோடு இணைத்துவிட்டு படகிலிருந்த மூவரும் தூங்கிக் கொண்டிருந்தார்கள்.

ஆளில்லாமல் படகு போவதைப் பார்த்துவிட்டு கடற்கரைக் காவல் அடையாளத்துக்காகப் புகை குண்டு போட்டது. விடாது சைரன் ஊதியது. மூவரும் திடுக்கிட்டு எழுந்தார்கள். உள்ளிருந்தபடியே பார்த்தார்கள். பயத்தில் நடுங்கினார்கள். படகை வடக்கே திருப்பினார்கள். முழு வேகத்தில் கரை நோக்கிப் போனார்கள்.

அந்த தாய்லாந்துப் படை வேகத்திற்கு கடற்கரைக் காவல் ஈடு கொடுத்தது. ஒயர்லெஸ்ஸில் கடற்கரைக்காவல் தஞ்சை போலீஸைத் தேடியது. இந்தப் படகின் அடையாளத்தை சொல்லியது. தாய்லாந்துப் படகிலும் இந்தக்குரல் கேட்டது. அவர்கள் படகோடு கரையில் இறங்கினார்கள். மூட்டைகளைத் தூக்கிக் கொண்டார்கள். படகை விட்டு விட்டு கரையேறினார்கள்.

ஃ ஃ ஃ

மூன்று சிற்பிகள் நான்கு ஆசாரிகள் இரண்டு உள்ளூர் உதவியாளர்கள். வெயிலுக்கு முன் வேலை ஆரம்பித்து விட வேண்டுமென்று கடற்கரைப் பக்கம் மலம்கழிக்க வந்தார்கள். கடலுக்கும் ஊருக்கும் நடுவே ஒரு இடம் பள்ளமாக இருந்தது. அங்கே வரிசையாக உட்கார்ந்து கொண்டார்கள். இருட்டில் நரை தட்டுவதற்காக இரண்டுபேர் கோல் வைத்திருந்தார்கள். படகு சத்தம் கேட்டதும் ஒட்டு மொத்தமாக எழுந்திருந்தார்கள்.

"யார்ரா அது..." பயத்தில் ஒருவர் உரக்கக் கத்தினார்.

படகில் வந்தவர்கள் வேறு திசையில் ஓடினார்கள்.

"ஏன் ஓடறானவோ..."

"துரத்துவோம்னுதான்."



"அப்ப துரத்துவோம்" அவர்கள் துரத்தினார்கள்.

அந்த மூட்டைகளைக் கோயிலுக்குள்ளே போட்டு விடலாம் என்று ஒருவன் சொன்னான்

இரண்டு மூட்டைகளையும் ஒருவன் தைரியமாக தோளில் வைத்துக் கொண்டு கர்ப்பக்கிரஹக் கதவு திறந்தான். கோயிலைத் திறந்து கர்ப்பக்கிரஹக் கதவை திறப்பதற்காக அதிகாரியைக் கூப்பிடப்போன சரவணன் திகைத்து நின்றான்.

மூன்று பேர் உள்ளே போவதைப் பார்த்தான். அவர்களோடு சண்டைபோட முடியாது என்பது அவர்களைப் பார்க்கும் போதே தெரிந்து விட்டது. கருவறைக்குப் பின்னால் அந்த மூட்டைகளை ஒருவன் வைத்துவிட்டு வெளியே வந்தான். அவர்கள் தொடர்ந்து ஓடினார்கள். வீராயி பிரப்பங்காட்டுக்குள் புகுந்தார்கள்.

கருக்கென்று கருந்தேள் கடைசியாய் போனவனைக் கொட்டியது. அவன் பல்லைக் கடித்துப் புதர் மறைவில் உட்கார்ந்தான். கவ்விக் கொண்டிருந்த கருந்தேளைக் கல்லால் நசுக்கிக் கொன்றான். தலைத் துண்டால்காலை இறுக்கக் கட்டிக் கொண்டான். ஆனாலும் விஷம்வேகமாக ஏறியது. நூறுகெஜம் ஓடியபிறகு முன்னால் ஓடிய இரண்டு பேரும் பின்னால் வந்தவனைத் தேடினார்கள்.

"அவன் திருடன். நம்மளைக் கைகாட்டிட்டு மூட்டையை தூக்கிடுவான்"

"இப்ப என்ன பண்ணலாம்."

"திரும்பி ஓடிப்போய் அவனைத் தேடலாம்" மறுபடி கோயிலை நோக்கி திரும்பினார்கள். முன்னால் ஒருவனும் பின்னால் ஒருவனுமாய் ஓடினார்கள்.

ரெண்டாவது ஆளைக் கொன்னுட்டு மூணாவது ஆள் மேல பழி போட்டுட்டா...பின்னால் ஓடியவன் குனிந்து

பாறாங்கல் எடுத்தான். முன்னால் ஓடுபவன் தலையில் அடித்தான். அடித்த க்ஷணமே உயிர் போயிற்று. அடித்ததையும் அடிக்கப்பட்டதையும் புதரில் இருந்தவன் பார்த்தான்.

சண்டாளப்பாவி என்று கத்தினான் அடித்தவனை புதரில் தள்ளினான், கல்லுக்கு கீழ இருந்த கருங்கல் புரண்டது. அந்தக் கல்லுக்கு கீழ நூற்று நாற்பத்தேழு கருந்தேள் குஞ்சுகள் இருந்தன. பயந்துபோய் அவன் உடம்பு முழுவதும் ஏறின. அவன் உதற உதறக் கொட்டின மூக்கில் ஒருதேள் கொட்ட மூளையில் விஷம் தாக்கி அவன் இறந்தான்.

''உங்களோட சேர்ந்ததே தப்புடா...'' முதலில் கடி வாங்கியவன் அந்த இடத்தை விட்டு விலகினான்.

ஃ ஃ ஃ

'என்னப்பா இது சரவணா...ஒரே பெல்ட்டா இருக்குது...பெல்ட்டுல பை வச்சிருக்கான் பாருங்க...தங்க பிஸ்கட்டு.''

''கடவுளே...இந்த ஏன் கர்ப்பகிரகத்துல போட்டுட்டு போனான். இங்க என்னமோ நடக்குதப்பா. இப்ப என்ன பண்றது...கவர்மெண்ட்டுக்கு தெரிஞ்சா நம்மளைக் போட்டு குடை குடைன்னு குடைவாங்க. ஏன்டா காட்டிக் கொடுத்தேன்னு கடத்தல்காரன் சவுக்குல அடிப்பான். அப்படியே தூக்கிக் கடல்ல போட்டுரு. இதுல மாட்டின ஒரு அதிகாரிய கண்டந்துண்டமா வெட்டிட்டாங்க.''

''ஏன் சார் கடல்ல போடணும்'' சரவணன் அதிகாரியை உற்றுப் பார்த்தான். ''எல்லா தங்கத்தையும் தனியா எடுத்து உண்டியல்ல போட்டுர்றேன் சார்.''



''பெல்ட்டு......''

''கடல்ல போட்டுர்றேன் சார்.''

மூட்டையை தூக்கும் போது வேட்டி கிழிந்து விட்டது சரவணன் சிறிதுகூட சலனம் இல்லாது அத்தனை தங்கத்தையும் திரைச்சீலையில் மூட்டையாய் கட்டி உண்டியலில் கொட்டினான்.

கோணி மூட்டைகளில் பெல்ட்டைக் கொண்டு போய் கடலில் படகு பார்த்து வியந்து அதற்குள் வைத்து விட்டு வந்தான்.

ஃ ஃ ஃ

''ரெண்டு கொலை பண்ணிட்டு தங்கத்தையும் எடுத்துக்கிட்டியா...'' முதலில் தேள் கொட்டியவனை சம்பந்தப்பட்டவர்கள் விதம் விதமாய் சித்திரவதை செய்தார்கள்.

விராயி காலையில் பூமியில் உதைத்தது ஆனந்தமாய் சிரிப்பது போல் தோன்றியது.

ஃ ஃ ஃ

மரத்தேரில் அடிப்பட்டதைக்கு மேலே பண்டிகை எனப்படும் பீடம் செய்தார்கள். அதற்கு மேல் மகாபத்மம் செதுக்கினார்கள். மகாபத்மத்தின் மீது உபபத்மம் வைத்தார்கள். உபபத்மத்தின் மீது அம்மன் உட்காருகிற விஸ்தாரம் செய்தார்கள். விஸ்தாரத்தின் மீது மரத் தூண்கள் கடைந்து நட்டார்கள். தூண்களுக்கு மேலே விமானம் ஆரம்பித்தார்கள். வேதியல் வரியும் வியாழ வரியும் எடுத்தார்கள். முகம் செய்தார்கள். முகத்தின் மீது மறுபடி பத்மம் வைத்தார்கள். பத்மத்தின் மீது மறுபடி கலசம் வைத்தார்கள். கலசத்தின் மீது குடை செதுக்கினார்கள். விமானத்தின் எல்லா பகுதிகளிலும் கந்தர்

வர்கள் வைத்தார்கள். ஒம்மழுகம் பொருத்தினார்கள். நான்குக்கட்டையில் குதிரையை ஏற்றினார்கள். ஏழு நுகத்தடி செய்தார்கள்.

விரிந்த பத்மத்தோடு நான்கு மரச்சக்கரம் செய்து அதில் கனத்த ரப்பர் டயர் பொருத்தினார்கள்.

முருகேச ஆசாரி ஒவ்வொரு படித்தேர் டயரும் போதும் மூன்று முழங்கை நீள தேக்குக் கட்டையைக் கொண்டு போய் விடுவார். காட்டில் பிரம்பு கொடிகளுக்கு நடுவே உட்கார்ந்து பல பொம்மைகள் செய்தார்.

'அவர் அப்பா மாதிரி. ''தாவணிப் பெண் அவருக்கு டீயும் மசால் வடையும் வாங்கிக் கொடுப்பாள்.

''இந்தா...நீ எதுனா வாங்கிக்க...'' அவர் ஐம்பது ரூபாய் கொடுப்பார்.

அவன் அதற்கு ஹிமாலயா ஸ்னோவும் பவுடரும் வாங்கிக் கொண்டான். கருப்பு முகத்தில் வெள்ளைப் பவுடர் தனியாகத் தெரிந்தது

அவர் கொலுசு வாங்கி வந்தார்.

''நான் போட்டு விடுதேன்...'' அவன் காலைப் பிடித்தார்.

''அப்ப இன்னொரு ஐம்பது ரூபாய் தரணும்.''

அவர் நூறு ரூபாய் கொடுத்தார்.

''எதுக்கு நூறு ரூபாய்?''

''ரெண்டுத்தையும் பிடிக்கத்தான்.''

''எங்க அண்ணனுங்க பாத்தா அடிப்பானுங்க.''

''நான் தடுத்துருவேன்.''

''என்னைய அடிக்க மாட்டானுங்க. உன்னைய அடிப்பானுங்க.''



''நான் நூறு ரூபா கொடுத்துருவேன்,''

அந்தக் கிழவரை அவன் பல்வேறு விதமாய் துன்புறுத்தினான். உடம்பு நொறுங்க இறுக்கக் கட்டிக் கொண்டான்.

''என்னைப் பிடி...'' என்று ஓடி ஒளிந்தான். மரத்தில் ஏறி தாவணி அவிழ்த்து ஒரு முனையை அவரிடம் கொடுத்தான். உயரே தூக்கினான். அருகில் வந்ததும் தரை விட்டான். துடித்து அலறுகிறவரை கன்னத்தில் கிள்ளினான். பிரம்பை ஒடித்து சுள் சுள்ளென்று அடித்தான். அடுத்த இடத்தில் உரசினான். அவனின் எல்லா செய்கையிலும் ஒரு கோபம் இருந்தது

''அவரை ரொம்ப தொந்தரவு பண்ணாத'' பெரியவன் அதட்டினான்.

அவன் முறைத்துவிட்டு பதில் சொல்லாது போனான்.

''முருகேசன், எனக்கு ஒதுக்கின இடத்துல நான் கோயில் கட்டணும்னு நினைக்கிறேன். மரத்துல அம்மன் பண்ணி வச்சா என்ன...கல்லுலதான் பண்ணி வைக்கணுமா...'' பாட்டுப் பாடுகிற பையன் அவரிடம் கேட்டான்.

''பண்ணலாமே. ஏன் மரம் கேக்கறே...சொல்லு.''

'கல்லு சிலைன்னா வயசானவங்களுக்கு இருட்டுல கண்ணு தெரியலை, நல்ல மரச்சிலை செய்து கண்ணு காது மூக்கெல்லாம் கலரா எழுதி நிசமா ஒரு அம்மா உக்காந்திருக்கிற மாதிரி செய்யணும்.''

''அந்த மரச்சிலை அம்மா எங்க அண்ணன் சாயல்ல இருக்கணும். நான் கண்ணாடிப் பெட்டில பூட்டி வச்சு

ட்யூப் லைட் போட்டு டக்கரா வச்சுக்குவேன். என்ன கேக்கறீங்க.''

''எனக்கு யாரும் இல்லை. உங்க கூட்டத்துல சேத்துக்குங்க.''

''ஏன் உனக்கு யாருமில்லை.''

''நான் நாலாவது பொண்டாட்டி கட்டினேன். அதுல சண்டை வந்துடுச்சு. இப்ப யாருமில்லை. எல்லாரும் மூலைக்கொன்னா ஓடிட்டாங்க.''

''நீங்க வேலை செய்யுங்க. அண்ணன் தானா உக்கார வச்சுக்குவாரு.''

ஃ ஃ ஃ

அந்த அதிகாரி வேண்டுமென்றே நிறைய பத்திரிகை யாளர்களை உண்டியல் திறக்கிற அன்று வரச் சொன் னார். கம்யூனிஸ்ட் கட்சி ஆட்களையும் அழைத்திருந் தார்,

உண்டியல் திறக்க தங்கம் வெளிப்பட்டது. எல் லோரும் திகைத்தார்கள். போலீசுக்கு சொன்னார்கள். அரசுக்கு தெரிவித்தார்கள். அரசு ஒரு மாதம் யோசனை செய்து அதை அந்த கோயிலுக்கே கொடுத்துவிட்டது.

கோயில் செப்புத்தகடு வாங்கி அறையில் அடுக்கியது. அதற்கான ஆசாரிகள் வந்தார்கள். தகடு அடிப்பதற்கு முன் பூட்டப்பட்ட மரத்தேர் கோயிலைச் சுற்றி அம்பாள் விக்ரஹம் தாங்கி ஒருமுறை வெள்ளோட்டம் விடப் பட்டது. பிரப்பங்காட்டு இளைஞர்கள் அனைவரும் சந்தோஷமாய் தேர் இழுத்தார்கள். தங்கள் குலப் பெயரை அடிக்கட்டையில் தடவித் தடவிப் பார்த்து சந்தோஷப்பட்டார்கள். வர்ணம் பூசி இன்னும் எடுப்பாக இருக்குமாறு மாற்றிக் கொண்டார்கள்.



தேர் மறுபடி அறுக்கப்பட்டது. அரம் போட்டு குதிரையை மூன்று துண்டாக அறுத்தார்கள். உள்ளுக் குள்ளே இருக்கிற மரத்தைக் குடைந்து மரம் எடுத்து கனத்தைக் குறைத்தார்கள். பொம்மைகளுக்குள்ளும் குடைந்து கனம் குறைக்கப்பட்டது. எங்கெல்லாம் கனம் குறைக்கமுடியுமோ அங்கெல்லாம் மரம் செதுக்கி எடுக்கப் பட்டது. அப்படி பிரிக்கப்பட்ட பொம்மைகள் மீதும் சட்டங்கள்மீதும் தாமிரத்தகடு அடிக்கப்பட்டது அடிக்கப் பட்ட தாமிரத் தகட்டின் மீது சிறிய ஆணிகள் வைத்து மடக்கிப் பொறுத்தினார்கள். தனித்தனியே எல்லா பகுதி களும் பிரித்து தாமிரம் அடித்தவுடன் பொற்கொல்லர்கள் வந்தார்கள்.

இருபது பேர் சுற்றி உட்கார்ந்து தங்கத்தை எடை போட்டு வாங்கி எல்லார் முன்பும் உருக்கி தகடுகள் மீது ஊற்றி மடமடவென்று தேய்த்தார்கள். மெல்லிய காகிதம் போல் தங்கம் தாமிரத்தின் மீது படர்ந்தது. எல்லோர் முன்பும் தேரை மறுபடியும் பூட்டினார்கள்.

அச்சு, சக்கரம், அடிப்பட்டறை வெறும் மரத்தால் இருக்க பண்டிகை, மகாபத்மம், உபபத்மம், விஸ்தாரம், தூண்கள், விமானம், கலசம், குடை, குதிரை எல்லாம் உடனடியாக இணைக்கப்பட்டன

அதிகாரியும், டாக்டர் சேனாபதியும், சரவணனும் ஊரில் சில முக்கியஸ்தர்களும் மூன்று நாட்கள் தூங்க வில்லை. பிற பொம்மைகளுக்கு தகடு பூட்டி, தங்கம் தேய்த்தார்கள். குதிரைகளைப் பொருத்தி தகடு அடித்து தங்கம் தேய்த்தார்கள். குழுக் குழுவாக வேலை செய் தார்கள். பூட்டப்பட்ட தேருக்கு ஆறு பேர் பாலீஷ் ஏற் றினார்கள். தங்கத்தில் எல்லோரும் மும்முரமாய் இருந்த போது முருகேச ஆசாரி எழுதி நீளமுள்ள ஒரு அடிகனக் கட்டையை பிரப்பங்காட்டுப் பையன்கள் தலையில் ஏற்றி அனுப்பி விட்டார்.

''இது அற்புதமான தேக்கு-இதுல மரச்சிலை அம்மனுக்கு சிம்மசனம் பண்ணித்தரேன்.''

அவர்கள் அதை அந்த தாவணிப் பெண் வீட்டில் ஒளித்து வைத்தார்கள்.

''ஏன் என்கிட்ட முரட்டுத்தனமாவே நடந்துக்கறே'' முருகேச ஆசாரி கெஞ்சினார்.

''இதுல சிம்மாசனம் பண்ணாதே. பசங்க படிக்கிற பெஞ்ச் பதினைஞ்சு பண்ணிக் கொடு. எங்க அண்ணன் பண்ணாடைங்க. கோயில் கோயில்னு அலையறாளுங்க. பசங்க படிக்கணும். கோயிலை ஒழிக்கணும். நீ சிம்மாசனம் பண்ணமாட்டேன்னு சத்தியம் பண்ணு. நாம சந்தோஷமா இருக்கலாம்.'' அவன் அருகே உட்கார்ந்து இழைத்தான்.

''என்னைக் கட்டிக்குவியா'' ஆசாரி கேட்டார்.

''நான் எவனையும் எப்பவும் கட்டிக்க மாட்டேன்.''

''ஏன்?''

''எங்க அண்ணனாலதான் இலங்களுக்கு எல்லாம் கிடைச்சது. எங்க அண்ணன் எங்கன்னு இலங்க கேக்கவே இல்லை. எங்க அண்ணன் வந்தா இந்த இடமே வேற'' அவன் அவரைத் தடவிக் கொடுத்தான். சந்தோஷப்படுத்தினான்.

''பெஞ்ச் பண்ணிட்டானா. பதினைஞ்சு பெஞ்சா, மிச்சம் ஒரே ஒரு பலகைதானா. ஒரு அங்குல கனமா. பொட்டச்சி சொன்னா இவனுக்கு எங்க போச்சு புத்தி கூட்டத்துல சேர்த்துக்கன்னு சொன்னான்... அடிச்சு துரத்து'' மூத்தவன் கத்தினான்.

''ஒரு பைத்தியத்தை நம்ம பக்கம் வச்சிருக்கமே. அவனை தொகையில்லாத நடத்துக்கறானே.''



''அப்படித்தாண்டா நடந்துக்குவேன். நீ பொட்டை மாதிரி கொணை கொணன்னு பாடுவே, நான் உக்காந்து கேக்கணுமா. நெஞ்சுல அடிச்சுக்கிட்டு அழுத குடும்பம்டா நம்முளது. நாம பாடக்கூடாது.''

''ஏன் நாம பாடினா என்ன?''

''கோபம் போயிடும்டா. அப்புறம் வெளிய இருக்கறவன் கூப்பிட்டு கூப்பிட்டு அசிங்கம் பண்ணுவான்... நம்ம அம்மாளப் பண்ணின மாதிரி.''

''நீயும்தான் அசிங்கம் பண்றே.''

''நானா பண்ணுவேன். ஒரு கோபத்துல பண்ணுவேன். பயந்து சாகமாட்டேன்.''

''நீ கெடு கெட்டவடி.''

''நீ பொட்டைபாடுடா.''

அவன் முடியைப் பிடித்து அவன் அடித்தான். அவன் செருப்பால் அவன் முகத்தைத் தாக்கினான். அவர்கள் இரண்டுபட்டார்கள்.

சின்னான் உரத்த குரலில் பாடி அழுதான்.

தங்கத்தேர் தயாராகியது.

''நாங்க மரம் கொடுத்தோம். எங்களுக்கு ஒரு பக்கம் இழுக்கறதுக்கு இடம் கொடுக்கணும்.'' பிரப்பங்காட்டு ஜனங்கள் குரல் கொடுத்தார்கள்.

டாக்டர் சேனாபதி சரி என்றார். ஊர் எதிர்த்தது.

''அது தப்புன்னு சாஸ்திரம் சொல்லுது. ''தச்சர்களும் சிற்பிகளும் ரகசியமாக தர்மசாஸ்திரம் சொன்னார்கள். ''அவர்கள் இழுக்கா ஊருக்குக் கெடுதி ஏற்படும்.''

அந்த தச்சர்களுக்கும், சிற்பிகளுக்கும் முருகேச ஆசாரிமீது கோபமிருந்தது.

"நாம இங்க உக்காந்து தேர் செய்யறோம். அந்த சோம்பேறி கட்டையை வெட்டிக்கினு போய் பொம்மை செஞ்சு கொடுக்கிறான். பெஞ்ச் செஞ்சு கொடுக்கறான். இதை ஸ்தபதி கேட்கலைன்னா விட்டுருவமா. பச்சை விறகு எரியலைன்னா பெட்ரோல் ஊத்தி பத்தலை." அவர்கள் அதிகம் பெட்ரோல் ஊற்றினார்கள். நிறைய புரணி கிளப்பினார்கள்.

"பேர் பாதி தங்கம் பிரப்பங்காட்டுக்கு போயிடுச்சய்யா. அவங்க ஒத்துமையா இருக்கானுங்க. ஜெயிக்கிறானுங்க."

"இல்லீங்க. அவனுங்களுக்குள்ள சண்டை இருக்குது. ரெண்டு மூணு தடவை அடிச்சிக்கிட்டாங்க."

"அப்ப அங்கியும் போய் பத்த வை."

"முருகேச ஆசாரிய பொம்மை பண்ண சொல்லாதீங்க. அவர் கை நீட்டுக் கை. பொம்பளைக்கூட படுத்திட்டு இழைப்புளி எடுப்பார். குளிச்சுட்டுக்கூட செய்யலாம். கஞ்சா அபின் கூட தப்பில்லை. பொம்பளை நீட்டு ரொம்ப கெடுதல்."

"மரம் திருட்டு மரம். கோயில் சொத்து ஓஹோன்னு வர நேரத்துல ஏன் சனியனை விலைக்கு வாங்கறீங்க. எதுனா சொல்லி விரட்டிருங்க."

"நம்ப முடியலைன்னு நிக்கறீங்களா. சுலபமா வளர்ற வேப்பங்கன்னு. ஒண்ணு நடச் சொல்லுங்க. மூணு நாளில பட்டுப் போயிடும். அவர் கை அப்படி."

மூத்தவன் முருகேச ஆசாரி பற்றி கூறிவிட்டு வேறு எதுவும் விளக்காமல் வேப்பங்கன்று நடச்சொன்னான்.

அவர்கள் போய் பார்த்து விட்டு ஃபீனாஸில் வெந்நீர் பிடித்துக் கொண்டு வந்து வேரில் ஊற்றினார்கள். மரம் பட்டுப் போனது.



மூத்தவன் விஷயம் புரியாமல் கவலையானான்.

மாயவரத்துக்கு குருக்கள் ஐயரால் தங்கரதத்திற்கு பூஜை செய்யப்பட்டது. கலச நீரால் அபிசேகம் செய்யப்பட்டது.

மூத்தவனும் இரண்டாமவனும் இழுக்கப் போய் நின்றார்கள்.

"அங்க போய் செருப்படி படுங்க. அப்பத்தான் புத்தி வரும்."

அவர்களை எதிர்க்கிற கூட்டம் உரக்கக் கத்தியது.

அவர்கள் பலமில்லாமல் காத்திருந்தார்கள். அவர்களிடம் பலமில்லாததை ஊர் ஜனங்கள் புரிந்து கொண்டார்கள்.

"மரம் கொடுத்தே. பேர் போட்டுட்டோம். எல்லாத்துக்கும் முன்னால வந்து நின்னா...போ. போய் பின்னால தேர் தள்ளு. இவங்களுக்கு பின் இடத்தைக் காமிப்பா." ஊர் கூவியது.

"இந்தா பார்த்துக்க." ஒருவன் பின் பக்கத்தை வழித்துக் காட்டினான்.

அவர்கள் முன்பக்கம்தான் வேண்டுமென்று ஏர்க்கால் பிடித்தார்கள். அப்படி பிடித்த மூத்தவனை கிராமத்து ஜனம் பட்டென்று அடித்தது. நெஞ்சில் கை வைத்து தள்ளியது. ரெண்டாமவன் பயந்து வெளியே ஓடினான். மூத்தவன் அடிபட்டது அவனுக்கு சொல்லப்பட்டது.

அவன் இந்த நேரத்துக்காக காத்திருந்தான். உறுதியான மூங்கில் பிரம்புகளோடு அந்தக் கூட்டம் அவன் பின்னே கோயிலுக்குள் நுழைந்தது.

''எவன்டா எங்க ஆள் மேல கை வெச்சது.'' அவள் நுகத்தடியில் ஏறி நின்றாள். அருகே வந்தவன் முகத்தில் எட்டி உதைத்தாள்.

''தேர் இழுங்கடா...'' உரக்கக் கட்டளையிட்டாள்.

தேர் தபதபவென்று இழுக்கப்பட்டது. சுற்றியுள்ளவர்கள் கலைந்து ஓடினார்கள். மறிக்கப்பட்டவர்கள் கம்புகளால் அடிக்கப்பட்டார்கள். எந்த சடங்குமில்லாமல் மூன்று முறை கடும்வேகத்தில் இங்கும் அங்கும் இடிப்பட்டு மூன்று முறை சுற்றி வந்தது.

''எங்களுக்கு தேரும் வேணாம். ஒரு மயிரும் வேணாம்.'' அவள் கூவ அவர்கள் வெளியேறினார்கள்.

பிரப்பங்காட்டை ஊர் ஜனங்கள் தாக்க முயன்று தோல்வி அடைந்தது. போலீஸ் அவளை ஸ்டேஷனுக்கு அழைத்துப்போய் கன்னத்தில் அறைந்தது.

''எங்கிட்ட விளையாடாதே. நான் வெட்டிப் போடுவேன். இந்த ஜாதில பிறந்ததினால எனக்கு துணிச்சல் வரலைடா. எங்களை அசிங்கப்படுத்தினதுனால துணிச்சல் வந்துடுச்சு. இனிமே அசிங்கப்படறதுக்கு ஒண்ணும் இல்லடா.'' அவள் உரக்கக் கத்தினாள்.

மறுபடி தங்கரதம் பவனிவர நாள் குறிக்கப்பட்டது. வெள்ளோட்டம் நடக்கவில்லை என்று அறிவிக்கப்பட்டது. ஒரு எலுமிச்சம்பழம் கூட நசுக்காத தேர்ஓடுச்சே என்று எல்லோருக்கும் கவலை இருந்தது.

''எதுக்குடா எல்லோரும்கோபப்படறீங்க.'' டாக்டர் சேனாபதி குழறிகுழறிப் பேசினார்.

''அவங்களும் நம்மளப் போல மனுஷங்கதான். உங்களுக்கு என்ன தெரிஞ்சு போச்சுன்னு அவங்களைத்தள்ளி வைக்கறீங்க. நீங்க என்ன உசத்தின்னு அவங்களை இழிவு பண்றீங்க.



மரம் கொடுத்தது அவங்கதானடா. நீங்க போய்கூட எடுத்தாரலை. அந்த ஜனமே கொண்டாந்து போட்டது வேற எதிலியாவது அவங்க பங்கு கேட்டாங்களா இந்த ஊருக்கு எதுனா கெடுதல் பண்ணாங்களா நீங்கதாண்டா அங்க போய், போய் அவங்களை அழவச்சீங்க. ஒருபடி அரிசி கொடுத்துட்டு என்னென்னமோ வாங்கிக்கிட்டீங்க.

கல்யாணமாகாத பொண்ணு அவ. அந்த மூஞ்சில என்ன வெறி...எது பத்தியும் கவலைப்படாம எப்படி உள்ள பூந்து அடிச்சா...பதிலுக்கு எப்படி அடிப்பீங்கன்னு அவளுக்கு தெரியாதா. நாசம் பண்ணிடுவீங்கன்னு அவளுக்குத் தெரியாதா. எல்லாத்துக்கும் தயாரா அவ வந்தா அப்பமாவது ஒருபக்கம் எடுத்துக்கன்னு நீங்க சொல்லியிருக்கலாம்.''

''அதுக்காக...இப்படி கண்ணாபின்னான்னு ஓட்டறதா...சாமிமேல நம்பிக்கையில்லாத பசங்க.''

''மனுஷாமேலே நம்பிக்கை இருந்தாதான் சாமிமேல நம்பிக்கை வரும். மனுஷா ஆதரவா இருந்தாதானே மனுஷா மேல நம்பிக்கை வரும்.'' டாக்டர் சேனாபதி தலையிலடித்துக் கொண்டு உரக்கக் கத்தினார்.

''இப்ப என்ன பண்ணணுங்கறீங்க.''

''ஊர்ல நாலு பெரியமனுஷா போய் தன்மையாபேசி அவங்களைக் கொண்ணாந்து அவங்க தோளோடு தோள் நின்னு தேர் தள்ளுங்கடா.''

''அவனுங்க படியமாட்டானுங்க டாக்டர்...'' ஊர் இளைஞர்கள் உரத்த குரலில் பேசினார்கள்.

''இந்த ஊர் இளைஞர்கள் ஜாதிவெறி பிடிச்சவங்க. ஜாதி வித்தியாசம் பாக்கறது தப்பு'' அந்த ஊரில் கல்லூரிக்குப் போன பெண் எழுந்து நின்று பேசினாள்.

"உன்னைக் காலேஜுக்கு அனுப்பியது தப்புடி. உக்கார்."

"இன்னொரு தடவை டி போட்டு பேசினே...செருப்பு பிஞ்சிடும். காட்டுமிராண்டி"

"இவ அந்த பிரப்பங்காட்டுல பாடற பையனோட சுத்தறாடா...மண்டைல அடிச்சு உக்காரவை.'

"எவனா அவனைத் தொட்டீங்க...நான் பொல்லாதவனா ஆயிடுவேன்" டாக்டர் அவனுக்கு பாதுகாப்பாய் நின்றார்.

ஸ்தபதி தலையிலடித்துக் கொண்டார். "இப்படி ஒவ்வொரு விஷயத்துக்கும் தகராறு பண்றீங்களே..."

"போல், தேர் பண்ணிட்டேல்ல... பொத்திக்கினு போயிட்டே இரு."

"ஆமாம்டா. நான் பொத்திக்கினுதான் போவணும் சால்வை போத்தினீங்களா. தங்கத்தோடா போட்டீங்களா... வெறுங்கையோடதான் அனுப்பறீங்க... அப்ப பொத்திக்கினுதான் போகணும். தரித்திரம் புடிச்ச ஊர்'

"இவன் கையை ஒடிங்கடா. அதிகம் பேசறான்."

"வேணாம்பா. இன்னும் பத்து ஊர்ல நான்தேர் பண்ணணும். உங்களோட பேசினது தப்புதான். மன்னிச்சுக்கங்க"

"தேர் பண்ணின திமிர்ல பேசறியா."

"தேர் நான் பண்ணலை. ஆத்தா பண்ணிக்கிட்டா. நல்லா யோசனை பண்ணிப் பாத்தா நீங்க ஒரு துரும்பு கூட தூக்கிப் போடலை. டேய்... இந்த தேர் உங்களுக்குத் தங்காதுடா."

"வக்காளி...இந்தத்தேர் இல்லாட்டி இப்ப என்னா...'



"உங்களுக்கு வேணுங்கறது ரெக்கார்டு டான்ஸ். கோயிலை சாக்கு வச்சு குடி கூத்து, அடிதடி சண்டை. இவ்வளவு நல்ல விஷயத்தை நம்ம ஊருக்கு வச்சுக்குவானேன..." டாக்டர் சேனாபதி சரவணனைப் பார்த்து கூவினார்.

சரவணன் அழுதான்.

அதிகாரி முதலமைச்சருடன் பேசினார். அறநிலையத் துறை அமைச்சருக்கு நிலைமையை சொன்னார்.

இருபத்தியொன்பது கிலோ தங்கப் பூச்சு ஏற்றுக் கொண்ட இந்த மகத்தான கலைப்படைப்பு இந்த கும்பலில் சிக்கி சிதையும் என்று பயமுறுத்தினார்.

ரிஸர்வ் படை அங்கு குவிக்கப்பட்டது. போலீஸ் துணையோடு தேர் லாரியில் ஏற்றப்பட்டது. இருபதடி உயரத் தேர் சென்னையை நோக்கி பயணமாயிற்று.

"ஒரு ஜுவுலி ஷோ ரூம்ல தனியா ஒரு கண்ணாடி ரூம் போட்டு நல்லா காவல் போட்டுருவோம்."

அமைச்சர்களால் முடிவு செய்யப்பட்டது.

ஃ ஃ ஃ

தேர் ஊரை விட்டு போகும்போது அவன் எதிரே வந்தான். ஆச்சரியமாக அதைப் பார்த்தான்.

ஆந்திர மாநிலத்தில் வறண்ட பகுதிகளில் அவன் ஆயுதப் பயிற்சி பெற்றிருந்தான். பிரப்பங்காட்டுக்குள் நுழைந்து சட்டையை கழற்றிவிட்டு மண்ணில் புரண்டான்.

அவன் தங்கை அந்த தாவணிப்பெண் ஓடி வந்து அவனைக் கட்டிக் கொண்டான்.

"நாலாமத்தவன் வந்துட்டான்... நாலாமத்தவன் வந்துட்டான்..." அவர்கள் இனம் கூவிற்று.

அன்று இரவு வட்டமாய் உட்கார்ந்து கறிசோறு தின்றார்கள்.

உண்ணும்போது ஊர் விவரம் தெரிந்தது. நடுநிசியில் ஊரிலிருந்து ஆட்கள் அரிவாளுடன், வேல்கம்புகளுடன் பிரப்பங்காட்டுக்குள் ஊர்ந்தார்கள். அவன் திடுக்கிட்டு எழுந்தான். தங்கையோடு நாலைந்து பேரை எழுப்பினான். தன்னுடைய ஜெர்மன் ரிவால்வரை நிரப்பிக் கொண்டான்.

"சுட்டுக் கீழே தள்ளு அவனை... கண்டதுண்டமா வெட்டு. ஓடறவனை வேல் கம்பால் குத்து எத்தினை பேரை சாகடிக்க முடியுமோ அத்தினி பேரை சாகடிக்கணும்."

முதல் ஆளை பத்தடி தூரத்தில் பார்த்து சுட்டான். அடுத்த ஆள்...அடுத்த ஆள்... அடுத்த ஆள்... என்று சுட்டான்.

வந்த இருபது பேரில் பதினேழு பேர் கொலை செய்யப்பட்டார்கள்.

அவன், அவன் தங்கை அவர்களோடு மூன்று பேர் பெட்டி பையோடு மாயவரம் போய் டாக்ஸி ஏறினார்கள்.

மாயவரம் தாண்டியதும் டாக்ஸிக்காரனை அடித்துத் தள்ளிவிட்டு ஆந்திரா நோக்கி பயணமானார்கள்.

போலீஸ் அந்தப் பிரப்பங்காட்டை சூழ்ந்து கொண்டது. ஊரை துக்கம் சூழ்ந்து கொண்டது.

"நம்ப குடும்பத்துல இனி யாரும் வீராயி கோயிலுக்கு போகக்கூடாது."

டாக்டர் சத்தியம் வாங்கிக் கொண்டார்.

சரவணனை கைது செய்து ஜெயிலில் அடைத்தார்கள்.



செம்மணி பிரப்பங்காட்டுக்குள் நுழைந்து பலகையை எடுத்து முருகேச ஆசாரியிடம் கொடுத்து பெண் படம் வரையச் சொன்னாள்.

அவர் பெண்படம் வரைந்து உளியால் பள்ளம் ஆக்கினார். அதை ஒரு குடிசையில் வைத்து பிரப்பங்காட்டுப் பெண்கள் பூஜை செய்ய ஆரம்பித்தார்கள்.

அந்த ஊர் பெயர் எல்லா பத்திரிகையிலும் வந்தது.

கலவரம் நடந்த ஒரு வாரத்தில் சேனாபதி மாரடைப்பால் காலமானார். ஊரில் மறுபடியும் போலீஸ் குவிக்கப்பட்டது.

செம்மணி அவர் தலைமாட்டில் நின்று உரக்கப் பாடினாள்.

**"இது புயல் காலம்டா...**
**இது புயல் காலம்...**
**எல்லா கண்ணிலும்]**
**தூக அப்பத்தான் செய்யும்**
**புயல் போன பிறகு ஊர் கல்லாயிடும்."**

அந்த சவ ஊர்வலம் அமைதியாக நடந்தது. அவர் தகனத்திற்கு பிரப்பங்காட்டிலிருந்து ஆறு சுமை விறகு கொண்டு வந்து வைத்தார்கள்.

தீ தகதகத்து எரிய சென்னையில் அந்த தேரைச்சுற்றி விளக்குகள் அணைத்து இருட்டாக்கினார்கள். அதில் உள்ள பொம்மைகள் சிரித்தன!

**முற்றும்**

# தனரேகை

பசு இரண்டு அடிகள் முன்னே வந்து அவள் புறங் கையை முகர்ந்து பார்த்தது. நாக்கால் சரட்டென்று நக்கியது. விஜயா உதறிப் பின்னடைந்தாள்.

உப்புக் காகிதம் வைத்து இழுத்ததுபோல் புறங்கை யில் ஒரு உணர்வு படர்ந்தது.

ஆனால் பசுவுக்கு விஜயாவின் வாசனை பிடித்து விட்டது போலும். மேலும் இரண்டு அடி எடுத்து வைத்து நெருங்கியது. மிக ஆவலோடு அவளை முகர்ந் தது. தலையை ஏதோவிதமாய் ஆட்டியது. காதுகள் எல்லா திசைப்பக்கமும் திரும்பித் திரும்பி கடைசியில் அவள் முகம் பார்த்து நின்றன.

சட்டென்று பசு ஒரு பெருமூச்சு விட்டது. தலையை லேசாய் சுழற்றி உதடு பிரித்து பல் காட்டியது. உடம்பில் இரண்டுமுறை சிலிர்ப்புகள் எழுந்து அடங்கின.

''ஏய்...உனக்கு என்ன வேணும்.'' விஜயா கேட் டாள்.

பசு திரும்பி பின்பக்கம் பார்த்தது. மறுபடி விஜயா வைப் பார்த்தது. விஜயா மேலும் சில தப்படிகள் பின்ன டைந்தாள்.

பசுவுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. இதற்கு மேல் உள்ளே போகும் அதிகாரம் தனக்கு இல்லை என்று நினைத்தது போலும். ம்ஹூம் என்ற கனைத்த லோடு ஒரு மூச்சு பசு வெளிப்படுத்தியது. தலை திருப்பிப் பார்த்து ஒரு அடி பின்னடைந்தது.



விஜயா இன்னும் இரண்டடி பின் வாங்கினாள். பசுவின் தயக்கத்தைப் பார்த்து சிரித்தாள்.

''எப்படி முட்டாளா இருக்கு பாரேன்...' பசுவைப் பார்த்து அவள் மனசு ஏளனம் செய்தது.

நான் முட்டாள்தான். அதனால என்ன...பசு பதிலுக் குப் பார்ப்பதுபோல் இருந்தது. வால் மட்டும் விசிறி அவளையே பார்த்துக் கொண்டிருந்தது.

''பா...பா...'' விஜயா பசுவைக் கூப்பிட்டாள்.

கொல்லைப்புற தோட்டத்திலிருந்து பசு பின்பக்க ரேழிக்குள் நகர்ந்தது. ரேழியிலிருந்து சமையலறையில் நின்ற விஜயாவைப் பார்த்தது. மூக்குத் துடிக்க மூச்சு உள்ளிழுத்தது. சமையலறை சாதம் வாசனை, கீரை, காய்கறிகள் வாசனை அதைப் பாடாய் படுத்திருக்க வேண்டும். உமிழ்நீரை அதிகப்படுத்தியிருக்க வேண்டும். பசு சமையலறையில் நுழைந்தது.

படியேறி மிக கவனமாய் காலடி எடுத்து வைத்து உள்ளே வந்தது.

விஜயா சமையலறையிலிருந்து கூடத்திற்குபோனாள்.

''பா...பா...'' என்று கூப்பிட்டாள்

பசு இப்போது சமையலறையை அடைத்துக்கொண்டு நின்றிருந்தது.

அவள் அழைக்க இன்னும் முன்னேறியது. உள்ளே ஆடி ஆடி வந்து கூடத்தின் நடு மையத்தில் நின்று நாலா பக்கமும் பார்த்தது.

அப்பா படிக்கும் ஹாலில், அண்ணன் நடை பயிலும் ஹாலில், வருவோர் போவோர் உட்கார்ந்து புழங்கும் ஹாலில் ஒரு பசு, நல்ல பெரிய பசு நிற்பது வேடிக்கையாய் விநோதமாய் இருந்தது.

''அப்பா...அப்பா...'' விஜயா கூவினாள். பசு பிரண்டது. வால் தூக்கி மூத்திரம் பெய்தது.

விஜயா விழித்தாள்.

''அட கடவுளே...சும்மா பொழுது போகாத வினையாட்டுக்கு உன்னை உள்ளே கூப்பிட்டா இப்படிஅசிங்கம் பண்றியே...''

''அப்பா...'' மீண்டும் அலறினாள்.

பசு இந்தமுறை பயந்து அலைந்தது. சாணம் போட்டது. மொணைத் தரையில் விழுந்த சாணம் நாலாபுறமும் தெறித்தது.

''அப்பா...''

''என்னம்மா...என்னது...என்ன...'' வாசல் தாண்டி, தோட்டம் தாண்டி கதவுக்கு அப்பால் மண் தெருவில் நின்று கொண்டிருந்த அப்பா ஓடி வந்தார். படியேறினார்

''இங்க பாருங்க...எப்படி வந்து நிக்குதின்னு...''

''த்த...என்ன இது...'' அப்பா பசு மீது பாய்ந்தார்.

பசு அவர் குரல் கேட்டதும் பிரண்டு சுற்றியது. மேஜை நாற்காலிகளை உருட்டி விட்டது.

''கரும்ம்...உள்ள வந்தா அசிங்கம் பண்றே'' அப்பா வெளிச்சத்திலிருந்து இருட்டுக்கு வந்துகண்பூத்து பார்வை தெரியாது மயங்கி சாணத்தில் கால்வைத்து வழுக்கி தள்ளாடினார். கத்தினார்.

பசுவை சட்டென்று பிடித்து ஊன்றி சுதாரித்தார். பசு இல்லையெனில் சொத்தென்று விழ நேர்ந்திருக்கும். தாங்க பசு கிடைத்தது ஊன்றி சரியாய் அப்பா நகர்ந்து ஹால் குழல் விளக்கை எரியவிட்டார். பசுவின் கொம்பை பிடித்துக் கொண்டு தரையை நோட்டம் விட்டார்.



பசு சிலும்பியது. தலையை உதறி அவர் பிடியிலிருந்து விலக முயன்றது.

அப்பா கவனமாய் கால் ஊன்றி பசுவின் முகத்தில் அறைந்தார். பலமான அறை. பசு தவித்தது. 'ம்மா...' என்று குரல் கொடுத்தது. மறுபடி அறைந்தார். முழங்கையால் முதுகில் குத்தினார்.

''என்ன கசம்பண்ணியிருக்கு பார்'' என்று கத்தினார் கோபத்தில் முஷ்டியை மடக்கி பசுவின் முகத்தில் குத்தினார். பசு மறுபடி கதறியது. பின்னடைந்து சுழன்றது அப்பாவும் சுற்றினார்.

நான்கு கால்கள் உள்ள அந்த மிருகத்தின் சுழற்சியை இரண்டு கால்கள் ஊன்றி நிற்பவரால் தாங்க முடியவில்லை.

சுவரில் அப்பாவின் முதுகு தக்கென்று அடிபட்டது. சாணமும் மூத்திரமும் கலந்து ஓடும் மொணைத் தரையில் நிற்க ஒட்டாது செய்தன. அடிச்சுவர் முழுதும் கறையாயிற்று.

''போ...போ...பின்னால போ...''

பசுவுக்கு வெளியே போகத் தெரியவில்லை.

''டேய் வாடா இங்க.'' அப்பா உரக்க வாசல்நோக்கி அண்ணனைக் கூப்பிட்டார். லாரியிலிருந்து வைக்கோல் இறங்குவதை மேற்பார்வை பார்த்துக் கொண்டிருந்த விஜயாவின் அண்ணா ஓடிவந்தான்.

''என்ன இதை இங்க கொண்டாந்துட்டீங்க...''

''ஆங்...நாங்க கொண்ணாந்தம். அதும் பாட்டுக்கு உள்ளே வந்திருச்சுடா. கண்ட மேனிக்கு சாணம்போட்டு ...புடிச்சு கொல்லைப் பக்கம் தள்ளு''

அண்ணன் மேல் துண்டால் கொம்பு சுற்றிப்போட்டு இழுத்தான். அது மூக்குப்பொடி போட்டு துடைத்துக் கொள்கிற துண்டு.

பசுவின் கண்களில் துண்டு பட்டிருக்க வேண்டும். அல்லது காரம் மிகுந்த மூக்குப்பொடியின் நெடி அதற்கு பயம் தந்திருக்க வேண்டும். பசு உதறியது தலையை அசைத்து துண்டை விலக்கியது.

''ஏய்...என்கிட்டயே டாங் காட்டறியா...'' அவன் பசுவின் கொம்புகளை இரண்டு கைகளாலும் இறுகப் பிடித்தான்.

அந்த மிருகம் மிகவும் மிரண்டு போனது.

விஜயா, அது இப்போது படும் எல்லா வேதனைக களுக்கும் தான்தான் காரணம் என்று ஒரு கணம் நினைத் தாள்.

மறுகணம் மறுத்தாள்.

'நான் கூப்புட்டா உள்ளே வந்துர வேண்டியதா. அறிவு வேணாம். உதைபடு. அப்பத்தான் புத்திவரும் என்று மனசுள் கறுவினாள்.

பசு தொடர்ந்து உதைபட்டது. அல்லாடியது. ஹாலின் பல விஷயங்களை நாசப்படுத்தியது

வெளியே இருந்து இன்னும் பல ஆட்கள் உள்ளே ஓடி வந்தார்கள்.

''கவுறு...கவுறு...எடுத்தாய்யா...'' அப்பா கத்த, பெரிய மணிக் கயிறு வந்தது.

சுருக்கு போட்டு சரக்கென்று கொம்பில் மாட்டி இரண்டு முனைகளையும் இரண்டு பேர் இறுக்கமாய் பிடித்து நில் என்பது போல் நிறுத்தினார்கள்.



பசு பாவம் அசையாது நின்றது.

அப்பா முன்னேறி கோபத்தோடு முதுகில் அறைந் தார்.

''பீடை என்ன கதியாக்கிடுச்சு பார் இந்த இடத்தை...'' என்று கத்தினார்.

அண்ணா வால் முறுக்கினான். பசு சகலமும் தாங்கி அமைதியாய் இருந்தது.

அதற்குத் தெரிந்து விட்டது.

இங்கு அதிகம் அசைய அதிகம் அடிபடுவோம் என்று புரிந்து விட்டது.

அவர்கள் பசுவை சமையலறைப் பக்கமாய் இழுத்தார் கள். கொல்லைப் புறப்பக்கம் அழைத்துப் போனார்கள்.

படி ஏறத் தெரிந்த பசுவுக்கு இறங்கத் தெரியவில்லை. மறுபடி அடி வாங்கியது. வெளியே தட்டுத் தடுமாறி ஓடியது கயிறு அவிழ்ந்து விட, படல் தாண்டி பின்பக்க தோட்டத்தில் மற்ற பசுக்களோடு கலந்தது

''ஏய்...யாரது. என்ன பண்றே உள்ள...இங்க வந்து பாரு, மாடு என்ன செய்திருக்குன்னு.''

''மாடு உள்ளாற வர வரைக்கும் என்னா மயிரா புடுங்கினு இருந்தீங்க கழுவி விடுங்கடி. இல்லைன்னா ராத்திரி தூங்க ஒட்டாது நாறும்.''

''விஜயா, வாசனை போட்ட ஃபினைல் எடுத்து உக்கம்மாகிட்ட... கொடு.'' அப்பா உரக்க அம்மாவை நோக்கி கத்தினார்.

''கொல்லைப் படிக்கட்டோரண்டை அரைக் கதவு போட் டுணும்'' அண்ணன் யோசனை தெரிவித்தான்.

'எதுக்குடா...எந்த மாடும் உள்ள வந்ததே இல்லை. இது என்னமோ கிறுக்குப் புடிச்ச மாதிரி உள்ள வந்துருச்சு மடக்கி கட்டை போட்டு கட்டணும்'' அப்பா கோபம் குறையாது பேசினார்.

''விஜயா கூப்புட்டாப்பல இருந்ததே பசு மாட்டை...'' அம்மா பேச விஜயா உடனே மறுத்தாள்.

''எனக்கென்ன பைத்தியமா? நான் எதுக்கு மாட்டை கூப்புடறேன்...? லூஸு மாதிரி பேசறியே...'' அம்மாவைப் பார்த்து சீறினாள்.

அம்மா இன்னொரு பசு. அவளும் பசுவைப்போல் முட்டாள். பேசிய பிறகு தான் பேசியது தவறு என்று புரியும். மகள் சீற வாய் மூடிக் கொண்டாள். வாளித் தண்ணீரும் துடைப்பமுமாய் வந்தாள்.

''இரும்மா...'' அம்மா தள்ளாடி, தள்ளாடி வேலை செய்வது பொறுக்காத அண்ணா வாளியை வாங்கி கீழே வைத்தான். பின்பக்கம் தோட்டத்திலிருந்து ரப்பர் குழாயை தோளில் போட்டு தூக்கி வந்தான். சமையலறை ஸிங்க் குழாயில் சொருகி தண்ணீர் மெல்லத் திறந்து ஹாலில் படர விட்டான்.

நாற்காலி, மேஜை, சோபாக்களை வெளியே நகர்த்தினான். வைக்கோல் போர் ஆட்கள் உதவி செய்தார்கள்.

அண்ணா தண்ணீர் ஊற்ற, அம்மா கழுவத் துவங்கினாள்.

மொஸைக் தரையில் தென்னந் துடைப்பம் சீராய் தேய்த்து தேய்த்து சாணம் கழுவியது.

விஜயா வாயை மூடிக் கொண்டிருந்தாள். எந்த வம்பும் செய்யாது இருந்தால் பசு உள்ளே வந்திருக்காது. வீடு இந்த அலங்கோலம் ஆகியிருக்காது. தன்னாமை



உள்ள அம்மா உட்பட ஆறேழு பேர் வேலை செய்யும்படி ஆகியிருக்காது.

''பாரு சுவர் எல்லாம் சாணமாயிருச்சு.'' அப்பா சுட்டிக் காட்டினார்.

அம்மா, பசு முட்டாள். சட்டென்று தண்ணீர் தன்னிய துடைப்பத்தால் சுவர் மீது பட்ட சாணத்தை தேய்த்தாள். பட்டை பட்டையாய் சுவர் அழுக்காகியது.

''அடி முண்டம்...என்ன செய்யற...'' அப்பா கர்ஜித்தார்.

''என்னம்மா இது...'' அண்ணன் தலையில் அடித்துக் கொண்டான்.

அம்மா மிரண்டாள்.

''சாணம்னு சொன்னீங்களே...''

''பெயிண்ட் பண்ண சுவத்தை, சாணி துடப்பம் போட்டாடி அலம்புவே...முண்டம்.''

அப்பா வேகமாய்ப் போய் தென்னந்துடப்பத்தைப் பிடுங்கி கீழே போட்டார்.

''விடுப்பா. வேற பெயிண்ட் அடிச்சுக்கலாம்.''

''என்ன வேற பெயிண்ட் அடிச்சுக்கலாமா... சும்மாவா, காசு அறுநூறு எழுநூறு ஆவும்.''

''சாணம்னு சொன்னீங்களே. அதான் டக்குன்னு அலம்பிட்டேன்.''

''போடி உள்ளே...'' அப்பா கத்த, அம்மா பயந்து அன்னியர் முன், ஏச்சு வாங்கியதற்கு வெட்கப்பட்டு உள்ளே போனாள். உள்ளே போய் அங்கிருந்து ஹால் பார்த்தாள்.

அண்ணா நீர் தள்ளினான். அண்ணாவின் கையி லிருந்து துடைப்பம் வாங்கி ஒரு வேலையாள் தொடர்ந்து செய்தான்.

இரண்டாம்முறை நீர் பீய்ச்சி கழுவியபோது விஜயா வாசனை ஃபினாயில் தெளித்தான்.

வீடு மணத்தது

அந்த சுவரின் ஒரு பகுதி மட்டும் துடைப்பம்பட்டு சாணச் சுவராய் இருந்தது.

''இது கிழக்கு பக்கம் தானேப்பா...''

''ஆமாம். ஏண்டா.''

''தாமு. டேய் ஒரு நெல்லிக்கா உருண்டைப் பசும் சாணம் எடுத்தா.''

''ஏண்டா?''

''வட்டமாக்கிடப் போறேன்.''

''எதுக்கு?''

''படம் மாட்டப் போறேன்.''

''என்ன படம்?''

''கோமாதா. கடைல பார்த்தேன். மூணடிக்கு இரண் டடி லாமினேட் பண்ணி வச்சிருந்தான்.''

''இப்ப எதுக்குடா?''

''சும்மா அஸ்து கொட்டாதப்பா. என்னமோ அது பார்த்ததும் வாங்கணும்னு தோணிச்சு.''

''இப்ப இங்க என்ன செய்யப் போறே?''

''சாணம் வட்டமா எழுதி, அது நடுவுல குங்குமம் வச்சு, இரண்டு பக்கம் சந்திர சூரியன் கீறி...'' அண்ணன் சுவரையே பார்த்தான்.



''ஹால்ல நல்லாருக்குமா. சாணம் பூசினா.''

''நாம யாதவர்தானே. சாணம் நமக்கு தப்பாவுமா?''

''அதுக்காக ஹால்ல...''

''பூஜைல வைக்கலாம். படுக்கைல வைக்கலாம். திருஷ்டி போவும். பசு உள்ளே வந்தது கூட நல்லது. வந்து மூத்திரம் பெஞ்சு, சாணம் போட்டது கூட நல்லது, விஜயாவுக்கு வரன் தகையும்,'' அண்ணா ஆர்வமோடு பேசினான்.

''அப்ப எழுது...டேய் போய் எடுத்தாயேண்டா...''

''படம் வாங்கிட்டுமா.''

''ரொம்ப விலையா...எவ்வளோ?''

''அட போப்பா. எல்லாத்துக்கும் விலைக் கேட்டுக் கிட்டு.''

அண்ணன் பசுஞ் சாணத்தால் அம்மா துடைப்பத் தில் தீற்றிய கறை மறைத்து, மேலும் சாணம் பூசி வட்ட மாக்கி மெழுகினான். மெழுகிய இடத்தில் வெள்ளை யாய் சூரிய சந்திரர் கீறினான். நடுவே குங்குமப் பொட்டு வைத்தான்.

இரண்டடி விட்டத்திற்கு சாண வட்டமும், மூன்றங் குல விட்டத்திற்கு குங்கும வட்டமும் அறையை அழகு செய்தன. புதிதாய் பூஜை செய்கிற இடமாய் அந்த சுவர் மாறிவிட்டது.

அன்று மாலை கோமாதா படம் அண்ணன் மாட்டி னான். அந்த வட்டத்திற்கு மேலே உடம்பெல்லாம் நிறைய தேவதை. படங்கள் போட்ட பசு மாட்டின் படம். அழ காய் இருந்தது.

பசுவின் குதத்தில் லக்ஷ்மி வாசம், வாலில் நாகராஜன்

நெற்றியில் சிவன், நெஞ்சில் பிரம்மா, மடியில் விஷ்ணு என்று பல தெய்வங்கள் குடியிருந்தார்கள்.

ஆனால் பசு மனிதர்களிடம் மாட்டிக் கொண்டு வதைப்பட்டது. அதனிடம் பயன்பெற, பால் பெற மனிதன் எல்லா தந்திரங்களையும் பிரயோகித்தான். பசு மனிதனுக்கு காலகாலமாய் அடிமை மிருகமாய், அவனால் ஆளப்படும் ஜந்துவாய் இருந்தது அதன் விருப்பு, வெறுப்பு பற்றி மனிதன் கவலைப்படவேயில்லை.

அதனிடம் அன்பு காட்டுவதுபோல், மரியாதை செய்வது போல் மனிதன் நடித்தாலும் பசுவின் மீது மனிதன் உண்மையான பாசத்தைக் காட்டவில்லை.

பால் வற்றிய பசுவை அவன் சீராட்டியதில்லை.

மனிதனுக்கு அடுத்த ஜீவனின் மீதுள்ள மதிப்பு அதன் உபயோகம் கருதிதான் நிகழ்கிறது. நாளையிலிருந்து பன்றிகள் பால் சுரந்தால், அந்தப்பால் அமிர்தம் என்று மனிதன் தெரிந்து கொண்டால், பசுக்களை உடனே புறக்கணித்து விடுவான். பன்றி வளர்ப்பான்.

ராமகோபால் பவுல்ட்ரி அண்ட் ஃபார்ம் என்கிற அந்தப் பண்ணை விஜயாவின் அப்பாவுடையது. அவர் தான் ராமகோபால்.

இருபது வருடங்களுக்கு முன்பு. விஜயா பிறந்த மறு மாதம் சிந்தாதிரிப் பேட்டையில் உள்ள நாறு கட்டு இரண்டு மாடி வீட்டை, பதினெட்டு லட்ச ரூபாய்க்கு மார்வாடியிடம் விற்றுவிட்டு, எங்கே நிலம், சல்லிக்காசுக் கிடைக்குமோ அங்கே போய் குடியேறினார்.

அவர் குடியேறிய இடம் கிழக்கு தாம்பரம். சேலையூர்.

தாம்பரம் ரயில்வே ஸ்டேஷனிலிருந்து கிழக்காய் ஒன்றரை கிலோமீட்டர் உள்ளே போகவேண்டும்.



சைதாப்பேட்டை வேளச்சேரி வழியாக வந்தால் ஒன்பது கிலோமீட்டர் உள்ளே வரவேண்டும். அவர் வந்த வேளை வேளச்சேரி வழியாய் நல்ல மண்பாதை போடப் பட்டது. சதுப்பு நிலங்களுடே பாறைகள் போட்டு அழுத்தமாய் பாதை ஏற்பட்டது.

பாதை வர, குடியிருப்புக்கான நிலங்கள் பிரிக்கப்பட்டன. ஒரு கிரவுண்டு பத்தாயிரம் என்று துவங்கியது.

ராமகோபால் ஒரு கிரவுண்ட் இரண்டாயிரத்து ஐநூறு என்று முப்பதுகிரவுண்ட் வாங்கினார். கோட்டை போல் சுவர் கட்டினார். கோட்டை சுவர் சுற்றி மண் பாதை போட்டார்.

வடகிழக்கில் வீடு கட்டினார். தென்மேற்கில் கிணறு தோண்டினார். உயர்நிலை தொட்டி வைத்தார்.

கையில் நல்ல காசு இருந்தது. வங்கியில் போட்டு வட்டிக்கு விட்டாலே வருமானம் வரும்.

அவர் மோட்டார் சைக்கிள் வாங்கினார். சைடு கார் அமைத்தார். குழந்தைகளை தாம்பரத்தில் உள்ள பள்ளியில் சேர்த்து, கொண்டு போய் விட்டு, கூட்டி வந்தார்.

காய்கறி, கறிக்கோழி எல்லாவற்றிற்கும் வெகுதூரம் போக வேண்டியிருந்ததால், வீட்டைச் சுற்றி தோட்டம் போட்டார். இரண்டு பெண் குழந்தைகள் இருந்ததால் பூச்செடி வைத்தார். காய்கறி போட்டார்.

பக்கத்து கிராமத்துப் பையனை சோறு போட்டு பதினைந்து ரூபாய் சம்பளத்திற்கு வைத்துக்கொண்டார்.

வீட்டுகுறையோ, தோட்டகுறையோ மாறன் என்ற அந்த இளைஞன் அவரோடு ஒட்டிக்கொண்டான். பெரிய ஐயா என்று ராமகோபாலையும், சின்ன ஐயா என்று அண்ணா பரதனையும் கூப்பிட்டான்.

அவன்தான் மலிவு என்று நாலு பெட்டை கோழிகளும், ஒரு சேவலும் வாங்கி வந்தான். தினி போட்டான். மூங்கில் தடுப்பால் பெரிய கூண்டு கட்டினான்.

அப்பாவும், அவனும் தோட்டத்தில் ஏதாவது வேலை செய்து கொண்டேயிருப்பார்கள்.

மாறன் ஹரிஜனம். ஆனால் அப்பா அதை மறந்தே போனார்.

அடபோடா...எனக்கும்தான் ஹரிபுடிக்கும். கோவிந்தன் தான் கடவுள். நானும் ஹரிஜன்தான் என்பார்.

''ஜாதி உண்டு வேலை செய்யறவன், செய்யாத சோம்பேறின்னு இரண்டு ஜாதி உண்டு. என்னால சோம்பேறிகளோடு உட்கார்ந்து பேசமுடியாது. எனக்கு உழைக்கணும். உடல் உழைப்புதான் உழைப்பு.

சும்மா ஆபீஸ் போறேன்னு டிபன் பாக்ஸில் சாம்பார், ரசம், மோர் சோறு கொண்டு போறவன் வெறும் தண்டம். அவனை நான் மதிக்கறதேயில்லை. அவர் பேசறது எனக்குப் புரியறதில்லை, அவனுங்கக்கிட்டா நேர் பேச்சா எதுவும் இல்லை. எப்பவும், எல்லார்கிட்டயும் சிண்டு முடியானுங்க. என்ன நான் சொல்றது.

அப்பா மாறனைக் கேட்டார். மாறன் ஆமாம் ஆமாம் என்று தலையாட்டுவான்.

கோழி முட்டையிட்டது பெருகியது. பல கோழிகள் பல முட்டைகள் போட்டன.

'' இவரு முட்டை வாங்கிக்கறேன்றாரு...'' மாறன் ஒரு மலையாளியைக் கூட்டி வந்தான்.

ஒருமுட்டை முப்பது பைசாவுக்கு வாங்கி வெளியே தாம்பரத்தில், சென்னையில் ஐம்பது பைசாவுக்கு விற்றார்கள்.



இருட்டிய பிறகு கும்மிருட்டாய் இருக்கும் சேலையூரில் ஒன்றன்பின் ஒன்றாய் வீடுகள் கட்டப்பட்டன.

முட்டை வாங்கியவன் தாம்பரம்வரை எடுத்துப் போகாமல் அங்கேயே தனிக்கடை போட்டு விற்றான். முப்பது பைசாவுக்கு வாங்கி அறுபது பைசாவுக்கு விற்கத் துவங்கினான். பல மாதங்கள் கழித்துதான் இது புரிந்தது.

அப்பா ஐம்பது பைசா என்றதும் வாங்க முடியாது என்றான்.

அப்பா வெளியே ஒரு முட்டை ஐம்பதுபைசா என்று போர்டு போட்டார். அருகிலுள்ள வீடுகளுக்கு போய் முட்டை வேண்டுமா என்று கேட்டார்.

''நாங்க பிராமின்ஸ். முட்டை சாப்பிட மாட்டோம் பசும்பால் கிடைக்குமா?'' ஒரு நாற்பது வயது மாமிகேட்டான்.

''பசும்பாலா ... மாடு இல்லையேம்மா.''

''கோழி வளர்க்கறவா மாடு வளர்க்கப்படாதா...''

''படலாமே நல்ல யோசனை மாடு வாங்கி பால் கறந்தா முத ஆழாக்குபால் உங்களுக்குத் தரேன் மாமி.''

''மாறன் மாடுபத்தி ஏதாவது தெரியுமா?''

''நீங்கதான் யாதவரு.''

''ஜாதிதான்டா யாதவர். எனக்கு லேவாதேவிதான் பழக்கம். மாடுபத்தி ஒன்னும் தெரியாது.''

''வாங்கி தெரிஞ்சுக்குவோம் ஐயா ''

''கேட்டு தெரிஞ்சுக்கிட்டு வாங்கலாம்டா.''

''கேட்டா எவன் முழுசா சொல்வான். எது சொன்னா புரியும். துணிஞ்சு வாங்கிடுவோம். போராடி போராடி புரிஞ்சுக்கலாம் ''

''எத்தினி...''

''முதமுத ஒன்னு போதும்.''

''வா, போலாம்.''

மேல் மருவத்தூர் தாண்டி, அச்சரப்பாக்கம் ஊராட்சித் திடலில் நடக்கும் சந்தைக்குப் போனார்கள்.

நல்ல சுழியுள்ள இளம்மாடு ஒன்றைக் கன்றோடு வாங்கி வந்தார்கள்.

பசு சிகப்பு நிறமாய் இருந்தது.

வலதுகால் எடுத்து உள்ளே வைத்து பயமின்றி கன்றோடு வீட்டுக்குள் ஏறி கொல்லை வழியே தோட்டம் நோக்கி நடந்தது.

பச்சைபசேல் என்று புல்வெளி பார்த்தது. வால் தூக்கி குதித்து ஆடியது கன்று துள்ளித்துள்ளி ஓட பசுவும் பின்னே ஓடியது. நான்கு புறமும் பார்த்தது நடைபோட்டது. இடைவிடாது முழங்கால் உயரம் வளர்ந்த புற்களைப் பிடுங்கித் தின்று அசைபோட்டது

ஒருபடி பால் கறந்தது.

பால் காய்ச்சி, முதல் ஆழாக்கு குல தெய்வமான கோபாலகிருஷ்ணனுக்கும், அடுத்த ஆழாக்குப் பால், காவல் தெய்வமான மாரியம்மனுக்கும், மூன்றாவது ஆழாக்குப்பால், அந்த ஐயர் வீட்டுமாமிக்கும் கொடுக்கப்பட்டது.

மீதியை வீட்டில் எல்லோரும் ஆவலோடு குடித்தார்கள்.

மறுவாரமும் சந்தைக்குப் போனார்கள்.

''அச்சரப்பாக்கத்துல ஏன் வாங்கற...நகரி தாகலா புரம்போங்க, நல்ல பசுகிடைக்கும். ஈரோடு, கோயம்புத்தூர்ல சீமைப்பசு கிடைக்கும்.''



''நல்ல இளம் கன்னா, புழலேரிப்பக்கம் கொண்டாந்து விப்பாங்க அங்கியும் வாங்கலாம்.''

''எல்லா இடத்திலும் மாடுவாங்கி விக்கறது ஞாயித்துக்கிழமைதான்.''

ஒன்று, இரண்டு, மூன்று என்று பசுக்கள் உள்ளே வந்தன. ஓலைக் கொட்டகை போட்டு தரைக்குக் கருங்கல் தளம் போடப்பட்டது.

''தார்ரோடு போடப் போறாம்பா. அப்ப மனை விலை இன்னும் ஏறிடும். மனை விலை ஏறினா இரும்புக் கம்பி, கட்டிட சாமான் எல்லாம் ஏறும். நாம சரியா ஒரு மாட்டுக் கொட்டா போடுவோம்' மாறன் அப்பாவிடம் பேசினான்.

அவர்கள் கணக்கு போட்டார்கள். இரண்டு லட்சம் செலவில் வீட்டுக்கு மாடி கட்டி, தோட்டத்தில் நாற்பது பசு கட்டக் கூடிய தொழுவம் ஏற்படுத்தலாம் என்று திட்டமிட்டார்கள்.

விஜயா ஐந்தாவது படிக்கும்போது, காற்றோட்ட முள்ள உயர்ந்த ஆஸ்பெஸ்டாஸ் கூரையுடன் சிமெண்ட் தரை, மாட்டுத் தொழுவம் கட்டி முடித்து விட்டார்கள்.

கொசு தொந்தரவு அதிகம் என்று பசுக்களுக்கு ஆறு மின்விசிறி போட்டார்கள்.

கன்டேன், கன்டேன் என்று பால் வாங்கிப் போக பல பேர் போட்டிவிட்டார்கள்.

முன் பணம் கொடுத்து, மெல்ல மெல்ல கழித்துக் கொள்ள பலர் தயாராய் இருந்தார்கள்.

பசுக்கள் வர வர வீடு மாறிப் போயிற்று. அப்பா மாறிப் போனார்.

மாடுகள் இருக்கும் இடத்தில் எந்நேரமும் வேலை இருந்தது

ஒரு நாள் முடியவில்லை நெஞ்சு வலிக்கிறது என்று அம்மா அழுதபோது அப்பா திடுக்கிட்டார்.

''அடிப்பாவி...சொல்றதுக்கென்ன...டேய் மாறன் சிகாமணி, கணேசன், ரத்தினம் எல்லாரையும் இனி தினத்துக்கும் வேலைக்கு வரச் சொல்லு புஸ்தகம் போட்டு மாச சம்பளம் தரேனு சொல்லு.''

ராமகோபால் பவுல்ட்ரி அண்ட் ஃபார்ம் அப்போது தான் உருவாகியது. ஆர்.பி.எஃப். என்று பால் டின்களில் எழுதப்பட்டது.

மாடுகளைக் கவனித்தபோது அந்த அளவு கவனம் கோழிகள் மீது செலுத்த முடியவில்லை. ஆட்கள் உண்மையாக இல்லை. ஒரு கோழிக்கு நோய் வந்தால், நாலு கோழிகள் இறந்தன.

இறந்த கோழிகளை வெட்டிப் புதைக்க வேண்டியதாயிற்று. கோழிக்குக் கருவாடு தீனி வாங்க அதிகம் அலைய வேண்டியிருந்தது அப்பா கோழி வளர்ப்பை நிறுத்தினார். அந்த ஆஸ்பெஸ்டாஸ் கொட்டகையையும் திருத்தி மாடுகள் வாங்கினார். எருமைகள் அங்கே வந்து நிறைந்தன

விஜயா, ப்ளஸ் டூ படிக்கும்போது எழுபது எருமைகள், நூற்றிப் பத்து பசுக்கள் இருந்தன. அப்பா அடுத்தடுத்த நிலங்களும் வாங்கி தோட்டம் விரிவு படுத்தினார்.

மாறன் உட்பட, ஆறுபேர் கூட்டுக்கம்பெனி என்று அரசுக்கு பிரகடனப் படுத்தினார். அவர் மட்டுமே ஆண்டு வந்தார்.

மாறனுக்குத் திருமணமாகியது. மாறன் மனைவியும் தோட்டத்தில் வேலைக்கு சேர்ந்தாள். மாறனின் மைத்து



னன் காவலுக்கு வந்தான். பால் விற்பனை இடத்தில் வேலை செய்தான்.

அண்ணன் பி.ஏ முடித்து, வேலை கற்றுக்கொள்ள வந்த தருணம், மாறன் தான் விலகிக் கொள்வதாய் திடுமென்று சொன்னான்.

''எனக்கு சோழிங்கநல்லூர் கிட்ட கொஞ்சம் நிலம் இருக்குங்க. கொஞ்சம் காசு கொடுத்தீங்கன்னா கூட நிலம் வாங்கி, மாடு வாங்கி, மாறனார் பால் பண்ணைன்னு ஆரம்பிக்கப் போறேன்.''

''நீயும் இங்கன ஒரு முதலாளிதானே எதுக்குப் பிரியறே.''

''நான் மட்டும்தானே முதலாளி.எம் பொண்டாட்டி முதலாளி இல்லையே. என் மச்சினன் முதலாளி இல்லையே.

சேர்த்துக்கலாம்னு சொல்வீங்க. சொன்ன பிறகும் உங்களுக்குக் கட்டுப்பட்டு உங்க கீழேதான வேலை செஞ்சாவனும்.

நம்ம நிலம். நம்ம மாடுன்னு ஒரு நினைப்பு ஒருக்கும் வராதில்ல. அதான தனியா போலாம்னு நினைக்கிறேன்.''

''புரியதுடா. அவ தூண்டி விட்டுட்டா...நீ கேட்டுத் தானே ஆவணும். சரி போயிட்டு வா. ஆனா அடுத்த ஆள் வேலை பழகறத்துக்கு முன்னாடி கிடுகுன்னு போற...இது முறையில்லை.''

''எப்ப நான் போனாலும் எதுனா குறையாத்தான் படும். நான் இப்ப போறது நல்லது. தம்பி பரதர் இன்னும் வேகமா வேலை இறங்கும். அது ஒன்னும் புரியாத புள்ளை இல்லை. கொஞ்சம் தனுக்கு ஆள் இல்லேன்னு வச்சுக்க. எனக்கு மேல வேலை செய்யும்.''

''போய்தான் தீரணுமா. வேற யோசனையா
பேசேன்.''

''பிடிச்சுக் கட்டாதீங்க முதலாளி. முத்தின மாட்டை அவுத்து விட்டுறதில்லையா. எங்கனா போய் மேஞ்சுக் கன்னு விட்டுட்டறதில்லையா. அப்படி விட்டுருங்க.

சிறுசா இருந்தேன். வளைஞ்சு வளைஞ்சு வேலை செஞ்சேன். கல்யாணம் கட்டி முத்தினவுடனே கொஞ்சம் அசதி தட்டுது.''

''இன்னாட பேசறே... புதுசா ஆரம்பிக்கப் போறவன் அசதி தட்டினா முடியுமா?''

''வேலைக்கு சிறு பசங்க உண்டு முதலாளி. நான் குரல் கொடுத்து கரப்புடிச்சா போதும்... மத்ததுக்கு உறவா, ஊரா ஆளுங்க இருக்கு.''

''நல்லா இருடா... எப்பனா முடியலைன்னா வந்து...''

''இல்லை முதலாளி. அதுக்கு அவசியமே இராது பரதரு மொத்தமா பார்த்துக்குவாரு. உங்களுக்கு அவரு பத்தி தெரியலை. இதைவிட நல்ல நேரம் நான் போற துக்கு எதுவுமில்லை. இனி வரவும் வராது. மனசு மயங் காத. கோபப்படாத எனக்கு உதவி செய்யுங்க.''

''அட...உன் மேல கோபம் என்னடா...நீ நிமிர்த்தின இடம் இது. எவ்வளோ வேணும்.''

''எவ்வளவுக்கு நான் யோக்கியதையோ அத்தினி
கொடுங்க.''

''லட்ச ரூபா தரேன்டா.''

''பெரிய மனசு முதலாளி.''

''வெறுமே இறக்காத. நானு மாடுதரேன். நம்மூருல நல்ல இளம் மாடா ஓட்டிக்கிட்டு போ.''



''பெரிய மனசுலயும் பெரிய மனசு முதலாளி.''

''வந்து போய்க்கிட்டு இரு. முதல்ல எதோ தெருடி னாப்போல இருக்கும். நானு தடவை வந்து போயி கன்னா, நீயும் ஒரு பால்காரன்னு படியாளமாயிடும்.''

''சரிங்க முதலாளி.''

மாறன் இடம் வாங்கி, படல் போட்டு அழைக்க, அவர் வாஸ்து ஆளைக் கூட்டிக் கொண்டு போய், கொட்டகை அமையும் விதம் காட்டிவிட்டு வந்தார்.

அண்ணன் பரதன் தடுமாறினான்.

அப்பா அவனை விரட்டி, விரட்டி வேலை வாங்கி
னார்.

''இது உளுந்து தவுடு. அதாவது உளுந்து மேல்
தோல். பசு ரொம்ப விரும்பி சாப்பிடும்.''

''இது கோதுமைத் தவுடு. உடம்புக்கு நல்லது. பால்
நிறைய தரும்.''

இது கம்பு. குழைவா வேக வச்சு, ஒரு பசுவுக்கு ரெண்டரை கிலோ தொட்டில போட்டு கரைச்சுக்கொடுக் கணும்.''

இது பொன்னி மாவு. அதாவது ஆன்வல்லிக்கிழங்கை உடைச்சு உலர்த்தி, மாவு பண்ணி வச்சருக்கு. இது அதிகம் தரக்கூடாது. ஆனா மாட்டுக்கு வயிறு திம்முன்னு நிறையும்.

பொன்னி மாவும், உளுந்து தவுடும், கம்புசோத்தோட கலந்து தண்ணில கரைச்சு கரைச்சு தொட்டில போடு. மாட்டை அவுத்து விட்டு அது குடிக்க சொல்ல பிசைஞ்சு விடு. பசு சாப்பிடறதே ஒரு அழகு. அதைப் பார்க்கறதே ஒரு சுகம்.

மாட்டுக்கு அளவு தெரியாது. அவசரமா உறிஞ்சு குடிச்சுட்டு, அப்பாலன்னு உன்னைப் பார்க்கும். போறும்டி கண்ணுன்னு ஒரு தட்டு தட்டி தள்ளிவிடணும்.

மூத்தின மாடு மூக்கா லிட்டர் ஒரு லிட்டர் கறக்கும். இளம் மாடு முத கன்னு போட்டது, ரெண்டாங் கன்னு போட்டது, இரண்டு இரண்டரை லிட்டர் கறக்கும்.

சில ஆந்திரா பசு மூன்றரை லிட்டர்கூட கொடுக்கும்.

இளம் மாட்டை நீயே பார். கப்பு கரைச்சு கொடு. மூத்தினது வேலையான் கிட்ட விடு உடம்பு சரியில்லாத மாட்டை நான் கவனிச்சுக்கறேன்.''

என்னடா நாம பி.ஏ. படிச்சோம். இப்படி கோமணம் கட்டி திரியற வேலைல விட்டாங்களே அப்படின்னு நினைக்காதே.

நினைச்சியா... செய்யாதே போ... போய் எங்களா ஆபீஸ் வேலை பார். எனக்கு இந்த தயிர்சாத டிபன்பாக்ஸ் பிடிக்காது. அதைத் தூக்கிட்டு போறவங்களையும் நான் விரும்பறது இல்லை.

மனுஷனாய் பிறந்தவன் ஆபீஸ்ல வேலை செய்ய லாமா...கூடாது.

உழவு செய்யலாம், மாடு கன்னு வளர்க்கலாம், கட்டிடம் கட்டலாம். போருக்கு போற மிலிட்ரி வேலை செய்யலாம். சும்மா ஆபீஸ் வேலை செய்யறவன் எதுல சேர்த்தி. என்ன புரியுதா. பிடிச்ச வேலை செய்யறியா.''

''செய்யறேம்பா.''

ஒரு நல்ல நேரத்தில் தன் பிள்ளை முற்றிலும் புரிந்து கொண்டு தனக்கு முழுமனதாய் கை கொடுக்க வந்தது பார்த்து, அப்பா பூரித்துப் போனார்.

மாறன் போனது நல்லதுதான் என்றார்.



தானே போய் மாறனைப் பார்த்துவிட்டு வந்து [illegible] மொத்தமும் நல்லா பார்த்துக்கறான்டா என்றார்.

அண்ணன் மாலை நேரம் ஜீன்ஸ் பேண்ட்டும் வெள்ளை சட்டையும் போட்டு வெளியே கிளம்ப வியந்தார்.

தங்கசெயின், கையில் பிரேஸ்லெட், உயர்தர சென்ட், தும்பைப்பூ சட்டை, சீரான தலைமுடியுடன் அண்ணன் புல்லெட்டில் கிளம்ப, அவரும் ஏறிக்கொண்டார்.

''என்னைய தாம்பரத்துல விட்டுரு. திரும்பி வரச் சொல்ல ஏத்திக்க'' என்றார்.

அரைடிராயரும், பனியனுமாய் அண்ணன் தொழுவத்தில் வேலை செய்ய, அது பார்த்தும் மகிழ்ந்தார்.

''இன்னும் ஆள் வேணுமாடா.''

''இதுலே அதிகம். மாடு கூட்டறதா, ஆளு குறைக்கிறதான்னு பார்க்கறேன்.''

''எதுக்கு குறைக்கறே. மாடு அதிகம் பண்ணு.''

''அதுவும் நல்லாயில்லை. கவர்மெண்ட் பால் எல்லா [illegible] கொண்டாறான்.''

''வெண்ணை எடுத்த பால்டா. எதுக்கும் லாயக்கில்லை.''

''அது போதும்னு ஜனங்க வாங்குதே.''

''வேறு என்ன யோசனை.''

''[illegible] ஆயிரம் ரூட்டை. [கோதுமை தவிடு, உளுந்து மாவு, பொன்னி மாவு விக்க முடியுமான்னு பார்க்கறேன்.''

''வியாபாரமா.''

"ஆமா. நமக்கும் சல்லிசாயும், வெளிய மெட்ராஸ்லயும் விலை போவும்."

"எப்படி, சொல்லு."

"தினம் ஆயிரம் முட்டை கொண்டாந்து போட சொல்லி காசு கொடுத்திட வேண்டியது. நாம டெம்போ வச்சு மெட்ராஸுக்கு கடை கடையா பத்து பதினைஞ்சு போட வேண்டியது. மெட்ராஸ்ல மட்டும் லட்சம் மாடு இருக்காம்."

"இரண்டும் கவனிக்க முடியுமாடா."

"எல்லாம் மேற்பார்வைதான். ஆள் போட்டுக்கணும்"

"எதுக்கு."

"தவிட்டுக்கு."

"ஏன்டா இன்னொன்னுல கை வைக்கறே."

"பத்து மணிக்கு மேல வேலை இல்லப்பா. சும்மா டிவி பார்த்துகிட்டு, தோட்டம் சுத்திக்கிட்டு இருக்கோம்."

"சரி ஆரம்பி. எத்தினி காசு முதல்ல போடணும்."

"பத்து லட்சம்."

"யப்பா."

"பயப்படாத ஒரு வருஷத்துல மீட்டுரலாம்."

"முடியுமா?"

"முடியும்."

அப்பா கவலையானார். அப்பா கவலையானதால் வீடு கவலையாகி அமைதியாய் இருந்தது.



அம்மா அப்பாவின் முகத்தைப் பார்த்தே வாழ்ந்தவள். அவர் முக பாவமே அவளுக்கு வாழ்க்கை. அவர் என்ன சொல்கிறாரோ. அதுவே வேதம்.

அவர் கவலைப்பட்டால் அவளும் கவலைப்படுவாள். அவர் சந்தோஷப்பட்டால் அவளும் மகிழ்ச்சி காட்டுவாள். அவளுக்கென்று குணங்கள் இல்லை. இருந்தும் காட்டவில்லையோ என்னவோ. சில சமயங்களில் அவளைப் பார்த்தால் மிகவும் பரிதாபமாக இருக்கும்.

விஜயா அப்பாவைப் பார்க்கும் போதே, அதற்கு எதிரொலிக்கும் அப்பாவையும் புரிந்து கொள்வாள்

பதினைந்து வயதில் திருமணமாகி, பத்துப் பதினைந்து வயதுவரை வீட்டில் பெற்றோர்களுக்கு பயந்து, [illegible] அடிமையாய் புருஷனுக்கு பயப்படு என்று சொல்லப்பட்டது. பயம் தவிர வேறு எதுவுமே வாழ்க்கையில் இல்லாத ஒரு ஜென்மமாய் அம்மா வாழ்ந்து வருவது வேதனையளித்தது.

"அவங்க எது செஞ்சாலும் நம்ம நல்லதுக்குத்தானே செய்யறாங்க. கொஞ்சம் [illegible] புன்னுன்னாலும் நம்ம அப்பா நல்லவங்க."

இது அம்மாவின் மாற்ற முடியாத அபிப்பிராயம்.

அப்பாவின் புதிய தொழில் ஆரம்பிப்பது பற்றி அவளுக்கு எதுவும் தெரியவில்லை.

[illegible] அரை [illegible] வேலை செய்கிறாளே என்று வேதனைப்படவில்லை.

படிச்சா என்னா... இதுதான் வேலை நம்ம தொழில். நல்லா வந்து செய்யட்டும்.

"[illegible] பகலைக் கட்டிக் கொண்டாந்து [illegible]... அது எப்படி. [illegible] அந்த தெளிவுகளிவு தானே வந்துருச்சு. பிறவியிலேயே இருந்திருக்கு."

புருஷனுக்கு அடுத்தபடி அவன் பிள்ளையைக் கொண்டாடினாள். அவனுக்குப் பார்த்துப் பார்த்து பரிமாறினாள்.

அந்த வீட்டில் அலட்சியப்படுத்தப் பட்டவர்கள் ராதாவும், விஜயாவும்தான்.

விஜயாவின் எதிர்ப்புக்கு வீடு சற்று பயந்தது. விஜயாவை ஏதாவது கோபித்தால் அண்ணன் பரதன் விடுவிடு என்று தடுத்து விடுவதால் அவளைக் கோபிக்க அப்பாவும் தயங்கினார்.

ராதா இந்த வீட்டில் வகையாக மாட்டினாள்.

யாரும் அன்பு செலுத்தாத பிறவியாய் வளர்ந்தாள். எட்டு வயதில் இந்த நிலைமை அவளுக்குப் பிடிபட்டு, எதிர்பார்த்ததால்தானே ஏக்கம்...எதிர்பார்ப்பே இல்லை. நீங்கள் திட்டவே பிறந்திருக்கிறீர்கள். நான் திட்டு வாங்கவே வாழ்கிறேன். நடக்கட்டும் என்று அமைதியாகி விட்டாள்.

அக்கா, ப்ளஸ் டூவில் எண்பது சதவிகிதம் எடுத்தாள். நிச்சயம் எங்காவது ஒரு கல்லூரியில் அவளுக்கு பொருளாதாரப் பாடமாவது வாங்கியிருக்கலாம்.

அக்கா வேண்டாமென்று வீட்டோடு இருந்து விட்டாள்.

வீட்ல இத்தனை வேலை இருக்கறபோது நான் காலேஜுக்கு போய் என்ன செய்யப் போறேன். சமைக்கக் கத்துக்கிட்டு அம்மாவுக்கு உதவியா நான் இருக்கறதுதான் நல்லது.

காலேஜுக்கு போகிற நேரமாவது திட்டிலிருந்து தப்பிக்கலாம். வீட்டோடு வேலைப் பளுவும், வேலையில் இடைவிடாத வசவும் நடந்தன. ஆனாலும் அவளைப்



பார்த்தால் சந்தோஷமாக இருப்பதுபோல்தான் தெரிந்தாள்.

அப்பா அடிக்கடி குழம்பத் துவங்கினார். அண்ணன் வியாபாரத்துக்கு காசு கொடுப்பதா. பெண்ணின் கல்யாணத்திற்காக காசை இறுக்கிக் கொள்வதா என்று திண்டாடினார்.

"நீ தங்கச்சி கல்யாணத்தையே பாத்துக்கப்பா. எனக்கு மாடுங்க இருக்கு. போதும் நான் இன்னும் கொஞ்சம் மேல வரலாமோன்னு நினைச்சேன். ஒரு ரெண்டு வருஷம்...தங்கச்சி வீட்டோட இருந்தா நான் மூணு லட்சம் சம்பாதிச்சிடுவேன். ஆனா பொட்டைப் புள்ளையை ரெண்டு வருஷம் காத்துட்டிருன்னு சொல்றது நல்லா இருக்காது."

"நிலத்தை ஒரு பகுதி விக்கலாம்னு இருக்கேண்டா. அதுல வர்ற காசை உன் வியாபாரத்துல போட்டுரலாம்."

"நிலம் விக்காதப்பா. மறுபடி வேணும்னா வாங்க முடியாது. எங்க மூணுபேரைப் பார்க்காதே. எங்களுக்கு பொறக்கற நம்ம மூணு பேரைப் பாரு. கல்யாணம் பண்ணி பத்து க்ரவுண்ட் நிலம் கொடுத்தாதான தங்கச்சி கடைசி வரை சந்தோஷமா இருக்கும்.

காடா இருக்கும்போது நிலம் வாங்கினே. அது நாடா ஆகும்போது நம்ம குடும்பம் அனுபவிக்க வேணாமா... இந்தப் பக்கத்துல பெரிய பார்க் வருதாம். சறுக்கு மரம். நீர் விளையாட்டுன்னு ஏகப்பட்ட அட்ராக்ஷனாம். அது சுத்தி பெரிசாயிடுச்சுன்னா இங்க க்ரவுண்ட் விலை திடீர்னு ஏறிடும்.

இன்னும் அஞ்சு வருஷத்துல வேளச்சேரி வழியா கிழக்கு தாம்பரத்துக்கு ட்ரெயின் வருதாம். சேலையூர் ஜங்ஷனாம். அப்படியே கடற்கரை ஓரமா கன்யாகுமரி

வரைக்கும் ட்ரெயின் விடறானாம். எப்பன்னு கேக்க றியா. உன் பேரப்பிள்ளை பி. இ. படிக்கிற போது... இன்னும் இருபத்தஞ்சு வருஷத்துல தடதடன்னு ஓடும். அதனால நிலம் விக்காத.

எங்கனா பாங்க் லோன் வாங்கலாம், கவலைப் படாதே.''

ஆனால் வங்கிக்கடன் கிடைப்பதெல்லாம் எளிதாக இல்லை. அவைகளுக்கு அரசியல்வாதிகள் உதவி தேவை யாக இருந்தது. அப்படி அணுக பரதனுக்குப் பிடிக்க வில்லை.

அவன் அரை நிக்கரும், பனியனுமாய் மாடு கழுவி விட அப்பாவுக்கு மனசு பதைத்தது. சாப்பிடுகிற போது அப்பா அரற்ற ஆரம்பிப்பார்.

''ஆறு லட்ச ரூபா கேக்கறான். அது கொடுக்க முடியலை. இவன் ஜெயிச்சுட்டானா எனக்கு எவ்வளவு நிம்மதி. இந்தக் காட்டுல வந்து நான் பட்ட கஷ்டத்துக் கெல்லாம் விடிவு வந்த மாதிரி ஆயிடுமில்ல.

பருத்தி, புண்ணாக்கு, கோதுமைத் தவிடு மெட்ராஸ் ஏஜென்ஸி எடுத்திருக்கான் அப்பாருன்னு தெரிஞ்சா அவ னுக்குப் பொண்ணு கொடுக்கறவனும் கூட கொடுப்பா னில்ல, அவனுக்கு நல்லபடியா பொண்ணு அமைஞ்சா நம்ம வீடு இன்னும் உசந்துருமில்ல.''

''ஏம்பா என்னைப் பத்தி மட்டுமே பேசறே.''

''வேற எதடா பேசறது. பொண்ணுங்க கல்யாணம் ஆகிப் போறவங்கதானே, ஆயிரம் ரூபா சீரு கேட்டு அஞ்சாயிரத்துக்கு பண்ணிட்டம்னா இங்க வரணும்னே தோணாதுடா.''

''வீட்டோட மாப்பிள்ளை பாருங்கப்பா.''

''ஏன்டா அப்படி சொல்றே.''



''எனக்கு உதவியா இருக்குமில்ல.''

''எந்த மாப்பிள்ளைடா உதவியா இருப்பான்.''

''அப்படி சொல்லாதிங்கப்பா.''

''உனக்கு புரியலை. வெறும் கோமணத்தோட வந்த பையன் மாப்பிள்ளையாயிட்டா பட்டு வேட்டி கேப் பான். படுக்கறதுக்கு இலவம் பஞ்சு மெத்தை கேப்பான்.''

''மாப்பிள்ளையாயிட்டா கொடுக்கத்தான் செய்ய ணும்.''

''நீ எந்த மனசுல வச்சுட்டு பேசறேன்னு புரிய லையே.''

''எம்மனசுல எதுவும் இல்லைப்பா. கடைக்கு ஒரு ஆள் இருந்தா நான் மெட்ராஸுக்கு போயிட்டு வருவேன் அல்லது நான் கடைல உக்காந்துகிட்டு கலெக்‌ஷனுக்கு ஆள் அனுப்புவேன். அப்படி கலெக்‌ஷன் பண்ற பார்ட்டி சொந்தக்காரனா இருந்தா சௌகரியமில்லையா.''

''ஏன்டா...நான் உதவ மாட்டேனா.''

''நீ வீட்டோட இருப்பா. தெற்குப் பக்கம் ஒரு சிவன் கோவில் கட்டுவோம், அதைப் பாத்துக்கிட்டிரு.''

''இப்ப பொண்ணு கல்யாணத்தைப் பார்க்கவா... உன் பிசனஸ் பார்க்கவா.''

''அப்பா...நான் ஏற்கனவே முதலியாரைக் கல்யாணம் பண்ணக் கூட்டுத்துன்னு இருக்கா.''

''என்னடா சொல்றே...புரியறப்படியா சொல்லு.''

''முழுசா பக்கம் பருப்பு ஆலைங்க நிறைய இருக்கு. நான் தொக, தமிட்டுக்கு போயிருந்தேன். நாமே பொருத்தம் கவுந்து எடுத்துக்கணும். நாமே எடை

போட்டு கணக்கு சொல்லணும். காசு கொடுத்துட்டு எடுத்துட்டு போவணும்.

அங்க ஒரு முதலியார் கூப்பிட்டு வச்சி பேசினாரு. ஏழெட்டு இடத்துலேர்ந்து தானே உளுந்து தோல் வாங்கி வைக்கிறேன். கடலைப் புண்ணாக்கு கட்டி வைக்கிறேன் வந்து எடுத்துட்டு போன்னு பிரியமா பேசினாரு. அவங்க வீட்ல ரெண்டு பொண்ணுங்க, ரெண்டு பையனுங்க. ரொம்ப ஜாலியா பேசினாங்க.''

''உனக்கு புடிச்சிருக்கா.''

''கடவுளே...அந்த மாதிரியெல்லாம் சொல்லலை. நான் வியாபாரமாதான் யோசிக்கிறேன்.''

''அவங்க வந்து பேசுவாங்களா.''

''தெரியலைப்பா வந்து பேசுங்கன்னு நான் சொல்ல முடியுமா. அவங்க ஜாதி வேற. நம்ம ஜாதி வேற.''

''அப்ப என்னடா...நான் போய் பொண்ணு கொடுன்னு கேக்க முடியுமா.''

''புள்ளை இருக்கான்னு கேக்கலாமில்ல...''

''ஜாதி வேறன்றியேடா.''

''நீங்க யாதவரான்னு கேக்கலாமில்ல. யாராவது யாதவர் பையன் இருந்தா சொல்லுங்கன்னு சொல்லலா மில்ல.''

''என்னைப் புழுவேரிக்கு வரச் சொல்றியா.''

''எழுபது மூட்டை உளுந்து தோலு, முப்பது மூட்டை கடலைப் புண்ணாக்கு, சின்ன லாரில ஏத்திட்டு வரணும். ரெண்டு ட்ரிப்பா அடிக்கணும். முத ட்ரிப் ராயப்பேட்டை மில போடணும். ரெண்டாவது ட்ரிப் நம்ம வீட்டுக்கு வரணும். ரெண்டு ட்ரிப்புக்கு நடுவுல அரை நாள் டைம்



இருக்கு. அதுவரைக்கும் மூட்டைக்கு பாதுகாப்பா அங்க தான் உக்காந்திருக்கணும்.''

''அடடே...'' அப்பா வியந்தார்.

''நான் அப்படித்தான் ஒரு நாள் முழுக்க உட்கார்ந்தி ருந்தேன். முதல்ல தெரு மரத்தடியில கல்லு போட்டு உட்கார்ந்திருந்தேன். பிறகு வீட்டுப் பக்கத்திலே மோட் டார் சைக்கிள்ல உட்கார்ந்தேன். அவங்களா சேர் போட்டு உட்கார சொன்னாங்க. மத்தியானத்துக்கு மேல வீட்ல சாப்பிடச் சொன்னாங்க.

சாயந்தரம் டிவி பார்த்துக்கிட்டே காபி சாப்பிட் டேன். நல்ல பேசிப் பழகிட்டேன்.''

''என்னையும் போய் உட்காருன்றியா.''

''ஆமாம்பா. உட்கார்ந்தா அந்த வீடு பத்தி மொத் தமும் உனக்கு புரிஞ்சிடும். எனக்குப் புரிஞ்சதைவிட உனக்கு அதிகம் புரியும்.''

அப்பா தீவிரமாக யோசித்தார். அண்ணனோடு மோட்டார் சைக்கிளில் கிளம்பிப் போனார்.

''அவங்களண்டயும் மாடு இருக்குதுப்பா'' மாலையில் உரத்த குரலில் பேசியபடியே வீட்டுக்கு வந்தார்.

''அவங்க ஜாதி பார்க்கலை. மில்லு ஓட்டறது கேவல மில்லை...ஓனர் ஓட்டினாதான் மரியாதை. பருப்பு உடைச்சு சுத்தம் பண்ணி வைக்கறது ஒரு நல்ல தொழில்னு நினைக்கிறவங்கதான், பொண்ணு கொடுத்து பொண் எடுக்கறது நல்லதுன்னு நினைக்கறாங்க.''

''பருப்பு உடைக்கிற மில்லுக்கு போய் வந்தா உடம்பு பூரா மாவுதான். ரெண்டு பசங்களுமே காக்கி பேன்ட் பனியனாதான் நிக்கறாங்க.

ஆளுங்க கொறைஞ்சா அம்மா அப்பா பொண்ணுங்க எல்லாம் கூடைய தூக்கினு வேலைக்கு இறங்கிடுமாம்.

இன்னிக்கு காலை அப்படித்தான் ஆயிப்போச்சு. ஆளுங்க வரலை. சிவகாசி லாரிக்காரன் போறேங்கறான் இரும்புக் கம்பிக்கு நடுவுல சந்து லோடு. இருபது மூட்டை பருப்பு ஏத்தலாம். ஒரு மூட்டைக்கு இருபது ரூபா.

அந்த வீடு தபதபன்னு வேலைல இறங்கி, முப்பது மூட்டை பருப்பு ஏத்திடுச்சு. பத்து மூட்டைப் பருப்பு அடையாறுல இறக்கிட்டு மிச்சம் திருச்சிராப்பள்ளியில கொட்டறாங்க.

நானும் உதவி செய்யலாம்னு உள்ள போனேன். ஒரே தும்மலு. மூஞ்சி சிவந்து போற அளவு தும்மலு உங்களுக்கு ஒத்துக்கலை, நீங்க போங்கன்னுட்டாங்க

நான் நடு ஹால்ல உக்காந்து காபி சாப்பிட்டுட்டு டிவி பார்த்துட்டிருந்தேன். போன் கால் வந்தது. கேட்டு கோடவுன் போய் சொன்னேன்.

ரெண்டு பொண்ணையும் ஒரே வீட்ல கேக்கறாங்க. அண்ணன் தம்பிக்கா. இவங்களுக்கு அப்படி கொடுக்கறதுல இஷ்டமில்ல போல இருக்கு.

அதுல ஒரு பையன் பேங்க். ஒரு பையன் இரும்புக் கடை. பொண்ணுங்களுக்கு புடிக்கலை போல. அதையும் தவிர மெட்ராஸ்ல ஃப்ளாட் வாங்கிக் கொடு. நூறு பவுன் நகை போடுங்கறான். அது அதிகமாப்படுது அவங்களுக்கு.

நல்ல இடமா படுதே. முடிச்சிருக்கலாமேன்னு சொன்னேன். பொண்ணுங்க கன்னுன்னு முறைக்குது.

அவங்கம்மா உரக்கக் கத்தினாங்க. தூசு படாத புள்ளைங்க நம்ம வூட்டுக்கு மாப்பிள்ளையா வந்தா அவமானம்தான் மிஞ்சும். நாளைக்கு குழந்தை பிறந்தா



தாத்தா வீட்டுக்கு போகாது. ஜலதோஷம் பிடிக்கும்னு சொல்லுவாங்க. பாட்டிய தொடாதே... அழுக்கு ஒட்டிக்கும்னு சொல்லுவாங்க. இவனுக்கு வீடு வாங்கிக்கொடுக்க நாம் அழுக்குல புரளனும். இவன் இங்க வரமாட்டான். அது எத்தினி கஷ்டம் நம்மளுக்கு.

மூத்த பையன் சோபாவை ஓங்கி தட்டிட்டு என் உடம்புக்கு தூசு எழும்புதேங்கறான். சந்தனம் அரைக்கிறதுக்கு தூசு எழும்புதேங்கறான். சந்தனம் அரைக்கிற கை மணக்கதான் செய்யும்னேன். அந்த பைத்தியத்துக்கு புரியலை.

ஹாலை ஏஸி பண்ணிடுங்க. அப்ப தூசு வராதுன்னான். பேங்க்ல வேலை செய்யற பையன், பருப்பு மில்லை எட்டியே பார்க்கலை அவங்களுக்கு இது ரொம்ப அவமானமா போயிடுச்சு.

நாம உள்ள பூந்து இதுஎன்ன... அது என்னன்னு கேக்கறமா... அவங்களுக்கு ரொம்ப சந்தோஷம்.

ஒரு ரெண்டு நாள் தும்மல் வருங்க. அப்புறம் மூக்கு பழகிடும். தொடர்ந்து வராது அப்படீங்க நாங்க. இதுல என்ன கூத்துன்னா அந்தபேங்க் பையன் காதலர். என்ன காரணம்னு தெரியலை... முதலியாரா இருந்தாக்கூட பரவாயில்லைன்னு அவங்க சம்பந்தம்பேச வந்திருக்காங்க.

எனக்கு அட்ரஸ் கேக்கணும்னு ஒரே பரபரப்பு. அடேய் எங்கனாண்ட ரெண்டு பொண்ணு இருக்குடான்னு சொல்றத்துக்கு மனசு துடிக்குது.

ஆனா அவங்களும் சொல்லலை. நானும் கடைசி மூட்டும் கேக்கலை. அதெப்படி கேக்கறது சொல்லு. அவங்க இளக்காரமா நினைக்கற ஆளை. அவங்ககிட்டேயே கேட்டு நாம எப்படி சம்பந்தம் வைக்கறது...

ஆனா நம்ம பையன் சொன்னமாதிரி இந்த வீடு ஜாலிதான். உழைப்பாளிங்க டக்குன்னு ரெண்டு பொண்ணுங்

களும் சும்மாடு கட்டுனாளுங்க.கூடை எடுத்துட்டுபோய் பருப்புவாரி கொட்டறாளுங்க. பசங்க முதுகுல மூட்டை தூக்கறாங்க.

பெரியவரு சரசரன்னு கோணி தைக்கறாரு. அந் தம்மா நாப்பது பவுன்நகை போட்டுக்கின்னு கோடவுன் முழுக்க பெருக்குது.

ஒரு அசப்புல அதுநம்ம ஊடுதான். மேனாமினுக்கித் தனமே கிடையாது. அதான் பரதன் கொஞ்சம் மயங்கிட் டிருக்கான்.

அடடா...நாம மாட்டு சாணி அள்ளிப்போடறமே... நமக்கு நல்லபடியா பொண்டாட்டி கிடைக்கணுமேன்னு கவலைப் பட்டிருப்பான் போல. இந்தக் குடும்பத்தைப் பார்த்தவுடன் கொஞ்சம் குஷாலாயிட்டான்.

அவுங்கவந்து இங்க பார்த்தாங்கன்னு வச்சுக்க...கண் டேன் கண்டேன்னு பரதனைப் பண்ணிக்குவாங்க.

நம்ம ரெண்டு பொண்ணுங்களையும் கேட்டாலும் ஆச்சரியப்படறதுக்கில்லை. தூக்க தலையனா, ஆம்மல் மூக்கனா இருக்கற அந்த ரெண்டு பசங்களும், நம்ம வீடு வந்து பார்த்தா சந்தோஷமாயிடுவாங்க. செருப்பைக் கழட்டிப் போட்டுட்டு கொட்டால இறங்கிடுவாங்க. இங்க ஜாதியைவிட உழைப்பு. உழைப்போட சேர்ந்த மாதிரி ஆவும். தன்னைமீறி ஒரு பிரியம் வந்துடும்.

பொண்ணு பார்க்கறதுக்குன்னு கூப்பிடாத, 'சேவலூர்ல வந்து நிலம் வாங்கி போடுங்கப்பா, வந்து கிழக்கு தாம்பரத்தைப் பாருங்க'ன்னு சொல்லப் போறேன்.

அவங்க பொண்ணு எடுத்தாலும் சரி...கொடுத்தாலும் சரி...இது நல்ல சம்பந்தம். பரதன் தைரியமா புண்ணாக்கு வியாபாரத்துல இறங்கலாம். ஆந்திரா, பாம்பே எல்லா இடத்துலேர்ந்தும் தவிடு வர வைக்கலாம். மெட்ராஸ் முழுக்க நாம சப்ளை பண்ணலாம். ஒரு வேளை



மெட்ராஸ்ல, மாடுதடை பண்ணிட்டாக்கூட செங்கல்பட்டு, காஞ்சிபுரம், அரக்கோணம் எல்லா இடத்துக்கும் சப்ளை பண்ணலாம்.

எனக்கு என்னமோ உன் மனசல இந்தஇடம் படிஞ்சிறு தோணுது. பொண்ணு கொடுத்து பொண்ணு எடுத்தம்னா. ரொம்பவே சந்தோஷமா இருக்கும்.''

அப்பா வீட்டில் யாரிடமும் அபிப்பிராயம் கேட்காமல் அவரே தொடர்ந்து கனவு காண்பது போல் பேசிவந்தார்.

பெருக்கச் சொல்லவே நாப்பது பவுன் நகை போட்டிருக்கற பொம்பளை மத்தநேரத்துக்கு எவ்வளவுபோடுவா நகை சீரெல்லாம் நல்லாவே செய்வாங்க

அக்காவிடம் லேசாய் கவலை அப்பிக் கொண்டது.

ராதா உலுக்கிக் கேட்டாள்.

''மாட்டுத் தொழுவத்திலேருந்து பருப்பு கோடவுன். எண்ணெய் சட்டிலேர்ந்து எரியற அடுப்பு. நாம மத்த மனுஷாளைப் போல சந்தோஷமா வாழறதுக்கு பொறக்கலை. நாம வெறும் கூலிக்காரப் பொம்பளைங்கதான்.''

''என்னாடி...என்ன தப்பு அதுல.''

''ஒரு தப்பும் இல்லை. நான் வீணை வாசிக்கிற மாதிரி இருக்கறதா நினைச்சுக்குவேன். புதிய வீணை வாசிச்சா [illegible] பார்ப்பேன், எனக்கு அதப்பத்தி ஒண்ணுமே தெரியாது. ஆனா அந்த வீணை ரொம்பப் பிடிக்கும்.

யாரும் இல்லாதபோது கோணப் பாயை சுருட்டி மடியில வச்சிக்கிட்டு இதை வீணைன்னு நினைச்சுகிட்டு தட்டி, [illegible] கூட்டி இனிமைப் பாட்டு வாசிப்பேன். சிரிக்காதடி, எனக்கு வேற பாட்டு தெரியாது.

நம்ம வீட்டுல வீணை இருக்கணும்னு ஆசை. நம்ம அப்பா, அம்மா ரெண்டு பேருமே இங்கிலீஷ் பேசணும்னு ஆசை. நம்ம சொந்தக்காரங்கள்ள சொந்தம் அமெரிக்காவ இருக்கணும்னு ஆசை அண்ணனோ, அப்பாவோ அடிக்கடி பாம்பே, டெல்லின்னு போயிட்டு வரணும்னு ஆசை. ஆனா இப்படி நம்ம வீட்ல நடக்காது. அரக்கோணம், வந்தவாசி, நேமத்தூர், விக்ரவாண்டி, ஈரோடு, கோயம் புத்தூர் இப்படித்தான் நம்ம மனுஷங்க இருப்பாங்க.

நான் குறையா சொல்லலைடி. என் கனா பெரிசு. புருஷன் ஒன்பது மணிக்கு ஆபீஸ் போகணும்னா நான் ஆறு மணிக்கு எழுந்தா போதும். இங்கன மாதிரி நாலு மணிக்கு முத மாடு கத்தினவுடன் எழுந்துக்க வேணாம். கண்ணு முழிச்சவுடனேயே மூத்திரமும் சாணியுமா மிதிச்சு நடக்க வேணாம்.

எனக்கு வீட்டுக்குள்ளயே செருப்பு போட்டு நடக்கணும்னு ரொம்ப ஆசைடி. அதுக்குன்னு தனி செருப்பு, மெத்து மெத்துன்னு மிருதுவா. நம்ம வீடுமாதிரி தாக்கரே மூக்கோன்னு கட்டாத இதே லாடைல கிருஷ்ணமூர்த்தின்னு ஒரு ஐயரு வீடு கட்டிருக்காரு, தெரியுமா...

அந்த மாதிரி வளைவு வாசப்படி வச்சு, கொஞ்சம் பள்ளத்துல சோபா வச்சு அருமையா கட்டணும். கார்ல போகணும். அடையார்ல, பெசன்ட் நகர்ல வீடு இருக்கணும். குழந்தைங்களோட இங்கிலீஷ்லதான் பேசணும்.

சிரிக்காதடி. இப்படியெல்லாம் நடக்கலேன்னா நான் செத்துற மாட்டேன். இப்படி நடக்கணும்னு ஒரு ஆசை.

என் புருஷன் மாசத்துக்கு ஒரு தடவை பாம்பே போயிட்டு வரணும். வருஷத்துக்கு ஒரு தடவை ஃபாரின் போயிட்டு வரணும்.

யாராவது போன் பண்ணிக் கேட்டா, அவர் பாம்பே



போயிருக்காரே, லண்டன் போயிருக்காரே... அப்படின்னு ஸ்டைலா சொல்லணும்.

யாரைப் பார்த்து இப்படி ஆசைப்பட்டுட்டேன்னு தெரியலை. ஒரு வேளை நம்ம வீடு ரொம்ப மாட்டுக் கொட்டாயா இருக்கறதுனால இப்படி ஆசை வந்துச்சா...நம்ம அப்பா நாகரீகமில்லாம கத்தறதால இப்படி தோணிப் போச்சா தெரியலை.

பால் சொம்பு தவறி விட்டுட்டோம்னா, நம்ம அப்பா எப்படி கத்துவாரு...அப்படி கத்தக்கூடாது.

ஜாக்கிரதைம்மா. சொம்பு கால்ல விழுந்தா என்ன ஆயிட்டிருக்கும். நீ போ, நான் துடைச்சு எடுத்துட றேன்...அப்படின்னு சொல்லணும். கூட உக்காந்து துடைக்கணும்.

நான் யோசனை பண்றதெல்லாம் தப்பாடி...'' அக்கா தாதா பரிதாபமாகக் கேட்டாள்.

''எதுவும் தப்பில்லை. ஆனா இதெல்லாம் நடக்காது. நீ சொன்னது கொஞ்சம் ஐயர் டைப். பிராமின்ஸ் கொஞ்சம் இந்த மாதிரி அலட்டிக்குவாங்க. இந்த கிருஷ்ணமூர்த்தி வீடெல்லாம் பார்த்து நீ அப்படி நினைக்கிறே.

ஒரு ரோஜா, நாலு தடவை பால் கொடுக்கறதுக்கு போயிருக்கே, அப்பறம் அங்க ஏதோ பூஜைக்கு உன்னைக் கூப்பிட்டாங்க. அதையும் இருந்து பார்த்துட்டு வந்தே. அப்ப [illegible] மாதிரி இருக்கும். ஐயருங்க வேற மாதிரி. அங்க நம்மளை சேர்த்துக்க மாட்டாங்க.''

''அங்க சேரணும்னு சொல்லலைடி. அந்த இடம்... அங்க வீடு, அங்க பேச்சு நல்லா இருந்தது. சுவாஸினி பூஜைக்கு [illegible] [illegible] உக்கார வச்சாங்க. கால்

கழுவி, நெத்தில பொட்டுவச்சு புடவை ரவிக்கை கொடுத்தாங்க ''

''உன்னை உக்கார வைக்க மாட்டாங்களே.''

''உக்கார வேண்டிய பொண்ணு வரலை. சேலையூர் ரொம்ப தூரம்... என்னை விட்டுருங்கோன்னு போன் பண்ணி சொல்லிடுச்சாம். நான் பக்கத்துல உக்காந்து பார்த்துட்டிருந்தேனா, கிட்ட வந்து எழுந்திருடின்னு சொன்னாங்க.

நான் என்னமோ ஏதோன்னு எழுந்தேன். தரதரன்னு கூட்டிட்டுப் போய் மணைப் பலகைல உக்கார வச்சுட்டாங்க ''

''கன்னிச் சொட்டு மாதிரி பத்து லிட்டர் பால், இவளே கறந்து கொண்டாந்துருக்கா. நான் பால் கொண்டு வந்து தரேன் மாமி, பூஜைக்குன்னு தானா சொன்னா.

வந்து பூஜைல கலந்துக்கோடி. நல்ல இடத்துல கல்யாணம் ஆவும்னு சொன்னேன். அஞ்சு மணிக்கு எழுந்து குளிச்சுட்டு ஆறு மணிக்கு பாலோட பூஜைக்கு வந்துட்டா. இவ சுவாஸினியா. எட்டு மணிக்கு சேலையூர் தூரமாமேன்னு சொல்றவ சுவாஸினியா. அவளை என்ன மந்தவெளிலேர்ந்து நடந்தா வரச்சொன்னோம். தாம்பரத்துக்கு ட்ரெய்ன்ல வந்து, ஒரு ஆட்டோ பிடிச்சு இங்க வரப்படாதா. கேடு கெட்ட ஜென்மத்துக்கு கொடுத்து வைக்கலை.

நீ தைரியமா உட்காருடி. இன்னிக்கு உனக்கு நல்ல காலம். ஒஹோன்னு வரப்போற...மத்தவா எல்லோரும் பார்த்து பொறாமைப் படறமாதிரி, ஆம்படையான் உனக்கு கெடைப்பான்னு கூச்சலா சொன்னாங்க.''

''எனக்கு ஒரே குஷாலாயிடுச்சு. வெளிய காட்டிக்க முடியுமா. இதப்பத்தியெல்லாம் ஒன்னுமே கவலைப்படாத



நல்ல பொண்ணுமாதிரி தலையைக் கவுந்துக்கினு உக்காந்துட்டேன்.

ஓம்சக்தி, பராசக்தி, அப்படின்னு திருப்பத் திருப்ப சொல்லிட்டே இருந்தேன். நீ என்ன பாலா மந்திரம் சொல்றியான்னு ஒரு பொண்ணு கேட்டுது. ஆமான்னுட்டேன்.

எல்லாருக்கும் தலை நிறைய பூ வச்சு, கழுத்துல கைல சந்தனம் தடவி, கால்ல நலங்கு வச்சு தடிமனா சம்பங்கி மாலை போட்டு வளையலு ரவிக்கைத் துண்டு, நெத்திக்கு ஒட்டற பொட்டு மஞ்சத்துண்டு, முகம்பார்க்கற கண்ணாடின்னு தட்டுல வச்சுகொடுத்தாங்க. குனிஞ்சு கண்ணாடில என் மூஞ்சி பார்த்தேன். மாலையும் கழுத்துமா கல்யாணப் பொண்ணு மாதிரி என் மூஞ்சி எனக்கே அழகா இருந்துச்சு. குபீர்னு துக்கமா, சந்தோஷமா தெரியலை... ஒரு அழுகை வயித்துலேர்ந்து வந்துச்சு.

சீ...சீ...இங்க அழுதா மாமி செருப்பு கழட்டிடுவா. அதனால சும்மா இருடின்னு மனசை அடக்கிட்டேன். திருப்பத் திருப்ப தலையைக் குனிஞ்சு கண்ணாடியில பார்த்துட்டிருந்தேன்.

கண்ணாடில என்மூஞ்சிதான் தெரியும். ஆனா அதைக் கடவுள் மூஞ்சின்னு நினைச்சுக்கிட்டேன். தாயே.. என்னைக் காப்பாத்தும்மான்னு என்கிட்டயே நான் வேண்டிக்கிட்டேன்.

[illegible] [illegible]க்காரத்தனமா இருக்குல்ல. ஆனா ரொம்ப நல்லா இருந்தது டி.. ரொம்ப சந்தோஷமா இருந்தது. கண்ணாடியில இருந்த என்னையே பார்த்து, ஓம்சக்தி, பராசக்தின்னு சொல்லிட்டே இருந்தேன். ஒவ்வொருத்தருக்கா கற்பூர ஆரத்தி காட்டிட்டு வந்து, கடைசில என்கிட்ட வந்து காமிச்சாங்க. அப்ப ஒரு அம்மாவுக்கு சாமி வந்துருச்சடி...

பாடுங்கடி...எல்லாரும் வாய்விட்டு பாடுங்கடி நான் மனைல உக்காந்திருக்கேன். தெரியலையா...என்னை சுத்தி வந்து கும்மியடிங்கடி...அப்படின்னு கூச்சல் போட்டாங்க. எனக்கு பயமா போச்சு. கண்ணை இறுக்க மூடிகிட்டேன். ஓம்சக்தி, பராசக்தி மனசுக்குள்ளே சொல்லிட்டே இருந்தேன்.

என்னைச் சுத்தி மத்த மாமிங்க கும்மியடிக்கறாங்க. மண்டி போட்டு நமஸ்காரம் பண்ண, அந்த மாமி எழுந்திருக்கவே இல்லை. இன்னொரு மாமி தட்டு நிறைய அரளிப்பூ எடுத்து என் தலைல போட்டுட்டே இருக்காங்க. ஒரு பத்து நிமிஷம் கழிச்சிதான் எல்லாம் சரியாச்சு.

மாமி நிறைய பலகாரம் கொடுத்தாங்க. நிறைய பேர் ராதா, ராதான்னு சுத்திக்கிட்டாங்க. மாமி பையனைத் துணைக்கு அனுப்பி நம்ம வீட்டு வரைக்கும் கொண்டு வந்து விடச் சொன்னாங்க அந்தப் பையன் ரொம்ப பயந்துட்டாப்போல, பேசவே இல்லை. நம்ம வீட்டாண்ட விட்டுட்டு, வரேன்கன்னு ஓடியே போயிட்டான்.

அந்த வீடு எனக்குப் பிடிச்சுருக்கு. இயருங்க முன்ன மாதிரி ஜாதிபார்க்கறதில்லை. ரொம்ப அலட்டறதில்லை. நல்லவங்களா, கெட்டவங்களான்னு மட்டும் பார்க்கறாங்க. நான் சொல்றது சரிதானமா...''

''இல்லை, சரியில்லை. மஞ்சவெளிப் பொண்ணு மட்டும் வந்திருந்தா, உன் நிலைமையே வேற. அந்த நேரத்துல வேற கன்னிப் பொண்ணுக்கு எங்க போறது. உன்னை வார்த்தைல குளிப்பாட்டி உக்கார வச்சுட்டாங்க. நீ மாட்டேன்னா பூஜை தடைபடும்.

ஜாதி முக்கியமா, பூஜை முக்கியமான்னு பாத்திருப்பாங்க. பூஜைதான் முக்கியம்னு உன்னை உக்கார வச்சிருப்பாங்க.



இது தவிர எனக்கு இன்னொரு சந்தேகமும் இருக்கு.''

''என்ன சந்தேகம்...''

''யாராவது என்ன, பால்காரப் பொண்ணை உக்கார வச்சிட்டேன்னு முணு முணுத்திருப்பாங்க. இது சரியா மாமி, ரொம்ப ரொம்ப தப்பில்லையா மாமி, அப்படின்னு வேற யாரிட்டாவது காது கடிச்சிருப்பாங்க.

அந்த பேச்சு எல்லாத்தையும் சரிபண்ண, எவளாவது [illegible] மாமி, சாமியாட சொல்லிருப்பாங்க. எவ பேசினாளோ அவளையே கும்மியடிக்க வச்சிருப்பாங்க. அவங்க சாமர்த்தியமெல்லாம் நமக்கு வரவே வராது.

இதை சாமர்த்தியம்னு சொல்றதுக்கே நமக்கு ஆகாது இப்படி நம்ம வீட்டுல யாராவது செய்தா போடி [illegible]...அப்பமன்னு சொல்லிடுவோம். ஏதுக்கு பித்தலாட்டம்னு சத்துவோம் அதனால அந்த மாதிரி வீட்டுக்கு ரொம்ப ஆசைப்படாதே.

பூஜைக்கு போனே, மரியாதை பண்ணாங்க. மாலை போட்டாங்க. புடவை ரவிக்கை கொடுத்தாங்க. எல்லாம் சரி. பத்துலிட்டர் பாலுக்கு காசு கொடுக்கலைன்றதை மட்டும் ஞாபகம் வச்சுக்க.''

''கொடுத்தாங்கடி நான் வேணாம்னுட்டேன்.''

''அப்படி சொல்லு. அதனாலதான் புடவை ரவிக்கை வச்சிருக்காங்க. ஒரு லிட்டர் பால் பன்னெண்டு ரூபா பத்து லிட்டர் நூத்தி இருபது ரூபா. உனக்கு நூத்தம்பது ரூபா புடவை கொடுத்திருக்காங்க. ஆறுமணி நேரம் அசையாத உக்காந்திருக்கியே...அதுகூட கொடுக்கக் கூடாதா.''

''என்னக்கா அவங்களை தப்பாவே சொல்ற. அவங்க வீடு எல்லா விதத்துலயும் எனக்கு புடிச்சிருக்கு.''

''அத்தோட விடு ராதா. உனக்கும் எனக்கும் கடலைப் பருப்பு ஆள்தான் சரி.''

''சொல்றபோதே எனக்கு புடிக்கலைடி. தலையெல்லாம் மாவு தூசா ஒரு ஆள் பக்கத்துல வந்தா நல்லாவா இருக்கும். எத்தினி பெருக்கினாலும் வீடு சுத்தமாவாது. எனக்குப் பிடிக்கலைடி.''

''ராதா. ஜாக்கிரதை. பெரிய கனவு வளர்த்துக்கிட்டு மாட்டிக்காதே. ஏற்கனவே நீ ரெண்டுங்கெட்டான்.''

''அப்பா திட்டத் திட்ட எனக்கு கனவு தாண்டி வருது.''

''கடவுளே இவளைக் காப்பாத்து...'' விஜயா அக்காள் ராதாளைக் கட்டிக் கொண்டாள்.

நாடு முன்னேறி விட்டது என்கிறார்கள். பெண் விடுதலை என்று கோஷமிடுகிறார்கள். பெண்ட்டும் கிராப்புத் தலையுமாய் அழகான பெண்கள், அறிவான பெண்களாய் வலம் வருகிறார்கள். அதே சமயம் அக்காளைப்போல பெண்களும் இருக்கிறார்கள். கடலைப்பருப்பு பொண்ணு, நம்ம வீட்டுக்கு வந்து தொலையட்டும். வேண்டாங்கலை. இவ என் அந்த இடம் போகணும். எதுக்கு பொண்ணு கொடுத்து பொண்ணு வாங்கி ஒரு வியாபாரம் மாதிரி நடக்கணும்.

ரெண்டு கல்யாணத்தையும் ஒரே மேடைல நடத்தி ரெண்டும் திருப்தியில்லாத போயிடும்.

அக்கா கவலை அதுகூட இல்லை. ஒரு குப்பை வீட்டில் போய் எப்படி குடித்தனம் பண்ணுவது என்று கவலை. ஆனால் இந்த கிழக்கு தாம்பரத்திற்கு, ஆள்நடமாட்டமில்லாத புல் காட்டிற்கு யார் வருவார்கள். எவருக்கு இங்கிருந்து பெண் எடுக்கப் பிடிக்கும். எந்த வங்கி குமாஸ்தா இங்கு வந்து விருந்து சாப்பிடுவான். கடலைப்



புண்ணாக்கு ஆள்தான் இங்கு வருவான், அவனுக்குத்தான் இந்த இடம் பற்றி புரியும். அப்படி கடலைப் பருப்பு ஆள்தான் என்று முடிவாகி விட்டால் அக்கா என்ன செய்வாள். என்ன செய்யமுடியும்...'கடவுளே...கடவுளே' என்று புலம்புவதைத் தவிர ஓம் சக்தி, பராசக்தி என்று கூவுவதைவிட ஒரு அபலைப் பெண் என்ன தீர்வு காண முடியும்.

பெண்களுக்கு கடவுள் நம்பிக்கை அதிகமாகக் காரணமே இந்த கையாலாகத்தனம்தான்.

தன்னைக் கடவுளாக நினைத்து சுவாஸினி பூஜை செய்தவுடன் எத்தனை சந்தோஷம், எவ்வளவு பெரிய மனமலர்ச்சி.

உனக்கு நல்ல புருஷன் கிடைப்பான். என்று யாராவது ஆசீர்வதித்தால் எவ்வளவு குதூகலம். எத்தனை பெரிய நிம்மதி. ஒவ்வொரு கன்னிப் பெண்ணையும் இடைவிடாது இந்தப் பிரச்சினைதான் பயமுறுத்திக் கொண்டிருக்கிறது. இதுதான் கலவரம் கொடுத்துக் கொண்டிருக்கிறது.

விஜயா அதிகம் யோசித்தாள். பெண் என்பவளைப் பற்றி நிறைய சிந்தித்தாள்.

இதுக்கெல்லாம் முதல் விஷயம் நிறைய படிக்கணும். நிறைய படிக்கணும்னா நல்லா படிக்கணும். ஸ்கூல் [illegible] புரிஞ்சு படிக்கிறதைவிட பொட்டை [illegible] [illegible].

[illegible] பொண்ணுங்க படிக்கவே முடியலை. படிக்கவே முடியலைன்னாங்க. சென்னையூர்ல அந்தப் பிரச்சினையே இல்லை. தோணினது இருக்கற இடம். எந்தத் தொந்தரவும் இல்லை.

காலைல எழுந்து தோட்டத்தை சுத்தி வந்தா புத்தி ஃப்ரஷ்ஷாயிடுது. சாப்பாடு சாப்பிடக்கூடாது. பசும் பாலை கண்டக் காய்ச்சி அப்பப்ப குடிக்கணும்.

ஆப்பிளோ, ஆரஞ்சோ ஒன்னு நிதானமா சாப்பிடணும். பாலேடும் வெண்ணையும் கலந்து மூஞ்சில பூசிக்கணும். மறுநாள் சோறு சாப்பிடணும். அதுக்கு மறுநாள் வெறும் பால் குடிக்கணும். உடம்பு இதனால் லேசான சதைப்பிடிப்போடு இருக்கும். வயிறு கொஞ்சம் சரியாக இல்லையென்றால் இரவு ஏழு மணிக்கு விறுக் விறுக் கென்று நடக்க வேண்டும். உடம்பு களைத்த பிறகு பம்ப்செட்டில் குளிக்க வேண்டும்.

குழம்புச் சோறும், மீன் வறுவலும் சாப்பிட்டு விட்டு அயர்ந்து தூங்க வேண்டும். பத்து மணிக்கு எழுந்து உடம்பில் ஓடோமாஸ் தடவிக் கொண்டு, தலையை சுற்றி துணி போட்டுக் கொண்டு மாட்டுக் கொட்டகையில் உட்கார்ந்து படிக்க வேண்டும். ஆறெழு ட்யூப் லைட், பத்து மின்விசிறி, நாலா பக்கமும் கம்பியில்லா ஜன்னல் தரையில் ஈரம், மாட்டுக் கொட்டகை, ஏஸி ரூம் போல இருக்கும்.

மாடல் பரிட்சைகள் எல்லாவற்றையும் மிகத் தெளிவாய் விஜயா எழுதினாள். அண்ணன் பரதன் மூன்று பேனாக்கள் வாங்கிக் கொடுத்தான்.

எப்பல்லாம் எக்ஸாம் போறியோ அப்பல்லாம் நானே கொண்டு போய் பள்ளிக்கூடத்துல விடறேன் என்று சொன்னான். அவ்விதமே செய்தான். கடைசிப் பரீட்சை முடிந்து விஜயா நேரே வகுப்பு டீச்சரிடம் போனாள்.

''இந்த தடவை இந்தப் பள்ளிக்கூடத்துல ஸ்கூல் ஃபர்ஸ்ட் நான்தான்.''

உரக்க சொல்லிவிட்டு வந்தாள்.



அவள் வீட்டுக்குள் துள்ளி நுழைந்த போது வெள்ளை வேட்டி சட்டைகள் நாலைந்து பேர் உட்கார்ந்திருந்தார்கள்.

''இதான் சின்னப் பொண்ணா'' அவர்கள் கேட்டார்கள்.

''ஆமாம். இதான் சின்னப் பொண்ணு. இந்தா உள்ள போ.'' அப்பா அவளை உள்ளே துரத்தினார்.

அவள் நிதானமாக உள்ளே போனாள்.

''அந்தப் பேங்க் மாப்பிள்ளைடி.'' அக்கா ராதா அவளைப் பார்த்தவுடன் துள்ளி எழுந்திருந்தாள்.

''அவங்க இப்ப பொண் பார்க்க வரலை. நம்ம இடத்தைப் பார்க்க வந்திருக்காங்க. அந்தப் பையனை ஊட்டிக்கு மாத்திட்டாங்களாம். அங்க சாப்பாட்டுக்கு கஷ்டப்படுற மாதிரியாம். அதனால உடனே கல்யாணம் பண்ணணும்னு சொல்றாங்களாம். உன்னையும் பார்க்கணும்கறதுக்காகத்தான் உட்கார்ந்திருந்தாங்க.''

''ஏன் என்னைப் பார்க்கணும்.''

''சின்னப் பையனுக்கும் கல்யாணம் பண்ணிடணும்னு பார்க்கறாங்களாம்.''

''அத்தான்தான் ஏதோ சிக்கல் பண்றாப் போல இருக்கே.''

''அதெல்லாம் ஒரு சிக்கலும் இல்லைன்றாங்க.''

''சிக்கல் இருந்தா என்ன... இல்லாட்டி என்ன... நான் கல்யாணம் பண்ணிக்க மாட்டேன்,

''ரெண்டு பொண்ணுங்க வேணும்னு தேடறாங்கடி.''

''வேற எங்கனா போய் புடிச்சிக்கட்டும். நான் பி.ஏ. பண்ணப் போறேன். ரொம்ப தொந்தரவு பண்ணினா வீட்டை விட்டு ஓடிடுவேன்.''

''அப்படி பேசாத விஜயா,எனக்கு கல்யாணம் ஆகாத போயிடுச்சுன்னா.''

''நிச்சயமா ஆகும் கவலைப்படாதே ''

''ரெண்டு பொண்ணையுமே கொடுத்துடுவீங்களா'' வெளியே கேள்வி கேட்டார்கள்.

''நீங்க சரியானபடி சொன்னால் மேற்கொண்டு பேசலாம்.'' அப்பா பதில் சொன்னார்.

''அப்பா டக்குன்னு அப்படி பேசிடாதீங்க...மூத்த பொண்ணு கல்யாணத்துக்கு ரெடிங்க. ரெண்டாவது பொண்ணு படிச்சிட்டிருக்கு தேவையில்லாத தொந்தரவு பண்ண விரும்பவில்லை. ஒரேயிடத்துலதான் பொண்ணு பார்க்கணுமா. அப்படி எதுனா நியதியா. ஏன் அப்படீன்னு சொன்னா நல்லா இருக்கும்'' பரதன் பேசினான்.

''உங்க வீட்லயும் ரெண்டு பொண்ணு இருக்கு. எங்க வீட்லயும் ரெண்டு பசங்க இருக்காங்க. பேசினா என்ன.''

''உங்க ரெண்டாவது புள்ளை என்னா பண்றாரு.''

''நீங்க பொண்ணு தரீங்களா சொல்றோம்.''

''நீங்க சொல்லுங்க. நாங்க பொண்ணு தர்றதைப் பத்தி யோசிக்கிறோம்.''

''ரொம்ப டிமாண்டா பேசறீங்களே தம்பி.''

''டிமாண்டா பேசலைய்யா. ஒரு கல்யாணமே பேசி முடிக்கலை. இன்னொன்னுக்கு வார்த்தை விடறீங்களே'' பரதன் சுள்ளென்று சொன்னான்.

வந்த கூட்டம் அடிபட்டது போல் மௌனமாக இருந்தது

''ஒரு கல்யாண விஷயம் பேசற போது இத்தினி பதட்டமா பேசக்கூடாது.''



''அவன், வயசு பையம்பா. அவனுக்குத் தெரியலை. கூட்டத்தில் ஒருவர் சமாதானமாகப் பேசினார்.

''நான் ஒண்ணும் அறியாத பையன் இல்லீங்க. நாப்பது லட்ச ரூபா மாட்டுத் தொழுவத்த ஒரே ஆளா நடத்தறேன். நானூறு வாடிக்கைகாரனுக்கு பதில் சொல்றேன். எங்கப்பாதான் முடிவு செய்யறாரு. ஆனா என்னைக் கேட்காத செய்ய மாட்டாரு. பெரிய பையனைக் கூட்டிட்டு வாங்க. அவருக்கு பொண்ணு புடிச்சிருந்தா மேற்கொண்டு பேசலாம். இன்னொரு கல்யாணத்தை அப்புறம் பேசலாம்.''

''ஏன் சட்டுன்னு அறுத்தாப்போல பேசறீங்க.''

''நான் என்னாங்க அறுத்தேன். பையனை இட்டாங்க. பார்ப்போம்னுதானங்க சொன்னேன். நீங்க என்னமோ நான் கெடுதல் பண்ற மாதிரில்ல பேசறீங்க.''

''ரெண்டு பையனையும் கூட்டிட்டு வரோம். உங்க ரெண்டு பொண்ணையும் சிங்காரிச்சு வைங்க.''

''அப்படி ஒரு எண்ணம் எங்களுக்கு இல்லீங்களே.''

''எங்களுக்கு இருக்கு.''

''நீங்கதான் முடிவா. எங்க சௌகரியம் பார்க்கணுமில்ல...பொண்ணு படிக்குதுன்னு சொல்றேனில்ல...''

''அதான் ரெண்டு படிச்சிருக்கே. மேற்கொண்டு என்னத்துக்கு படிப்பு. என்ன படிச்சாலும் மாட்டுலேர்ந்து தானே பால் கறக்கணும்.''

''அது சரி. பேங்க்ல உத்தியோகம் பண்ற உங்க புள்ளை எதுல பால் கறக்கறாரு. எப்ப கறக்கறாரு. படிக்காத பேங்க்ல சேர்த்துக்கிட்டாங்களா. படிப்பே வேண்டாம்னா உத்தியோகமா.''

''தம்பி, ஏன் கடாமுடான்னு பேசறீங்க.''

''சரி பேசலை. பெரிய பையனை இட்டாங்க போதும்.''

''ஏன் தம்பி இப்படி அடிக்கிறமாதிரி பேசறே. சின்னப் பொண்ணுக்கு ஏதுனா சம்பந்தம் வச்சிருக்கீங்களா... இல்ல அதுவா ஏதுனா...''

''டேய்...நீ வயசாளின்னு பார்க்கறேன். ஒரு வீட்டுக்குள்ள நுழைஞ்சு, சட்டமா கால் மேல கால் போட்டுக்கினு தப்பா பேசறியே, கொழுப்புதானே. நீங்கள்லாம் இன்னிக்கு மட்டும்தான் வெள்ளைச் சட்டை போடுவீங்களா.மத்த நாள்ளாம் கோமணத்தோட அலைவீங்களா.. வந்துட்டானுங்க பேசறத்துக்கு.''

''டேய்...நீ என்னடா பேசறே...''

''நீ என்னடா பேசறே...''பரதன் எழுந்து பதிலுக்குக் கத்தினான்,

''சின்னப் பொண்ணைக் கொடு...சின்னப் பொண்ணைக் கொடுன்னா என்ன அர்த்தம். பெரிய பொண்ணைப் பார்த்தீங்களா...பேசி முடிச்சீங்களா...சின்னப் பொண்ணு இல்லேன்னவுடன் தாக்கு மேல பல்லு போட்டு பொண்ணைத் தப்பா பேசறியே. உங்க வூட்டுப் பொண்ணை பத்திப் பேச எவ்வளவு நேரமாவும். நல்லா குடித்தனம் பண்ணவன் பொண்ணுங்களைப் பத்தி தப்பா பேசுவானா. அயோக்கியன்தான் அசிங்கமா பேசுவான்.''

''அவரு பேசினது தப்பு தம்பி. மன்னிச்சிடு'' பிள்ளைக்கு மாமன் என்பவர் எழுந்தார்.

''இவனை ஏன்யா கூட்டிட்டு வந்தீங்க.'' பேசியவர் கடிந்து கொண்டார்.

''அவரு பேசினது தப்புதான் தம்பி, ஆனாபொண்ணு வீட்டுக்காரங்க வாடா போடான்னு அத்தனை தடிமனா பேசக்கூடாது.''



''எங்களுக்கு பேங்க் புள்ளை வேணாம்னு சொல்லுங்க புரியுது. கடலைப் புண்ணாக்கு முதலியார்தான் வேணும்னு சொல்லுங்க புரியுது. நீ வெள்ளைச் சட்டையா, கோவணமான்னாம் வேகமா பேசறியே...உன்னைய நீதானே கோமணம்.

மாட்டுப் பண்ணை வச்சிருந்தா என்ன...பொண்ணு லட்சணமா இருந்தா கட்டிக்கலாம்னுதான் வந்தோம். உன்பேச்சு சரியில்லை தம்பி.''

''எப்படிய்யா சரியா இருக்கும்'' வந்தவரில் அடுத்தவர் எகிறி நின்றார். ''மாட்டோடப் பழகி பழகி மாடு புத்திதான் இருக்கும். ஆம்பளைன்னுதான் பேசுவான்.''

அப்பா இதுகேட்டு கோபமாக எழுந்தார்.

''யாதவனாடா நீ...பசு வளர்க்கறதைக் கேவலமா பேசறியே. உண்மையிலேயே யாதவனா நீ...கிருஷ்ண பரம்பரையா. நீ என்ன தலைமுறை தலைமுறையா ஆபீஸ்லயே வேலை பார்க்கறியா...அப்படியே வேலை செய்தாலும் பசுதானடா தெய்வம். நீயே நம்ம குலத்தை மதிக்கலேன்னா, மத்தவன் எப்படிடா மதிப்பான்.''

''விட்டுடு. இந்தப் பேச்சும் தப்பு. நான் வேகமான ஆளுங்களைக் கூட்டிட்டு வந்துட்டேன். உன் பையனும் சிதாணமா பேசலை. இதுசரி வரலை. ஏன் சண்டை போடணும். சம்பந்தம் பண்ணாதபோது ஏன் சண்டை வரணும். இவங்க பேசினது தப்பு. சர்க்கரை போட்டு ஒரு டம்ளர் பசும்பால் கொடு. நான் மனசு சமாதானமாகிப் போறேன்.''

அம்மா, அவர்கள் எல்லோருக்கும் நிதிப்பாய் பால் கொடுத்தாள்.

அவர்கள் குடித்துவிட்டு எழுந்தார்கள்.

''ஐயா உங்க பொண்ணு நல்லபடியா வாழ்க்கைப் பட்டு சந்தோஷமா இருக்கணும். ஒரு குறையுமில்லாம குடித்தனம் பண்ணணும். மொத்த ஜனத்தொகைல நாம மூணு பர்ஸெண்ட் இதுல சண்டை போட்டுக்க என்ன இருக்கு முதலியாரண்ட சம்பந்தம் பேசறாங்களே... நாமபோய் நம்ம பையனுக்கு சம்பந்தம் பேசலாமே...அப்படின்னு நினைச்சுதான் வந்தேன்.

அந்தக் கடலைப்பருப்பு ஆளுங்கதான் விலாசம் கொடுத்து சொல்லியனுப்பிச்சாங்க. ரொம்ப வசதியான இடம். ரொம்ப நல்ல குடும்பம். அப்படீன்னு பாராட்டினாங்க. எல்லாம் சரிதான். இருந்தாலும் பேச்சு என்னமோ சறுக்கி விட்ருச்சு. நாங்க வர்றோம்.''

அவர்கள் வெளியே போனதும். அக்கா முகம் பொத்திக்கொண்டு அழுதாள். அவளைப் பார்க்க மிகப் பரிதாபமாக இருந்தது.

''என்னடி...என்ன ஆயிப்போச்சுன்னு இப்படி அழுவறே. இவன் இல்லாட்டி இன்னொருத்தன். என்னவோ பொறந்ததிலேர்ந்து அவன்தான் புருஷன்னு இருந்தா மாதிரியும், இப்ப கூடாதுன்ட்ட மாதிரியுமில்ல அழுவறா.''

''எனக்கு கடலைப்பருப்பு மில்லு பையன் வேணாம்'' அவள் அழுகையினூடே கத்தினாள்

''அடியே...அவன் உனக்கு யார் பார்த்தது.''

''அண்ணன் பார்க்கறான்.''

''உனக்காகத்தானே.''

''அவனுக்கு. அவனுக்கு பாக்கறதால என்னைப் புடிச்ச மாட்டறான்.''

''என்னாடி சொல்றே.''



''புழுவேரிலேர்ந்து போன் வருது. வந்து கேட்டா மாட்டேன்னு சொல்ல முடியாது. அவங்க வரபடி வரட்டும். நான் பாத்துக்கறேன்னு அண்ணன் சொல்லிட்டான்.''

''வெடுக் வெடுக்குன்னு பேசி கலைச்சுட்டான். அப்பாவுக்கும் தெரியாத நடத்தறான். அவன் வேணா போட்டும் அந்த வீட்டுக்கு நான் போகமாட்டேன். இந்த மாப்பிள்ளையில்லேன்னா எனக்கு எந்த மாப்பிள்ளையும் வேணாம்.''

அக்கா அழுகையினூடே திக்கித் திக்கி பேசினாள்.

''அடியே... அப்படியெல்லாம் பேசாதடி'' அம்மா அவளைக் கொஞ்சிக் கொண்டிருந்தாள்.

''பத்து இடம் பார்த்தா ரெண்டு இடம் தகையும் அதுல ஒரு இடம் பேசி முடிக்க வேண்டிதான் வரும்.. பேசி முடிச்சதும் இதோ அதோன்னு கல்யாணம் நடந்துடும். கல்யாணம் முடிஞ்சதும் வந்தவனையும் தெரியாது. போனவனையும் தெரியாது. எல்லாம் மனசிலேர்ந்து காணாமா போயிடும்.''

''குடித்தனம் பண்ணி, குழந்தை பெத்து புருஷன் வீட்டோட [illegible] நடத்திட்டியானா எங்களையே [illegible] போயிடும் அந்தநேரம் எவனாச்சும் வந்து நான் உன்னைப் பொண்ணு பார்த்தேனே...அப்படீன்னு ஏதாவது பேசினா... அட போடா மூதேவி அப்படீன்னு தான் சொல்லத் தோணும்.''

நான் சொன்னது புரியுதாம். கொஞ்சம் வருத்தமாத் தான் இருக்கும் இல்லேன்னு சொல்லலை போய் மாட்டுக் [illegible] அம்மா தேய்ச்சு அலம்பி விடு. மனசு, கொட்டிப்போனா [illegible] சுத்தமாயிடும். இவன் போனா போயிட்டுப் போறான்.''

அம்மா ஹாலில் உள்ள அப்பாவுக்கு தெரியாதவாறு உபதேசம் செய்தாள்.

''இவன் போயிட்டு போறான். ஆனா எனக்கும் கடலைப் பருப்பு மில்லு பையன் வேணாம்.''

''நீ யாருடி, வேணும் வேணாம்னு சொல்றது.''

''அவன் அழுக்கு. எனக்கு வேணாம்.''

''நீ அடிபடப்போற.''

''என்னால நாள் பூரா வீடு பெருக்கிட்டிருக்க முடியாது. அகல வாழ முடியாது.''

''ஏன். இங்க சாணிலதான இருக்க. மூத்திர நாத்தத்துல தான கிடக்கிற தொழில்ல என்னாடி கேவலம். நல்ல மனுஷாளா, நியாயமா நடக்கறாங்களா. அதான பார்க்கணும்.''

''அண்ணன் ஏமாத்திட்டாம்மா. நான் இனிமே எந்த கல்யாணத்துக்கும் ஒத்துக்க மாட்டேன்.''

''வந்தவங்க பேசினது நல்லாவா இருந்தது.''

''வயசானி ஆம்பிளைங்களே அதிரலா பேசும் போது வீட்டு பொம்பளை என்னெல்லாம் ஆடுவா. சின்னவனுக்கு சம்பந்தம் பேசிட்டாங்களான்னு கேக்கறானே... திமிருதானே அது. உங்கப்பாவுக்கு வலுவு குறைஞ்சு போச்சு. இல்லன்னா இழுத்துப் போட்டு மிதிச்சிருப்பாங்க.''

''இன்னொரு புள்ளைக்கு நம்ம வீட்டு பொண்ணையே கேக்கறாங்க. அதுல என்ன தப்பு.',

வாசற்படியில் நின்று, எல்லாம் கேட்டுக் கொண்டிருந்த அண்ணன், சட்டென்று உள்ளே வந்தான்.

''அந்த ரெண்டாவது பையன் சரியில்லை. கடையில வேலை செய்யற தெலுங்கு ஐயர் பொண்ணோட கனெக்



ஷன் வச்சுட்டிருக்கான். பொய் கணக்கு காட்டறான். அவனை சரி பண்றதுக்கு பொண்ணு தேடறாங்க. அதுக்கு நம்ம வீட்டு பொண்ணுதானா கிடைச்சுது.

அதையும் தவிர, விஜயா நல்லா படிக்கிறதா அவங்க பள்ளிக்கூடத்து டீச்சர் சொன்னாங்க. அவ படிப்பை நிறுத்திடாதீங்க. அவ பி.ஏ. படிக்கணும்னு ஆசைப்படறா. தொல்லையா இருந்தாலும் படிக்க வைங்க அப்படீன்னு சொல்லிட்டு போனாங்க.

நீ எதுக்கு அழுவறே. பேங்க் மாப்பிள்ளை இல்லேன்னா...புதுச்சேரி மாப்பிள்ளை வேணாம்னா...உனக்கு சொர்ணவேலுவை தெரியலை. அந்தக் குடும்பத்தைப் பத்தி தெரியலை. அப்பா ஏதோ தூசு தூசுன்னு சொல்றது நீயும், தூசு தூசுன்றே. எல்லாருமே டை கட்டிட்டு பேங்க போனா மத்த வேலையை யாரு பாக்கறது.

நான் ஏதோ சூழ்ச்சி பண்றேன்னு நினைக்கறியா... அந்த முதலியார் பொண்ணை லவ் பண்றேன்னு நினைக்கறியா. நம்ம வீட்டு [illegible] மேல ஆணை...அங்கித்து [illegible] நான் பேசினதே இல்லை. அந்த பொண்ணுங்களோட நான் பேசினதே இல்லை. அந்த பொண்ணுங்களும் அந்த மாதிரி டைப்பே இல்லை.

அம்மா, அவர் வெயில்ல நிக்கறாரும்மா, உன்ன வரச் சொன்னும்மான்னு [illegible] பேசும். அண்ணா [illegible]

[illegible]

தோல் எடுத்துட்டு வரான். அவனைப் பார் அப்புறம் பேசு.

நான் ஜீன்ஸ் பேண்ட்டும் கதர்சட்டையுமா வெளிய போறேனே...எவனாவது என்னை மாட்டுக்காரன்னு வானா. பேங்க் ஆள் மாதிரி, உடுத்திக்கறது கஷ்டமா. பால்காரன்னா கேவலமா. பால்காரன் கேவலம் இல்லைன்னா, பருப்பு மில்லுக்காரனும் கேவலமில்லை.

உனக்கு நல்லதுதான் செய்வாங்க ராதா. நீயா ஏதாவது கற்பனை பண்ணிக்கிட்டு அழுவாதே.''

ஆனால் அக்கா அவன் பேச்சைக் கேட்கவேயில்லை.

விஜயா கவலையானாள்.

ஆனால் மாப்பிள்ளை, வண்டியின் முன்பக்கம் உட்கார்ந்து வரவில்லை, வண்டியில் மூட்டைகளுக்கு நடுவில் உட்கார்ந்து வந்தார். குதித்து இறங்கி வேட்டியை அவிழ்த்து உதறி கட்டிக் கொண்டார்.

''திடீர்னு அப்பாவும் அம்மாவும் வரேன்னுட்டாங்க. சேலையூர் பார்க்கணும் பரதன் வூட்டுக்கு போவணும். அங்கேருந்து நாடி கேக்கறதுக்கு ரமணி குருஜிங்கறவர் வீட்டுக்கு போகணும். ஏதோ காக்க புஜங்கர் நாடியாமே பொண்ணு கல்யாணம் நல்லபடியா நடக்குமான்னு கேக்கணுமாம் வராதேன்னு நான் எப்படி சொல்றது சரி வான்னுட்டேன்.

பெரியங்க ரெண்டையும் முன்னால உக்கார வச்சு நான் மூட்டைமேல ஏறிட்டேன். ஒருகார் வச்சகம்பீரமா வந்திருக்கலாம்...எதுக்கு முன்னூத்தம்பது ருபா செலவு. நீங்க ஒண்ணும் தப்பா நினைச்சுக்க மாட்டீங்கன்னு. இப்படியே வந்துட்டேன்.''

''அட...வா சொர்ணவேலு'' அண்ணன் பரதன்



அவனை ஆரத்தழுவிக் கொண்டு, உள்ளே கூட்டி வந்தான்.

''சோபாவெல்லாம் அப்படியே இருக்கட்டும். அதைப் போய் என் அழுக்கு பண்ணணும். கொல்லைப்பக்கம் தொழுக்கானம் போடு. மாடு கன்னுங்களையும் பார்த்துக்கிட்டே பேசலாம்.''

அவர்கள் தொழுவம் பார்க்கும் ஆவலோடு உள்ளே நுழைந்தார்கள்.

''அப்பா, சிந்திப்பசு இருக்குப்பா. இப்பதான் முதமுதல்ல சிந்திப்பசுவைப் பார்க்கிறேன்.''

''ஜீர் பசு இருக்குன்னு சொன்னியேப்பா...அது எங்க இருக்கு...காட்டு. ஜெர்ஸி பசுகாமி. இதானா...இதான் ஜெர்ஸியா.''

''அப்பா, இது இங்லிஷ் பசுப்பா. பத்து லிட்டர் பால் தருமாம். எப்படி இணைப் படுத்துவீங்க. நம்மனூர் [illegible].''

''அட...அடடா...'' தொழுவம் எத்தினி அம்சமா வச்சிட்டிருக்கோம். [illegible] மாடு வாங்கவே [illegible] ஏமாந்துட்டோம். [illegible] அடுத்த [illegible] உதைக் [illegible] செத்துப் போச்சு [illegible] என் [illegible]

[illegible] அதுக்குப்போய் இத்தினி ஏமாத்து வேலையா...அப்படின்னு வெறுத்துப்போய் ஜான்தி அதுல இறக்கறதில்லை. நாம ரெண்டு பொண்ணுங்களுக்கும் தொழுவத்தைப் பெரிசு பண்ணணும்னு ரொம்ப

ஆசை. நாங்க ஆள்போட்டு பார்த்துக்கறோம் அப்ப மன்னு சொல்றாங்க.

நாளைக்குக் கல்யாணம் ஆகிபோற பசங்க...இதுங் களை நம்பி, கறவை மாடுவாங்க முடியுமா. நீ சமைக்க கத்துக்க தாயேன்னு அடக்கி வச்சுட்டோம். அதுங்களுக் கும் புரிஞ்சு போச்சு.''

அப்பாவும், பின்னையும் உற்றுப் பார்க்க, அண்ணன் பரதன் அவர்களுக்கு சுழிகள் பற்றி சொல்லிக் கொடுத் தான்.

''இது லட்சுமி சுழி. இது கோபுர சுழி. இது தாம ரைச்சுழி.

லட்சுமி சுழி, கழுத்துப்பக்கம் இருக்கும். நெத்தி நடுவுல, கொண்டைல. எதிர நின்னு பார்த்தா தெரியும்படி இருக்கறது கோபுரச் சுழி.

தாமரைச் சுழி, கழுத்துக்கு அடிபாகத்துல இருக்கும். ரெண்டு மூன் காதுக்கு நடுவுல இருக்கும்.

இங்க வாங்க. இது கொம்புத்தானா சுழி. இது கொம்புக்குக் கீழ இருக்கும். இங்க எல்லாமே, நல்ல சுழிங்க. கொஞ்சம் நாங்க மாடு பார்த்து வாங்குவோம். ரொம்ப சகுனம் பார்ப்போம். கயிறு புடிச்சு இழுத்தா நம்மகூட வரணும். மூரண்டு புடிச்சு பின்னால போச் சுன்னா, என்ன சுழியா இருந்தாலும் என்ன ஜாதியா இருந்தாலும் வாங்கமாட்டோம்.

இந்த கொம்புத்தானா சுழிமாடு இருக்கே...முளையப் பிடுங்குக்கிட்டு அம்பாகிட்ட வந்து நின்னது.கிட்டத்தட்ட நூறு கஜம் நடந்து வந்தது.

அப்பா மாட்டை தடவிக் கொடுத்தார். சொந்தக் காரன் பின்னாடியே ஓடிவந்தான். அப்பா விலை சொல்லுன்னார்.



அஞ்சாயிரம் ரூபா மாட்டை பன்னெண்டாயிரம் சொன்னான். அப்பா பத்தாயிரம் பேசினார்.

இத்தப்பசு உள்ளே வந்து என்ன ஆட்டம் போட்டுது தெரியுமா.

அப்படியே பொறந்த வீட்டுக்கு வந்த பொம்பளை மாதிரி இங்கன ஓடறதும், அங்கன ஓடுறதும் ரெண்டுநாள் ஒரே ஆட்டம்தான் போயேன்.

பசு பால் கறக்கலை. சினையா இருக்குது. நல்லா தீனி போட்டு, தினம் குளிப்பாட்டி ஜாலியா வளர்த் தோம். இது வந்த நாளிலேர்ந்து எந்த பசுவுக்கும் நோய் நொடியே இல்லை.

ராஜலெக்ஷ்மின்னு கூப்பிடுங்க. திரும்பிப் பார்க்கும்.''

டிபன், காபி, தண்ணி எல்லாமே தொழுவத்திற்கு வந்தது.

ராதா சமையலறையை விட்டு நகர மறுத்தாள். விஜயாதான் வாங்க வாங்க என்று கை கூப்பி கூப்பிட் டாள்.

''இலக்கனா தங்கச்சி'' சொர்ணவேலு இளைத்தான்.

''இது ரெண்டாவது. பிளஸ் டூ படிக்கிறா.''

''அதான் பார்த்தேன், குழந்தை முகமா இருக்கே. இப்ப என்ன கல்யாணம்னு நினைச்சேன். இலங்க சித்தாதி வெளியூர் போயிருக்காங்களா.''

''சொர்ணவேலு, காட்டதேம்பா. நீ பசுவைப் பார்க்க சொக்கிலே, பொண்ணும் பார்க்கணும்னா எப்படி... முதல்ல வீட்டுக்குள்ள வந்து உக்காரு.''

''வேணாம் ராதா. தங்கச்சிய இட்டாந்துரேன். பசு மாடு இருக்கிற இடம் எல்லாத்துக்கும் உத்தமம் இல்லையா.''

"டேய், ராதாகிட்ட வெத்தலை பாக்கு கொடுத்தனுப்பு" அப்பா கட்டளையிட்டார்.

ராதா தட்டோடு தொழுவத்திற்கு போனாள்.

முதலியாரும், முதலியார் மனைவியும் வெற்றிலைப் பாக்கு எடுத்துக்கொள்ள, சொர்ணவேலு பாக்கு மட்டும் எடுத்துக் கொண்டான்.

"வணக்கங்க." என்று அக்காளை பார்த்து சொன்னான். பதிலுக்கு அக்கா சொல்லவில்லை. முகம் திருப்பிக் கொண்டாள்.

"வணக்கங்க. எம்பேர் சொர்ணவேலு."

அப்போதும் அவள் அசையவில்லை.

நேற்றைய ஏமாற்றத்தின் தாக்கம் அவளிடமிருந்து போகவில்லை.

"அவங்க வணக்கம் சொல்றாங்க இல்ல" அப்பா அதட்டினார்.

அவள் அப்பாவுக்கும் பதில் சொல்லாமல் விடுவிடுவென்று வீட்டிற்குள் ஓடினாள்.

அந்த காட்சி மிக மோசமானதாக இருந்தது.

வணக்கத்திற்கு பதில் வணக்கம் சொல்லாமல் இருப்பது கேவலமான குணம். மிக மிக அசிங்கம். நாகரீகமே இல்லாத ஆபாசம். இப்படி, ஒருவரை மறுதலிக்கக்கூடாது. சம்பந்தப்பட்டவர் கோபித்துக்கொண்டால், என்ன பதில் சொன்னாலும் ஆறாது.

விஜயா, கவலையோடு அக்காளையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

"நாங்க பசுக்களுக்கு புல்லும் வளர்க்கறோம் சொர்ணவேலு. பசுவைக் கழுவி விடற ஜலத்தை காம்பவுண்ட்



கோடி வரைக்கும் எடுத்துட்டு போயிடறோம். கொஞ்ச தூரம் வரைக்கும் காய்கறி போட்டிருக்கோம். அப்புறம் வெளியா புல்லுதான். இது எருமைப் புல்லுன்னு சொல்லுவாங்க. வெளியா புல்லு நாங்க பயிர் செய்யறோம். எருமைப் புல்லு தானே வளரும். எருமைப் புல்லுக்கு நீர் புல்லுன்னும் பேரு.

அந்தப் பக்கம் கொஞ்சம் ரோஸ்ட்புல்லு போட்டிருக்கோம். எல்லாம் மாடுகளுக்குதான்.

டெலிவரி ஆள் இல்லாத பன்னெண்டு பேர் வேலை செய்றாங்க. ரெண்டு பையங்க. நாலு பொம்பளைங்க. ஆறு பெரியாளுங்க. வேலை சரியா இருக்கும்." பரதன் விளக்கிச் சொன்னான்.

"எப்பா...இதுக்கு நடுவுல தவிடு வியாபாரம் வேற பண்ணணும்கறியே, முடியுமா" சொர்ணவேலு கேட்டான்.

"உழைக்கணும் சொர்ணவேலு. எங்கப்பா உழைக்கலை...சித்தா ரிப்போட்டைலேர்ந்து வெறும் கரம்பா இருக்கற சென்னைக்கு வரல. ஒரு வத்திப்பெட்டி வாங்கறதுக்கு மூணு கிலோ மீட்டர் நடந்து போகணும். இன்னைக்கு [illegible] பட்டணம் மாதிரி ஆயிடுச்சு. இன்னும் பத்து வருஷம் கழிச்சு பாரு. ஜனம் தெரியும்."

"எனக்கு இந்த இடம் புடிச்சிருக்கு, பரதா. நீ [illegible], இந்த வீடு, இந்தத் தொழுவம் எல்லாம் புடிச்சிருக்கு. ஆனா உன் தங்கச்சிக்கு என்னைப் புடிக்கலைப் போல இருக்கே. தவிட்டு ஆம்பளைன்னு நினைக்கறா போல இருக்கே."

"அதை விடு. அதை நான் பாத்துக்கறேன்."

"முரட்டுத்தனம் காட்டாத பரதா. புடிக்காத பொண்ணோட குடித்தனம் பண்றது ரொம்ப கஷ்டம்.

பேசாத என் பெரிய தங்கச்சிய கட்டிக்க. அவ கண்டேன், கண்டேன்னு உன்ன பூந்துருவா. இங்கேயே அடுப்பு மூட்டி சமைக்க ஆரம்பிச்சிடுவா.

''வகை வகையா எத்தினி மாடுங்க. பார்த்துக்கிட்டே இருக்கலாம் போல இருக்கு. உன் கல்யாணத்தை முடிச்சுக்க, பரதா.''

''அப்பா, அம்மா லாரில போகட்டும். நான் உனக்கு என் தவிடு வியாபாரம் பத்தி சொல்றேன். இதுல காம்ப் படிஷனே இல்லை சொர்ணம். சிடில சந்துசந்தா நிறைய பேர் மாடு வச்சிட்டிருக்கான். வெளிப்பார்வைக்கு தெரியலை.

சின்ன இடத்துல நாப்பது மாடு வச்சிட்டிருக்கான். மாடுங்க உக்காரக்கூட முடியாது. அவ்வளவு நெரிசல். காலாற மாடுங்க நடக்கறதே இல்லை. ஆனா, கம்பு, புண்ணாக்கு, கோதுமைத் தவிடு எல்லாம் மூட்டை மூட்டையா வாங்கறான்.

தவிடும் கம்பும் நல்லா அழியும். உளுந்துத் தோலும் போவும். கடலைப் புண்ணாக்கு தங்கம்.''

அவர்கள் விடைபெற்று வெளியேறினார்கள்.

அப்பா, சமையலறைக்கு வந்து அக்காவை முறைத்துப் பார்த்தார்.

''என்னாடி...ஆட்டங் காட்டறியா. நீ கல்யாணங் கட்டு. இல்ல கட்டாத காணாத ஒழிஞ்சுபோ. வணக்கம் சொன்னா, பதிலுக்கு வணக்கம் சொல்ல வேண்டாம். அதென்னாடி அத்தினி அழும்பு.''

அப்பா கெட்ட வார்த்தைகள் கலந்து கத்தினார்.

அக்கா அதற்கு முறைத்துப் பார்த்தாள்.



''என்னாடி முறைக்கிறே. அந்த பேங்க் மாப்பிள்ளை பின்னாடி போய் கட்டிவைக்கறியா... முடியாது. உன் கல்யாணம் உன் இஷ்டம் இல்லை. என் இஷ்டம். நீ என் இஷ்டத்துக்குத்தான் பொறந்தே. என் இஷ்டத்துக்குத்தான் வளர்ந்தே. என் இஷ்டப்படிதான் உன் கல்யாணமும் நடக்கும்.

இதுக்கு சம்மதிச்சா இரு. இல்லைன்னா நீ வெளிய போலாம் எனக்கு, ரெண்டுல ஒரு பொண்ணு செத்துட்டான்னு நினைச்சுக்கறேன்.''

அக்கா கையிலுள்ள பாத்திரத்தை 'ணங்'கென்று கீழே வைத்துவிட்டு, சமையலறையை விட்டு வெளியே வந்தாள். ஹால் நோக்கி நடந்தாள்.

அப்பா, நாலே எட்டில் அவளை தலைமயிரைப் பிடித்தார்.

''எங்கடி போற நாயே.''

''நான் சாவறத்துக்கு போறேன்... விடு என்னை''

அக்கா கத்தினாள்.

''சாவதானே போறே... சாவு... சாவு...'' அப்பா அடிக்க, அக்கா அலற வீடு ரணகளமாயிற்று. தடுத்த அம்மாவுக்கும் இரண்டு அறை விழுந்தது.

யார் தவறு. எது தவறு. என்ன நடக்கிறது இங்கே விசுவாவின் முதிர்ச்சியில்லாத புத்தி அவஸ்தைப்பட்டது.

மகளை இம்சிக்கிற அப்பாவின் மீது கோபம் வந்தது. அம்மாவின் தந்திரத்தின் மீது ஆத்திரம் வந்தது. ஏன் பெண்களின் வாழ்க்கை இப்படி இருக்கிறது என்று அரற்றினான்.

பசங்களுக்கு நடுவே போய் உட்கார்ந்து அழத் துவங்கினான்.

அண்ணன் விடு வந்தான். அப்பாவைக் கோபித்துக் கொண்டான்.

"காட்டுமிராண்டியாப்பா நீ. ஏன், பொட்டைப் புள்ளையை கை நீட்டி அடிக்கிற. அப்படி என்ன ஆத்திரம் உனக்கு.

நீ சொல்ற ஆளை அவ கட்டிக்க வேண்டிய அவசியம் இல்லைப்பா. அவளுக்கும் புடிச்சிருக்கணும். அது முக்கியம்."

சொர்ணவேலு நம்ம வீட்ல எல்லாரையும் புடிச்சிருக்கின்றான், விஜயாவுக்கு என்னைப் புடிக்கலைன்னா பரவாயில்லை. என் தங்கச்சிய நீ கட்டிக்கன்றான் ரெண்டு நாளில அவங்க ரெண்டு தங்கச்சியும் இங்க வராங்க. ரெண்டு நாள் தங்கறமாதிரி வராங்க மாடுங்களைப்பத்தி தெரிஞ்சிக்க வராங்க. அவங்க எதிர்க்கயும் கெட்ட வார்த்தை பேசுவியா. பொண்ணைப் புரட்டி புரட்டி அடிப்பியா. சரியான காட்டான்பா நீ. போய் சாவுன்னு சொல்ல நீ யார். உனக்கு என்ன உரிமை.

போ...போய்...நான் செய்தது தப்புமான்னு சொல்லு அவக்கிட்ட..." அண்ணன் அதட்ட அப்பா மன்னிப்பு கேட்டார்.

இரண்டு நாள் பொறுத்து சொர்ணவேலிடமிருந்து போன் வந்தது. அவர் தங்கைகள் லாரியில் தவிடு மூட்டைகளோடு வருகிறார்களாம். வந்தவுடன் வந்து சேர்ந்தார்கள் என்று ஒரு போன் பண்ண வேண்டுமாம்.

சொர்ணவேலு, பரதனிடம் சொன்னான். ராதாவிடம் பேச வேண்டும் என்று ஆசைப்பட்டான்.

ராதா போனை வாங்கி, "ஹலோ" என்று சொன்னாள்.



"அம்மாடி...எங்க வீட்டுப் பொண்ணுங்க கொஞ்சம் ஜாலியான டைப். நாங்க பெரிசா ஒண்ணும் கண்டிக்கிறதில்லை. கொஞ்சம் செல்லம் கொடுத்துதான் வளர்த்துருக்கோம். ஏதாவது கலாட்டாவா பேசினாம மனசுல வச்சுக்காதே."

தங்கைகள் வந்திறங்கினார்கள்.

ஒவ்வொரு பசுவின் முன்பும் விழுந்து வணங்கினார்கள்.

அக்கா ராதா அவர்களை மதிக்கவில்லை. அவர்களோடு பேசவில்லை. அவர்களும் அதுபற்றி அலட்டிக் கொள்ளவில்லை. அவர்கள் அண்ணனைக் குறிவைத்தார்கள்.

"ஐய்யோ...எப்படி பயமில்லாம மாட்டை வளைச்சு புடிக்கிறார் பாருடி."

"ஏங்க, உங்க கால்ல சேத்துப் புண்ணே வராதா..."

"இது தானா வளர்ந்த புள்ளா...நாம வளர்க்கற புள்ளா..." தெரிந்து கொண்டே நிறைய விஷயங்கள் கேட்டார்கள். அண்ணனும் அலுக்காமல் பதில் சொன்னான். அம்மாவைப் பார்த்து பயப்படுவது போல் நடித்தார்கள்.

ஆனால் இந்த சாமர்த்தியமெல்லாம் சேலையூர் [illegible] தெரியாது. அண்ணனுக்கு இந்த சாமர்த்தியம்தான் மிகவும் பிடித்து விட்டது.

"நல்லா பேசறாங்க...நல்லா பழகறாங்க." என்று இந்த சாமர்த்தியத்தையே குறிப்பிட்டுக் கொண்டிருந்தான்.

"உங்கள்ல யாரு எங்கண்ணனை கட்டிக்கப் போறது..." வேண்டுமென்றே விஜயா டக்கென்று ஒரு கேள்வியை அவர்கள் முன்பு கேட்டாள்.

அவர்கள் அதிர்ந்து போனார்கள்.

பெரியவன் ஏதோ பேச வாயெடுக்க சின்னவன் சட்டென்று கையமர்த்தினான்.

''எங்கப்பாம்மா என்ன சொல்றாங்களோ அப்படி செய்வோம்...''

விஜயாவின் துடுக்கான கேள்வியை சாதாரணமாக அந்தப்பெண் உடைத்துப் போட்டாள்.

''உங்கக்கா யாரைக் கல்யாணம் பண்ணிக்கப் போவுது... வேணாம்னு போன பேங்க் ஆளையா... அவரையே மனசுல நினைச்சிருந்தா கல்யாணம் ஆயிடுமா. வேணா எங்ககிட்ட சொல்லு. நாங்க ரெண்டாத்தடவை வரவழைக்கிறோம். அந்தப் பொண்ணு ஆசைப்பட்டுடுச்சு...அப்படீன்னு நாங்க போய் சொல்றோம்.'' அவர்கள் கேலி செய்தார்கள்.

இந்த கேலிக்கு பதில் சொல்ல முடியவில்லை. இந்த வீட்டின் ஒவ்வொரு விஷயமும் புழுவேரிக்கு போய்க் கொண்டிருக்கிறது எங்கோ தாம்பரத்தில் உட்கார்ந்து டெலிபோனில் அண்ணன் எல்லாக் கதையும் வெட்கங் கெட்டு சொல்லிக் கொண்டிருக்கிறான்.

இந்தப் பெண்களிடம் காதல் பேச்சு பேசுவதற்கு பதிலாய் இந்த வீட்டின் அவலங்களைக் காட்டிக் கொடுத்துக் கொண்டிருக்கிறான். அண்ணனுக்கு இந்தப் பெண் வேண்டும். தன்னை ஆஹா, ஓஹோ என்று புகழ்கிறவள் அண்மை வேண்டும் அதற்காக தங்கையைக் காவு கொடுக்கிறான். ஏதுமறியாத ராதாவை பலியாக்குகிறான்.

பொம்பளைக்கு எதுக்கு அபிப்ராயம். நாங்க சொல்ற ஆளைக் கட்டிக்க போதும் என்று எகிறுகிறான். அதை நைச்சியமாகவும் செய்கிறான். அண்ணனுக்கு இந்த நைச்சியம் புழுவேரி வீடு சொல்லித் தந்திருக்க வேண்டும்.



சண்டை போடாத சாமர்த்தியமா பேசி முடி என்று அவர்களால் உபதேசிக்கப்பட்டிருக்க வேண்டும்.

அக்கா அசட்டு முறைத்து அடிபடுகிறாள். சுதந்திரமாக நடந்து கொள் என்று சொன்னால் அவளுக்குப் புரியாது. தானாகவும் நடந்து கொள்ளத் தெரியாது.

அப்பா அவளை அடித்ததுதான் வெறுப்பாய் இருக்கிறது. தன்னையும் சிக்கலில் இவர்கள் மாட்டி விடுவார்கள். வருபவனுக்குப் பிடித்திருந்தால் திருமணம் என்று முடிவு சொல்வார்கள். அபிப்பிராயமே கேட்க மாட்டார்கள்.

அக்காவைப் பற்றி யோசிக்கும்போதே நம்மைப் பற்றியும் யோசிக்க வேண்டும்.

தமிழ் சினிமா, பசுமாட்டு பிசினஸோடு இணைந்து விடும் ஜாதி பார்க்காது சம்பந்தம் வைத்துக் கொள்ளும். அதையும் தவிர இந்தப் பெண்கள் சிரித்து மயக்கக் கூடிய திறமையாய் இருக்கிறார்கள். வேறு விதமாக வளர்க்கப்பட்டிருக்கிறார்கள். சுதந்திரமாகப் பேசவும், பழகவும், புரிந்து கொள்ளவுமாய் வளர்க்கப்பட்டிருக்கிறார்கள்.

கடலைப் பருப்பில்லாமல் இருந்தாலும், தாக நிறைந்த வீடாக இருந்தாலும் இவர்கள் வீட்டில் ஒரு படிப்பு வாசனை இருக்கிறது.

இந்த மூத்த பெண், பழனைப் பார்த்து இறங்கிப் போகிறாள் இடைவிடாது கண்களால் பேசுகிறாள்.

''உங்க பொண்ணுக்கும் புடிச்சிருக்கு. எங்க புள்ளைக்கும் புடிச்சிருக்கு. இதோட நிறுத்திக்கலாமா, இல்ல... உங்க பொண்ணை எம்புள்ளைக்கு கொடுக்கறீங்களா... சொன்னா கல்யாணம் நடக்கறது. உங்களுக்கு ஆட்சேபணை இல்லையே...உங்க பொண்ணுக்கு அவ்வளவு விருப்பமில்லை போலிருக்கு. தாச, கடலைப் பருப்புன்னு

ஏதாவது சொல்லியிருப்பாங்க. யாருக்கும் ஒரு பயம் வரத் தான் செய்யும்.

கல்யாணமாயிட்டா பையனைத் தனியா போயிட சொல்லப் போறேன். தெற்குன்றத்துக்கிட்டக்க தனியா வீடு பார்த்து குடித்தனம் வச்சுடப் போறேன். பருப்பு மில்லு சேலன்தான். ஒரு ஆறுமாசம்தான் ஓடும். இவன் வன் முழுசா இருந்து பார்த்துக்குவான். பெரியவனுக்கு பால் பண்ணைதான் ரொம்பப் பிடிக்குது.

என்னதான் மாதவரம் பால் பண்ணை இருந்தாலும் ஹோட்டல்காரங்க நிறைய பேர் கேக்கறாங்க. சுத்தமான எருமைப் பாலா நூறு லிட்டர் கேக்கறாங்க. இடம் இருக்கு. பண்ணை பெரிசாக்கிடலாங்கறான் பெரியவன்,

உங்க யோசனை என்னா...ஒரே செலவாப் போயிடு மேன்னு பார்க்கறேன்.

தனித்தனியா செய்தாகூட மூன்று ரூபா செலவாகும். அதை வியாபாரத்துல போடலாமே. உன்ற பொண்ணுக்கும் உன்ற பையனுக்கும் கொடுத்துடலாமே. நான் கட்டாயப் படுத்துறதா நினைக்கறாதீங்க. எல்லாத்துக்கும் புடிச்சிருக்கணும். வீட்ல கேட்டுட்டு வாங்க''

புழலேரி புண்ணாக்கு வியாபாரி, வீட்டுக் கூடத்தில் உட்கார்ந்து உரக்கப் பேசினார்.

''எனக்கு புடிக்கலை...புடிக்கலை...புடிக்கலை...கேக்காதீங்க, தயவு செய்து என்னைக் கேக்காதீங்க. கேட்டா புடிக்கலேன்னுதான் சொல்லுவேன் ''

''அதென்னடி அதிகப் பிரசிங்கத்தனம்'' அம்மா ஆத்திரத்துடன் எழுந்தாள்.

''நீ என்ன ராஜா வீட்டுப் பொண்ணா. பஞ்சணையில படுத்து வளர்ந்தியா. தூசு இருக்குன்றதுக்காகவா மாட்



டேங்கறே. அந்தாள் எவ்வளவு பக்குவமா வந்து நான் தன்னி தனியா குடித்தனம் வைக்கிறேன்றான். நம்ம ஜாதில யாராவது அப்படிப் பேசுவாங்களா. ஏய் விஜயா, நீ சொல்லேன்டி அவனுக்கு. அக்காளும் தங்கையும் ருசுகுன்னு பேசறீங்களே'' அம்மா தொடர்ந்து கத்தினாள்.

''என்ன அபிப்ராயம் கேக்கறியா...சொன்னா தாங்க மாட்டே...இவனைக் கட்டி வைன்னு எங்கக்கா பேசலை. யாரையுமே லவ் பண்ணலை. இவன் வேண்டாங்கறா. வேணாம்னு சொல்றதுக்கூட ஒரு பொம்பளைக்கு உரிமையில்லையா. அப்ப ஏன் கேக்கறீங்க. கேக்காதீங்க.''

''என்னடி சொல்ற நீ...''

''ஒரு புருஷன் வீட்டுக்குப் போய் குடித்தனம் பண்றது ஒண்ணும் பெரிய விஷயம் இல்ல. ஆடி கறக்கற மாட்டை ஆடிக் கறக்கணும். பாடிக் கறக்கற மாட்டை பாடிக் கறக்கணும். பத்து மாசத்துல எவனையும் படிய வச்சுரலாம். விஜயாவால அது முடியும். புருஷன்றபோது அவ மனசுலயும் சில எண்ணம் இருக்கும். அதுக்கு எத்தப்படி நடந்துக்கிட்டா என்ன...அந்தப் பொண்ணுங்க இங்க வந்து வெக்கங்கெட்ட தனமா குலுக்கி நடக்கறா ளுங்கன்னா, நாங்களும் புடிச்சிருக்குன்னு வழிச்சுகட்டிக்கணுமாக்கும்.''

''இந்தா விஜயா, உன் வரைக்கும் பேசு, தேவையில்லாம மத்தவங்களை இழுக்காதே'' அண்ணன் எச்சரித்தான்.

''உனக்கு ஏன் பொத்துக்குது நீ என்னா வகை அண்ணன், உனக்குப் புழலேரிப் பொண்ணு முக்கியமா. ஏதா முக்கியமா உனக்கு தவிடு வியாபாரம் பண்ண பெரிய ஆளா வரணும், தவிட்டு மூட்டையோட ஒரு அழகா பொண்ணு கிடைச்சிருக்கு. போ. போய் வீட்டோட மாப்பிள்ளையா இரு. நாங்க விருந்து சாப்பிட்

டுட்டு பதில் விருந்து வச்சுட்டு வந்துடறோம். எங்களை ஏன் வதைக்கறே அப்பாவுக்கு செலவு மிச்சமில்லை. மிஞ்சி மிஞ்சிப் போனா அம்பது ரூபாதான் செலவாகும். நான் இன்னும் சீப்பா ஒரு முடிவு சொல்லிட்டா நாலு ரூபா அம்பது பைசாவுக்கு எலிபாஷாணம் பால்ல கலக்கி கொடுத்திரு. ராதா ரெண்டு மணி நேரத்துல செத்து டுவா. அப்புறம் கருகாட்டு செலவா நானூறு ஐந்நூறு ரூபா இருக்கும். இது சீப் இல்லே.''

''உனக்குத்தான் பேசத் தெரியுமா?'' அண்ணன் அருகே வந்து முறைத்தான்.

''உனக்குப் பேசத் தெரியாது. கை ஓங்கிடுவே. உங்கப்பா ஆயிரத்தோருதடவை முண்டை முண்டைன்னு வாரு. நீ ஒரு பொண்ணை கணக்கு பண்ணிட்டு வந்து ஒரு கவுரதையான கல்யாணமா பண்ணணும்னு நினைக்கற. தாராளமா செய். எங்களை எதுவும் கேக்காத.''

''அப்பா, எனக்கும் கல்யாணம் வேணாம்பா. ராதா வுக்குக் கல்யாணம் முடிச்ச பிறகு எனக்குப் பார்த்துக் கலாம்.'' விஜயா கத்தினாள்.

''நீ ஏண்டா அவளைப் பேசவிடற...போய் சிங்காரிச் சுட்டு வான்னா வரணும் மனைல உட்காருன்னா உக்கார ணும்...குனிஞ்சு தாலி வாங்கிக்கன்னா வாங்கிக்கணும். இதுல எந்த பன்னாடையின் அபிப்பிராயமும் தேவை யில்லை.

ஏ, சின்ன நாயே. உனக்கு என்ன தெரியும்னு அலட்டறே. உங்க அபிப்பிராயம் தேவையில்லை. சொடுக் கினா மனைல போய் உட்காரணும்.

எலிப்பாஷாணம் என்னா...அது ஏன் நாலு ரூபா அம்பது பைசா செலவு. யார் காசு அது மட்டும். போடி கிணத்துல விழுண்டி. நான் கல்லைத்தூக்கி போடறேன்.



ஆமா...உங்கண்ணன் கணக்கு பண்ணான். தவிடு வியாபாரத்துக்காக கணக்கு பண்ணினான். அதே தவிடு வியாபாரத்துக்காக ராதாவைக் கொடுப்போம். உன்னை யும் கொடுப்போம். ஒரே பையனுக்கு ரெண்டு பேரையும் கொடுப்போம்.''

''அதுக்கு வேற ஆளைப்பாரு...நீ பால் வியாபாரம் தான் பண்றே பொண்ணுங்களை வச்சு வியாபாரம் பண்ணலியே...நீ அப்பனா...பிம்பா...''

''ஏய்...என்னடி சொல்றே'' அண்ணன் லுங்கியை மடித்து கட்டிக் கொண்டு அருகே வந்தான்.

''வெட்டிடுவேன். எனக்கு வெறி வந்துரும். வெட்டி டுவேன். ராவோடு ராவா எல்லா பசுமாட்டுக்கும் விஷம் வச்சுருவேன். என்னைத் தொட்டே...உனக்குக் கல்யா ணம் இல்லை. கருமாதிதான்.

நேரா புழலேரிக்கு பஸ் புடிச்சி போய் வண்டை வண்டையா கேப்பேன். தவிட்டு மூட்டைல மல்லாந்து படுத்துட்டியான்னு கேப்பேன், இந்த கை ஓங்கற வேலை எல்லாம் எங்கிட்ட வச்சுக்காதே.''

விஜயா வெறி பிடித்தது போல் கத்தினாள்.

''தப்பு உன்னுதுடா. படிக்க வைக்காதேன்னேன். கேட்டியா இப்ப பள்ளிக்கூடத்துல ஃபாண்ட் வந்ததுக்கு [illegible] முறைப்பு காட்டறா. உன் படிப்பு என் [illegible]. நீ போய் சொல்லுடி. எங்கவேணா போய் எவ்வளவு அசிங்கமா வேணா பேசு.

[illegible] வயசுல பதினெட்டு வயசு மகளுக்கு [illegible], நான் வாழ்ந்து ஜெயிச்சதுக்கு அர்த் [illegible].''

''அப்பா நீ சும்மா இரு'' அண்ணன் அப்பாவை சமாதானப்படுத்தினான்.

''என் கல்யாணம் இப்ப இல்லை. ராதாவுக்கு கல்யாணம் ஆகட்டும். அப்புறம் நான் பார்த்துக்கறேன். ராதா, விஜயா கல்யாணத்துக்கு சரின்னுட்டா நீ குறுக்க பேசக்கூடாது.''

''ராதா சரிங்கறா...மாட்டேங்கறாங்கறது மேட்டர் இல்லை. உங்க அதிகாரம் இனிமே செல்லுபடியாகாது. அதான் மேட்டர்.''

''நீ ஏன்டா அவனுக்கு போய் பயந்துக்கின்னு...' அப்பா எகிறினார்.

அண்ணன், அவரை அழுத்திக் கொண்டு போனான். அப்பாவிடம் பேசிவிட்டு மோட்டார் சைக்கிள் எடுத்துக் கொண்டு வெளியே போனான்.

ஆண்கள் தந்திரம் மிக்கவர்கள். அவர்கள் தந்திரம் செய்ய பல வசதிகள் இருக்கின்றன. அந்த அளவு வசதி பெண்களுக்கு இல்லை.

இரண்டு நாட்கள் இடைவிடாது விஜயா யோசித்தாள்.

பொறியியற் கல்லூரி பற்றி விசாரிப்பதற்காக மாமியின் வீட்டுக்குப் போனாள்.

அங்கே மாமி இல்லை. மாமியின் மகன் இருந்தான். வராண்டா வாசற்படியில் உட்கார்ந்து மேல்படிப்பு பற்றி நிறைய சொல்லிக் கொடுத்தான்.

''படிக்கறதுக்கு ஏகப்பட்ட விஷயம் இருக்குங்க ப்ளஸ் டூவுல மட்டும் நல்ல மார்க் வந்துடட்டும். அப்புறம் உள்ள பூந்து ஜெயிக்கறதுக்கு ஏகப்பட்ட விஷயம் இருக்கு. கம்ப்யூட்டர்னு ஒண்ணு இருக்குங்க, எல்லையில்லா படிப்பு இது.

நீங்க யாதவர், நான் ஐயர் அப்படியெல்லாம் இல்லை. கம்ப்யூட்டர் தெரிந்த ஜாதி கம்ப்யூட்டர் தெரியாத ஜாதி. இப்படித்தான் இருக்கப் போவுது. கம்ப்யூட்டர் தெரியாத ஆணோட எனக்கு ஒண்ணும் பெரிய பேச்சே இல்லை. தெரிஞ்சுடுத்தா...ரா முழுக்க பேசறத்துக்கு ஏகப்பட்ட விஷயம் இருக்கு.''



கம்ப்யூட்டர் ஒருமொழி. நான் கட்டிக்கற பொண்ணுக்கு தமிழ் தெரிஞ்சா எனக்கு ரொம்ப சந்தோஷம் இல்லீங்களா...தெரியலைன்னா குடித்தனம் பண்ண முடியாதா...பண்ணலாம். ஆனா ஒரு மாத்து கம்மிதான்.

இனிமே ஆடிட்டர்ஸ்லாம் வேஸ்ட்தான். நிழலான உத்தியோகம், நல்ல வருமானம். வீட்டுல ஒரு ரூம் ஆபீஸா மாத்திட வேண்டியது இல்லை தாம்பரத்துல ஒரு பிளாட் புடிச்சுக்க வேண்டியது. கைனடிக் ஹோண்டால போயிட்டு வந்துடலாம். வீடு கட்டினா இன்கம் டாக்ஸ்ன்றான். தாம்பரம் சேலையூர் பக்கம் எத்தினி வீடு வருது பார்த்தீங்களா, எல்லாம் க்ளையண்ட்ஸ் தான்

நிறையபேர் வியாபாரம் துவக்கறாங்க. வியாபாரம் துவக்க படிப்பு வேண்டாம், அனுபவம் இருந்தா போதும். ஆனா கணக்கு எழுத படிப்பு வேணும். டாக்ஸ் கட்ட படிப்பு வேணும்.

புடிச்சுப்போய் ஒரு படிப்பு படிச்சீங்கன்னா நீங்க நிச்சயமா ஜெயிக்கறீங்க.

உரிமையோட சொல்றேன். படிக்காத விட்றாதீங்க. எங்க ஜாதிக்கெல்லாம் மார்க் வாங்கினாலும் சீட் கிடைக்காது. உங்களுக்கெல்லாம் நிச்சயமா கிடைக்கும். பண்ணி கிட்டு தாண்டி அந்தப் படிப்புச் சமுத்திரத்துல கலந்துட்டீங்கன்னா...அந்த குளிசே தனி.

இங்கிலீஷ் பேசறதெல்லாம் மேட்டரே இல்லை பத்து நாள் ஒரு வட்டாரத்துல புழங்கினா இங்கிலீஷ் தானா வந்துடும். உங்க வீடு மாறிப் போகும். உங்க வாழ்க்கை மாறிப் போகும். நம்ம உழைப்புக்கு அமெரிக்கால வேலை செய்யறது ரொம்ப சுலபம்.

நமக்கு தேவைங்க கம்மி. உழைப்பு அதிகம். கத்தை கத்தையா அமெரிக்கால சம்பாதிக்கலாம். அந்த வாழ்க் கையே வேறங்க. தயவு செய்து காசுக்கு ஆசைப்படுங்க. பவருக்கு ஆசைப்படுங்க.

தயவு செய்து படிங்க விஜயா. நீங்க வந்து கேக்கறதே எனக்கு சந்தோஷமா இருக்கு. இதுபத்தி எந்த சந்தேகம் இருந்தாலும் என்னைக் கேளுங்க. தயக்கமே வேண்டாம். இன்னொரு விஷயம் பாங்க் விளம்பரங்கள் வந்துட்டே இருக்கும். அந்த எக்ஸாம் நிறைய எழுதலாம். அங்க வேலை கிடைச்சதுன்னா தபால்ல பி காம். எழுதலாம். எப்ப வேணா வாங்க. பேசுவோம்.''

அந்த பார்ப்பன இளைஞன் அவனுக்கு படிக்கும் வெறியை ஊட்டினான். கம்ப்யூட்டர் படித்தால் வெளி நாட்டுக்கு போகலாம் என்று ஆசை காட்டினான்.

அவன் நிறைய கனவுகளோடு வீட்டிற்கு திரும்பி னான். கொல்லைப் புறத்தில் உட்கார்ந்து நிறைய யோசித்தான்.

வீடு அமைதியாக இருந்தது. அடுத்தபடி எந்த முயற் சியும் செய்யாமல் சும்மா இருந்தது.

இரண்டு நாட்கள் கழித்து ராதா அவனைத் தனியே கூப்பிட்டாள்.

''என்ன...''

''சரபேஸ்வரர் கோயில் வரைக்கும் போயிட்டு வர லாம். வா.''

''எதுக்கு...''

''வா. சொல்றேன்.''

அவர்கள் கோயிலுக்கு போனார்கள்.

''நான் அத்தானுக்கு போன் பண்ணேன். பாங்க்ல வேலை செய்றவருக்கு.''

'அடிப்பாவி...என்ன சொன்னே...''



''ஏன் உங்க வீட்ல இப்படி பண்ணாங்க. ஏன் அப் படி பேசணும். ப்ளஸ் டூ படிக்கிற பொண்ணை யாரா வது கல்யாணம் பண்ணிக் கொடுப்பாங்களா...என்னை பார்க்க வந்துட்டு தங்கச்சியும் சேர்த்துக் கொடுன்னா கோபம் வராதான்னேன்''

என்ன நடந்துன்னு கேட்டாரு.

விளக்கமா பேசினேன்.

என்கிட்டே வேற விதமா சொன்னாங்களே. உங் கப்பா ரொம்ப கத்தறாருன்னு சொன்னாங்களே. துட்டு திமிரு. போக்கு சரியில்லைன்னாங்களே. நீங்க வரமுடி யுமா அட்டாணுக்குன்னாரு.

நான் வரமுடியாதுங்க. நான் நகர்ந்தா எதுக்கு என் னான்னு கேள்வி வரும். தங்கச்சி வருவா. அவக்கிட்ட பேசுங்கன்னேன்.''

''போடி'' விஜயா பயத்தில் எழுந்து நின்றாள். ''அதுனால என்னை மாட்டி விடறியா. ஏற்கனவே அண்ணா ளும், அப்பாவும் என்ன வெட்ட காத்துக்கிட்டிருக்காங்க. நான் அந்த ஐயர் பையன் கிருஷ்ணமூர்த்திகிட்டே பேசிட்டு வரேன் தெரியுமா. அவன் என்னென்னமோ படிப்பு சொல்றான். லேடீஸ் கல்யாணம் பண்ணிக்கறதே தப்பு. எதுக்கு ஆம்பளைங்க சங்காத்தம்... தேவையே இல்லைடி.''

''முட்டாள்தனமா பேசாத எல்லோருமேவா க்ளாஸ் ஃபர்ஸ்ட். வந்தா முடியும். க்ளாஸ் ஃபர்ஸ்ட். வர்றவ வேணா கல்யாணம் பண்ணிக்காம இருக்கலாம். கல்யாண மும் பண்ணிக்கலைன்னா என்ன மரியாதை... கொஞ்சம் கோபப்படாத எனக்காக அத்தானைப் போய் பார் பள்ளிக்கூடத்துல டீச்சர் கூப்பிட்டாங்கன்னு நீ போலாம். நான் வெளிய போக முடியுமா. அது மரியா தையா. நீ போய் பேசு.''

''என்னடி பேசறது...''

"எங்கக்கா நல்லவ. அவனைக் கட்டிக்கங்கன்னு
சொல்லு. நம்ம வீடு வசதின்னு சொல்லு. எம்பஸ்கு
நிலத்தை வித்து அப்பா காசு கொடுத்தா மெட்ராஸ்ல எ
ஒனாஸ் ஃப்ளாட் வாங்கலாம்னு சொல்லு. அப்பா
அம்பது பவுன்ல நகை போடுவாருன்னு சொல்லு"

"பயமா இருக்குடி."

"சொல்லித்தான் ஆகணும். நீதான் சொல்லணும்.
எனக்கு வேற யார் இருக்கா? அண்ணன் அவன் காரியத்
தைப் பார்த்துக்கறான். நீ உன் படிப்பைக் கவனிச்சுக்கற.
யாராவது என்னைப் பத்தி அக்கறை படறீங்களா...

நீ மாட்டேன்னு சொல்லிட்டேன்னு வச்சுக்க...
எனக்கு கிணத்துல விழுந்து சாகறதைத் தவிர வேற
வழியில்லை.'

"அநியாயமா பேசாதடி. ஏற்கனவே எனக்கு கெட்ட
பேரு."

"இது யாருக்கும் தெரிய வராது விஜயா."

"நம்ம நேரம் எவன் கண்லயாவது மாட்டுவோம்.
எவனாவது பாத்துட்டு வந்து போட்டு கொடுப்பான்.
நம்ம அப்பா வைத்தியம், அதைக் கேட்டுட்டு ஆடும்."

"வேணாம். அப்படிப் பேசாதே. எனக்காக இந்த
உதவி செய். இந்த சரபேஸ்வரருக்கு நான் தினம் விளக்கு
போடறேண்டி."

'போன் செய்துட்டு போலாமா...செய்யாத போலா
மா' விஜயா தன்னைத்தானே கேட்டுக் கொண்டாள்.

'போன் செய்யாம போறதுதான் பெட்டர். ஒரு
பரீட்சைக்கு டிமாண்ட் டிராப்ட் எடுக்க போவேன். இவரு
அட்ரஸ் பார்த்துட்டு நீங்கதான் ராதாவான்னு கேட்
டாரு. இல்லை விஜயான்னு பேசினேனு புளுகலாம்.

சரி...போய் என்ன பேசறது...

எங்கக்காவ எப்படியாவது கட்டிக்கங்கன்னா...இப்



படி பேசினா ஆம்பளை மதிப்பானா. ஏற்கனவே பொம்
பளைன்னா அந்த வீட்டுக்கு இளக்காரம். நீ போய் அந்த
வீட்ல எதுனா குடித்தனம் பண்ண முடியுமா. நாளைக்கு
இந்தாளே அலட்டிக்கிட்டா எதுனா பதில் உண்டா.

எதேச்சையா பார்த்ததாதான் நடந்துக்கணும்.

அடடே...நீங்க இந்த பேங்க்லயா வேலை பார்க்க
றீங்க. அப்படீன்னு கேட்கணும். ஒரு போட்டோல
பார்த்ததை வச்சுக்கிட்டு ஆளை நேர்ல கண்டுபிடிக்க முடி
யுமா. இங்க உட்கார்ந்து யோசனை பண்ணினா விடி
யாது.

ராதாவுக்காக ட்ரை பண்ணியே ஆகணும். தப்பா
வந்தா நாம தலை கொடுத்துக்கணும். ரைட்டா வந்தா
ராதா நல்லா வாழும்.

அவள் பஸ் பிடித்து பர்மா பஜாரில் இறங்கினாள்.
தாம்பரத்துக்கு நேர் எதிராக பர்மா பஜார் இருந்தது.
கூச்சல், நெரிசல், கார் புகை என்று அல்லோலப்பட்டது.
அவள் கட்டிடங்களைப் பார்த்துக் கொண்டே போனாள்.
குறிப்பிட்ட வங்கி வந்ததும் நின்றாள்.

சந்தானம் இருக்கிறாரா என்று விசாரித்தாள். விலா
சம் சொன்னாள்.

மூணாவது மாடி. ரெண்டாவது ஹால், ஆறாவது
சீட் என்று சொன்னார்கள். வங்கி முழுவதும் குளுமை
யாக்கப்பட்டிருந்தது.

இரண்டாவது ஹால் ஆறாவது சீட் காலியாக இருந்
தது.

"இப்பத்தானே கேண்டீனுக்கு போனார்..."

"நீங்க யாரு..."

பெயர் சொன்னாள்.

"இருங்க கூப்பிடறேன். உக்காருங்க" உபசரித்தான்.

நீங்க இங்கயா வேலை செய்யறீங்க. நாடகமெல்லாம்
இனி நடக்காது. தென்னத் தெளிவாய் எதற்கு வந்தேன்

என்பதை சொல்லியாக வேண்டும். விளைவுகளை ஏற்றாக வேண்டும். கொன்று போட்டாலும் ராதாவைக் காட்டிக் கொடுக்கக் கூடாது.

''யாரு என்னைத் தேடிட்டு...''

கொஞ்சம் முன் தலைப்பக்கம் முடி குறைந்து ஆனால் உடம்பெல்லாம் முடிகளோடு இருக்கிற ஆள் வந்தார்

''நான் விஜயா.''

''சொல்லுங்க.''

''சேலையூர்.''

''அடேடே...புரியுது. வாங்க.''

''கொஞ்சம் பேசணும்னுட்டு வந்தேன்.''

''பேசுங்க.''

''தேவையில்லாத சண்டை யாகிப் போச்சு.''

''ஆமா...எங்கப்பா கூட்டிட்டு போன மூணு ஆளுங்களும் தப்பான ஆளுங்க. அப்பாவும், அம்மாவும் தான் போகப் போறாங்கன்னு நினைச்சேன். இவங்க கூட்டிட்டு போனதெல்லாமே தகராறு பண்றதுக்குன்னே பொறந்த பார்ட்டி. நீங்க ராதாவோட தங்கையா. உங்களைத் தான் அவங்க தப்பா பேசினீங்களா. தயவு செய்து மன்னிச்சுடுங்க.''

கடவுளே... கடவுளே... நன்றி... அவன் மனதுக்குள் கூவினான்.

''எங்க அண்ணனும் கத்தினார்'' அவளைக் கூர்ந்து பார்த்தபடி சொன்னான்.

''நானா இருந்தா அடிச்சிருப்பேன். ஒரு வீட்டுல நாலு பொண்ணு இருந்தா நாலையும் கேப்பாங்களா...நீ எதுக்கு வந்த...அதைப் பேசி முடிச்சுட்டு போக வேண்டியது தானே...கெடுக்கறதுக்குன்னே போயிருக்காங்க. நான் மறுபடி மன்னிப்பு கேட்டுக்கறேன். அவங்க பண்ணினது ரொம்ப தப்பு.''

''வயசுல பெரியவங்க...விடுங்க''



''அவங்களா...புத்தில மட்டம். எங்கம்மா குதிச்சாங்க. நான் சொல்லிக் காமிச்சேன். நீ நல்ல இடத்துல வாக்கப்பட்டு நல்லா இருக்க...உன் தங்கச்சி நல்லா இல்லை. இப்ப நான் கேக்கறேன். உன் தங்கச்சி புருஷன் சூதாடறானாமே...யாதவனா பொறந்துட்டு சாமி இல்லேங்கறானாமே. உன் தங்கச்சி புருஷனுக்கு மூணு உடன் பொறந்தானாம். மூணும் விளங்கலையாமே. ஏன் அவ்வளவு லட்சணமான இடத்துல பொண்ணைக் கொடுத்தீங்கன்னு நுணுக்கு நுணுக்குன்னு கேட்டேன் வெறிபிடிச்ச மாதிரி கத்துச்சு. உனக்கு நோவுதுல்ல...இப்படித்தானே அவங்களுக்கும் வலிச்சுருக்கும். அப்படின்னு சொன்ன பிறகு தான் அடங்கினாங்க.''

இருவரும் சற்று நேரம் மௌனமாக இருந்தார்கள்.

''என்னா இவ்வளவு தூரம்...'' சுதாரித்துக் கொண்டு கேட்டான்.

''எங்கக்கா உங்களை விரும்புது சார்.''

''கடவுளே...''

''உங்களுக்குப் புடிக்கலையா சார்.''

''என்னைப் புடிச்சிருக்குன்னு சொல்றவங்களை எனக்குப் புடிக்காத போகுமா. அப்படிச் சொன்னா அவன் பைத்தியக்காரன். ஆனா உங்கக்காவை நான் தெரிய ஒரு தடவை பார்க்கணும். ரொம்ப சுமாரான அழகுன்னுதான் எங்கிட்ட சொன்னாங்க.''

''சார்...நல்ல அழகு சார். என்னைவிட அழகு சார். என்னை விட உசரம். ரொம்ப நல்லா சமைப்பாங்க சார். எனக்குத்தான் ஒன்னும் தெரியாது.''

''ஏன் ஒன்னும் தெரியாது.''

''நான் படிக்கணும் சார்.''

''எதுக்கும்மா.''

''ரொம்ப ஆம்பளைங்களை நம்பி வாழ முடியாது சார். எங்கப்பா எங்கம்மாவ அழிச்ச மாதிரி நானும் அழிய விரும்பலை சார்.''

''அதெல்லாம் போன தலைமுறை விஜயா.''

''இல்ல சார். எல்லா தலைமுறைலயும் இந்த அடக்குமுறை இருக்கு.''

''உங்க அக்கா ஏன் என்னை விரும்பறாங்க.''

''அவளுக்கு முரட்டுத் தொழில் பண்ணாத ஆம்பளை புருஷனா வரணும்னு ஆசை சார்.''

''அதென்ன கணக்கு'' அவன் சிரித்தான்.

''அவ பேச்சுக்கு பயப்படறா பாங்க்ல வேலை செய்யறவங்க மரியாதையா பேசுவாங்க. பிரியமா நடத்துவாங்கன்னு நினைக்கறா.''

''அப்படி ஒண்ணும் சொல்ல முடியாதே.''

''அப்பாதான் சார் காரணம். அவரு முரட்டுத் தனத்தைப் பார்த்துட்டு கடலைப் பருப்பு மில்லுக்காரரை வேணாம்னுட்டா.''

''அடடா... அவரு ரொம்ப நல்லவருங்க. முத தடவை பார்த்துவிட்டு என்ன இவ்வளவு தாசா இருக்காரேன்னு நானும் நினைச்சேன். அந்த சொர்ணவேலு ஒரு பக்கா ஜெண்டில்மேன்.''

''உங்களுக்கு அவரைத் தெரியுமா.''

''உங்க வீடு பத்தி சொன்னதே அவர்தானே. முப்பது கிரவுண்ட் ஒரே இடமா இருக்காமே லக்ஷ்மிகரமா நிறைய பசு வச்சிருக்கீங்களாமே. எனக்கு பசு மாடுன்னா ரொம்பப் புடிக்குங்க. மாடு மேய்க்காத எண்டா இந்த பாங்க்வேலைல சேர்ந்தோம்னு தோணும்.''

''ஐயோ உங்களுக்கு மாடு புடிக்கும்னா அக்கா கவலைப் படுவா.''

''இதில் கவலைப்பட என்ன இருக்கு. விஜயா எனக்கு ரெண்டு தொழிலுமே செய்யணும்னு ஆசை. காலைல பால் கறந்துட்டு பாங்க் போகணும். மத்தியானம் நாலு



மணிக்கு வந்து பைப் திறந்து விட்டு குளிப்பாட்டணும். தீனி கலந்து கொடுக்கணும். உங்கக்காவுக்கு ஏன் புடிக்கலைன்னு தெரியலை. வேலைய வச்சு ஆளை எடைபோடக்கூடாது.

உதாரணத்துக்கு சொர்ணவேலு எவ்வளவு இங்கிலீஷ் புக் படிக்கறான் தெரியுமா. கடினமான நாவல்லாம் படிக்கறான். அவனை வேணாம்னு சொன்னது கொஞ்சம் முட்டாள் தனம்.''

''உங்களுக்கு எப்படித் தெரியும்.''

''உங்க அண்ணன் சொர்ணவேலுக்கிட்ட சொல்லி, சொர்ணவேலு இப்பத்தான் சொல்லிட்டு போறான் உங்கப்பா ரொம்ப கடுமையா நடந்துக்கிட்டாராமே. பாவம் என்னால அந்தப் பொண்ணுக்குக் கஷ்டம்னு புலம்பினான்.

உங்கக்காவைக் கூட்டிட்டு வாங்க சொர்ணவேலு எவ்வளவு நல்லவன்னு நான் சொல்றேன். நான் பேசறேன் உங்கக்காகிட்ட.''

''உங்களுக்கு எங்கக்கா மேல இஷ்ட மில்லையா.''

''இஷ்டமில்லாத என்ன...சொர்ணவேலு இப்பதான் சொல்லிட்டு போறான். அந்தப் பொண்ணை எங்கனா வரச்சொல்லி நீங்க பேசுங்கன்னு.''

''நான் எங்க வரச்சொல்லட்டும்'' விஜயா கேட்டாள்.

''தாம்பரத்துலேர்ந்து இவ்வளவு தொலைவு வருவாளேன். நான் வரேன். முடிச்சூர்கிட்டே ஏதோ பழைய சிவன் கோயில் இருக்காமே. அங்கதான் வந்து நிக்கறேன். உங்களுக்கு இன்னொன்னு தெரியுமா விஜயா.

சொர்ணவேலு தங்கையும் உங்க அண்ணனும் ஒருத்தரையொருத்தர் விரும்பறாங்க. ரொம்ப ஆழமா நேசிக்கிறாங்க. தயவு செய்து அதைக் கெடுத்துராதீங்க. இதான் என் போன் நம்பர். எனக்கு போன் பண்ணி சொல்லுங்க. நான் முடிச்சூர் வரேன்.''

ஒரு சனிக்கிழமை மாலை அவன் முடிச்சூர் வருவதாக
ஏற்பட்டாயிற்று.

சொர்ணவேலுவோடு அவன் வருகிறேன் என்று
சொன்னபோது அக்கா பயந்தாள். விஜயா சொர்ணவேலு
வைப் பார்க்க ஆசைப்பட்டாள்.

ஆட்கள் அதிகமில்லாத அந்தக் கோயில் மண்டபத்
தில் அவர்கள் உட்கார்ந்து கொண்டார்கள்.

"அடேயப்பா... அக்காவுக்கு மாப்பிள்ளை பார்க்க
வந்த வீராங்கனையா... வாங்க... அவங்க பேசிக்கட்டும்.
நாம கோயிலை மொன்ன சுத்தி வருவோம்."

விஜயா சொர்ணவேலுவோடு இணைந்து கோயில்
சுற்றினாள்.

"ஆத்தா, நீ என்ன படிக்கணும்னு ஆசைப்படறே"

"பி.காம் அதுக்கு மேல சி.ஏ."

"எதுக்கு விஜயா மேல படிக்கணும்."

"வெறும் சமையல் ஆனா இல்லாத ஏதாவது
தொழில் செய்யணும்."

விஜயா, அதைவிட முக்கியம், அடுத்த தலைமுறை
குழந்தைகளுக்கு படிச்ச அம்மாதான் உதவி செய்ய
முடியும். படிக்காத அம்மா தொந்தரவாகிவிடும். பாடம்
சொல்லிக்குடுக்கறதுக்கு மட்டுமில்லை. குழந்தைகளைப்
புரிஞ்சுக்கிட்ட படிச்ச அம்மாதான் வேணும். உங்க
வீட்டு குழப்பத்துக்கு காரணம் உங்கம்மா. உங்கம்மாவின்
படிப்பின்மைதான் காரணம். நீ படி. பி.காம் படி
போதும்.

அந்தப் படிப்பு உனக்கு நம்பிக்கை தரும். வேற
சொத்து பத்து இல்லாதவங்க நகரத்து வாழ்க்கைவேணுங்
கறவங்க சார்ட்டட் அக்கௌண்டென்சி படிக்கலாம்.
பி.காம படிச்சிட்டு புருஷன் கூட தொழில்ல இறங்கு.
பால் பண்ணையோ, கோழிப் பண்ணையோ, தவிடோ,



புண்ணாக்கோ, தங்கமோ எதுவா இருந்தாலும்கூட
இறங்கிடலாம். நீயும் நின்னு வேலை செய்யலாம்.

ஆபீஸ் உத்தியோகமெல்லாம் வருங்காலத்துல
போறாது துடிப்பா இருக்கறவங்களுக்கு ஆபீஸ் உதவாது.
செய்தொழில்தான் பெரிய விஷயம். பி.காம். முடிச்சுட்டு
அண்ணன்கூட பால் பண்ணைல இறங்கு. நல்லா சம்பா
திக்கலாம். நெறைவா வாழலாம்."

"கடலைப் பருப்பு மில்லும் போடலாமா" ராதா
சட்டென்று கேட்டாள்.

"தாராளமா போடலாம். எங்க மில்லுக்கு வந்து
பார்க்கறீங்களா."

"அண்ணன் கல்யாணத்தின் போது வரத்தானே
வேணும்."

"நான் அதுவும் சொல்ல வந்தேன். என் தங்கச்சி
ரொம்ப ஆசைப்படுது. அவங்க ரெண்டு பேரும் பேசி
மனசு பரிமாறிக்கிட்டாங்க, எங்க நடக்காத போயிடு
மோன்னு பயப்படறாங்க."

"அண்ணனுக்கு புடிக்கும்னா தடுக்கறத்துக்கு யார்
இருக்காங்க.

"விஜயா கல்யாணம் நடக்கணுமே" சொர்ணவேலு
கவலைப்பட்டான்.

"அவ பேசாதயே மனசு பறி கொடுத்துட்டா."

"சந்தானம். ரொம்ப நல்ல பையன். அவன் பாங்கில
மூன்றை லட்ச ரூபா கடன் வாங்கியிருக்கோம். பத்தே
நாள்ல வாங்கிக் கொடுத்துட்டான். இன்னும் கொஞ்சம்
தான் பாக்கியிருக்கு. ஒழுங்கா அடைக்கறோம்ங்கறதுல
ரொம்ப சந்தோஷம்."

"நீங்க சந்தானத்துக்கு எங்கக்காவை சொன்னீங்க."

"சந்தானம் எனக்கு தெரிஞ்ச பையன். உங்க அவ்வை
"சந்தானம் எனக்கு தெரிஞ்ச பையன். உங்க அவ்வை" 

"சந்தானம் எனக்கு தெரிஞ்ச பையன். உங்க அண்ணனுக்கு
நெஞ்சு பாரம் குறைஞ்சா என் தங்கச்சியோட அவன்

கல்யாணம் நல்லா நடக்கும். எல்லாம் ஒருசுயநலம்தான்.''

''எங்கக்கா உங்கள வேணாம்னு சொன்னதுல கோவம் இல்லியே...'

''ச்சே...ச்சே...நல்லது.''

''என்ன நல்லது.''

''ராதாவை விட கெட்டிக்காரப் பொண்ணு ஒன்னு அங்கே இருக்குன்னு தெரிஞ்சு போச்சு.''

''யாரு...'' விஜயா திகைத்தாள். ''நானா'' உடனே கேட்டாள்.

அவன் மௌனமாக அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

''எனக்கும் புடிச்சிருக்கு'' நிதானமாய் பதில் சொன்னாள். ''ஆனா பி.காம். நிச்சயம் படிக்கணும்.''

''நல்லா படி. படிச்சு முடிச்ச பிறகு வா.''

''ஆனா நானும் குழப்ப கேஸ் தாங்க ராதா மாதிரி.''

''குழப்ப கேஸா பாங்க் வரைக்கும் போய் அக்காவுக்கு சம்பந்தம் பேசிட்டு வரும். என் தங்கச்சி கல்யாணம் நல்லபடியா முடியணுமேங்கற கவலைல இருந்த சமயம் நீ போய் பாங்க்ல உங்கக்காவுக்குப் பேசினது எவ்வளவு பெரிய ரிலீஃப் தெரியுமா.''

''ஐயோ இதை அண்ணன்கிட்டே சொல்லிடாதீங்க.''

''அன்னிக்கு சாயந்தரமே அவனுக்குத் தெரியும். இங்க நீங்க வரதும் தெரியும்.''

''கடவுளே... எங்கப்பாவுக்கு தெரிஞ்சா ரொம்ப கஷ்டமாயிடும்.''

''ஒரு கஷ்டமும் ஆகாது. நாம பேசி ஒரு முடிவுக்கு வந்த பிறகுதான் அப்பாகிட்ட இது போகும்.''

''நாமன்னா, நாம ரெண்டு பேருமா.''



''இல்லை, உங்கக்காவும், சந்தானமும். ராதாவைப் புடிச்சிருக்குன்னா, இத்தினி சண்டையை மீறி, மறுபடியும் கல்யாணப் பேச்சை ஆரம்பிக்கறேன்னு சந்தானம் சொன்னான்.''

''அப்படியா...போய் பார்க்கலாமா.''

''கொஞ்சம் இருங்க. அவங்களா வரட்டும்.''

ராதாவும் சந்தானமும் கோயில் சுற்றிக் கொண்டு வந்தார்கள்.

''சொர்ணவேலு, நான் மறுபடியும் அவங்க வீட்டுக்குப் போய் பொண்ணு கேட்கப் போறேன். அவங்கப்பா சத்தினாலும் சமாதானப்படுத்தி கட்டிக்கறேன்னு சொல்லப் போறேன். அப்படி சொல்றபோது என்கூட நீ வரணும்.''

''நான் ஒரு தூசு ஆளு, தேவைதானா.''

''அப்படிப் பேசினது தப்புன்னு சொன்னேன் தல்லனைப் புடிக்கலைன்னு ஒரு பொண்ணு சொன்ன பிறகும் அவளைப் பத்தி வேற இடத்தில நல்லா சொன்ன விஷயத்தை எடுத்துச் சொன்னேன். தப்புதான்னுட்டாங்க. விஜயா கிட்ட பேசினியா சொர்ணவேலு.''

''பேசினேன் ரொம்ப அழகா பேசறாங்க. ரொம்ப தெளிவா இருக்காங்க. வெறும்வீட்டோட இருக்கற பொம்பளையா இருக்காத வியாபாரத்துல இறங்கி, சம்பாதிக்கணும்னு நினைக்கறாங்க கடலைப் பருப்பு மில் பத்தி சொன்னேன் சரின்னுட்டாங்க.''

''கடலைப் பருப்பு மில் தூசு இல்லையா'' சந்தானம் கண் சிமிட்டினான்.

''இல்லை, சந்தானம் தப்பு என் பேரிலயும் இருக்கு. [illegible] கலர் தலைல போட்டுட்டு வேலை செய்யணும். மில்லுக்கு ஒரு டிரஸ் வீட்டுக்கு ஒரு டிரஸ் இருக்கணும். நான் கோமாளி மாதிரி எல்லாப் பக்கமும் சுத்திட்டிருந்தேன். அது தப்புன்னு இப்ப தெரியுது. ரொம்ப

தொழிலாளியா காமிச்சுக்கிட்டேன். வேம்ஸுக்கு அது பிடிக்காதுன்னு இப்பதான் தெரியுது. தாசே வராத மில்லு நடத்தலாம். சட்டப் பிரகாரம், அப்படித்தான் நடத்தணும். யாரும் கேட்பாரில்லாததால ஜாலா இருந்துட்டோம்.''

''இனி இருக்க முடியாது.''

''அப்ப யார் கல்யாணம் முதல்ல.''

''உன் கல்யாணம்தான் சந்தானம்.'' சொர்ணவேலு வேகமாய் பேசினான். ''உன்னுது முடிச்ச கையோட என் தங்கச்சி கல்யாணம் நடக்கட்டும். விஜயா பி.காம் முடிச்ச பிறகு நான் செய்துக்கறேன்.''

''வாங்க. கடலை மில் பார்க்கலாம். அங்க பரதன் உட்கார்ந்திருப்பாரே பருப்பு மூட்டை மேல.''

சொர்ணவேலு அழைக்க எல்லோரும் சிரித்தார்கள்.

இரண்டு மோட்டார் சைக்கிளில் பெண்கள் பின்னால் அமர்ந்து கொள்ள வண்டிகள் புழலேரி நோக்கி போயின.

கடலைப் பருப்பு தரம் எப்படிப் பார்ப்பது என்று விஜயாவுக்கு சொர்ணவேலு சொல்லிக் கொண்டு இருந்தான்.

விஜயாவுக்குள் கற்பனைகள் வளர்ந்தன. அட பாக்கெட்டா வித்தா நல்ல லாபம் வரும் போல இருக்கே.

அவர்களைக் காதலர்கள் என்று உலகம் நினைத்துக் கொண்டது.

அவர்கள் வாழ்க்கையைப்பற்றி ஆராய்ந்து கொண்டு போனார்கள்.

கல்யாணம் மட்டுமில்லை. காதலும் ஆயிரங்காலத்துப் பயிர். அதற்கு செல்வம் என்கிற நீர் மிக முக்கியம். காசும், அன்பும் அங்கு கைகோர்த்துச் சிரித்தது.

**முற்றும்**